500

காவேரி

விக்ருதி - ஆடி ..... July - 1950

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - AUG 1950
MADRAS
22776
500
3-50.
ACL-TNAL 03277
N50-9.12
199318

8 அணா

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை, சேலம்.

பூரண விற்பனை ஏஜண்டுகள்:

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்
120, அரமனைக்கார வீதி, மதராஸ். 1 பிராஞ்சுகள்.

Agent:— T. T. KRISHNAMACHARI & Co.
12 A, Lingha Chetty Street, G. T. MADRAS.

இனாம்



எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக்கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும், இது மயிர்கள் உதிர்ந்துபோவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 2—4—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—15—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்டுவாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்டு வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கிகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (c.k.)

JULLUNDUR CITY. Pb.

மாதவிடாய்:

சகோதரிகளே! எமது "சும்பகி-ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100-க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0.

கர்ப்பத்தடை:

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு ரூ. 4-4-0
6 மாத காலத் தடைக்கு ரூ. 2-0-0
(தபாற் செலவு ரூ. 0-14-0)

வீரியம், யௌவனம்:

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 2-8-0

விரைவாதம்:

குடல் இறக்கம், யானைக்கால், கீல் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்!

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C.M.
70. Cornwallis Street. CALCUTTA—6

Palani

List of 1st Prize Winners in C. No. 29-1) K. E. Kannayaram Chengalput. (2) T. Devasia, Changanacherry, Travancore, (3) Piara Singh, New Delhi. (4) Said M. D. Khadri, Ahmedabad. (5) Susheela Devi, Benares. (6) T. R. Karuppanan Kavilipalayam. (7) Vasant Appu, M. M. Ali, Bombay. (8) Hira singh Bhist, Majkhati, Almore. (9) M. Motilal Gupta, Benares. (10) D. Alfred, Woriyur. (11) B. K. Vanavariar, Samathur Pollachi. (12) M. Kalloosingh, Morababad. (13) B. A. V. Chari, Mysore. (14) M. R. Ramaswamiah, Banavar, Arsikere.

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249 போட்டி நெ. 31

M/S. Premier Bank of India Ltd..ல் சில் செய்து வைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/- முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகளபடி எல்லாம் சரியாக இருக்கவேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY & NO 29 =40 to 55=190

54	43	40	53
45	48	51	46
49	44	47	50
42	55	52	41

We hereby certify that the above is the solution in original [illegible] by Rainbow Competitions No. 29 on 10/5/50 in a sealed cover which was opened in our presence to-day and that [illegible] copy of the above solution has been lodged with the Bank

For The Premier Bank of India Ltd.

V. Ramanathan[illegible] 29-[illegible]-50

Agent, Madras

முடிவு தேதி 28-7-50 விடை 12-8-50

பிரவேசக்கட்டணம்:- கூபன் 1-க்கு ரூ. 1/-

6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5/-

198

56	45	42	55
47	50	53	48
51	46	49	52
44	57	54	43

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:- 42 முதல் 57 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும், எப்படிக் கூட்டினாலும் 198 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும். விதிகள்:- தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்படவேண்டும். பிரவேசகட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-

THE RAINBOW COMPETITIONS No. 31, 306 (6), Mint Street, MADRAS-I.

ரிஜிஸ்டர் நெ. 249 **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 32

சரியான விடை Premier Bank of India Ltd. Madras-ல் சில் செய்துவைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 14—8—50 — விடை: 28—8—50

பிரவேசகட்டணம் கூபன் 1க்கு ரூ. 1/- — 6 கூபன் கொண்ட ஸெட் 1க்கு ரூ 5/-

202

57	46	43	56
48	51	54	49
52	47	50	53
45	58	55	44

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 43 முதல் 58 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 202 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:-

The Rainbow Competitions, No. 32,

306, (6) Mint Street, Madras-1

தி ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்

உடுமலைப்பேட்டை

•

100 செ. வரை மெல்லிய ரக நூல்கள்,
மல், காடா ரகங்கள் உற்பத்தி
செய்வதில் பிரசித்தி பெற்ற
இந்திய ஸ்தாபனம்

•

மானேஜிங் ஏஜண்டுகள் :—

G. V. கோவிந்தசாமி நாயுடு அண்ட் கம்பனி

ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக்கேட்டாலே நடுங்குவர். காணமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லை யென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K.)

JULLUNDUR CITY. Pb.

மாதவிடாய் :-

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை. ரூ. 5–0–0. பார்வதி கர்ப்பத்தடைக்கு அபாய மில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத் தடைக்கு ரூ. 3–0–0. நிலையான கர்ப்பத் தடைக்கு ரூ. 4-8-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

விரைவாதம் :-

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3–0–0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

வயிற்றுக் கோளாறுகள் :-

அதிகமான ஏப்பம், அஜீர்ணம், வயிற்றுவலி, வாய்வு, புண், கட்டி, குடல் வலி, முதலியன "தீபன்" சாப்பிட்ட ஒருநாளில் தீருவதோடு நிரந்தரமாக சொஸ்தமாகும் என்பது காரண்டி. விலை ரூ. 3-0-0 தபாற் செலவு 0-14-0.

கூஞ்சா தைலம் :-

வழுக்கை, மயிர் கொட்டுதல் போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது, தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேச விருத்தி டானிக்.
ஒரு பாட்டில் ரூ. 2-0-0 தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI (K. M.)

24, Debendra Ghose Road, CALCUTTA, 25

மதராஸ்:—அப்பா & கோ., 286, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, மதராஸ்–1.

பம்பாய்:—இன்டோ ஈரோபியன் கெமிகல் கம்பெனி "ஆனந்தபவன்" பிரின்ஸஸ் தெரு, பம்பாய்.

டெல்ஹி:—ஜம்னுதாஸ் & கோ., சந்தினி சௌக், டெல்ஹி.

சிலோன்:—ஹெக்டார், மாதெர் & கோ., 19—21. கிராண்ட்பாஸ், ரோடு, கொழும்பு,

பொருளடக்கம்

விக்ருதி மலர் 9 | ஆடி இதழ் 12

ஆண்டு நிறைவு 6

தாமரையும் பனிநீரும் 7
நா. சி. வரதராசன்

கால சக்ரம் 8
ஸ்ரீதரம் குருஸ்வாமி

தேவி உபாஸகர் 13
ஜி. எஸ். மணி

காணியாட்சி 21
எல்லார்வி

வாசம் 27
கே. வி. கே.

ஒரு படி அரிசி 33
வே. ரங்கராஜன்

வேதனைப் புதிர் 41
ஏ. எஸ். ராகவன்

ஜெய் ஸோம்நாத் (தொடர்கதை) 49
கே. எம். முன்ஷி

பெண்களுக்கு மட்டும் 68
ஷிபாலி சௌத்ரி—சாரி

நாடகமேடை விசித்திரங்கள்-II 75
ஆண்டி

ஸ்திரீ 80
ரா. ஸ்ரீ.

வளையல் வாழ்வு 84
எஸ். கோமதிசுப்ரமணியம்

சந்திப்பு 89
ஆர். எஸ்.

தமிழுக்குத் தன்னை விற்றல் 96
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல,

99318
சென்னை 600 008

காவேரி

விக்ருதி
மலர் 9

''சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—''பாரதியார்

ஆடி
இதழ் 12

ஆண்டு நிறைவு

ஆடிப்பால் பொங்கி உங்கள் உள்ளத்தைக் குதூகலமடையச் செய்திருக்கும். காவேரி இதற்கு அனுகூலமாக உங்கள் கைக்கு வருகிறது.

காவேரி வெள்ளம் இன்னும் செவ்வனே பெருக்கெடுத்தோடவில்லை; ஆடி பிறந்தும் அது பொங்கி, கரை புரண்டு ஓடவில்லை. எனவே, அதன் ஓட்டத்திலிருந்து வரும் மின்சார விசையைக்கொண்டு இயங்கும் காவேரிப் பத்திரிகாலயத்திலிருந்தும் உரிய காலத்தில் வெள்ளம்போல் பாய்ந்து வந்து காவேரி உங்கள் கைக்கு எட்டவில்லை. தாமதத்திற்கு மன்னிக்கவும்.

இவ்விதழுடன் காவேரி உதித்து ஒன்பது ஆண்டுகள் பூர்த்தி அடைகின்றன. ஆவணி இதழுடன் பத்தாவது ஆண்டு பிறக்கிறது. வாசகர்கள் ஆவணி மலரைக் காணத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு வந்துள்ள பல கடிதங்களிலிருந்து தெரியவருகிறது. இயன்ற மட்டும் ஆவணி இதழை, மலர் மலிந்த மணம் கமழும் மாலையாக அமைத்து வாசகர்களுக்கு அளிக்கத் தீர்மானித்துள்ளோம்.

எழுத்தாளர்கள் மலருக்கென அரிய கட்டுரைகளையும் கதைகளையும் சீக்கிரமே எழுதியனுப்புமாறு வேண்டுகிறோம். நேயர்களின் ஆசியும் ஒத்துழைப்பும் இருக்குமானால் மலர் சென்றவிடமெல்லாம் மணம் வீசும் என்பதில் ஐயமில்லை.

எல்லா வாசகர்களும் வாங்கி ரஸிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டு மலரின் விலையை உயர்த்தவேண்டாம் என்று நிச்சயித்துவிட்டோம். இதை வாசகர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். முன்னதாக மட்டும் மலருக்குத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்வது நலம்.

இந்த இதழில் கே. வி. கே. எழுதிய அற்புத கற்பனைச் சிருஷ்டி ஒன்று வெளிவருகிறது. ஸ்ரீதரம் குருஸ்வாமி அவர்கள் எழுதியுள்ள கட்டுரையிலும் சிந்தனையைக் கிளறும் பல அரிய பெரிய கருத்துக்கள் நிறைந்துள்ளன. வாசகர்கள் இதைப்படித்து ரஸிப்பார்கள் என்று நம்புகிறோம். ஸ்ரீ ஜி. எஸ். மணி, எல். ஆர். வி. வே. ரெங்கராஜன், ஏ. எஸ். ராகவன், கோமதி சுப்பிரமணியம், ஆர். எஸ், எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் சிறுகதைகள் எழுதியுள்ளார்கள். ரா. ஸ்ரீ. அவர்கள் "ஸ்திரீ" என்ற ஓர் கட்டுரை எழுதியுள்ளார். சிந்தனையைக் கிளறும் விஷயம், எனினும் ஸ்திரீகள் அதை ரஸிக்கமாட்டார்கள் என்பது திண்ணம். ஆனால் ஒவ்வொரு ஆடவனும் ஒப்புக்கொள்ளவேண்டிய மறுக்கமுடியாத உண்மையைத்தான் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர். நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்.

தாமரையும் பனிநீரும்

நா. சீ. வரதராசன்

விடிவெள்ளி அடிவானில் நின்றே - இருள்
  வெளி வாங்கச் செய்யுமொரு களிதாங்கும் வேளை
கடிதோடிக் குளமண்டை வந்தே - மணம்
  கமழ் செய்யும் தாமரையின் தமிழ்பெய்யும் வதனம்
தொடுமந்தக் குளிர்செய்யும் பனி நீர் - பெருந்
  துணிவோடும் பலமுத்தம் மணிநேரம் சொரியும்
கொடியோனை மணம் செய்த நல்லாள் - எனக்
  குனிந்தாடும் தாமரையும் பணிந்தாண்டு நிற்கும். 1

உள்ளத்தைக் கொள்ளையடித்திட்டான் - கதிர்
  ஒளியாக்கம் செய்காலை தெளிவாக்க மில்லாப்
பள்ளத்தில் தள்ளியவள் நெஞ்சில் - கனற்
  பசியூறச் செய்யுமொரு விசையேற வைத்தான்.
எள்ளித்தான் நகையாடலாச்சே! - விதி
  இசைகின்ற பனிமுன்பு அசைகின்ற மலரைத்
தள்ளித்தான் மணமாக்கிப் போச்சே! - எனில்
  தழலாகும் பாசந்தான் விழலாக லாச்சோ! 2

காதலனை, கதிரோனைக் கண்டால் - அவள்
  கனிவோடு முகிழ்செய்யும் அணியோடு நிற்பாள்.
மேதினியில் அழகேற்றும் தோற்றம் - அவள்
  மேனியினில் மின்னலிடும் தேனொழுகும் வதனம்.
வேதனை செய் பனியோனும் எங்கோ - தன்
  வேலையினைக் கவனிக்கக் காலையினில் செல்வான்!
காதலர், தம் கண் பார்வைகொண்டே - பழங்
  கதை பேசித் துயர் தீர்ப்பர்! விதிபார்த்து நிற்கும்!

கால சக்ரம்

ஸ்ரீதரம் குருஸ்வாமி

"ஐந்து நிமிஷம் முந்திப் பிறந்திருந்தால் நான் ராஜா வீட்டில் பிறந்திருப்பேன்!"

"ஐந்து நிமிஷம் பிந்திப் பிறந்திருந்தால் நான் ராஜா பெண்ணையே கல்யாணம் செய்துகொண்டிருப்பேன்!"

நல்ல ஸந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டுவிட்டு ஒருவன் தன் முட்டாள்தனத்தைக் குறித்து வருத்தப்படும்போது, அவனைத் தேற்றுவதற்காக அவன் நண்பர்கள் அவனை இப்படிக் கேலி செய்வது ஸஹஜம். போனது போய்விட்டது; அதற்காக மனம் நொந்து என்ன பிரயோஜனம்—என்பதே இதன் தாத்பர்யம்.

ஆனால் ஸந்தர்ப்பம் என்பது ஒரு முறைதான் ஒருவருக்கு வருமா? காலம் ஒரு ஆற்றைப்போல் குறித்த இடத்தில் தோன்றிக் குறித்த இடத்தில் கடலில் கலந்து விடுகிறதா? அல்லது, சக்கரத்தைப்போல் அது சுழன்று கொண்டே சாச்வதமாக நிலைக்கக்கூடிய பொருளா? ஒரு வேலையை நாம் துவக்கினால் அதன் முடிவு முன்பே நிச்சயிக்கப்பட்ட முடிவா? இல்லையென்றால், நமது புத்தி நுட்பத்தாலோ ஆத்ம பலத்தைக் கொண்டோ அந்த முடிவை மாற்றித் திருத்தி அமைக்க முடியுமா நம்மால்?— இவையெல்லாம் ஸ்வாரஸ்யமான கேள்விகள். உண்டு உறங்கி மாய்ந்து போவதோடு மனம் நிரம்பாமல், பல துறைகளிலும் அறிவைச் செலுத்தி ஒளியைக் காண முயலும் மனிதனுக்கு இந்த ஆராய்ச்சி உடன் பிறப்பு.

மிகவும் பிரஸித்தமான ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்கொள்வோம். பூமியின் பாரத்தைத் தீர்க்கவே கண்ணன் நம்மிடையில் தோன்றினான். பாரதப்போர் நடக்கப் போவதென்னவோ நிச்சயம்தான். ஆனாலும், அந்த நிலையிலும் ரஹஸ்யம் என்ன? தனிமையில் ஸஹதேவனைச் சோதிக்கிறான் கண்ணன். கர்ணனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்வது, அர்ஜுனனைக் கொன்றுவிடுவது, திரௌபதியின் கூந்தலைக் களைந்தெறிவது, கண்ணனின் காலில் தளைபூட்டிக் கையையும் சேர்த்துப் பிடித்து அவனை ஸஹதேவனே கட்டிப்போடுவது—இந்த நாலையும் செய்து முடித்தால் கோரமான பாரத யுத்தம் நேராமல் எல்லோரையும் காப்பாற்றிவிடலாம் என்று ஸஹதேவன் உறுதி கூறுகிறான். "முதல் மூன்றும் செய்துவிடலாம். என்னைக் கட்டிவைக்க உன்னால் முடியுமா?" என்கிறான் கண்ணன். தன் உண்மை உருவையும் காட்டி நிற்கிறான். ஆயிரக்கால் மண்டபத்தில் தூணெங்கிலும் ஒவ்வொரு கண்ணன்! பாரிலும் விசும்பிலும் கண்ணன்! ஸஹதேவன் தன் புலன் ஓட்டத்தைத் தவிர்த்து உள் நோக்குகிறான்; தன் கருத்தின் வலிமையால் பெருமானைப் பிணைத்துத் திணறச் செய்கிறான்; விதியை விட மதி, மெய்யுணர்வு, மேம்பட்டதென்பதை நிரூபிக்கிறான்! ஆனால் அவன் யுக்தியைக் கண்ணனா பயன்படச் செய்வான்? ஸஹதேவன் இதைப் பஹிரங்கப் படுத்தாமலிருக்க அவனுக்கு அன்பு—ஆணையிட்டு, மேற்கொண்டு நிர்வாஹத்தைத் தானே கண்ணன் மேற்கொள்கிறான்.

நிர்ணயித்துள்ள முடிவை மாற்றிவிட வழியுண்டு என்பதை நிரூபிக்க மிகத் தீவிரமான திருஷ்டாந்தம் இது. மனிதனுடைய முயற்சி எல்லாம் இந்த உறுதியை அடிப்படையாகக் கொண்டதே. பொருளீட்டும் ஊக்கமும், நோய்க்கு மருத்துவமும், நீதிபதிமுன் வழக்காடிக் கருணைக்கு மன்றாடுவதும், இந்த நம்பிக்கை இல்லையென்றால் பயனற்ற செயல்கள்.

விதி வலிதா, மதி வலிதா, என்ற ஆராய்ச்சியில் நேரிட ஈடுபடாமல், நாம் வேறு வகையாகவும் நம் அறிவைச் செலுத்திப் பார்க்கக் 'காலம்' இடம் தருகிறது.

சாலை வழியே போகிறோம். வழி இரண்டாகப் பிரிகிறது. எந்தப் பாதை நல்லது என்று யோசனை செய்கிறோம், ஒரு வழியாகப் போனால் காணும் இடம், மனிதர்கள், நேரும் நிகழ்ச்சிகள், இவையெல்லாம் ஒரு விதம். மற்றொரு வழியில் வேறு விதம். ஏக காலத்தில் இரண்டு வழியாகவும் நாம் செல்ல முடியாதல்லவா?

தங்கள் கற்பனையைக் கொண்டு ஆசிரியர்கள் கதைகளும் நாடகங்களும் எழுதியிருக்கிறார்கள்: ஒரே மனிதன் வெவ்வேறு வழியாகச் சென்றால் ஒவ்வொரு வழியிலும் அனுபவங்கள் எப்படி, முடிவு எப்படி, என்று அவைகளில் அழகாகச் சித்திரித்திருக்கிறார்கள். அவரவர்கள் குணத்தைப் பொறுத்தது அவரவர்கள் வாழ்க்கையமைப்பு (Character is Desting) என்று முடிவு கட்டவேண்டிய இடங்கள் உண்டு. நமக்கு வலிமை என்பதே இல்லை; தாறுமாறான விதி நம்மை எப்படியெல்லாமோ ஆட்டுவிக்கிறது (As flies to wanton boys are we to the gods; they kill us for their sport) என்று நம்மைத் திகைக்க வைக்கும் இடங்களும் உண்டு. வாழ்க்கையிலுள்ள இந்த இருவிதப் போக்கை இலக்கியம் பிரதிபலிக்கிறது.

இலக்கியத்தைப் படித்து ரஸிக்கும் பொது ஜனங்கள்—அதிலும், நாடகம் பார்க்க வரும் அத்தனைபேரும், ஸுலபமாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நாடகத்தை எளிதான பாணியில் அமைக்கக் கூடாது; பொது ஜனங்களின் மூளைக்கு வேலை கொடுக்கவேண்டும். மேலும் மேலும் நாடகங்களின் அறிவுத் தரத்தை உயர்த்தவேண்டும்; நாடகக் கலையை விருத்திசெய்ய அதுதான் வழி—என்னும் உறுதி (J. B.) ப்ரீஸ்ட்லிக்கு உண்டு. நாடகம் பார்க்க ஆரம்பித்ததிலிருந்து பார்ப்பவரின் சிந்தனையும் கற்பனையும் தூண்டப்பட்டுப் பரபரப்பாக ஓடும்படி அவர் நாடகங்கள் எழுதியிருக்கிறார். காலம் என்னும் தத்துவத்தை வைத்து அவர் புனைந்துள்ள நாடகங்கள் மூன்று. உண்மையைத் தேடிக் கண்டறிந்தாக வேண்டும் என்று விதண்டா வாதம் செய்தோமானால், வேண்டாத ரஹஸ்யங்களைக் கிளறிவிட்டு நாமே அனர்த்தத்தைத் தேடிக்கொள்வோம். அபாயம் நிறைந்த சாலைத்திருப்பத்தில் வேணுமென்றே அறுபதுமைல் வேகத்தில் மோட்டாரைச் செலுத்த முற்படுவது போல அது. உண்மை என்பது படுத்துத் தூங்கும் ஒரு நாயைப் போன்றது, ஸ்வபாவத்தில்: அதை எழுப்பலாகாது—எழுப்பினால் குரைக்கும், கடிக்கும்—என்ற கருத்தோடு முதல் நாடகம் ஆரம்பிக்கிறது. விருந்தினருக்குக் கொடுக்க ஒரு ஸிகரெட் பெட்டியை வீட்டு யஜமானி எடுக்கிறாள், அதை, தான் முன்பு பார்த்திருப்பதாக, அவள் ஸ்நேஹிதி சொல்கிறாள். அவள் பார்த்திருக்க முடியாது என்று யஜமானி சொன்னதிலிருந்து வாக்குவாதம் முற்றுகிறது, ஒவ்வொருவருடைய ப்ரத்தியேக வாழ்க்கையின் ரஹஸ்யமும் அம்பலமாகிறது. பொய், கொலை, களவு, காமம், எல்லாம் அதிலிருந்து புறப்பட்டு, நாடகத்தைப் படிக்கும் நம்மைக்கூட ஒரு கலக்குக் கலக்கிவிடுகிறது. (Dangerous Corner) அபாயகர மூலை என்பது நாடகத்தின் பெயர். ஸிகரெட் பெட்டியைப்பற்றிப் பதிலே சொல்லாமலிருந்திருந்தால்? ஸாமான்யமான ஸம்பாஷணையோடு வாழ்க்கை எப்போதும்போல் எப்படி ஓடிவிடும் என்பதையும் நாடகத்தில் ப்ரீஸ்ட்லி காட்டிவிடுகிறார்.

எந்த விஷயத்தையும் அனாவசியமாகக் கிளறக் கூடாது, அப்படிக் கிளறினால் அமைதி கெட்டுவிடும் என்ற நீதி ஒருபுறம்; நம்மவர்கள் 'ரிஷிமூலம் நதிமூலம் விசாரிக்காதே' என்பார்களே—அதைப்போல. ஆனால், ஒவ்வொரு நிமிஷமும் நம் வாழ்க்கையின் பாதை இரண்டாகப் பிரிகிறது. நாம் ஒரு வழி செல்கிறோம்; அதை விட்டு நாம் வேறு வழி சென்றால், அது நம்மைக் கொண்டுவிடும் இடம் வேறு. இந்தக் கருத்தைக் கொண்டதால் (Spilt time) 'பிளந்து நிற்கும் காலம்' என்பது இம் முதல் நாடகத்தில் அடங்கியுள்ள தத்துவம்.

* * *

நாம் கனவு காண்கிறோம். கனவுகளில் நம்முடைய பிற்கால வாழ்க்கையும் நமக்குச் சிலசமயம் தென்படுகிறது. காலம் என்பது பல தொடர்களாக அமைந்தது. ஒரு குறிப்பிட்ட தொடரில் ஒரு தனிப்பட்ட உணர்ச்சியோடு நாம் அனுபவங்களில் ஈடுபடுகிறோம். கனவுகளில் நமக்கு வேறு தன்மை, வேறு உணர்ச்சி, வேறு அனுபவம் இவை போன்ற உண்மைகளை **Experiment with time, the serial universe,** என்னும் பெயர் கொண்ட நூல்களில் **J. W. Dunne** என்னும் அறிஞர் ஆராய்ச்சி வாயிலாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

(Time and the conways) 'காலமும் கான்வேக்களும்' என்ற நாடகம் இந்தக் கருத்திலிருந்து உருவானது. (Kay) கே என்னும் பெண்ணின் இருபத்தோராவது பிறந்த நாள் கொண்டாட்டம். அங்கே கூடியிருப்பவர்கள் எல்லோருடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றிய பகற்கனவுகள் அவளுக்கு. கே கான்வேக்கு மூன்று ஸஹோதரிகள், இரண்டு ஸகோதரர்கள். ஒரு நிமிஷம் அவள் ஆழ்ந்த கற்பனையில் ஊன்றிவிடுகிறாள். இருபது வருஷத்தின்பின், முழுவதும் நிலைகுலைந்த அதே குடும்பத்தின் வாழ்க்கை அவள் அகக்கண்முன் படச்சுருள்போல் விரிந்து வருகிறது. இது நாடகத்தின் இரண்டாவது அங்கம். முதல் அங்கத்தின் முடிவே மூன்றாவது அங்கத்தின் ஆரம்பமாகத் தொடர்ந்து போகிறது. இடையிலுள்ள எதிர்காலத்தின் முன்னோட்டம் கனவளவு. ஆனால் வருங்கால வாழ்க்கையை அந்தக்கனவு மூலமாக முன் கூட்டி அறிந்துள்ள கே கான்வேயின் உள்ளம் அதன் பலனாகப் பண்பட்டு நிற்கிறது. முதல் அங்கத்தின் கே அல்ல, மூன்றாவது அங்கத்தில் வரும் அதே பெண்.

முந்திய நாடகம் காலப் பிளவு.' அடுத்தது 'காலத் தொடர்.' இந்தக் 'காலத்தொடர்' தத்துவம் தான் தம்முடைய சொந்த அபிப்ராயத்தை ஓரளவு அனுஸரித்து நிற்கிறது என்கிறார் ப்ரீஸ்ட்லி.

இப்போது மூன்றாவது நாடகத்தைப் பார்ப்போம். சிறு குன்றுகளும் தாழ்நிலமும் நிறைந்த பிரதேசம். அதில் ஒரு போஜன விடுதி. வயது முதிர்ந்த ஜெர்மன் புரொபஸர் ஒருவர் அங்கே வருகிறார். "தம்பதிகள் இருவர், ஒரு இளைஞர் ஆக மூவர் அங்கே தங்கியிருக்கிறார்களா?" என்று அவர் விசாரிக்கிறார். இல்லையென்றதும், "நான் **தவறான வருஷத்தில்** வந்துவிட்டேனோ?" என்று சொல்லிக்கொள்கிறார்! வேறோரிடம் போய்விட்டு அரைமணி நேரத்தில் மறுபடியும் அதே விடுதிக்கு வருகிறார். அதற்குள், எதிர்பாராதவிதமாக, அவர் வர்ணித்ததற்கு ஒத்தபடி, மூன்றுபேர் அங்கே வந்துவிடுகிறார்கள்! பெரிய தொழிற்சாலை நிர்வாகியும் அவர் மனைவியும், அந்தத் தொழிற்சாலையின் நிதியைக்கொண்டு நடந்துவரும் ஒரு கலாசாலையின் தலைமையாசிரியர்: ஆக மூவர். புரொபஸருக்கும் போஜன விடுதியில் இடம் கிடைத்துவிடுகிறது.

ஆனால் புரொபஸரின் போக்கு ஒருவருக்கும் பிடிக்கவில்லை. அவர் சொல்லும் விஷயங்களோ விசித்திரமாயிருக்கின்றன, பிறருடைய உள் கருத்து, அவர்களாக எவ்வளவு மறைத்தாலும் பளிச்சென்று பளிங்குபோல் புரொபஸருக்குத் தெரிந்திருக்கிறது. தொழிற்சாலை நிர்வாகி என்றாலுமே, அவர் மனைவிக்கு முன்பு எப்போதோ அந்த இடத்திற்கு வந்திருப்பதுபோன்ற ஒரு உணர்ச்சி. புரொபஸர் அவளிடம் பேசும்போதும் அதே வார்த்தைகளை அவளிடமிருந்தே கேட்டிருப்பதாக அவளுக்கு நல்ல ஞாபகம். இந்த இடம் அவளை எப்படியோ வசீகரித்து இழுத்திருக்கிறது! 'நான் முன்பு இங்கே வந்திருக்கிறேனே!' (I have been here before) என்று நாடகத்திற்குப் பெயர் வைத்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

தொழிற்சாலை நிர்வாகியின் அந்தரங்க மனோவேதனைகளும் புரொபஸருக்குத் தெரியுமென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! அவருடைய குறுக்கு விசாரணையிலிருந்து யாரும் தப்பமுடியவில்லை. போஜனசாலையை நடத்தும் ஸ்திரீக்கு இதெல்லாம் ஸங்கடமாக இருக்கிறது. அவரை மூட்டைகட்டி வெளியேற்றிவிடுகிறாள்.

அதற்குள் என்னவெல்லாம் நடந்துவிடுகிறது! 'காலம் என்பது தனிப்பட்ட ஒரு பொருள் அல்ல. எங்கும் நிறைந்து நிற்கும் ஒரே பொருளும் அல்ல. காலம் என்பது பலவகை. ஒன்றன்பின் ஒன்றாக அதை நாம் அனுபவிக்கிறோம்'— என்றெல்லாம் புரொபஸர் விளக்கிச் சொல்கிறார். காலம் சுழல்கிறது. ஒரே வாழ்க்கையை நாம் திரும்பத் திரும்ப நடத்துகிறோம். முன்பு எப்படி இருந்தோம்; பிறகு எப்படி ஆகப்போகிறோம்—என்பதையும் அதனால் நாம் நன்றாக அறிந்து கொள்ள முடியும். இதுதான் புரொபஸரின் ஸித்தாந்தம்.

சொல்லிவைத்தாற்போல் எல்லாம் நடக்கிறது. தொழிற்சாலை நிர்வாகியின் மனைவி இளைஞரான தலைமையாசிரியர்மீது காதல் கொள்கிறாள். தலைமையாசிரியரும் அதே நிமிஷத்தில் மட்டற்ற மோஹத்தில் சிக்கிக்கொள்கிறார். கணவனிடம் விஷயத்தைச் சொல்லி அவனிடமிருந்து பிரிந்துசெல்ல மனைவி தீர்மானித்துவிட்டாள், இருபத்துநான்கு மணிநேரத்திற்குள் விஷயம் அவ்வளவு முற்றிப்போகிறது.

போஜன விடுதியை விட்டுப் புரொபஸர் வெளியேறியபோது அவர் ஒரு புஸ்தகத்தைக் கைதவறி விட்டுவிட்டார். 'சுற்றிச் சுற்றி வருதலும் குறுக்கிட்டுத் தடுத்தலும்' என்பது அந்தக் கையெழுத்துப் பிரதியின் பெயர். இறந்த பிறகும் பிறக்கிறோம். அதே வாழ்க்கையை மீண்டும் மீண்டும் வாழ்கிறோம். அனேகம் பேருக்கு இதிலிருந்து விமோசனமே கிடையாது. குற்றவாளிகள், பைத்தியம் பிடித்தவர், தற்கொலை செய்துகொள்வோர், இவர்களை இவர்களுடைய விதி இன்னும் நெருங்கிப் பின் தொடர்கிறது. இப்படியெல்லாம் ஆராய்ச்சியின் பயனாகப் புரொபஸர் முடிவுசெய்திருக்கிறார்.

இந்த நோட்டுப் புஸ்தகத்தைத் தேடி எடுத்துச்செல்ல, போஜன விடுதிக்குப் புரொபஸர் திரும்பி வருகிறார். "இதே இடத்தில் இதற்கு முன் என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று தொழிற்சாலை நிர்வாகியின் மனைவி அப்போது புரொபஸரைக் கேட்கிறாள். புரொபஸர் அந்தப் போஜன விடுதியைத் தேடிவந்ததே அதற்காகத்தானே! அவர் ஏற்கனவே கணக்கிட்டுக் கண்டுபிடித்துள்ள முடிவு என்ன?

கணவனும் மனைவியும் பிரிகிறார்கள். கணவன் தற்கொலை செய்துகொள்கிறான். காதலே பெரிது என்று கைகோத்து வெளியேறிய காதலர்களுக்கும் ஸுகம் இல்லை. பிறன் மனைவியை இட்டுச் சென்றவனைச் சமூகம் பஹிஷ்கரிக்கிறது; வேறு வேலையும் அவனுக்குக் கிடைக்கவில்லை. காதலாவது நீடித்திருந்தால் பாதகமில்லை, விடிந்தெழுந்தால் ஒருவரையொருவர் நிந்தித்துச் சண்டையிடும் நிலைக்கு இருவரும் வந்துவிடுகிறார்கள். வறுமையில் இதைவிடக் கொடிய துன்பம் வேறு என்ன வேண்டும்? நிர்வாகி தற்கொலை செய்துகொண்டு இறந்ததால் தொழிற்சாலை அழிந்துபோகிறது. நிதி உதவி நின்றுவிட்டதால் கலாசாலையும் மூடப்படுகிறது, போஜன விடுதியின் சொந்தக்காரிக்கு இருவிதங்களில் நஷ்டம். சேமித்த தொகை அதே தொழிற்சாலைப் பங்கு பத்திரங்களாக இருந்ததால் பொருள் நஷ்டம். கலாசாலை மூடப்பட்டதால் அவளுடைய பிள்ளையின் படிப்பும் தடைபட்டு நின்றுவிடுகிறது. ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலையின்மை, வறுமை, ஏமாற்றம், துன்பம்.

இதெல்லாம் புரொபஸருக்கு எப்படித் தெரியும்? அவருக்குக் கனவுபோல் பல காட்சிகள் தோன்றியதுண்டு. இப்போதிருப்பதைவிட இரண்டு வயது அவருக்கு அதிகம் ஆகியிருக்கிறது. அந்த ஸமயம் அவர் தங்கியிருந்த இடம் லண்டனில் ஏழைகள் வசிக்கும் பாகத்தில் வறுமை மிகுந்த ஒரு பகுதி. அதே வீட்டில் அடுத்த மேல் பகுதியில் இளம் வயதுள்ள கணவனும் மனைவியும் வசிக்கிறார்கள், மனைவி அவன்மீதிருந்த காதலுக்காகத் தன் முதல் கணவனை விட்டுப் பிரிந்தவள். அவள் அப்படிச்செய்த ஒரு காரியத்தின் பலனாக நூற்றுக்கணக்கான மக்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டது.

இதெல்லாம் புரொபஸருக்குக் கனவல்ல. நினைவு! அவருடைய பற்பல முன் ஜன்மங்களின் நினைவு! அவ்வளவு தெளிவான ஞாபகம்!

சிற்சில மாறுதல்களோடு அதே வாழ்க்கையை நாம் திரும்பத் திரும்ப நடத்துகிறோம் என்ற உறுதியான நம்பிக்கையினால் அந்த ஜெர்மன் புரொபஸர் மூன்று மாதங்களுக்கு முன் தமக்குக் கிடைத்த மேற்சொன்ன காட்சிகளிலிருந்து கணக்கிட்டு, தம்பதிகளும் இளைஞரும் குறிப்பிட்ட இந்த இடத்தில் குறிப்பிட்ட இந்த நாளில் முதன்முதல் சந்தித்திருக்கவேண்டும் என்று கண்டுகொண்டு, அவர்களைத் தேடி, சொல்லி வைத்ததுபோல், அங்கே வந்திருக்கிறார்.

'சுற்றிச் சுற்றி வருதல்' எப்படி என்று தெரிந்தது. குறுக்கிட்டு அதைத் தடுத்தல்' என்பது எப்படி? ஓரளவு மாறுதலுடன் இதே அனுபவம் இதே தம்பதிகளுக்கு முந்திய வாழ்க்கைகளில் ஏற்பட்டது வாஸ்தவம். ஆனால் அதற்குமுன் இவற்றையெல்லாம் அறிந்துள்ள ஆராய்ச்சிக்காரர் ஒருவர் அவர்களைச் சந்தித்து விஷயங்களை இப்படி விளக்கியதில்லையல்லவா? அது புதிது. தொழிற்சாலை நிர்வாகி தாம் தற்கொலை செய்துகொள்வதில்லை என்று இப்பொழுது வாக்குறுதி தருகிறார். அவர் மனைவியும் அவள் காதலனும் கொஞ்ச காலம் (அமளி அடங்குமட்டும்) வேறு நாட்டுக்குப் போய்விட்டுத் திரும்பிவரட்டும்; அந்தக் காதலன் தன் பழைய வேலையை மறுபடி ஒப்புக்கொள்ளலாம்; யாருக்கும் பொருள் சேதம், நிலைப்பிரிவு, முதலான துன்பங்கள் நேர இடமில்லை, என்று அவர் முடிவான உபாயம் சொல்கிறார்; இந்தச் செய்கையால் பழைய காலச் சுழலிலிருந்து தம்மை அவர் விடுவித்துக்கொள்கிறார். பல விதத்திலும் அவருக்கு இது மறு பிறப்பு. புரொபஸரின் ஆசீர்வாதம் அவருக்குக் கிடைக்கிறது. காதலர்கள் வெளியேறுகிறார்கள். புரொபஸரின் ஆராய்ச்சியும் வெற்றியுடன் விளங்குகிறது!

நமது நாட்டிலே குறிப்பிட்ட ஒரு வரலாறு ஒரு புராணத்தில் ஒரு விதமாகவும் வேறொரு புராணத்தில் சற்று மாறுபட்டும் காணப்பட்டால் 'இது வேறு கல்பத்தில், அது வேறு கல்பத்தில் நடந்தது' என்று ஸமாதானம் சொல்வார்கள். இப்போதுள்ளபடி ராமாயண மஹாபாரதக் கதைகள் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் நடந்தபடி எழுதியிருப்பதாகச் சொல்வார்கள். காலசக்ரம் சுழன்று வருவதாகவும், ஜீவகோடிகளின் வாழ்க்கையும் சுற்றிச்சுற்றி வருவதாகவும், அவ்வப்போது ஒரு ஆத்மா அந்தத் தளையிலிருந்து விடுபட்டு விடுதலை பெறுவதாகவும், நம்பும் நமக்கு இந்தத் தத்துவம் புதிதல்ல.

'ஜகத் ஸ்ருஷ்டியின் புதிய அமைப்பு' (New Model of the Universe) என்னும் நூலில் Ouspensky என்பவர் காலசக்ரம் (Circular Time) என்ற இக்கருத்தை விளக்கியிருப்பது

ப்ரீஸ்ட்லியின் நாடகத்திற்கு ஆதாரமாக அமைந்தது, ராக்ஷஸ பலத்துடன் விதி நம்மை எங்கோ இட்டுச் செல்கிறது, அதை எதிர்த்து நிற்க நமக்கு வலிமை இல்லையே, என்று ஏங்கி நிற்பவர்களுக்கு இது எவ்வளவோ ஊக்கத்தைத் தரக்கூடியது என்பது நிச்சயம். தீய மார்க்கத்தில் இறங்க நினைப்பவருக்கு அது தீமை என்று புலப்படாது. அப்போதுள்ள மனோ நிலையில் தமக்கும் பிறருக்கும் அதனால் ஏற்படப்போகும் துன்பத்தையும் உருவாக்கிக் காட்ட அவர்கள் கற்பனை இடம் தராது. ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிதானமாகவும் தீர்க்க திருஷ்டியுடனும் ஆத்ம பலத்தைத் துணைக்கொண்டும் நடக்கும் மனிதனே ஸ்வதந்திரம் பெற்ற ஜீவன் முக்தன் ஆவான் என்பதையே எந்த நாட்டு அறிவாளிகளும் நமக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தி வருகிறார்கள். ● ● ●

தேவீ உபாஸகர்

ஜி. எஸ். மணி

நண்பருடன் கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு அம்பாள் தரிசனமும் செய்துகொண்டேன்.

அம்பாள் மிகுந்த சக்தி வாய்ந்தவள் என்று என் நண்பர் தெரிவித்தார். அவர் சொல்லுமுன்பே நானும் அதை உணர்ந்துவிட்டேன்; தாயாரின் ஸன்னிதியில் நின்றவுடனேயே மனம் தன்னையறியாமல் தெய்வ ஸாந்நித்யத்திலே ஈடுபட்டுவிடக்கூடிய ஏதோ ஒரு சக்தி அங்கு நிலவத்தான் செய்தது; உள் கவலைகளும், வெளித்தொல்லைகளும் நீங்கிவிட்டதாக ஒரு உள்ளுணர்வு ஏற்பட்டு நிம்மதி நிலவத்தான் செய்தது.

ஸன்னிதிக்கு முன்பாகத் தலைவிரிகோலமாய், மயக்கம் போட்டு விழுந்துவிடக்கூடிய வேகத்திலே, பம்பரமாய்த் தலை சுழற்றியாடிய பிசாசுபிடித்த பெண்கள் தெய்வத்தின் சக்தியை நம்பாதவர்களுக்கு வெளிப்படையான ருஜுவாகத் திகழ்ந்தனர்.

பிரஸாதத்தைப் பெற்றுக் கொண்டு கர்ப்பக் கிருஹத்தைவிட்டு வெளியே வந்தோம்.

எதிர்ப்பக்கமிருந்த திறந்த வெளியிலிருந்து காற்று ஆனந்த மயமாக வீசியது.

"சற்று விசிராந்தியாக இப்படி உட்கார்ந்துவிட்டுப் போகலாமே? அவசரம் ஒன்றுமில்லையே?" என்று நண்பரிடம் கேட்டேன்.

"ஆஹா! ஆட்சேபனையில்லை" என்று அவரும் ஒப்புக்கொண்டதும் ஒருபுறமாக அமர்ந்துகொண்டோம்.

"எங்கெங்கோ — வெகு தூரத்துக்கு அப்பாலிருந்துகூட — இந்தக் கோயிலுக்குப் பிரார்த்தனை செலுத்திக்கொள்ளப் பலர் வருகிறார்கள்; பிசாசு பிடித்தவர்கள் ஒரு மண்டலம்—அரை மண்டலம்— இங்கே இருந்து பூரண குணம் ஏற்பட்ட பிறகு தம் ஊருக்குப் போவார்கள்; அநேகமாக—இங்கு வருபவர் அனைவருக்குமே—சீக்கிரத்திலேயே தோஷம் நீங்கிவிடுவதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்" என்றார் நண்பர்.

"பிசாசு—தோஷம்—என்று சொல்லப்படுவதெல்லாம் மனத்தைப்பற்றிய பலஹீனம்தான் என்பது என் அபிப்ராயம்" என்று தெரிவித்தேன்.

"அது அவரவர் நம்பிக்கையைப் பொறுத்த விஷயம்" என்று நண்பர் சொன்னார்.

"தெய்வத்திடம் போய் வரம் வேண்டி நிற்பதே பலஹீனம்தான்!" என்று முற்றிலும் புதிய மூன்றாம் குரல் ஒன்று குறுக்கிட்டது.

குரல் வந்த பக்கம் ஏககாலத்தில் திரும்பிப் பார்த்தோம்.

சற்றுத் தூரத்தில் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்ததைக் கண்டோம்; அவர் சிரித்ததிலிருந்து அவர்தான் அப்படிச் சொன்னவர் என்றும் தெரிந்துகொண்டோம்.

அதுவரையில் அவர் இருந்ததை நாங்கள் கவனிக்கவேயில்லை. அவராகப்பேசிய பிறகு—அவரை நன்றாகக் கவனிக்க முயன்றும், முடியவில்லை; மங்கிய விளக்கொளியில் அவர் தோற்றம் ஸரியாகத் தெரியவில்லை. குரல் ஒலியிலிருந்தும், தலையின் நரையிலிருந்தும் வயது முதிர்ந்தவர்தானென்று தெளிந்தோம்.

அந்தப் பெரியவர் தொடர்ந்து பேசினார்.

"தன்னிடத்திலேயே அசையாத நம்பிக்கை கொண்டவன் மற்ற எதையுமே நம்ப முற்படுவதில்லை; தன்னிடம் பலஹீ

னத்தைக் காண்பவன்—அதைப் போக்கக் கூடியவனென்று கருதப்படும் மற்றவனுடைய உதவியை நாடிப்போகிருன்; மனித முயற்சியில் கைகூடாத விருப்பங்களுக்காகவும், ஆசைகளுக்காகவும், கடைசியில் தெய்வத்திடம் வரம் வேண்டி நிற்கிருன். அப்படி தெய்வத்திடம் யாசித்தும் ஏமாந்துபோன தேவீ உபாஸகன் ஒருவனைப் பற்றிய கதை எனக்குத் தெரியும். அதைக் கேட்க உங்களுக்கு ஆசையும், அவகாசமும் இருந்தால் இப்போதே சொல்லி விடுகிறேன்; சொல்லவா?" என்று கேட்டார் அந்தப் பெரியவர்.

ஆவலுடன், "சொல்லுங்களேன்?" என்று கேட்டோம்,

பெரியவர் ஆரம்பித்தார்.

"ஜன்மாந்தரத்தில் விட்ட குறை — தொட்ட குறையோ — என்னவோ? தேவீ உபாஸகன் ஆகிவிட வேண்டுமென்று அவனுக்கிருந்த அளவு மீறிய ஆசையைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். இல்லாவிட்டால், வெகு வருஷங்களாகவே அவன் மனைவிக்குத் தீராத வயிற்றுவலியாக இருந்து வந்தது, தேவீ உபாஸகர் ஒருவருடைய மந்திரித்த விபூதியின் மகிமையால் பூரணமாக நிவர்த்தியாகி விட்டதென்ற ஒரே காரணத்திற்காக மட்டும்—தானும் அவரைப்போலவே சக்தி உபாஸகனுகிவிட வேண்டுமென்று ஆர்வம் உண்டாவது இயற்கையா என்ன?

ஆனல் அவனுக்கென்னவோ அடக்க முடியாத ஆர்வம் ஏற்பட்டே விட்டது. அவன் மனைவியின் வயிற்றுவலியைக் குணமாக்கிவிட்ட அந்த உபாஸகரிடம் பரிபூரண பக்தியும், ஈடுபாடும்கூட உண்டாகி விட்டது. அவரையே குருவாகக் கொண்டு மந்திரோபதேசம் பெறவும் அவன் விரும்பினன்.

"அப்பா! இளம் வயதினனுக இருக்கிருய்; தேவீ உபாஸகனுக ஆசைப் படுகிருயே?" என்ருர் அவன் குரு.

"ஸ்வாமி; தெய்வ பக்தியில் ஈடு படுவதற்கு வயது வரையறை வேறு உண்டா என்ன?" என்று அவன் கேட்டான்.

"இல்லைதான்; ஆயினும் தெய்வ பக்தியிலிருந்து தெய்வ உபாஸனை முற்றிலும் வேறு பட்டதொரு விஷயமாயிற்றே? தெய் பக்திக்கு வயதைப் பற்றிய கட்டுப்பாடும் இல்லை; வேறு நிபந்தனைகளும் கிடையாது. ஆனல் உபாஸனைக்குச் சிரத்தையும், நியமநிஷ்டைகளும் அதிகம் வேண்டுமே? அந்த வழியிலிருந்து சிறிது தவறிநடந்தாலும் உபாஸிப்பவனுக்கும் தொந்தரவுகள் உண்டாகும்; உபதேசித்தவனுக்கும், பாத்திரமறிந்து உபதேசிக்காததால், தோஷங்கள் ஏற்படுமே? அதனுல்தான் கவலைப்படுகிறேன்" என்ருர் குரு.

"பிரமாணமாகச் சொல்லுகிறேன்; அதற்கான நியம நிஷ்டைகளிலிருந்து அணுவளவுகூடப் பிறழமாட்டேன், ஸ்வாமி"

"தேவீ உபாஸனை மிகவும் கடுமையானதப்பா; அந்தச் சோதனைகளிலிருந்து வெற்றி பெறுவதே துர்லபமாயிற்றே?"

"சிறிது கூடச் சந்தேகப்படவேண்டாம்; கட்டாயம் சித்திபெறுவேன் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

குரு சிஷ்யனை நிமிர்ந்து நோக்கினுர்; அவன் முகத்தில் காணப்பட்ட அந்த அடக்கமுடியாத ஆர்வம்—அந்தத் துடிப்பு அவரையே பிரமிப்பில் ஆழ்த்திவிட்டது.

"எப்படி உனக்கு இந்த ஆசைஉண்டாயிற்று?" என்று கேட்டு அறிந்துகொள்ள விரும்பினுர்.

"ஸ்வாமி, என் மனைவியின் வயிற்றுவலி எந்த வைத்தியத்திற்குமே குணமாகாத தீராத வியாதியாகக் கருதப்பட்ட போதிலும் தங்கள் சக்தியால் நிவர்த்தியாகிவிட்டதே? அதிலிருந்து சக்தி உபாஸனையில் என் ஆசை தீவிரமாகிவிட்டது—அதுவே காரணமென்பதுமில்லை; ஏற்கனவே விட்டகுறை தொட்டகுறையாகவே நான் கருதுகிறேன்."

குரு சிரித்தார்; அப்போது ஒரு ரகசியத்தையும் அவனுக்குத் தெரியப்படுத்தினுர். "என் சக்தியில் ஒன்றும் நடக்கவில்லையப்பா; தேவியின் அனுக்ரஹம்தான்; ஆயினும் உனக்கு நிலைமையைத் தெளிவு

படுத்த இப்போது இன்னொரு விஷயத்தையும் சொல்லுகிறேன்; உன் மனைவியின் வயிற்றுவலி பூர்வஜன்ம கர்மாவினால் ஏற்பட்டது. அதனால்தான் அது மனுஷ்யப் பிரயத்னத்தில் குணமாகவில்லை; அந்த வலியை நான் அனுபவிப்பதாக ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மீதே உன் மனைவியை விட்டு நீங்கியது; அந்த வலியைச் சிறிது காலம் நானும் பொறுமையுடன் அனுபவித்தேன்" என்று அவர் சொன்னதும் சிஷ்யன் ஒரு நிமிஷம் திகைத்துவிட்டான்.

"அப்படியா! எத்தகைய உன்னதமான தொண்டு! அவசியம் எனக்கும் உபதேசியுங்கள், சுவாமி; நிச்சயமாய்த் தன்னலமற்ற தொண்டு செய்வேன்" என்று மறுபடியும் வற்புறுத்தினான்.

"ஆனால் துஷ் பிரயோகத்திற்கு மனம் தூண்டினால்?" என்று கேட்டார் குரு.

"ஸத்யமாகச் சொல்லுகிறேன்: தன்னலமற்ற தியாகத்தையே மேற் கொள்ளுவேன் "என்றான் அந்தச் சிஷ்யன்.

குரு திருப்தியடைந்து விட்டார்.

குருவின் சோதனையில் வெற்றிபெற்று வெளிவந்ததே அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மந்திரோபதேசம் ஆயிற்று; அத்துடன் உபாஸகன் அனுஷ்டிக்க வேண்டிய விதிகளைப்பற்றியும் அவர் அதிகமாக வற்புறுத்திச்சொன்னார். குருவின் மனப்பூர்வமான ஆசிர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு அந்தத் தேவி உபாஸகன் மன மகிழ்ந்தான்.

* * * *

அவனுடைய மன மாற்றம் குறித்து அவன் மனைவி பெரிதும் கலங்கினாள்.

"பிறவியின் பயனைப் பூரணமாக அனுபவிப்பதை விடுத்து—இந்த வயதில் உங்களுக்கு எதற்குத் தேவியும், உபாஸனையும்? ஏனிந்த மூளைக் கலக்கம்?" என்று கேட்டு அவள் பொருமினாள்.

அவன் சிரித்தான்: "தெய்வ ஸாந்நித்யம் பெறுவதே பிறவியின் பயனைப் பூரணமாக அடைவதன் அர்த்தமென்பது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டான் தேவி உபாஸகன்.

"அவ்வளவிற்கு முதிர்ந்த ஞானம் எனக்கு இன்னும் ஏற்படவில்லை. உங்களுக்கும் ஏற்பட்டுவிட்டதாக நான் நினைக்கவுமில்லை. நீங்களாக ஏதோ நினைத்துக்கொண்டு பைத்தியக்காரத்தனமான செயலில் ஈடுபட்டிருக்கிறீர்கள்; இந்த வம்பெல்லாம் நமக்கு எதற்கு? வேண்டாம், விட்டுவிடுங்கள்" என்று அவள் கெஞ்சினாள்.

"விரதம் எடுத்துக்கொண்டு நடத்துவதில் இருக்கும் கஷ்டங்களைவிட, பாதியில் விட்டுவிடுவது நமக்கு இன்னும் பேராபத்தையே விளைவித்துவிடும்; தெரியுமா?" என்று அவன் எச்சரித்தான். "தவிர, குருமுகமாகவே விசர்ஜனத்தை நாடினாலும், ஏற்கனவே இதில் நான் காண்பித்திருக்கும் மன உறுதிக்கு மஹத்தான தோல்வியல்லவா? அவமானம் எனக்குத்தானே? கடைசி வரையில் உறுதியுடனேயே நிற்கப் போகிறேன்; நீ அனாவசியமாகக் குறுக்கிடாதே" என்றும் தீர்மானமாகச் சொன்னான்.

"இந்த விபரீதமெல்லாம் எதில்போய் முடியுமோ என்று எனக்குத்தான் பெருங் கவலையாக இருக்கிறது"

"எல்லாம் நன்மையில்தான் முடியும்"

"ஸரி; உங்கள் உபாஸனையில் சித்தியடைந்து நீங்கள் சாதிக்கப் போவது தான் என்ன?" என்று அவள் கோபம் கொண்டு பொங்கினாள்.

"உபாஸனையில் சித்தி பெறுவதே பெரிய சாதனையாயிற்றே? தெய்வ ஸாக்ஷாத்காரமே ஏற்பட்ட பிறகு — கேவலம், வேறு எதுதான் வேண்டும்?" என்ற அவன் பதில் சொன்னதற்கு அவள் தன் மனப்போக்கின்படி அர்த்தம் செய்துகொண்டாள்.

"ஆமாம்; மண்ணைப் பொன்னாக்குவீர்கள்; பொன்னைப் பெண்ணாக்குவீர்கள்; பெண்ணைப் பேயாக்குவீர்கள்; பேயைப் பெண்ணாக்குவீர்கள்—ஆனால் என் கதி

என்ன ஆவது?'' என்று கேட்டு அவள் பொறுக்கமாட்டாமல் அழுதாள்.

''வீணாக ஏன் கலங்குகிறாய்? உன்னை ஆயுள்பரியந்தம் கைவிடவே மாட்டேன்'' என்று அவன் ஆறுதல் கூறினான்.

''வாஸ்தவம்; ஆனால் எந்த வகையில் என்னை வைத்துக்கொள்ளுவீர்களென்று எனக்குத் தெரியவேண்டும்: கொண்ட மனைவியாகவா? அல்லது பெற்ற தாயாகவா?'' என்று தாங்கமுடியாத உள்ளத் துடிப்புடனே கேட்டாள்.

''இல்லறத்திலே இருந்த போதிலும் துறவறம் அனுஷ்டிப்பதே இனி நான் அனுஸரிக்கவேண்டிய தர்மம்'' என்று அவனும் மன உறுதி குன்றாமல் பதிலளித்துவிட்டான்.

மனங்குலைந்துவிட்ட அவள் அழுது தீர்த்துவிட்டாள்.

நாளடைவில் அந்த ஏக்கமே அவளைத் தின்று தீர்த்துவிட்டது.

'இளம் மனைவி இறந்துவிட்டாளே' என்று அவன் கொஞ்சம்கூடச் சஞ்சலப்படவேயில்லை. 'இருந்த ஒரு பந்தத்தையும் தேவி போக்கிவிட்டாள். இனி முழு நேரமும் அவள் தியானத்தில் ஈடுபடத் தடையேதுமில்லை' என்றெண்ணிக்கொண்டு அந்தத் தேவி உபாஸகன் மனச் சாந்தி அடைந்தான்.

* * * *

அவன் தனக்குள்ளேயே சக்தியை ஆவாஹனம் செய்துகொண்டிருந்தான். ஆகவே வெளிப்படையாகப் பிரமாதமான பூஜை புரஸ்காரங்கள் ஏதுமில்லை. அறுபது நாழிகையும் தியானம், தியானம், தியானமே.

நடுநிசியிலேகூட அவன் தூக்கமின்றிச் சமாதியில் ஆழ்ந்துவிட்டதுபோல்—தியானத்தில் ஆழ்ந்துவிடுவது வழக்கம். மந்திரம் முழு வேகத்துடன் உருவேறிக்கொண்டேயிருந்தது.

சித்தி பெறும் எல்லையிலே நின்றுகொண்டிருப்பதுபோலே அவனே அநேகம் தடவைகளில் உணர்வான். அவனுக்குள்ளேயே யாரோ மிருதுவான குரலில் அவனை அழைப்பதுபோலிருக்கும்; ஒவ்வொரு சமயம் அதே குரல் வெளிப்புறமிருந்தும் வரும். அப்போதெல்லாம் திடுக்கிடுவான்; 'யார்' என்று கேட்பான்; பதில் வராது; யாரையோ சுற்றுமுற்றும் தேடுவதுபோல் நோக்குவான்; யாருமே இருக்கமாட்டார்கள். அநேக சமயங்களில் ஏதோ அபூர்வமான கனவு காண்பவனைப்போல மயக்கத்தில் ஆழ்ந்து கிடப்பான். சற்றும் எதிர்பாராத சமயத்திலே அவன் மனைவியின் குரலொலி கேட்பதுபோல் தோன்றும்; திகைத்துப்போவான். இப்போது அவள் ஏன் வருகிறாள்? ஒருகால் நிறைவேறாமல் போய்விட்ட எத்தனையோ ஆசைகளினால் ஏங்கிநின்று, பிசாசாய் நடமாடுகிறாளோ? அல்லது அவன்தான் அவன் போகும் வழியில் தவறிவிட்டானோ?

அவன் தன்னையே தேற்றிக்கொண்டு மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தான்.

அப்போது நடுநிசிவேளை; கொல்லைப்புறம், கிணற்றங்கரையிலே. அவன் அமர்ந்துகொண்டிருந்தான், மிருதுவான தென்றல் கொஞ்சியபடி தவழ்ந்தது. வானவீதியிலே பூரணசந்திரன் அமிருதத்தை அள்ளிச் சொரிந்தபடி ஆனந்த பவனி வந்துகொண்டிருந்தான். நிர்மலமான அந்த இயற்கைச் சூழ்நிலையிலோ—அல்லது தன்னில்தானோ—அவன் மயங்கிக் கிடந்தான். தன்னுணர்வின்றியே அவன் இருந்தான்.

திடீரென்று அவனுக்கு வெகு ஸமீபத்திலே மலர்ந்த மல்லிகையின் மணம் பரவியது; அதுமட்டுமல்ல; விவரிக்க முடியாத இன்னும் ஏதோ பரிமள கந்தம்.

அவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான்.

பேரழகு படைத்த ஒரு யௌவன மங்கை அவனெதிரில் நின்றுகொண்டிருந்தாள். அந்த அழகை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது; உள்ளத்தைக் கிறுகிறுக்க வைக்கும் அழகு; தெளிந்த உள்ளத்தையும் பைத்தியமாக்கும் அழகு; பெண்களே பார்த்தால் மோஹிக்கத்தக்க அழகு; பழுத்த ஞானியையும் கலங்கவைக்கும் அழகு.

"நீயார்?" என்று அவன் கேட்க முடியாமல் கேட்டான்.

"யாரோ ஒருவன் விடாப்பிடியாக என்னைத் துரத்துகிறான்; அவனை இன்னானென்றே என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை, எந்த உத்தேசத்தில் என்னைத் தொடர்கிறானென்றும் தெரிந்துகொள்ளமுடியவில்லை மறைவிடம் தேடிவந்தேன்" என்று அவள் தெரிவித்தாள்.

அந்தக் குரலொலியின் இனிமை கற்பனைக்கும் அப்பாற்பட்டத; 'மதுரம்' என்ற வார்த்தை என்ன அர்த்தத்தைக் குறிக்குமோ அதுபற்றிய உணர்வுக்கும் அப்பாற்பட்டது; அமிர்தத்தின் சுவைக்கும் அப்பாற்பட்டது.

அவளுக்குப் பதில் சொல்ல நாவே எழாமல் அவன் தத்தளித்தான்.

"நான் வேறிடம் தேடிப் போகவேண்டியவள் தானே?" என்று அவளாகவே மீண்டும் வினவினாள்.

"வேண்டாம். வேண்டாம், இந்த நிசி வேளையில் தனியாக இப்படி அலைவது நியாயமில்லை என்னிடத்திலேயே தங்கலாம்" என்று அவன் அவஸரமாகச் சொன்னான்.

"தாமதிக்காமல் எனக்கு ஓர் இடம் காண்பியுங்கள்" என்று அவள் மன்றாடினாள்.

அவன் அவளைத் தன் வீட்டினுள்ளே அழைத்துச் சென்றான்." தொந்தரவின்றி இங்கேயே இருக்கலாம்; நான் மட்டுமே தான் இருக்கிறேன்; வேறு யாருமில்லை." என்று சொன்னான்.

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டுப் புன்னகை புரிந்தாள்; "பத்திர உணர்ச்சி பூரணமாக இருக்குமல்லவா!" என்று வினவினாள்.

அவள் புன்னகை அவன் நெஞ்சைக் கிறுகிறுக்க வைத்தது; அவன் உணர்வையே மழுங்க வைத்துவிடும் போலிருந்தது. சமாளித்துக்கொண்டு, "கவலையே வேண்டாம்; நிர்ப்பயமாக இருக்கலாம்" என்று பதிலளிததான்.

ஒரு நிமிஷம் அவர்களிடையே மௌனம் நிலவியது.

"நீ யார், எங்கிருந்து வருகிறாய், உன்னைத் தொடருபவன் யார்—என்பது பற்றிய விவரங்களை நான் தெரிந்துகொள்ளலாமோ?" என்று அவன் கேட்டான்.

"என்னை ராஜேசுவரி' என்று அழைப்பார்கள்; என்னுடையதென்று சொல்லிக்கொள்ள எனக்கென்று தனி இடம் ஏதுமில்லை; சொந்தம் கொண்டாடுபவர்கள் அநேகர் இருக்கிறார்கள்; என் உதவி வேண்டுமென்று அழைக்கும் இடத்திற்குப் போவேன்; வேளையில்லை, பொழுதில்லை — அழைப்பும் வந்துகொண்டே தானிருக்கும்; போகுமிடமெல்லாம் எனக்கு எவ்வளவோ இடைஞ்சல்கள், அஸௌகர்யங்கள் நேரும். அப்போதெல்லாம் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமலே புறப்பட்டுவிடுவேன்—அது என் வழக்கம். அதேபோல்தான் இப்போதும் வந்துகொண்டிருந்தேன்—யாரோ விடாமல் என்னைத் துரத்திக்கொண்டு வருகிறான்; ரொம்ப நாட்களாவே அவன் என்னைப் பின் தொடரத்தான் செய்கிறான்—யாரென்று தெரியவில்லை; நல்லவேளையாக உங்களைப் பார்த்துவிட்டேன்"

'உங்களை' என்று சொன்னதைச் சற்று அழுத்தியே—வேகத்துடன்—சொன்னாள்.

"ஏற்கனவே பெண் ஜன்மம்; அதிலும் இவ்வளவு அழகாய் இருப்பது ஆபத்துத்தான்' என்று அவன் ஒப்புக்கொண்டான்.

"அதிக அழகு பெண்ணிற்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதுதான் என்றாலும்—அந்த அழகை விரும்புகிறவனும் அதிலிருக்கும் ஆபத்தை உணர்ந்துவிட்டால்—அப்புறம் இருவருக்குமே அழிவில்லை." என்று சொல்லி அவள் சிரித்தாள்.

"ஆமாம்" என்று அவன் வெளிக்குத்தான் ஒப்புக்கொண்டான். உள்ளூற அவள் பேரழகும், புன்னகையும்—பேச்சும், சிரிப்பும் அவனை ஏற்கனவே அரிக்கத் தொடங்கிவிட்டன.

"தனியாக இநந்துகொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று அவள் வினவினாள்.

"நான்—நான்—தேவீ உபாஸனை செய்கிறேன்" என்று தடுமாறிய குரலில் அவன் தெரிவித்தான்.

"அதாவது? ஸாக்ஷாத்தாக அந்தச் சக்தியையே நேரில் நிறுத்திவைத்துப் பேசும் சக்தி என்று ஏதோ சொல்லிக் கொள்வார்களே? அது மாதிரியா?" என்று அவள் ஆச்சர்யப்பட்டாள்.

"ஆமாம்."

"சித்தியாகிவிட்டதா?"

"ஆனதாக இன்னும் உணரவில்லை."

"விஷயம் தெரிந்தவர்கள்—அதில் எவ்வளவோ சோதனைகளில் வெற்றி பெற வேண்டுமென்றும் சொல்லுவார்களே? ஸமயத்தில் தோல்வி அடைந்துவிடாதீர்கள்! முயற்சி அனைத்தும் வியர்த்தமாகி விடப் போகிறது?" என்று சிரித்தபடியே அவள் சொன்னாள்.

கூடவே அந்தக் குரலில் ஒரு எச்சரிக்கையையும் அவனே உணர்ந்தான்.

"சர்வ ஜாக்ரதையாக இருக்கவே முயற்சித்து வருகிறேன்" என்று அவன் பதில் சொன்னான்.

"உங்கள் முயற்சிக்குக் குறுக்கே, நான் இந்த வேளையில், இங்கே இருப்பதே தவறென்றுதான் எனக்குத் தோன்றுகிறது—போகட்டுமா?" என்று கேட்டாள்.

"இல்லையில்லை; இதோ: நானே போகிறேன்; நீ நிம்மதியாகப் படுத்திருக்கலாம்" என்று சொல்லி அவன் வெளியே வந்தான். பழையபடி கிணற்றங்கரையருகே வந்து உட்கார்ந்து கொண்டான்.

அவள் உருவம் அப்படியே அவன் உள்ளத்திலே பதிந்துவிட்டது; அவள் குரலொலியும் அவனுள்ளேயே கேட்பது போலே அவன் உணர்ந்தான்.

'ராஜேசுவரி — ராஜேசுவரி' என்று அவனை யறியாமலேயே அவனுள்ளம் ஜபிக்கத் தொடங்கிவிட்டது.

"ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே அவளே அங்கு வந்துவிட்டாள்.

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவன் மனதிற்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டது அவளுக்கு எப்படித் தெரிந்தது? ஒருவேளை, தன்னையும் அறியாமலேயே, அவன் அவள் பெயரை வாய்விட்டே சொல்லியிருப்பானோ?

"என்னை அழைத்துவிட்டுப் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?" என்று அவள் மீண்டும் வினவினாள்.

"கூப்பிட்டேனா? இல்லையே!" என்று தடுமாறினான்.

"பொய் சொல்லுகிறீர்களே? 'ராஜேசுவரி!' என்று என் பெயர் சொல்லி இப்போது நீங்கள் கூப்பிடவே இல்லை? பிரமாணமாகச் சொல்லுங்கள்?"

அவள் நின்றநிலை; ஊன்றிய அவள் பார்வை; அழுத்தமான அவள் பேச்சு—இவை அவன் உள்ளத்தை என்னவோ செய்தன.

பூரண நிலவு; அந்த ஸௌந்தர்யம்; தனிமை—எல்லாமாகச் சேர்ந்து அவனை மயக்கியே விட்டன; வெறிகொண்டவனைப் போலே அவன் எழுந்தான்.

"ஆமாம்; ராஜேசுவரி! உன்னைத்தான் கூப்பிட்டேன்! உன் பேரழகு என்னைப் பைத்தியமாக்கி விட்டது; மாதுர்யம் நிறைந்த உன் குரலொலி என்னை வெறியனாக்கிவிட்டது; உன்னிடம் மயங்கிவிட்டேன்! உன் கையைக் கொடேன்!" என்று கொண்டே ஆவேசம் பிடித்தவனைப்போலே அவள் கரத்தைப் பற்றப்போனான்.

'சடே'ரென்று அவள் பின்வாங்கிவிட்டாள்.

"இங்கும் இந்தத் தொல்லையா?" என்ற அவள் குரல் பேரிடிபோல் முழங்கியது.

பயந்துபோய் அவள் முகத்தை நோக்கினான்.

எப்படி ஒளி வீசிய அவள் முகம் எப் கறுத்தபடியே போகிறது! அய்யோ? படிக் கறுத்துவிட்டது! மேலும் மேலும் சந்திரிகையைப் பழித்த அவள் முகம்

இருட்டைடப்போலே கறுமையாகி விட்டது; அவள் தேகமாத்யந்தம் அந்தக் கறுமை படர்ந்துவிட்டதே? அமுதத்தை அள்ளிப் பொழிந்த அவள் கண்கள் கோபக்கனல் கக்குகின்றன; அய்யோ பற்களின் பயங்கரம் பார்க்கவேமுடியவில்லை; நாக்கின் நீளம் உயிரைச்சுழற்றும் பாசக்கயிருகவே காண்கிறது — ஆகாயத்துக்கும், பூமிக்குமாக ஒரே கணத்தில் வளர்ந்துவிட்டாள்! தலைமயிரா அவ்விதம் அலைமோதியபடி தொங்கியாடுகிறது?

அவனுல் அவளைப் பார்க்கவே முடியவில்லை; கண்களை இறுக மூடிக்கொண்டு விட்டான்.

நெஞ்சைச் சுண்டியிழுக்கும் காந்தமாக வந்தவள் கணத்திலே காளியாக மாறி விட்டாள்!

"காமுகர்களுக்கு நான் கைகொடுப்பதே கிடையாது; என்னை அறிந்துகொள்ளும் சக்தி உனக்கில்லை. சோதனையில் நீ தோல்வியடைந்துவிட்டாய்!" என்ற குரல் அவனுள்ளிருந்தே கிளம்பி, அவன் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டே மெல்ல மெல்ல ஒடுங்கி, வெகுதூரத்திலே கரைந்துவிட்டதுபோலே அவன் உணர்ந்தான்.

தூக்கிவாரிப் போட்டுக் கொண்ட அவன் மயக்க நிலையிலிருந்து கண்விழித்தபோது சித்தமே பேதலித்துவிட்டது.

"தேவீ! உன் அருளை வேண்டி நான் யாசித்தேன்; நீயே என்னை ஏமாற்றிவிட்டாய்! இல்லை யில்லை—உன்னையே கண்டும்கூட நான்தான் ஏமாந்துவிட்டேன்!" என்று வெறி பிடித்தவனைப் போலே பேசிக்கொண்டு அவனும் எங்கோ போய் மறைந்துவிட்டான்.

* * *

பெரியவர் கதையை முடித்துவிட்டார்.

"இப்போது என்ன சொல்லுகிறீர்கள்? அவனுடைய பலஹீனமே அவனை ஏமாற்றிவிட்டது என்பதுதானே முடிவு?" என்று கேட்டார்.

"தகுதியற்றவன் தனக்குப் பொருத்தமில்லாத காரியத்தில் ஈடுபட்டால் ஏமாற்றமே அடைய நேரிடும் என்பதே என் முடிவு" என்றுர் என் நண்பர்.

"அது ஸரி; அவ்வளவையும் நேரில் கண்டதுபோலவே இந்தக் கதையைச் சொன்னீர்களே? அந்தத் தேவீ உபாஸகர் உங்களுக்கு மிகவும் நெருங்கிய உறவோ?" என்று நான் பெரியவரைக் கேட்டேன்.

பெரியவர் உரத்த குரலில் 'கடகட' வென்று சிரித்தார்.

"எனக்கு நெருங்கிய உறவா! 'நானேதான் அந்தத் தேவி உபாஸகர்' என்றே அநேகர் சொல்லுவார்கள்! ஆனால் நீங்கள் அந்தப் பேச்சை நம்பாதீர்கள்! என்னைப் பார்த்தால் பைத்தியம் போலவா தோன்றுகிறேன்? நல்ல போடு போட்டீர்கள்" என்று சொல்லி, உட்கார்ந்த இடத்தைவிட்டு, 'விருட்'டென்று எழுந்து வெகுவேகமாய்ச் சென்று எங்கோ இருளில் மறைந்துவிட்டார்.

நானும், நண்பரும் அர்த்தபுஷ்டியுடன் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டோம்.

காணியாட்சி

எல்லார்வி

இரவு பத்து மணியிருக்கும். அளவு கடந்த உத்சாகம் கொண்டவன் போலத் தனது சத்தி முழுவதையும் பிரயோகித்துப் பால் போன்ற நிலவைப் பொழிந்துகொண்டிருந்தான் சந்திரன். அந்த நிலவொளியிலே பால் பிரவாகம் வந்தாற்போன்ற தோற்றத்தைப் பெற்றது அகன்று நீண்டு வளைந்து செல்லும் நண்டலாற்றின் மணற் பரப்பு. அதன் கரையிலிருந்த மாவட்டம் தோப்பிலே வானளாவ வளர்ந்தோங்கி நின்ற மரங்கள் வசந்த ருதுவின் ஆனந்தத்தை அனுபவிக்கும் முறையிலே மிகவும் நிதானமாகத் தலையசைத்து மெல்லிய காற்றை உண்டுபண்ணிக் கொண்டிருந்தன. அவற்றை இருப்பிடமாகக் கொண்ட பட்சி ஜாலங்களில் சில, பகலெல்லாம் ஓடியாடி உணவு தேடிய களைதீரப் பொந்துகளிலும் கிளைகளிலும் உறங்கிக் கொண்டிருந்தன. இன்னும் சில, வெண்மதியைக் கண்டு குதூகலம் கொண்டு 'கூ கூ' எனக் கூவி ஆர்ப்பரித்தன.

மாவட்டம் குடியானவத் தெருவிலே சந்தடி ஓய்ந்துவிட்டது. பாட்டாளிகள் பகலில் வேலை நடுவே சரிவர உணவு கொள்ளாத குறைதீர மாலைப் பொழுதிலே மஞ்சள் குளித்து மனை வாழும் பெண்டுகள் மனக் களிப்புடன் தயாரித்திருந்த உணவை ருசித்து உண்டு மனைவி மக்களுடன் கொஞ்சிக் குலாவிய வண்ணம் குடிசைகளில் மகிழ்ந்திருந்தனர். சிலர் சரீர அசதியால் கண்ணுறங்கிவிட்டனர். தெரு ஜன நடமாட்டமற்றுக் கம்மென்றிருந்தது.

அமைதியான அந்த வேளையிலே தெருக் கோடியிலிருந்து, 'லொட், லொட், லொட், லொட்' என்று ஒரு சத்தம். அந்தத் தெருவாருக்கு அது பழக்கமான சத்தந்தான். நாட்டண்மைக்கார நல்ல முத்துப் படையாச்சி இரும்புக் கை உரலில் வெற்றிலை பாக்கைப்போட்டு இடிக்கும் சத்தந்தான் அது. பாக்கு இடிக்கும் சத்தம் கேட்கவேண்டியதுதான் தாமதம். பக்கிரிசாமிப் படையாச்சி தன் வீட்டுத் திண்ணையை விட்டு இறங்குவான். சற்று நின்று ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து நீண்ட கொட்டாவி விடுவான். பிறகு பையப்பைய நடந்து தெருவோடு சென்று நல்லமுத்து வீட்டையடைவான். அப்புறம் அவர்கள் இருவரும் எப்போது பிரிந்து செல்வார்கள் என்பது எவருக்குமே தெரியாது. இரவு நெடுநேரம் வரையில் அப்படி உட்கார்ந்து பேச என்னதான் விஷயம் இருக்குமோ அவர்களுக்குள்?

நல்லமுத்து அறுபது ஆண்டுகளைக் கடந்தவன். ஆனால் அவனைப்பார்த்த யாரும் நாற்பது வயதுக்கு மேல் மதிக்கமாட்டார்கள்; அப்படிப்பட்ட உடற்கட்டு. 'நாட்டாண்மை நல்லமுத்து' என்கிற பெயர் அந்த வட்டாரம் பூராவும் பிரசித்தம். நல்ல குணத்தினாலும், நேர்மையான நடவடிக்கைகளாலும் எல்லோர் மதிப்பையும் பெற்றிருந்த அவன் வார்த்தைக்கு என்றுமே அளவுகடந்த மதிப்பு உண்டு. கிராமத்துப் பெரிய பண்ணையின் பரம்பரை ஊழியம்தான் அவனது பிதுரார்ஜித்தொழில். காலக்கிரமத்திலே நாலு காணி நிலத்துக்கும் கட்டுக் கோப்புள்ள ஓட்டு வீட்டுக்கும் கொட்டில் தாங்காத மாடு கன்றுகளுக்கும் உரியவனான அவனுக்குப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும், பேரன், பேத்தி முதலிய சம்சார வரிசைகளுக்கும் குறைவில்லை.

அன்றும் வழக்கம் போலத் தெருவாசலில் நிலவிலே உட்கார்ந்து பாக்கு இடித்துக் கொண்டிருந்தான் நல்லமுத்து. "என்ன அண்ணே? பொழுதுக்கும் ஒன்னெக் காணலையே! என்ன சமாச்சாரம்?" என்று கேட்டுக் கொண்டே வந்து சேர்ந்தான் பக்கிரிசாமி. நல்லமுத்து எப்போதும் போலச் சட்டென்று கலகலப்பாய்ப் பதில் சொல்லாமல் பெருமூச்சு விட்டான். பிறகு நிதானமாகத் "திரும்பானூர் வரையிலே போயிருந்தேன்" என்று ஆயாசத்தோடு சொன்னான்.

"என்ன அண்ணே என்னமோ போலே பேசறே? உடம்பு கிடம்பு சரியாயில்லையா?" என்று கேட்டான் பக்கிரி.

"உடம்புக்கென்ன கேடுங்கறே? இன்னம் நாற்பது வருசத்துக்கு மேலே கூட இப்படியே தள்ளிப் புடுவேன், மனசுதான்......"

"ஏன்? என்ன இப்போ திடீர்னு மனசுக்கு?"

"வேறே என்ன? எல்லாம் இந்தச் சின்னப் பண்ணை தம்பி குடுக்கிற உவத்திரியந்தான். எதை எடுத்தாலும் கோணக்கச்சி பேசறதுங்கற தீர்மானத்துலே இல்லேஅது இருக்குது! இத்தினி காலமும் பட்டணத்திலே இருந்துக்கிட்டுப் படிச்சதெல்லாம் இப்படிக்

கோணக்கச்சி பேசறதுக்குத்தான் போலே இருக்கு !"

"கிட்டத்தட்ட எட்டு மாசமாத்தான் அது தெரிஞ்சே கிடக்கே ?" சற்று ஆத்திரத்துடன் பேசினான் நல்லமுத்து.

"தெரிஞ்சே கிடக்குன்னுட்டுத் தத்தங்காரியத்தெப் பாத்துக்கிட்டுப் போயிடருங்க அல்லாரும். ஊர்ப் பொதுக் காரியம் ஒவ்வொண்ணும் ஏற்படறப்போ நானில்லே கிடந்து ரோதனப்பட வேண்டியிருக்கு ? இந்த நாசமாப்போற நாட்டாமெ எனக்கு வாணாமின்னாலும் கேக்க மாட்டேங்கருங்க !"

ஊரைக் குறித்த பொதுவான பேச்சென்றாலும் பக்கிரிக்கும் அதிலே பங்கு உண்டல்லவா? நல்ல முத்துவின் சொற்கள் சுரீர் என்று அவன் உள்ளத்திலே தைத்தன. ஆனாலும் அதைப் பாராட்டாமல் அனுசரிப்பாகவே பேசினான்.

"ஆமாங்கறேஞ் சனியன்; ஊர் நாட்டாமேங்கறது மகா உவித்திரியம்பிடிச்ச வேலேயில்லே?......உம்......அதிருக்கட்டும். ஏதுக்குத் திரும்பானூருக்குப் போயிருந்தே?"

"என்ன தம்பி, இப்படி கேக்கிறே? இப்பத்தான் நீ சீமேலேந்து வறியா? அறப்புத் துருப்பெல்லாம் ஆன கையோடே காளிக்குத் திருவிஷா நடத்தத் தேவையில்லே? கூத்தாடிக்கு பாக்கு வைக்கத்தான் போயிருந்தேன். திருவிஷாப் பேச்சு ஊருலே எல்லாம் காதெப் பொளக்குது. நீ என்னமோ கனுக் கண்டாப்பலே பேசறயே? அவ்வளவுதான் ஒனக்கு ஊர்ப் பொது வெசயத்துலே கவனம்!"

வெட்கமாகப் போய்விட்டது பக்கிரிக்கு. உண்மையிலந்த அறுபது வயதுக் கிழவனுக்கு ஊர்ப் பொது விஷயத்திலே உள்ள அக்கறை அந்த ஊரில் வேறுயாருக்குமே இல்லேதான். ஆனால் பக்கிரிக்கு ஊர் வம்பிலே அசாத்திய அக்கறை உண்டு. ஆகவே அவன் சிறிதுநேர மௌனத்திற்குப்பின் கேட்டான்.

"அதுக்கும் சின்னப் பண்ணே தம்பிக்கும் என்ன?"

"அதையேன் கேக்கறே போ. பெரிய பண்ணே எசமானோடே போச்சு ஊர்க் கட்டுக்கோப்பும் நல்ல காரியங்களும். அப்பறம் சின்னப் பண்ணே எசமான் இருக்கிறவரையிலே ஏதோ கொஞ்சம் 'அத்து' இருந்தது. இப்போ 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்கிறமாதிரி ஆய்ப்போச்சு ஊர் வெவகாரமெல்லாம்.

"மேலத்தெரு மருதமுத்துப்பய இல்லே? அவனும் ரெண்டு கோண எழுத்துப் படிச்சு வெளியூரிலே போயி மூணே முக்கா நாழி முத்துமளெ பேஞ்சவனில்லே? சின்னப் பண்ணேத் தம்பி ஊரோடே வந்ததேபுடிச்சு அந்த மருதமுத்துப் பயதான் மந்திரி. சொல்லப் போனு தம்பியோட கோணவளக்குக்கெல்லாம் அந்தக் களவாணிப்பயதான் நாத்தங்கால். காளிகோவில் திருவிஷாவுக்குக் காணியாட்சிக்காரன் வந்து கூத்தாடப்படாதாம். கதை எப்படி இருக்கு?"

"ஏன் படாதாம்?"

"ஏன்னு? நல்ல நல்ல 'ட்ராமா', 'சின்னம்மா' அல்லாம் பாத்தவங்கள்ள? அவங்க கண்ணுலே இந்தத் தெருக்கூத்தைப் பாக்க மாட்டாங்களாம்!"

"வாண்டாமே. கூத்து காளிக்கில்லே? இட்டமான சனங்க பாக்குது. இவங்க பட்டண வாசத்திலே போயி மனசுபோலே அந்த சின்னம்மாவையும் பெரியம்மாவையும்..........."

"அப்படிச் சொல்லமுடியுமா பக்கிரி? காணியாட்சியிலே முக்காலே மூணுவீசம் பங்கும் பண்ணேயெச் சேர்ந்ததில்லையா? தடுக்க அவங்களுக்கு பாத்யமிருக்கே! இந்த வருஷத்திலேருந்து காணியாட்சி திரும்பானூர் கூத்தாடிக்கு இல்லையாம். அத்தோட இந்த வருசமே அவங்க இஞ்செ வந்து ஆடப்படாதுன்னும் தம்பி புடிவாதம்"

"பின்னே என்னதாஞ் செய்யணுமாம்? திருவிஷாவையே நிறுத்திப் போடணுமாமா?"

"அப்படியுஞ் சொல்லல்லே. திருவிஷாவெ நல்லாத்தான் நடத்தணுமாம், ஆனால் பட்டண வாசங்களே நடக்கறமாதிரி பெரிய கொட்டா போட்டு ஓசத்தியான ட்ராமாக்காரங்களே வரவளச்சு மூணுநாள் நாடவம் நடத்தணுமாம்"

"ஏ அப்பா! ஏகப்பட்ட பணமில்லே ஆவும்?"

"செலவு பூராவும் தம்பியிதாம்......"

பக்கிரிக்குச் சந்தோஷம் பிறந்தது.

"என்ன என்ன? செலவு பூரா தம்பியிதா? பின்னே என்ன அண்ணே? ஒனக்கேன் வீண் காண்டுக்கோல்? பேசாமெ....."

"ஏ பக்கிரி! நீதான் பேசறியா, இல்லே ஒனக்குள்ளே வேறே ஆளுகிளு பூந்துக்கிட்டுப் பேசுதா? நேத்திக்குப் பொறந்த பொட்டும் பொடியும் ஒண்ணு சொல்றதுக்காவ கிராமத்து வளக்கத்தெ மாத்திடறதா? திரும்பானூர் கூத்தாடிங்க இந்த மாவட்டத்துக்குக் காணியாச்சிக்காரங்களா ஆனது எப்போன்னு யாருக்காவது தெரியுமா? எனக்குத் தெரியாது, எங்கப்பனுக்குத் தெரியாது, எங்க பாட்டனுக்கும் தெரியாதாம். அந்தக் காளிக்குத்தான் அது தெரியும். தலெமொறெ தலெமொறயா ஆண்டு அனுபவிச்சு வர்ற காணியாட்சியைத் திரும்பானூரான் கிட்டேருந்து புடுங்கின..."

ஒரு தடவை உடம்பைச் சிலிர்த்துக்கொண்டான் நல்லமுத்து.

"நெ...ச...ந்...தா...ன்...அண்ணே" என்று தீனமான குரலில் சொன்னான் பக்கிரி.

"காளிக்குக் கோவம் வந்தா என்ன செய்வான்னு இந்த பொடிங்க என்னத்தெக்கண்டதுங்க?"

"கடைசிலே என்ன ஆச்சு?"

"ஆவுறதென்ன? பாக்குவச்சுட்டு வந்தூட்டேன்......"

"தம்பியும் ஒத்துக்கிட்டதுல்ல?"

"தம்பி தம்பின்னு ஏதுக்குப் பக்கிரி வீணுத் தம்பி மண்டெயைப் போட்டு நாம உருட்டணம்? எல்லாம் இந்தப் பய மருதமுத்து பண்ற வேலேதான்." "அதெல்லாம் முடியாது, இந்த வருசம் திருவிஷாவுக்குப் பெரிய கம்பெனிட்ரா மாதான்" னுதான் அவங்க சொல்லிக்கிட்டே இருக்காங்க. நான்பாட்டுக்குப் போய் திரும் பானூரானுக்குப் பாக்கு வெச்சுட்டு வந்துட்டேன். நாளெத்தறிச்சு திருவிஷா தொடங்கணும். எனக்கென்னமோ மனசே சரியா இல்லே. இந்த வருசம் காளி திருவிஷா நல்ல படியா நடக்கணமின்னு ரொம்ப கவலேயா இருக்கு, அந்த காளிதான் அவங்க ரெண்டு பேருக்கும் நல்ல புத்தியை கொடுக்கணும்—"

இந்த ரீதியிலே இன்னும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தனர் அவர்கள்.

* * * *

மாவட்டம் காளியின் திருவிழா அந்த வட்டாரத்தில் வெகு பிரசித்தம். சுற்றுப்புறம் பத்துப் பதினைந்து மைல்களுக்கப்பா லிருந்தெல்லாம் ஜனங்கள் வந்து கூடுவார்கள். சின்னஞ் சிறிய அந்தக் கிராமம் உற்சவம் தொடங்கியதிலிருந்து 'ஜே ஜே' என்றிருக்கும். கடைசி தினமாகிய தீமிதியன்று ஊரில் எள்ளுப்போட்டால் தரையில் விழாத கூட்டம். அன்றுமுதல் மூன்றுநாட்களுக்குக் கூத்து. பாமர மக்களுக்கு அந்த மூன்று நாட்களும் சுய உணர்வே இராது. அப்படி ஓர் ஆனந்த நிலே. திருவிழா முடிந்தபின் நெடுநாள்வரை வயலில் உழும்போதும், நடவு நடும்போதும், இராக்காலங்களில் சாலேயோடு வண்டி ஓட்டிச் செல்லும்போதும், ஏற்றத்தில் நீர் இறைக்கும்போதும் மக்கள் தம்மை மறந்து கூத்துப் பாட்டுக்களைப் பாடிக் கொண்டிருப்பார்கள் என்ருல் அந்தத் தெருக்கூத்திலே அவர்களின் ஈடுபாட்டைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? தொலே தூரத்திலே ஏதாவது முக்கியமான காரியமாகப் போயிருந்தவர்களெல்லாம் கூடத் திருவிழாச் சமயத்திலே ஓடோடியும் வந்து சேர்ந்து விடுவார்கள்.

இந்த வருஷம் மாவட்டம் இரண்டு பட்டு நின்றது. பொது ஜனங்களுக்கு இதன் விபரம் சரிவரப் புரியாவிட்டாலும் புதுமை கண்டு வாய் பிளக்கத்தான் செய்தார்கள்.

ஊரின் தென் பாகத்திலே காளிகோயில். சந்நிதியிலே தீமிதி. மாலேயில் தீமிதியானதும் இரவு அதே இடத்திலே—சந்நிதியிலே கூத்து நடக்கும். கண்ணெட்டிய தூரம் வயல் வெளிகளில், திறந்த மைதானத்தில் ஜனங்கள் உட்கார்ந்து இரவுபூராவும் கண் விழித்து நாடகம் பார்ப்பார்கள். ஒலிபெருக்கியின் அவசியமின்றியே மைல் கணக்கில் கேட்கக்கூடிய சாரீர வசதிஉண்டு அந்தக் கூத்தாடிகளுக்கு. ஆகவே ஆயிரக் கணக்கான ஜனங்கள் மனக்குறை சிறிதுமின்றியே நாடகத்தை அனுபவிப்பார்கள்.

ஊரின் வடபாகத்திலே சிவன்கோயில். அதை ஒட்டினுற்போல ஒரு பெரிய மைதானம். மாடுகளை வெயில் நேரத்திலே அங்கே மாடு மேய்ப்பவர்கள் மடக்கிப் போட்டு வைக்கிற வழக்கமாதலால் மாட்டுமந்தை மறையும் அந்த இடத்தை 'மந்தைக்கரை' என்பார்கள். ரஸ்தா வழியாக மாவட்டம் கிராமத்திற்குள் வருகிறவர்கள் அந்த மந்தைக்கரை வழியாகத் தான் வரவேண்டும்.

இந்த வருஷம் திருவிழாவுக்கென்று வந்த வெளியூர் வாசிகள் அங்கு ஒரு புதுமையைக் கண்டு அப்படியே அதிசயித்துப்போனுர்கள். மந்தைக்கரையிலே கற்கோட்டைபோல் பிரும்மாண்டமாக அமைக்கப்பெற்றிருந்த கொட்டகை எதற்கென்று முதலில் அவர்களுக்குப் புரியவில்லே. பிறகு அங்கும் ஒரு நாடகம் நடக்கப்போகிறதென்று கேள்விப்பட்டதும் அவர்களின் வியப்பும் திகைப்பும் மேலும் அதிகரித்தன. ஆனுல் எவர் மனத்திலும் சந்தோஷமில்லே. "ஏக காலத்திலே இப்படி இரண்டு இடங்களிலே நாடகம் நடத்துவதிலே யாருக்கு என்ன பலன்?—" என்று பேசிக்கொண்டார்கள்.

சச்சிதானந்த நாடக சபைக்காரர்களுக்கு மூன்று நாட்களுக்கு மூவாயிரம் ரூபாய் காண்டிராக்ட்! அது தவிரப் போக்குவரத்துச் செலவும் படிச்செலவும் தனி. தீமிதியன்று காலேயிலேயே கம்பெனியார் வந்து மாவட்டம் சவுக் கண்டியிலே முகாமிட்டுவிட்டனர். சின்னப் பண்ணைத் தம்பியும் மருதமுத்தும் கம்பெனியாருக்கு ஒரு குறைவுமின்றிப் பராமரித்துவந்தனர். மனமெல்லாம் நல்ல முத்துவின் செயலிலும் வயிற்றுப் பிழைப்புக்காகச் செயலெல்லாம் சின்னப் பண்ணையாரிடமும் கிடந்து ஊசலாடிய சிலரைத் தவிர ஏனைய கிராமத்தாரனைவரும் பக்தி சிரத்தையுடன் காளி கைங்கரியத்திலே ஈடுபட்டிருந்தனர். இது சின்னப்பண்ணையார், மருதமுத்து ஆகியோர் நெஞ்சிலே புகைச்சலே உண்டுபண்ணிற்று.

"கிடக்கட்டும் வேலேயை பாருங்க தம்பி! மணியடிச்சு திரைதூக்கி ஹார்மோனியச் சக்ரவர்த்தி ஆஞ்சநேயலு பெட்டியிலே கை வைத்ததும் எல்லாம் ஓடிவந்து தன்னுலே

காப்பக நூலகம் சென்னை-600

பல்லைக் இளித்துக்கொண்டு நிற்கும் பெருங்களன். போயும் வந்தும் இந்த ஒரு வருஷந் தானே? அடுத்த வருஷத்திலேதான் கூத்தாடிக் காணியாட்சியை நாம் பறிமுதல் செய்து விடப்போறோம். அப்புறம் இந்த நல்லமுத்துவின் ஆட்டமெல்லாம் ஏது?" என்றெல்லாம் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தான் மருதமுத்து.

திரும்பானூர் நாடகக்காரர்கள் வழக்கம் போல இரவு பத்து மணிக்கு வந்தார்கள். வந்ததும் நாட்டாண்மைக்காரர்கள், ஊர்ப் பெரிய தனக்காரர்கள் எல்லோரையும் கண்டு வரப் போனார்கள். சின்னப் பண்ணையாரின் பேட்டிமட்டும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஏற்கனவே நல்லமுத்து மூலம் விஷயத்தை உணர்ந்திருந்த அவர்கள் மேலும் சஞ்சலப்பட்டார்கள். மந்தைக்கரைக் கொட்டகையைக் கண்டு உள்ளுக்குள் நகைத்துக்கொண்டார்கள், இந்த விஷயத்திலே ஆயிரக்கணக்காகப் பணத்தை வீணாக்கும் பண்ணை மைனரின் அறியாமைக்காக.

* * * *

இரவு பதினோரு மணி. மந்தைக்கரைக் கொட்டகையில் நாடகம் ஆரம்பமாகி விட்டது. ஊரிலே கூடியிருந்த ஜனங்கள் பூராவும் அங்கே கூடியிருந்தனர். முன்னணியில் நாற்காலிகளில் சின்னப் பண்ணையாரும் மருதமுத்துவும் அமர்ந்திருந்தனர், தங்கள் அரிய செயலை எண்ணி மகிழ்ந்தவாறு. திரும்பானூர்க் கூத்தாடிகள், நல்லமுத்து காளி காதேவி இவர்கள்தாம் அங்கு இல்லை.

பன்னிரண்டு மணிக்கு வழக்கம்போலக் காளியைப் பணிந்து மேளத்தைக் கட்டினர், திரும்பானூர்க் கூத்தாடிகள். நல்ல முத்துவும் இன்னும் இரண்டு மூன்று பேருந்தான் எதிரே அமர்ந்திருந்தனர். அவர்களும் திருநாளில் ஓடியாடி உழைத்த உடல் அசதியால் ஆடி விழுந்துகொண்டிருந்தனர்.

சுமார் அரைமணி நேரம் சென்றது. ராஜா வேஷக்காரன் வந்தான். கேதார கௌளத்தில் ஒரு விருத்தத்தைப்பாட ஆரம்பித்தான். பேச்சுக்குச் சொல்வதுண்டு, "ஏகாம்பரத்தின் குரல் எட்டு மைலுக்குக் கேட்கும்" என்று. அப்படிப் பட்ட கம்பீரமான குரல் மந்தைக் கரைக்கு எட்டாமலிருக்க முடியுமா? கொட்டகையில் மேடையில் பாட்டு நின்று ஏதோ ரசமான சம்பாஷணை நிகழ்ந்துகொண்டிருந்த போது செவியில் அறைந்தாற்போலக் காற்று வாக்கிலே வந்து ஜனங்களின் காதுகளில் விழுந்தது, ஏகாம்பரத்தின் பாட்டு. அவ்வளவு தான், திமு திமு வென்று எல்லோரும் எடுத்தார்களே ஓட்டம்!

போனவர்கள் போனவர்கள்தான். அவர்கள் மனம் அந்தக் கூத்திலேதான் லயித்தது. "கூத்து இன்னும் ஆரம்பமாகவில்லையே, அதுவரை இங்கே குந்திப் பொழுதைப் போக்கலாம்" என்று கூடியிருந்த ஜனத்திரளைக் கண்டு இறுமாந்திருந்த பண்ணையாரும் மருதமுத்துவும் ஒரு முறை தம்மைச் சுற்றிப் பார்த்துக்கொண்டார்கள். ஈ, காக்கை இல்லை. பெருத்த அவமானமாய்ப் போய்விட்டது அவர்களுக்கு. தலைவிதியே என்று அவர்கள் மட்டுமே உட்கார்ந்து நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மூன்று நான்கு பேர்களுக்காக நாடகம் ஆட யாருக்குத்தான் பிடிக்கும்? அவமானமாயிருந்தது. சட்டுபுட்டென்று ஒருமணிக்குள் ஆட்டத்தை முடித்துவிட்டனர்.

* * * *

மணி மூன்றிருக்கும். திடீரென்று வானம் கறுத்தது. மேகக் கூட்டங்களின் சஞ்சாரம் அதிகரித்தது. 'கடபுடா!' வென்ற பேரிடிகள்! மின்னல்கள்! எந்த நிமிஷமும் மழை கொட்டக் கூடும் என்று தோன்றிற்று. ஆனால் பரந்த வெளியிலே உட்கார்ந்து கூத்துப் பார்த்துக்கொண்டிருந்தவர்களில் ஒருவராவது அதை லட்சியம் செய்யவேயில்லை. அந்தக் கூத்திலே அத்தனை ஆசை அவர்களுக்கு!

மொட்டை மாடியிலே கட்டிலில் புரண்ட வண்ணம் படுத்திருந்தான் சின்னப் பண்ணைத் தம்பி. அன்றைத் தோல்விபற்றி எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டான். இடையிடையே நாடக மேடையிலே தோன்றி, தன்னைப் பார்த்துப் புன் முறுவல் பூத்த சுந்தரியின் தோற்றமும் அவனது நினைவுகளும், எண்ணத்திலே லயித்த அவனது பார்வை ஆகாயத்தை நோக்கி யிருந்தது. 'பளீர்!' என்று ஒரு மின்னல்! 'ஆ!' என்று துள்ளி விழுந்தான் அவன். அடுத்த நிமிஷம் கண்களைக் கைகளால் பொத்திய வண்ணம் 'ஐயோ ஐயோ' என்றலறினான். வேலை யாட்கள் ஓடி வந்தனர்.

அதே சமயத்தில் காளி கோயிலிலிருந்து 'ஹோ' வென்ற பேரிரைச்சல் கேட்டது. கூத்து நடந்துகொண்டிருக்கையில் எங்கிருந்தோ வந்து பொத்தென்று விழுந்தது ஒரு கல், சந்திரமதி வேஷம் தாங்கிப் பாடிக்கொண்டிருந்த பெண்மணியின் மீது. விழுந்த கல்லை எறிந்தவனை நாடக சம்பந்தப்பட்ட ஆசாமி அகஸ்மாத்தாய்ப் பார்த்துவிடவும் அவன் கல்லெறிந்தவனைப் பிடிக்க ஓட, கூடவே இன்னும் சிலர் ஓட, கல்லெறிந்தவனுக்குத் துணையிருந்த கயவர்கள் அகப்பட்டுக்கொண்டு எதிர்க்க, கைகலப்பு ஏற்பட, ஒரே கோலாகலமாய் விட்டது.

கல்லெறிந்தவன் பிடிபட்டான். அவனுக்கு மண்டையில் சரியான அடி. அவன் மருதமுத்துத்தான் என்றறிந்ததும் அவனோடு இன்னும் சிலர் கூட்டாளிகள் என்று தெரிந்ததும் நல்லமுத்துவைச் சேர்ந்த சிலர் ஆக்ரோஷங் கொண்டெழுந்தனர். யாதவர் அந்திய காலத்திலே ஒருவரையொருவர் சாடிக்கொண்டது போல யாரை யார் தாக்குகிறார்கள் என்கிற விதானமின்றியே பெரிய போர் மூண்டுவிட்டது. இதற்கிடையில் மந்தைக்கரையிலே ஒரு ஜோதி தென்பட்டது. வினாடிக்கு வினாடி அதிகரித்த அந்த ஜோதி நாடகக் கொட்டகையின் அழிவு என்பதை உணர்ந்த உள்ளூர் வாசிகள் பொறுப்புணர்ந்து அங்கே ஓடினர். ஆனால் என்ன பிரயோசனம்? யார் முயன்றும் எதுவும் செய்யமுடியவில்லை. கொட்டகை பஸ்மமாயிற்று. அக்கம் பக்கத்திலே தீ பரவாமல் வருண பகவான் தடுத்ததால் ஊர் தப்பிப் பிழைத்தது.

* * * *

பொழுது புலர்ந்தது. ஊர் ஜோவென்று கிடந்தது. சச்சிதானந்த நாடக சபையினரோ, திரும்பானூர் நாடகக்காரர்களோ மாவட்டம் எல்லையில் இல்லை. உள்ளூர் வாசிகள் கூடி மந்தைக்கரையிலே கிடந்த கரியையும் சாம்பலையும் பார்த்துத் துக்கித்துக் கொண்டிருந்தனர். சின்னப்பண்ணை வீட்டு வாசலில் இரண்டு வில் வண்டிகள் பூட்டி நின்றன. ஒன்றிலே பண்ணைத்தம்பி, மற்றொன்றிலே மருதமுத்து. இரண்டும் ரெயிலடிக்குச் சென்றன. வைத்தியத்திற்காகச் சென்னை சென்றனர் அவர்கள்.

மாவட்டம் குடியானவத் தெருவிலே தன் வீட்டுக் கூடத்திலே கயிற்றுக் கட்டிலிலே படுத்துக் கிடந்தான் நல்லமுத்து. பக்கிரி பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். கண்ணீர் வடித்த வண்ணம் புலம்பினான் நல்லமுத்து.

"எப்படியாவது தம்பி கண் சொஸ்தமாகி ஊர் திரும்பினாப்போதும். அடுத்த வருசமொத அது இட்டத்துக்கு ஏதும் செய்துக்கிட்டும். ஆச்சு, இதோ நான் கண்ணை மூடிப் போடுவேன். தம்பிக்கு ஒண்ணுன்னா ஊரே சீரளிஞ்சல்ல போயிடும்!......"

"வீணுக்கெல்லாம் கவலைப் படாதே அண்ணே! காளியாயி கோவந்தான் இத்தினிக்கும் காரணம். வளக்க விரோதமா நடந்ததை அவ பொறுக்கல்லே. அதெ தம்பி நெனச்சுப் பாத்துக் காளியாயியெ வேண்டினா அவ எரங்குவா; கண்ணுங் கோணமாவும், எல்லாம் தன்னாலே சீருக்கு வந்துரும். நீ மனசெப் போட்டு வீணா அலட்டிக்காதே" என்று தேறுதல் சொன்னான் பக்கிரி.

ஆனால் அவன் சொன்னபடி தம்பி வேண்டினானோ இல்லையோ, காளிதேவி இரங்கினாளோ இல்லையோ, அவனது கண்கள் மின்னலுக்குப் பறிபோனவை போனவையே, அவன் கிராமத்திற்கு வரவேயில்லை, மண்டையிலடிபட்டு மூளை கலங்கின மருதமுத்துவும் கிராமத்திற்கு வரவில்லை. நல்லமுத்து நாளடைவில் க்ஷீணமடைந்து இயற்கையை எய்தினான். பேயாடி ஓய்ந்தாற்போல் ஆய்விட்ட ஊரை விட்டுக் காலக்கிரமத்திலே ஒவ்வொருவராய் வெளியேறிச் சென்றனர். காளிகோயில் இடிந்து விழுந்தது. அதனுள் கோரச் சிரிப்புடன் அமர்ந்திருந்த காளிகாதேவியே தரிசு கிடந்த காணியாட்சியை ஆண்டுகொண்டிருந்தாள்.



வாசம்

கே. வி. கே.

தாழ்ந்த அவ் வீட்டின் நடுக் கூடத்தில் என்னை — என் சரீரத்தை — கிடத்தி இருந்தனர். கொடிபோல் துவண்டு விட்டிருந்த இளம் மனைவி, கையில் இரண்டு வயதுக் குழந்தையுடன் கண்ணீரும் கம்பலையுமாய்க் காட்சி யளித்தது, மற்றவர்களைப் பச்சாதாபப்

படச் செய்தாலும், என்னை ஏனோ ஒன்றும் செய்யவில்லை! உற்றார், உறவினர், வைத்தியர் பலரும் குழுமி நின்று என் உடலைப் பார்த்துக் கொண்டிருந்தனரே தவிர, என்னை—என் எண்ணங்களை—யார் கண்டார்கள்!

மரணம்! வாழ்க்கை விடுதலை! அதுதான் என்னை அணுகிக் கொண்டிருந்ததாம்! அதற்குத்தான் இவர்கள் யாவரும் மனம் கசிந்து நிற்கின்றனர். பொங்கி வரும் சோகத்தைப் புதைத்த வண்ணம் உற்று நோக்கிய மனைவியின் ஏக்கமுற்ற கண்களில் காதல் எங்கே இப்போது! கணவனை வென்று கொள்ளும் நம்பிக்கைதான் எங்கே!

ஹூம்! இச் சரீரத்துடன், தன் சரீரத்தைப் பணயம் வைத்த அவள் இனி இச்சரீரமும், தன் சுய ஆத்மாவும் இன்றித் தானே வாழ வேண்டும். நடைப்பிணம் போல! பாவம்! பல துன்பங்களில் அவள் ஈடு கொடுத்திருக்கிறாள். ஆனால் பயன்? வாழ்நாள் முழுதும் வறுமையையும், கொடுமையையும் சகித்துக் கொண்டிருக்கத்தான் செய்தாளேயன்றி, கணவனின் முன்னேற்றத்திற்கு அவள் எங்கே உதவி புரிந்தாள்! தவிர்க்க முடியாத பந்தமாக இருந்து அவள் கால்களைச் சேற்றில் ஆழப் புதைத்து விட வில்லையா? அப்படித்தானே அவனுக்குப் பட்டது!

வாயில் ஏதோ மருந்தை ஊற்றியது தெரிந்தது. அட ஈச்வரா! இவர்களுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது! சரீரத்தினுள் ஊற்றும் மருந்து என்னை எப்படிப் பிடித்து வைக்க முடியும்? நான்வேறு, இச் சரீரம்வேறு என்று இவர்களுக்குத்தான் தெரியும் என்கிறார்களே! ஆயினும் நான் செல்வதை இம் மருந்து தடை செய்து விடும் என்றுதானே நம்புகிறார்கள்!

விடுதலை! எவ்வளவு சுலபத்துடன் இதைக் கூறிவிடுகின்றனர் இவ் வேதாந்திகள்! சாவு! எவ்வளவு அச்சத்துடன் இதைப் பார்க்கிறான் பாமரன்!

ஆனால் இது சுலபமாகவோ அல்லது பயமாகவோ இல்லை என்பது இப்போதல்லவா தெரிகிறது! வாழ்வது எவ்வளவு கடினமாக இருக்கிறதோ, அவ்வளவு கடினமாய்த்தானே இருக்கிறது இவ்விடுதலையும்! வாழ்நாள் முழுதும் ஏற்படும் பிரச்னைகள் அவ்வளவும் இப்போது இங்கும் எதிர்ப்படுகின்றனவே! அதற்கெல்லாம் நான் பதிலளிக்காமல் எப்படி விடுதலை பெறுவது! சரீரத்தினுள்ளிருக்கும் மனத்தின் கொந்தளிப்பை நான் அடக்கி விட்டுத்தானே புறப்பட வேண்டியிருக்கிறது! அம்மனம் லேசில் அடங்குகிறதா? என் சமாதானங்களைத்தான் ஏற்றுக் கொள்கிறதா?

மனத்தின் பரதவிப்பு முழுதும் எனக்குத் தானே தெரிகிறது. வாழ்நாள் பூராவும் அதன் அல்லலை யார் இடைவிடாமல் கவனிக்கிறார்கள் என்னைத்தவிர! இப்போதும் அதைத் தானே — அதே பரதவிப்பைத்தானே—அடைகிறது அது! அப்பப்பா! என்ன வேதனை! எவ்வளவு துன்பம்!

எதற்காகத்தான் இப்படி அலைபாய வேண்டும்! நான் விடுதலையடைந்து செல்கிறேனே என்று! இவ்வளவு நாள் பழகிவிட்ட ஒன்றைப் பிரிய வேண்டுமே என்று!

அப்படியும்தான் தெரியவில்லை! ஆத்மா வைப்பற்றி எண்ணமிட அப்போது எங்கு அதற்கு அவகாசம் இருக்கிறது! சரீரத்துடன் பிணைக்கப்பட்டவர்களின் பிரிவை எண்ணித் தானே அது கலங்குகிறது! பலநாள் வாழ்ந்த போதெல்லாம் வாழ்வை மறந்து அது செய்து வந்த காரியங்களுக்குத் துன்பமடைந்தது; விடுதலை பெறும் இச் சமயத்தில், வாழ்வில் தான் செய்யாத காரியங்களை யெல்லாம் எண்ணிப் புலம்புகிறதே!

எவ்வளவு குதூகலத்துடன் அம்மனம் தன் வாழ்வைத் துவக்கியது அப்போது! வறுமையான சூழ்நிலைதான்! இருந்தாலும் அது அஞ்சவில்லையே! முன்னேறிச் செல்லும் பாதையில் முட்டித் தள்ளிக்கொண்டு தான் புறப்பட்டது. அன்பும் பாசமும் கொண்ட அவ்விளம் மனைவி அவன் வெற்றிக்கு உதவி புரிவாள் என்று அம் மனம் எண்ணி யெண்ணிப் பெருமிதம் அடையவில்லையா?

பொருள்! பதவி! அதிகாரம்! அறிவு! ஆற்றல் இவைகளைத் தானே அவன் தேடினான். ஒவ்வொரு தினமும் ஓயாமல் அச் சரீரம் பாடு படவில்லையா அவைகளை யடைய! ஒவ்வொரு கணமும் அவைகளைப்பற்றிக் கற்பனை செய்யவில்லையா அம் மனம்! எத்தனை அலைச்சல்! எவ்வளவு சங்கடம்! எப்படிப்பட்ட தோல்விகள்! வீழ்ச்சி! மன மாற்றம்! கசப்பு!

ஆயினும் அனேக வருட உழைப்பும் ஏனோ அம் மனத்தைத் திருப்தி செய்யவில்லையே! அவன் எதிர்பார்த்தவை ஒன்றும் அவனுக்குக் கிட்டாமல் போனதன் காரணம்......?

மனைவி! அப்படித்தான் அவன் மனதில் பதிந்திருந்தது. தன் தீவிர முன்னேற்றத்திற்கு அவள் கால் கட்டாக இருப்பதுபோலச் சிறிது நாளிலேயே தோன்ற ஆரம்பித்துவிட்டாள்! தன் வெற்றிக்கு அவள் உதவுவாள் என்று எண்ணி மயங்கினானே......! அடாடா! கடைசியில் அவள் பாரமாகத்தானே இருக்கிறாள்......! இருந்தாள்......!

வறுமையுடனும் துன்பங்களுடனும் அவள் போராடிக் கொண்டு அவனையும் போராட வைத்தாளேயன்றி, அவன் முன்னேற்றத்தையும், வாழ்க்கை வெற்றியையும்பற்றிச் சிந்திக்க அவளால் எப்படி இயன்றது!

''கையிலுள்ளதைக் கொண்டு இன்பமாய் இருக்கலாமே! ஏன் வீணாகத் துன்புறுகிறீர்கள் கிட்டாதவைகளுக்காக......!'' என்று அவள் அப்போதெல்லாம் கனிவுடன் கூறியது தன்னைத் தடைபடுத்தத்தானே இருக்க வேண்டும்! தான் வெற்றி பெற்று வாழ்வில் திகழக் கூடாதென்ற எண்ணத்தினால்தானே..!

அப்படியானால் அச் சமயங்களிலெல்லாம் அவள் கண்களில் தேங்கி நின்ற கண்ணீர் அர்த்தமற்றதா......!

அவன் அவளை உதறித் தள்ளிவிட்டு அப்போதே ஏன் சென்று விட்டிருக்கக் கூடாது தன் வெற்றியைப் பின்பற்றி! அவளை விட்டுப் பிரியாமல் — பிரித்துத் தள்ள இயலாமல் — அவனைக் கட்டிப் பிணைத்திருந்த கயிற்றை அவனால் அறுக்க முடியாமலா போய்விட்டது! அப்படிச் செய்திருந்தால் ஒருகால் அவன் மனத்தின் எண்ணம் ஈடேறி இருக்கலாமல்லவா! கேவலம் மனைவியின் பந்தத்தால்தானே அவன் வாழ்வே பூரண மற்றதாகப் போய் விட்டது! அவனுடல் மனக் குறையுடன் மடியப் போகிறது!

திடீரென்று என்னிடம் அசைவு தோன்றிற்று! பளுவின்றிக் காற்றில் மிதப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது! எதனுள் இருந்துகொண்டு எவைகளுடன் இந்நேரம் உறவு கொண்டிருந்தேனோ அவையெல்லாம் இப்போது எனக்குப் புறம்பே இருப்பவை போலத் தோன்றுகின்றனவே! இவ்வளவு காலம் நான் உரையாடிக் கொண்டிருந்த அம்மனம் இப்போது அமைதியுடன் தூங்கிவிட்டதா! ஓடியாடி என்னை முறுக்கி வதைத்த அச் சரீரம் சாய்ந்தா விட்டது!

''உயிர் பிரிந்து விட்டது'' என்று யாரோ கூட்டத்தில் கூறியது என் காதில் விழுந்தது!

எங்கே பிரிந்து விட்டது! நான்தான் பக்கத்திலேயே நின்று கொண்டிருக்கிறேனே இவர்களை யெல்லாம் பார்த்துக் கொண்டு! அப்பாடா! எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது இப்போது! மனமும், சரீரமும் இத்தனை வருடமாய் என்னைப் பிழிந்தல்லவா எடுத்து விட்டன, கரும்பைப் பெற்ற யானையைப் போல!

அட ஈச்வரா! இதென்ன கூக்குரல்! இவர்கள் எல்லாம் ஏன் இப்படி அழுகிறார்கள்? விடுதலையில் இப்போது நான் பெற்றிருக்கும் ஆனந்தம் இவர்களுக்குப் பொறுக்கவில்லையா என்ன? இவர்களின் சோகத்திற்குக் காரணமே தேவையில்லை போலிருக்கிறது! பாவம் அச்சடலத்தை வேறு அல்லவா அவஸ்தைப் படுத்துகின்றனர். நான் அதனுள் இருந்த வரைக்கும்தான் அதன் மனம் பட்ட பாட்டைப் பார்த்தேனே! இப்போதாவது அது நிம்மதியுடன் சமாதி பெற்றிருக்கும்போது, அதன்மேல் விழுந்து அதையேன் எழுப்ப முயலுகின்றனர் இவர்கள்...!

ஆஹாஹா! அந்த இளம் மனைவி இப்படிக் கதறுகிறாளே! ஏதேதோ கூறிப் புலம்பித் துடிக்கிறாளே! ஏன் இப்படி முகத்திலும் மார்பிலும் அறைந்து கொள்கிறாள்! அவன் உடலைவிட்டு நான் பிரிந்து விட்டால் அதற்கு இவளா பொறுப்பாளி, தன்னையவள் இவ்விதம் தண்டித்துக் கொள்ள! ஆகா! அவன்மீது என்ன பிரேமை வைத்திருக்கிறாள் — இருந்தாள்...! ஏதேதோ இன்ப வார்த்தைகளைக் கூறிப் புலம்புகிறாளே! இதே வார்த்தைகளை அவள் இன்ப நேரங்களில் அவனிடம் கூறிய சமயங்களிலும் நான் இச்சரீரத்தினுள்ளிருந்த வண்ணம் கேட்டிருக்கிறேன் போல் தோன்றுகிறதே! அப்போதெல்லாம் இச்சடலம் எவ்வளவு புளகாங்கிதமடைந்தது! ஆனால் கூறுபட்ட எங்களிருவரையும் இம்மொழிகள் இப்போது ஒன்றும் செய்யவில்லையே! யோசித்துப் பார்த்தால் சிரிப்புக்கூட வந்து விடுகிறது...!

இன்னும் யார்யாரோ வருகின்றனரே! இவ்வளவு பெரிய ஓலத்தை இவர்கள் ஏன் எழுப்புகின்றனர்? ஐயோ அந்த மனைவியைப் பார்த்தால் அவள் இப்போதே தன் உயிரையும் விட்டு விடுவாள் போலல்லவா தோன்றுகிறாள்! சே! என்ன சுயநல மக்கள்! இவ்வளவு சுதந்திரத்துடன் நான் ஆனந்தமாய் இருப்பதைக் கண்டு களிக்காமல், கட்டையான அச் சரீரத்தைப் பார்த்துப் பொருமிச் சாகின்றனரே, இச் சாகும் கட்டைகள்!

என்ன, என்ன! இச் சடலத்தைத் தூக்கிக் கொண்டா செல்கிறார்கள்! எங்கே? இனி இவர்களுக்கு இது பயனில்லை என்று எங்கேயாவது சென்று போட்டுவிடப் போகிறார்களா! அப்பப்பா! இந்த இளம் பெண் ஏன் இப்படி அவதிப் படுகிறாள்! தெருவெல்லாம் புரண்டு புரண்டு துடிக்கிறாளே, பாவம்! அச் சரீரத்தின்மேல் இவ்வளவு பாசமா! அப்படியானால் அதைத் தன்னிடமே வைத்துக்கொள்வதுதானே! அப்படி முடியாது என்பதற்காகவா இவ்வளவு பரதவிப்பு! கைப்பொம்மை பறிக்கப்பட்ட குழந்தைகூட தேவலைபோல் இருக்கிறதே! அப்பா! இந்தக் கண்ணராவிக் காட்சியைப் பார்க்காமலிருக்க முடியாதா......!

மறு விநாடி என்னை என்னவோ செய்தது! கண்கள் திரையிட்டு விட்டன! நான் எங்கிருக்கிறேன் என்பதே புலனாகாமல் போய்விட்டது! எங்கும் அமைதியல்லவா தோன்றுகிறது! ஆகா! எவ்வளவு ஆனந்தம்! எவ்வளவு சாந்தி! நாற்புறமும் நீலநிற ஆகாயம்தானே சூழ்ந்திருக்கிறது! மௌனத்தின் ஒலி ஓம்கார நாதம்தானா! காதுகளில் எவ்வளவு அற்புதமாய்க் கானம் கேட்கிறது! தலை. கால், மேல், கீழ் ஒன்றும் தெரியாமல் காற்றோடு காற்றாய் மிதந்து திரியும் இவ் வாழ்வு இவ்வளவு சுகமானதா! இப்படியே நித்யமாய் இருந்துவிட்டால் ......! மறுபடியம் இப் பாழும் சரீர, மன சம்பந்தம் ஏற்படாமலிருந்து விட்டால்......!

காலம்! நேரம்! இவையொன்றும் தோன்றாமலிருக்கும் இவ்விடம் எந்த உலகைச் சேர்ந்தது! கண்ணுக்கெட்டும் தூரம்வரை நாற்புறமும் பரந்து கிடக்கும் இவ் வெட்டவெளி ஆகாயம், மானிடர் கற்பனைக்கே எட்டாதது போலல்லவா தோன்றுகிறது! நான் இங்கு வந்து எத்தனை காலமாயிருக்கும்...? ஹூம்! யார் கண்டார்கள்! ஒரு நாள் போலத் தோன்றுவது, பார்க்கப் போனால் ஒரு யுகமாய் இருந்தால்...!

ஐயோ! இதென்ன புயல்! எங்கோ தூக்கிக் கொண்டு செல்கிறதே! கண்கள் ஏன் இவ் விதம் இருளடைந்து விட்டன! என்னையும் மீறி நித்திரைகூட வருமா? ஈச்வரா! இவ் வளவு நேரமிருந்த நிம்மதி ஏன் போய் விட்டது! மூச்சுக்கூட விடமுடியாமல் ஏதோ வேதனை செய்கிறதே! வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! மறுபடியும் பளுவைச் சுமக்க வேண்டி வந்து விடும்போல் இருக்கிறதே...! அதற்குத்தான் இது ஆரம்பமா ஒருவேளை..? சிந்தனைகூட வல்லவா விட்டகல்கிறது! இதுதான் முடிவா...! அல்லது துவக்கமா...! வேண்டாம் கூடாது! கூடவே...!

அதற்குப்பின் ஒன்றும் தெரியவில்லை, என்ன நடந்தது, எங்கு சென்றேன் என்பது யாருக்குப் புரிகிறது! ஈரேழு பதினான்கு உலகச் சுழற்சி வேகத்தில் இதெல்லாம் மின்னலைப் போல் தானே மறைந்து விடுகின்றன! அட கடவுளே! மறுபடியும் எங்கெங்கே திரிய வேண்டுமோ! எதை யெல்லாம் அனுபவிக்க நேருமோ...!

திரும்ப சுய உணர்வு அடைந்த போது நான் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டுக் கிடப்பதைத்தான் அறிந்தேன். ஆம்! மானிடச் சரீர கூண்டில்தான்! மனத்தின் தொடர்புடன் தான்! இதற்கு முடிவே கிடையாதா! இதற்கு முன் எங்கிருந்தேன், என்ன செய்து கொண்டிருந்தேன் என்பதெல்லாம் ஒன்றும் தெரியவில்லையே!

ஆனால் ஆசை மட்டும் ஏற்படுகிறது இப்போது, எதன்மேல் ஆசை! இப்புதிய சரீரத்தின் மேலா! அச் சரீரத்தைச் சேர்ந்தவர்களின் மீதா...!

அடாடா! வாழ்வு எப்படிப் பரிமளிக்கிறது! நான்கு வயதடைந்திருந்த என் சரீரம் தங்க விக்கிரகம் போல் இருக்கிறதாமே! தங்கத்தை மூடி இவ்வளவு தங்கநகைகளைப் பூட்டி இருக்கின்றனரே! தங்கப் பொம்மைகளைக் கொண்டேதான் விளையாடவேண்டுமா இவ்விடத்தில்!

எவ்வளவு குதூகலமாகச் செல்கிறது வாழ்க்கை! பதினாறு வயதிலேயே எவ்வளவு பலசாலியாயும், அழகனாகவும் நான் ஆகி விட்டிருக்கிறேன்! ஆ! அந்தஸ்தும் ஆஸ்தியும் பெற்றிருந்த என் பெற்றோர்களின் பூரிப்புத்தானே நான் — இச் சரீரம்! கல்வியும், கலையும் என்னை எப்படி அடைகின்றன! வெகு சீக்கிரத்திலேயே நான் மனித ரத்னமாக விளங்குவேன் என்று கூடக் கூறுகிறார்களே யாவரும்! என்னைப் பார்த்துப் பொறாமையும் படுகின்றனராம் அனேகர். பலே! மற்றவர் பொறாமைப்பட்டுப் பெருமூச்செறிந்தால் இம் மனம் இவ்வளவு துள்ளுகிறதே பெருமையுடன்! அந்த வேகத்திலேயே இன்னுமொரு படி மேலெழும்ப வல்லவா தோன்றுகிறது!

பார்க்கப்போனால் உலக வாழ்வு மிக இன்பமானது என்றுதான் படுகிறது! இருபத்தைந்து வயதுக் காளையான என்மீது எத்தனை கண் வீச்சுகள்! அப்பப்பா! நினைக்கும்போதே உடல் புல்லரிக்கிறதே! பொருள், அறிவு, கலை, அந்தஸ்து யாவையும் இந்த வயதில் அடைந்துவிட்ட என்னைப் பாக்கியசாலி என்று அழைக்கின்றனரே ஒருவர் தவறாமல். பூர்வ ஜன்மத்தில் நான் புண்ணியம் செய்திருக்க வேண்டுமாம்! பசி என்றவருக்குப் பால் வார்த்திருக்கிறேனாம்! ஒரு வேளை இருக்கலாம்! ஏன் கூடாது? என்னைப் போலவா ஒவ்வொருவரும் உன்னதத்தில் இருக்கின்றனர்! மற்றவர்களைப் போலவா நான் பாக்கியமற்று இருக்கிறேன்! ஐச்வரிய மின்றி வாடுகிறேன்!

புகழ், முப்பத்தைந்து வயதில் உலகப் புகழ்! தோன்றிற் புகழுடன் தோன்றித்தான் இருக்கிறேன்! பருவ மங்கைகள் வைத்த கண் வாங்காமல் என்னை விழுங்கத்தானே பார்க்கிறார்கள்! அரசியல் உலகம் என் தலையசைவைக் கூட அர்த்தம் செய்து அச்சிலிட்டு விடுகிறதே! கலைப் பிரபஞ்சத்தில் நான் கலையரசனாகத் தானே திகழ்கிறேன்! காவியங்களில் என் திறமை எல்லையற்றதாமே!

வாழ்வை அறிய விரும்புகிறவர்கள், அதன் பூரணத்வத்தை அறிந்தால்தானே சித்தி யடையலாம்! என்னைவிடப் பூரண வாழ்வை யடைந்த

வர் யார் இருக்க முடியும்? சித்தி பெற்றவர் எத்தனைபேர் முன்வர முடியும்?

ஆனால்......இம் மனம்! இது மட்டும் ஏதோ சதா தடுமாறிக் கொண்டிருக்கிறதே! என் சித்தியில் அதற்குத் திருப்தி இல்லையா? என் வெற்றியில் அதற்கு மகிழ்ச்சி கிடையாதா? யாவரையும் போல் அதுவும் என்னிடம் பொறாமை கொண்டா விட்டது!

ஒருகால் என் வெற்றியும் வீரமும் அதன் முன் தகுதி யற்றவையா? ஒவ்வொரு சமயம் என்னை — என் பூரணத்வத்தை — பரிகாசம் செய்வதுபோல் பேசுகிறதே, குறையுள்ள மனைவியைப் போல்! என் பெருமையில் அதற்குப் பங்கில்லையா!

மனித ஜன்மத்தின் வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடித்துவிட்ட என்னையேன் இம் மனம் பாராட்ட மறுக்கிறது? நான் பெற்றதெல்லாம் பாராட்டுதலுக்குப் புறம்பானது என்ற எண்ணத்தினலா? என் வாழ்வு கடைசியில் பயனற்றதுதானா! மாபெரும் பிரபஞ்சத்தையே திருப்தி செய்துவிட்ட நான், கேவலம் இம் மனதைத் திருப்தி செய்ய இயலாமலா போய்விட்டேன்!

என்னையேன் இப்படிக் கீழே இழுக்கிறது? எதைத் தேடி என்னை விரட்டுகிறது? எதைக் கண்டு—காணாமல்—அலைமோதச் செய்கிறது?

நான் பெற்ற ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டி அதன் உயர்வைத் தாழ்வு படுத்தியல்லவா கூறுகிறது. என் பொருள் — திரவியம் ஆஸ்தி—எனக்கு வேண்டியதை அளிக்காதென்றுரைக்கிறதே! என் கீர்த்தி, என்னால் உலகிற்கு நன்மையுள்ள வரையில் தானாமே! என் அறிவு, ஆற்றல், கலைஞானம் யாவும் என்னைப் பத்துப்பேர் போற்றி ஊக்க மளிக்குமட்டும் ஓங்கி, பிறகு சரிந்துவிடுவது நிச்சயமாம்!

பின் எதுதான் எனக்குச் சொந்தம்! உயர்வு! நிலையுள்ள பலம்! என் வெற்றியில் யாருக்குத்தான் உண்மையில் மகிழ்ச்சி! பெருமை! என் பாக்கியம் அத்தனையும் மறந்து எனக்காகவே என்னைப் போற்றி உயர்வு படுத்துகிறவர் யார்? எவர் கண்களில் நான் நிச்சயமான செல்வம்—செல்வந்தான் — அறிஞன் — கலைஞன்—அருள் பெற்றவன்!

ஏன் இல்லை? உலகிலுள்ள அத்தனைபேரும் தானே! ஹூம்?

ஆனால்......ஏனோ அப்படித் தீர்மானிக்க இயலாமல் இம் மனம் தத்தளிக்கிறதே! எதை எண்ணி ஏங்குகிறது? அதற்கு உற்றவர் கடைசியில் ஒருவர்கூட இல்லைதானா......! வாழ்வில்

வசந்த ருதுவா!

என பரவசமடையச்
செய்யும்
மலர்ந்த மலர்களின்
மனதை மயக்கும்
மணம் கொண்டது

நீபா ஹேர் ஆயில்

உபயோகிக்க
உபயோகிக்க
உங்கள் உள்ளம்
உவக்கும்

★

கங்கா ஒர்க்ஸ், அடையாறு, சென்னை-20.

தனிமையானவனு நான்! இவ்வளவும் பெற்று என் வாழ்வு பாலைவனத்தில் படர்ந்த பசுந் தரையா......!

அப்படியானுல் இவ்வளவு காலம் தோன்றிய குதூகலமெல்லாம்...? விண் பிரமையா...? என்னை நானே ஏமாற்றிக் கொண்டா இருந்தேன்? என் வாழ்வின் புற அம்சம் ஓங்கி நிற்க, அகத்தை அறவே புறக்கணித்தாவிட்டேன்......? என் அந்தராத்மாவின் ஆர்வத்தை அடக்கிவிட்டா இவ்வளவு காலம் தள்ளிக் கொண்டு, என் வாழ்வை நங்கூரமின்றி நடு ஆற்றில் மிதக்கச் செய்தேன்!

இல்லை இல்லை! இப்போதும் அதை நிவர்த்தி செய்துவிடலாம்! எனக்காகவே என்னை ஏற்றுக்கொண்டு என் அக வாழ்வில் பங்கெடுத்துக்கொள்ளும் ஒருத்தி கிடைக்காமலா போய் விடுவாள்! அவள் கண்களில் நான் உண்மையில் உயர்ந்தவனுகிவிட மாட்டேனு! பறந்து பறந்து பரிகசிக்கும் இம் மனம் பதுங்கி அமைதி யடையாதா!

ஏனே மறுபடியும் மனம் பரிகசிக்கிறதே! ஏளனமாய் நகைத்து ஏதோ கூறவில்லையா? என்ன? இனிமேல் என்னுல் ஒன்றும் முடியாதா? வாழ்வில் நான் இழந்துவிட்டதைப் பெற இயலாதா......? ஐயோ! ஐம்பது வயதில் நான் பிரயோஜன மற்றவனுய் விட்டேனுமே! ஈச்வரா! இதற்கு வழியே கிடையாதா......! நான் அடைந்துள்ள யாவையும் எடுத்துக் கொண்டு திரும்ப என் இளமையையும், அத்துடன் ஓர் இளம் பெண்ணுள்ளத்தையும் கொடுத்துவிடேன்! என் உள்ளத்தைப் பணயம் வைத்து, பதில் உள்ளத்தைப் போற்றி வளர்க்க நான் தகுதியற்றவனு......! அறிவு வேண்டாம்! அந்தஸ்து வேண்டாம்! புகழ் வேண்டாம்! பொருள் வேண்டாம்......! என் மனதைத் தொடும் வேருெரு மனம் கிடைக்காதா இந்த ஜன்மத்தில் எனக்கு...! அதின்றியேதான் நான்போக வேண்டுமா! உடலும் உள்ளமும் நொறுங்கித் தளர்ந்து விட்டபின் நான் விழித்துக் கொண்டேன் போலிருக்கிறதே......?

ஹூம்! அன்றிலிருந்தே என்னை—என் சரீரத்தை—பரந்த என் மாளிகையில் கிடத்தி விட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் தினமும் வந்து உபசார வார்த்தைகள் கூறிவிட்டுச் செல்கின்றனரே. என் மனப் புயலை இவர்கள் அறிவார்களா...! மணிக்கு மணி வெவ்வேறு வைத்தியர்கள் தோன்றி என்னை அச் சரீரத்தினுள்ளேயே அடைத்து வைக்கத்தான் பார்க்கின்றனர்! ஐயோ! இவர்களுக்கு ஞானமே ஏற்படாதா! நான் இச் சரீரத்தினுள்ளிருப்பது, எனக்கும் இச் சரீரத்திற்கும் இடையேயுள்ள ஒப்பந்தத்தினுல் தான் என்று இவர்களுக்கு ஏன் புரிய மாட்டேன் என்கிறது? புரியாத இதில் ஏன் இவர்கள் தலையிடுகிருர்கள் பொய்ச் சாட்சிகளைப் போல! ஆனுல் இத்தனை பேரில் ஏனே ஒருவராவது கவலைப் படுவதாகத் தெரியவில்லை. அது வரையில் புத்திசாலிகள் தானே! அச் சரீரம் வன்மையுடன் திரிந்த போதெல்லாம், இவ்வுலகமே அதனுடன் திரிந்தது! இனி உலகத்திற்கு இதைப் பற்றி என்ன கவலை? இது போனுல் இன்னென்று...!

அப்பாடா! என்னவோ திடீரென்று வெளியே பிடித்துத் தள்ளுவதுபோல் இருந்ததே! ஏன் இவ்வளவு லேசாகத் தோன்றுகிறது எனக்கு! விடுதலையா...! சபாஷ்...! காற்றில் மிதப்பதின் சுகம் மிதந்து பார்த்தால் தானே தெரிகிறது...! இதே சுகத்தை முன் பொருதரம் அனுபவித்திருப்பது போல் கவனத்திற் படுகிறதே...!

அடடே! இச் சடலத்தை அலங்காரமல்லவா செய்கின்றனர் அடேயப்பா! எவ்வளவு ஜனங்கள் இதை வேடிக்கை பார்க்க! எத்தனை வாத்தியங்கள்! விளக்குகள்! ஏற்பாடுகள்! இதெல்லாம் எதற்கு......? எங்கே அதைத் தூக்கிக் கொண்டு செல்கின்றனர் இவ்வளவு ஆடம்பரமாய்...மணமகனைப் போல...!

இதேபோல் முன்பொரு தடவை வேறெங்கோ பார்த்திருக்கிறேன் அல்லவா? அப்போது இப்படியா இருந்தது! பாவம்! ஓர் இளம் பெண் தனிமையில் புரண்டு புரண்டு துடித்தாளே! அதைக் கண்டு சிரிப்புக்கூட ஏற்பட்டதே! இங்கே இத்தனைபேர் இருந்தும் ஏன் ஒருவரும் துளிகூட மனம் கசியவில்லை...? இவர்களெல்லாம் ஞானிகளா...! இச் சடலத்திற்காக வருத்தப்படுவது நான் ஒருவன் தானு...!

ஐயோ! எங்கோ தூக்கிக்கொண்டு செல்கிறதே! நீலவானும், பரந்த வெளியும், ஓம்கார நாதமும், நித்ய சாந்தியும் இருக்கும் இவ்விடத்திலேயே இருந்துவிட்டால் எவ்வளவு ஆனந்தமாய் வாழலாம்......! பகவானே வேண்டாம்! வேண்டவே வேண்டாம்......! மறுபடியும் பாரத்தைச் சுமக்கவேண்டாம்...! போதும்...! போதும்...! ஐயோ! கண்கள் திரையிடுகின்றனவே......! சித்தம் மயங்குகிறதே...! இதுதான் முடிவா......? அல்லது ஆரம்பமா...! மானிட சித்தத்தின் உறவுடனேயே நான் மங்கவேண்டுமா! இம்முறை எங்கே கொண்டு தள்ளப் போகிருய், பராபரமே! ஏக்கமில்லாத மனம் படைத்த ஜீவனின் கூண்டாகப் பார்த்து அனுப்பிவிடேன்.

● ● ●

ஒருபடி அரிசி

வே. ரங்கராஜன்

சச்சிதானந்தம் பிள்ளை சுவர் கடிகாரத்தைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்

டார். சற்றுமுன் பிற்பகல் ஒரு மணியைச் சுட்டிய முட்கள் வேகமாக நகர்ந்துகொண்டி

ருந்தன. இருந்த போதிலும் தம்முடைய இடைவேளைச் சிற்றுண்டிக்காக அவர் தம்முடைய டைப்ரைட்டரை விட்டு நகரவில்லை. சுருக்கெழுத்தில் குறித்துக்கொண்ட கடித வாசகத்தை மள மளவென டைப் செய்து கொண்டிருந்தார்.

தம்முடைய தங்க 'ரிஸ்ட்வாச்'சைச் சற்று அலட்சியமாகப் பார்த்த மானேஜர் என்னவோ முணுமுணுத்துக்கொண்டார். பிறகு, படபடக்கும் டைப்ரைட்டரின் சப்தத்தைக் காதில் வாங்கியபடி புகை பிடிக்க ஆரம்பித்தார். சச்சிதானந்தம் பிள்ளை தயாரித்துக்கொண்டிருந்த அந்த அவசரக் கடிதத்தில் கையெழுத்திட்ட பிறகுதான் மானேஜர் சிற்றுண்டியருந்தவும் பிற்பகல் உறக்கத்துக்கும் சென்ருகவேண்டும். ஆனல் கடிதம் நீண்டு கொண்டே போயிற்று.

ஒரு பக்கம் டைப் செய்துமுடித்து மற்ரெரு பக்கத்திற்கு இரண்டாவது கடிதத்தைச் சரிபண்ணிக்கொண்டிருந்தார் சச்சிதானந்தம் பிள்ளை. அப்போது காரியாலயத்தின் பின்புறவராந்தாவிலிருந்து கலீரென்று ஒரு நகையொலி எழுந்து வந்தது. தம்முடைய சக குமாஸ்தாக்கள் இடைவேளை டிபன் சாப்பிட்டபிறகு ஒரு ஆட்டம் 504 கலைத்துப்போட்டு, கும்மாளமிடும் சப்தம் அது என்பது அவருக்குத் தெரியும். அதில் தீர்க்கமாக ஒலித்த குரல் யாருடையது என்றுகூட அவர் உணர்ந்து கொண்டார். ஆமாம்; அவர் விளம்பர இலாகாவின் தலைமைக் குமாஸ்தா. காரியாலயத் துள்ளேயும் சரி, வெளியேயும் சரி, அவருக்குச் சிரிப்பும் கும்மாளமுந்தான்! அவர் தினம் தம் இருப்பிடத்தில் உட்கார்ந்து வேலை செய்வதைக் கணக்கிட்டால் ஒருமணி நேரம்கூட இருக்காது. அவருடைய செக்ஷன் வேலை அவ்வளவு சுலபம்.

நினைவு அங்கு ஓட, சுருக்கெழுத்து நோட்டை ஊன்றிக் கவனித்து மீண்டும் டைப் இயக்க ஆரம்பித்தார் பிள்ளை. அப்போது அங்கு வந்து நின்ற கார் டிரைவர் மைக்கேல் "துரை சீக்கிரமாக வரச் சொன்னுருங்க; தினிதிங்க நேரமாவுதாம்!" என்று அவரைத் தூண்டிவிட்டான். ஆனல் பிள்ளை இதற்கெல்லாம் பழகிப் போனவராதலால் நிதானமாக டைப் செய்துகொண்டிருந்தார். அவரது கவனமெல்லாம் கடிதத்தின் வாசக அமைதியில் ஊன்றியிருந்தது.

* * *

ஒருவிதமாகக் கடிதத்தை முடித்து, மானேஜரின் கையெழுத்தை வாங்கிக்கொண்டு தம் இடத்திற்குத் திரும்பியபொழுது மணி ஒன்று ஐம்பதை நெருங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அதன் பிறகு பசியும் வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. "இந்தா நாகலிங்கம், இதை உடனே தபாலில் போடச் சொல்லு!" என்று பியூனிடம் கடிதத்தை ஒப்படைத்துவிட்டு ஒரு கொட்டாவி விட்டார் பிள்ளை. அதன் பிறகு தம்முடைய மேஜை டிராயரைத் திறந்து டிபனை வெளியே எடுத்தார்.

"என்ன சார், மிஸ்டர் பிள்ளை! இன்னைக்கு டிபன் ஏதாவது பலமா? கூட வரலாமா?"— விளம்பர இலாகாவிலிருந்து எழுந்த இந்த வெண்கலக்குரல் பிள்ளையின் சோர்வை எல்லாம் போக்கிவிட்டது; அவர் வாயடைந்து போக ஒரு புன்னகை மட்டும் செய்தார். பிறகு தம் கோட்டைக் கழற்றி நாற்காலியில் மாட்டிவிட்டு டிபனுடன் காரியாலத்தின் பின்கட்டிற்கு அவசர அவசரமாக நடந்து சென்ருர். இன்னும் சுருக்கெழுத்து நோட்டில் டைப் ஆகாமல் இருந்த மற்றக் கடிதங்களை முடிக்கும்வரை அவருக்கு நிம்மதி ஏது, டிபனைத் தன்னுள் ஏற்றுக்கொள்ளாதவரை சாந்தியடையாத வயிற்றைப்போல!

ரேஷன் ரவையில் சரிபாதி வெங்காயம் பச்சைமிளகாயை நறுக்கிக் கொட்டிக் கிளறப்பட்டிருந்த அந்த உப்புமா பசிவேளையில் அவர் உணர்ச்சியைச் சோதித்தது. அதாவது ரவையின் மக்கிடு நாற்றம் தாளிதத்தின் இனிய மணத்தையும் மீறி முன்னே எழுந்தது. அத்துடன் நாக்கிற்கு நைப்பைக் கொடுக்கும் சர்க்கரையாவது இருக்கிறதா என்று பார்த்த பிள்ளை ஏமாந்துபோனுர். அது அவரது மனைவியின் பிசகல்ல. போன வாரத்தில் ரேஷன் கடையில் சர்க்கரை கோட்டா ஸ்டாக் இல்லா

மல் போய்விட்டது. அதனால் வீட்டில் குழந்தைப் பாலுக்குக்கூட சர்க்கரைத் தட்டு வந்து விட்டது. அது அவருக்குத் தெரியும். இருந்தாலும் ஒரு நப்பாசை!

அந்த வறட்டு உப்புமாவை மனம்கொண்ட மட்டும் சாப்பிட்டு முடித்ததும் புதுப்பானைத் தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டார் பிள்ளை. அதன்பிறகு அவர் இடுப்பும் சற்று ஓய்வுக்குக் கெஞ்சியது. குளு குளு என்று காற்று வீசிய வேப்பமரத்து மேட்டிலே சற்றே சாய்ந்து சிரம பரிகாரம் செய்து கொண்டார்.

அந்த வேப்பமரம் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. அதனுடைய வளர்ச்சிக்கும் பிள்ளையின் சர்வீசுக்கும் கணக்கெடுத்ததுபோல் ஒற்றுமை இருந்தது. ஷாலிமார் அண்டு பாட்லிகார் கம்பெனிக்குள் அவர் கால் எடுத்து வைத்து ஸ்டெனோ டைப்பிஸ்டாக அவர் வேலை ஒப்புக்கொண்டபொழுது அந்த மரம் ஒரு வருஷத்து இளங்கன்று. தம்முடைய அந்தப் பத்து வருஷத்து ஸர்வீசுக்குள் காரியாலயத்தில் நடந்த எத்தனையோ இடி—மழை பூகம்பங்களுக்கிடையில் சமாளித்து நாட்களை ஓட்டிவிட்டதுபோல், அந்த வேப்பங் கன்றும் பேய்க்காற்று பெருமழை இவைகளை எல்லாம் சமாளித்துப் பருத்து நிமிர்ந்து வளர்ந்து கம்பீரமாக நின்றது.

பிள்ளை சற்றே கண்களை மூடினார். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் ர்ர்ர்...ர்ர்ர் என்ற சப்தம் கேட்டது. சாய்ந்த சாய்வி லேயே அவர் ஒரு சுக நித்திரை செய்து கொண்டிருந்தார். அது என்னவோ அவருக்குப் பழக்கமாகப் போய்விட்டது. 'பூம்ம்;' என்ற தனி ஓசையில் சப்திக்கும் மானேஜரின் கார் வரும்வரையில் அவர் அப்படியே நிம்மதியாகத் தூங்குவார்!

* * *

அன்று வழக்கத்திற்கு மாறாகக் காரியாலய வேலைகள் எல்லாம் ஐந்து மணிக்குள்ளேயே முடிந்துவிட்டன. ஆகவே பிள்ளை சற்று உற்சாகத்துடன் பஸ் ஸ்டாண்டை நோக்கிச் சென்றார்; அன்று ஒரு நாளாவது நடை மிச்சமாகுமே என்ற எண்ணத்துடன், "சார், பேப்பர்! ரேஷன் முறை மாறுதல்!" என்று கூவிக்கொண்டு பேப்பரை நீட்டியபடி வளைய வந்த பையனிடம் ஒரு பேப்பரை வாங்கிக்கொண்டார். 'ரேஷன் முறையில் என்ன மாறுதல் இருக்கக்கூடும்?—எவ்வளவு குறைத்தார்கள்?'—அவசர அவசரமாகப் பக்கங்களைப் புரட்டிய அவர் கண்களில் அந்தச் சமாச்சாரந்தான் படவில்லை!

அதற்குள் பஸ் வரும் சப்தம் கேட்கவே, பேப்பரை மடித்து, கோட் பாக்கட்டில் வைத்துக்கொண்டு, முண்டியடித்து முன்சென்று ஒரு இடத்தையும் ஆக்ரமித்துக்கொண்டார்.

ஒருவிதமாக வீட்டிற்கு வந்து சேர்ந்த சச்சிதானந்தம் பிள்ளை, 'முருகா, சிவகுருநாதா?' என்ற ஆசுவாசத்துடன் சற்றே சிரமபரிகாரமாகச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். வழக்கத்திற்கு மாறாக வீட்டுள் அமைதி நிலவியது. 'ஏன்?—காரணம் என்ன?' அவிழ்த்து மாட்டிய கோட் பாக்கெட்டிலிருந்து சிகராட் டப்பாவை எடுத்துப் புகை பிடிக்க ஆரம்பித்துவிட்டார்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம். விம்மலும் அதைத் தொடர்ந்து இழைந்து வந்த அழுகைக் குரலும், அவர் மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச அமைதியையும் போக்கடித்துவிட்டன.

"சிவகாமி! சிவகாமி!" என அழைத்துக் கொண்டே சமையல் அறையுள் நுழைந்தார் பிள்ளை. அங்கே சாமான்கள் அலங்கோலமாகக் கிடந்தன, புழுதி மலிந்த தரையில் படுத்து, சிவகாமியம்மாள் அழுது கொண்டிருந்தாள். அடுப்பில் சாம்பல் பூத்துக் கிடந்தது. அன்று புகை எழுந்து சமையல் ஆனதற்கு ஒரு அறிகுறியும் காணோம்!

நிலைமையை ஊகித்துக்கொண்ட சச்சிதானந்தம்பிள்ளை மீண்டும் சாய்வு நாற்காலியில் சாய்ந்து புகை பிடிக்கலானார். சிவகாமியம்மாளைச் சமாதானம் செய்யவேண்டுமென்று தோன்றிய போதிலும் அது அவசியமற்றதாக அவருக்குப் பட்டது. வீட்டுள் என்னதான் கஷ்டங்கள் இருந்தபோதிலும், கணவன் உழைத்துவிட்டு வீடு திரும்பும்போது மலர்ந்த முகத்துடன் வரவேற்காத பெண் கிரக தர்மத்திற்கு ஏற்றவளா என்ன?

தன் கணவரின் குணம் சிவகாமியம்மாளுக்கும் தெரியும். ஆகவே அவள் மேலும் அங்கேயே அழுதுகொண்டு படுத்திருக்கவில்லை. தானே தன் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்துவந்தாள். "இந்த நிலையில் இனிமேல் என்னால் ஒருநாள்கூடக் குடித்தனம் நடத்தமுடியாது. குழந்தைகளை அவர்கள் பாட்டியுடன் காலையிலேயே மயிலாப்பூருக்கு அனுப்பிவிட்டேன். நானும் நாளைக்குக் காலையில் போய் விடுகிறேன். ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுப் புகைபிடித்துக்கொண்டு நீங்கள் நிம்மதியாக இருங்கள். வீட்டில் ஒருபடி அரிசி இல்லையே இந்த ரேஷன் அரிசிக்குள் அவள் எப்படி சமாளிப்பாள்? என்ற விசாரம் உங்களுக்கு வேண்டாம். "எங்கள் வீட்டில் மட்டும் என்னவாம்? நத்தத்து நஞ்சையா விளைந்து வருகிறது? கடன் கேட்பதற்கு முன்னாலே உங்கம்மா

வுக்குக் கொஞ்சம் யோசனை வேண்டாமா?" என்று அண்டை அயல்வீட்டுக்காரர்கள் உங்களையா கேட்கப் போகிறார்கள்? வாரக்கடைசி நெருங்கியதும் அவர்கள் வீட்டு ஆண்பிள்ளைகளுக்கு அக்கரை உண்டாகிறது. பையை மடித்து வைத்துக்கொண்டு ஒருபடி இரண்டுபடி அரிசி வாங்க, கறுப்பு மார்க்கெட்டைத் தேடிப் போய் வாங்கிக்கொண்டுதான் வருகிறார்கள். உங்களுக்கு அதையெல்லாம் பற்றிய கவலை இருந்தால்தானே.........!''

சிவகாமியம்மாள் மேல்மூச்சு வாங்க, சற்றே ஓய்ந்ததும், "ஆமாம், நான் ஹோட்டலுக்குப் போய்விட்டு வருகிறேன் என்பதை எப்படிக் கண்டுபிடித்தாய்?'' என்று சற்றே கடுப்புடன் கேட்டார் பிள்ளை.

"இல்லாவிட்டால் காலையில் குடித்துவிட்டுப் போன சர்க்கரையில்லாத வெறுங்காப்பியுடனும் வறட்டு உப்புமாவுடனுமே தான் வீட்டிற்கு வந்துவிட்டீர்களா? — உங்களுக்கென்ன. நீங்கள் சம்பாதிக்கிறீர்கள்! செலவழிக்கலாம். என்னைச் சொல்லுங்கள். காலையில் குடித்த அந்தக் கசப்புக் காப்பியுடன் நாள் ஓடிவிட்டது. வயிற்றைப் புரட்டும் புரட்டல் சொல்ல முடியவில்லை. நான் எங்கே போவது? பெற்றுவிட்ட அந்தப் பாவியின் வீட்டில் தான் போய் விழுந்து தொலைக்க வேணும்!......''

சாய்வு நாற்காலியைவிட்டு எழுந்த சச்சிதானந்தம் பிள்ளை புறங்கைகளை இணைத்துக் கொண்டு மேலும் கீழும் நடக்கலானார், 'நத்தத்து நஞ்சையிலா விளைந்து வருகிறது?' என்ற அந்தக் கேள்வியுள் பொதிந்து கிடக்கும் இடிப்புப் 'பொடி' அவர் மன ஆழத்துள் தைத்துவிட்டது.

சிதம்பரத்தை அடுத்த கீழ நத்தத்தில் அவருக்கு நஞ்சை நிலம் இருப்பது வாஸ்தவந்தான், அதில் முதல்தரமான கொத்தமல்லிச் சம்பா நெல் விளைவதும் உண்மைதான். கீழ நத்தத்தில் அவருக்குச் சொந்தமான இரண்டு கட்டு வீடுகூடத்தான் இருப்பார் இல்லாமல் கிடக்கிறது. வீட்டை இருட்டிப் போடாமல் தூர பந்து ஒருவர் விளக்கேற்றி வைத்துக்கொண்டிருக்கிறார், அவைகளைக் குறிப்பாக இடித்துச் சொல்லியோ ஞாபக மூட்டியோ இப்போது என்ன பலன்?



இருந்தபோதிலும், ஞாபகமூட்டிவிட்ட பிறகு, அவரால் அவைகளை எல்லாம்பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. அவருடைய மனம் இருபது வருஷங்களுக்கு முன்பு இருந்த தம் வாழ்வை விமர்சிக்க ஆரம்பித்து விட்டது.

கீழ நத்தம் கர்னம் முருகையாபிள்ளை என்றால் சுற்றுப்பட்ட வட்டாரத்திலே தெரியாதவர்கள் யாரும் இல்லை. பூர்வீக இசும் பாத்தியத்தில் வந்த அந்தக் கர்னம் வேலையை ஒரு கணக்கப் பிள்ளையை வைத்துப் பார்த்துக்கொண்டு முருகையாபிள்ளை தம் நிலங்களைச் சொந்தமாகப் பயிரிட்டு வந்தார். பண்ணையாட்களுடன் சரிசமமாக அவரும் மண் வெட்டியை எடுத்து வேலை செய்வார். வேலையாட்கள் ஒவ்வொருவருடனும் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. அவர்களது உணர்ச்சிகளை அவர் மதித்து நடந்தார்; அவரது செல்வமும் ஊற்றைப்போல் மெல்ல மெல்லப் பெருகியது.

சச்சிதானந்தம் பிள்ளை பிறந்த சமயத்தில் குடும்பம் செல்வாக்கின் உச்ச நிலையில் இருந்தது. ஆனால் செல்வத்தின் மடியிலே வளர்ந்த அவருக்கு ஐந்தாவது வயது வரைதான் முருகையாபிள்ளை செல்லம் கொடுத்தார்.

பட்டுக்கரை மயில்கண் வேஷ்டியைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு ஒரு சிலேட்டும் அரிச்சுவடி அட்டையும் தலைமீது வைத்துக்கொண்டு சச்சிதானந்தம் திண்ணைப் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்ததிலிருந்து அப்பாவின் கண்டிப்பு ஆரம்பமாயிற்று. இருந்தபோதிலும், ஒரே பிள்ளை, முதல் பிள்ளை என்ற காரணத்தால் அம்மாவின் சலுகைக்குக் குறைவில்லை. இப்படி திண்ணைப் பள்ளிக்கூட நாட்கள் கனவைப்போல் ஓடி மறைந்தன.

ஆங்கிலம் போதிக்கும் பெரிய பள்ளிக்கூடம் சிதம்பரத்தில்தான் அப்போது இருந்தது. அங்கே பையனைச் சேர்த்துப் படிக்க வைக்க வேண்டுமென்று முருகையா பிள்ளை ஏற்பாடு செய்தார். கீழ நத்தத்திலிருந்து சிதம்பரம் பெரிய பள்ளிக்கூடம் நான்கு மைல் தூரம் இருக்கும். மேடுபள்ளங்கள் மலிந்த களிமண் ரஸ்தாவில்தான் போகவேணும். ஆகவே பையன் தினம் பள்ளிக்கூடம் போய்வர, ஒருசின்ன வில்வண்டியைத் தயார் செய்தார். மாயவரம் சந்தையில் மட்டமும் நெளிவும் கொண்ட இரண்டு மயிலைக் காளைகளைப் பிடித்துவந்து வில்வண்டிக்குப் பூட்டினார். விஜயதசமியன்று ஜாம்ஜாம் என்று சலங்கைகள் சப்திக்க, சச்சிதானந்தத்தைச் சிதம்பரம் பெரிய பள்ளிக்கூடத்தில் கொண்டு சேர்த்தது.

இளமையின் இன்ப நாட்களை இப்போது சிந்தித்த சச்சிதானந்தம் பிள்ளை அந்த விஜயதசமியிலிருந்துதான் தம்முடைய கஷ்டம் ஆரம்பமாயிற்று என்று உறுதியாக நம்பினார்.

படிப்பு மெல்ல மெல்ல அவரைக் கிராம வாழ்க்கைத்தொடர்பிலிருந்து விலக்கிச் சென்று நகர வாழ்வின் மோகத்தில் சிக்கவைத்தது. பெரிய வகுப்புகளுக்கு உயர உயர, கிராமமும் கிராமச் சூழ்நிலையும் அவருக்கு அருவருப்பை உண்டுபண்ணின. அந்த இரட்டை மாட்டு வில்வண்டியில் தினம் கிராமத்திலிருந்து பள்ளிக்கூடத்திற்கு வருவதும் போவதும் அவருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அதனால்தான் தம் படிப்பு முழுவதும் வீணாவதாக அப்பாவிடம் சொல்லி முறையிட்டுக்கொண்டார். பள்ளிக்கூடத்தை அடுத்திருந்த ஹாஸ்டலில் தங்கிப் படித்தால்தான் தம்மால் படிப்பில் கவனம் செலுத்தமுடியும் என்று கண்டிப்புடன் பிடிவாதம் பிடித்தார்.

முருகையா பிள்ளைக்கு இந்த விஷயத்தில் பையனின் போக்குப் பிடிக்கவில்லை. ஹாஸ்டல் சாப்பாடு பையனின் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது, அத்துடன் வேறு பையன்களுடன் சேர்ந்து நேர்மை மயங்கிப்போகும் என்றெல்லாம் யோசித்தார். இருந்தபோதிலும் பையன் தவறாமல் பாஸ் செய்யவேண்டும் என்பதை உத்தேசித்து அவரும் கொஞ்சநாளில் அந்த ஏற்பாட்டிற்கு ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இப்படி ஆரம்பமான ஹாஸ்டல் வாசம், சச்சிதானந்தத்தைக் குடும்பத் தொடர்பிலிருந்து துண்டித்துவிட்டது. தனக்கு வேண்டியதெல்லாம் பணந்தான், அது இருந்தால் வசதிகளையும் செய்துகொள்ளலாம் என்ற அனுபவ ஞானம் உண்டாய்விட்டது. அப்பாவுக்குத் தெரியாமல் அம்மாவிடமிருந்தும், அம்மாவுக்குத் தெரியாமல் அப்பாவிடமிருந்தும் பணம் பறிக்கும் ஜகஜ்ஜால வித்தைகளை எல்லாம் தான் அப்போது நகரத்துப் பெரிய பள்ளிக்கூடம் போதித்ததாகத் தோன்றியது.

ஹாஸ்டலில் சேர்ந்த பிறகு பழக்கவழக்கங்கள் மாறிக்கொண்டு வந்தன. கார்த்திகை மாதத்துப் பசலைக் கொடியைப்போல் தளதளவென்றிருந்த உடல் துவண்டு சுருங்கிக் கறுத்துப் போயிற்று. இருந்தபோதிலும் படிப்பில் ஒன்றும் சோடையாகப் போகவில்லை. ஒரு விதமாக ஹைஸ்கூல் படிப்பும் முடிந்தது.

படிப்பை அத்துடன் நிறுத்திவிட்டு, கிராமத்தில் தங்கி, கர்னத்தையும் விவசாயத்தையும் கவனிக்கச் சொன்னார் முருகையாபிள்ளை. அப்போது சண்டை பிடித்தது ஞாபகம் வரவே, "ஏன் மேலே படித்தேன்? அப்பாவின் பேச்சைக் கேட்டு, கிராமத்திலேயே தங்கி விவசாயத்தைக் கவனித்திருந்தால் இன்று சென்னை ஹாலந்துக்காரன் ஆபீசில் அடிமை வேலை பார்க்கவும் ஒரு படி அரிசித் தட்டுக்காக

மனைவியிடம் முகத்தடி படவேண்டியும் இருந்திருக்காதே!'' என்று முணுமுணுத்துக்கொண்டார் சச்சிதானந்தம்பிள்ளை. அப்போது செய்தது என்ன? காலேஜுக்குப் போய்ப் படித்தால்தான் ஆயிற்று என்று பிடிவாதம்! அதன் பலன் கடைசியில் என்ன ஆயிற்று? குடும்பம் சீர் குலைந்து போயிற்று.

மேலும் பையனை ஹாஸ்டல் வாசத்தில் விட முருகையா பிள்ளைக்கு இஷ்டமில்லை. சிதம்பரத்தில் ஒரு வீட்டை வாங்கி, குடும்பத்தைத் தற்காலிகமாகக் கிராமத்திலிருந்து சிதம்பரத்திற்கு மாற்றினார். இந்த மாறுதலை எந்த நேரத்தில் செய்தாரோ பாவம்! அன்றுமுதல் அவர் குடும்பம் க்ஷீணதசையை நோக்கி விரைந்து செல்ல ஆரம்பித்தது. கிராமத்திற்கும் நகரத்திற்குமாக இருந்ததால் முருகையா பிள்ளையால் விவசாயத்தை நேரிடையாகக் கவனிக்க முடியவில்லை; குத்தகைக்கு விட வேண்டி வந்தது. இசும் கர்னத்தை வேறு ஒருவருக்கு மாற்றவேண்டியும் வந்தது, இவை எல்லாம் முருகையாபிள்ளைக்குப் பிடிக்காத காரியங்கள். அவர் மனம் ஒடிந்துபோயிற்று. அதைத் தொடர்ந்து அவருக்குப் பல உபத்திரவங்களும் உண்டாயின.

பையன் இண்டரை முடித்து பி. எஸ். ஸி. யில் காலை வைத்தபொழுது குடும்பத்தில் பல புயல்கள் வீசின. முருகையாபிள்ளை காலமானார். வெள்ளாற்றில் நீர் பெருகி, கீழ நத்தம் முழுகியதில் அவர் நிலங்கள் மணல் மண்டிப் போயின.

முருகையாபிள்ளை இருந்தவரையில் பழைய கௌரவம் போகாமல் இருந்தது. அவர் இறந்ததும் கடன்காரர்கள் ஒவ்வொருவராக முளைக்க ஆரம்பித்தார்கள். சச்சிதானந்தத்திற்கு மேலே படிக்க மனம் ஓடவில்லை; மீண்டும் கிராமத்திற்குத் திரும்பிப்போய் விவசாயத்தைக் கவனிக்கவும் விருப்பமில்லை; படிப்பை அத்துடன் நிறுத்திவிட்டு உத்தியோகம் தேட ஆரம்பித்தார். அதன் முடிவாகத்தான்......

* * *

"என்ன பிரமாதமாக யோசனையில் இறங்கிவிட்டீர்கள்? நான் நாளைக்கு மயிலாப்பூருக்குப் போகத்தான் போகிறேன். நீங்களும் ஒரு வாரம் லீவைப் போடுங்கள். இந்த ரேஷன் தொல்லையும் கசப்புக் காப்பியும் இல்லாமல் ஒருவாரம் நிம்மதியாக இருந்துவிட்டு வரலாம்!'' என்று தொடர்ந்தாள் சிவகாமியம்மாள்.

சச்சிதானந்தத்தின் மாமனார் மயிலாப்பூரில் சற்று இயல்புடன் இருந்தார். அவருக்கு நிலபுலன்கள் இருந்தன. மின்சார பம்புகள் வைத்து வருஷம் முழுவதும் சாகுபடி செய்பவர். இத்துடன் அவருக்குச் சொந்தமான ஐந்து வீடுகள் வாடகை கொடுத்தன; அவர் சுகஜீவனம் செய்துவந்தார். ஆகவே மனைவியின் பிரும்மாஸ்திரத்தைப் பெருமிதத்துடன் ஏற்றுக்கொண்ட சச்சிதானந்தம் பிள்ளை தம்முடைய சிந்தனைக்கு ஒரு எல்லை கோலினார்.

"என்ன நான் சொல்கிறேன்; பேசாமல் இருக்கிறீர்களே!'' என்று மேலும் தொடர்ந்தாள் பசியுடன் இருந்த சிவகாமியமமாள்.

"ஒரு வாரம் லீவு என்ன? வேலையையே ராஜிநாமா செய்துவிடுகிறேன். நீ மயிலாப்பூருக்குப் போய் உங்கம்மா வீட்டில் இரு. நான் கீழ நத்தம் போய் வீட்டையும் நிலங்களையும் சீர்படுத்துகிறேன்!'' என்றார் சச்சிதானந்தம் பிள்ளை. அவர் சொல்லில் வைராக்கியம் தொனித்தது.

சிவகாமியம்மாள் திகைத்துப் போனாள். "ரொம்ப அழகான முடிவுதான்! குழந்தைகள் படிப்பு என்ன ஆகிறதாம்?'' என்று குழந்தைகளின் எதிர்காலத்தை அவருக்கு ஞாபகமூட்டினாள்.

"ஏன் படிக்கவேண்டும்? என் பிள்ளைகள் பசி பட்டினி இல்லாமல் வாழ்க்கை நடத்தக் கற்றுக்கொண்டால் போதும்!'' என்று சொல்லி எழுந்த சச்சிதானந்தம் பிள்ளை தம் ராஜிநாமாவை எழுதி வைத்துவிட்டுத்தான் படுத்துக்கொண்டார்.

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை பிரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ பிரவேசக்கட்டணம் கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணு நான்கு மட்டுமே ★

முடிவு தேதி 9—8—50

1	ஒரு கலியாணத்தை நிச்சயிக்குமுன் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் முக்கியமாக இது இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.	தினப்-பொருத்தம்	மனப்-பொருத்தம்
2	இவனுக்குப் பணக்கவலை இல்லாமலிருக்குமா ?	செலவாளி	கடனாளி
3	சிறந்த வித்துவான் என்றால், ஒவ்வொரு கச்சேரிக்கும் நல்ல இது கிடைக்கக் கூடும்.	வருமானம்	வெகுமானம்
4	மலையாள நாட்டில் இது மிக அதிகம்.	வாழை	மழை
5	தம் கணவனுக்கு சதா இது அளிக்கும் மனைவியரும் சிலர் உண்டு.	போதனை	வேதனை
6	சிலரது வாழ்நாட்கள் இது என்பது கொஞ்சமும் இல்லாமலேயே கழிந்துவிடுகின்றன.	அமைதி	அவதி
7	ஸ்திரீகளுக்கு.........என்றால் ஆசையில்லாமல் இருக்குமா ?	பாத்திரம்	புத்திரன்

மேலே உள்ள கட்டத்தில் ஏழு குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. குறிப்புகளை நன்கு படித்துப்பார்த்து, குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடை எது என்று கண்டுபிடித்து எழுதவேண்டும். கூப்பன்களைத் தனிக் காகிதத்தில் எழுதியனுப்பலாம். அச்சுக்கூப்பன் எதுவுமில்லை. ஏழு விடைகளும் சேர்ந்ததுதான் ஒரு கூப்பன். உங்கள் கூப்பனில் விடைகளை மட்டும் எழுதினால் போதும், குறிப்புகளையும் திரும்பவும் எழுதவேண்டாம்.

கட்டணத்தை மணியார்டர் மூலம்தான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். இப்போட்டி சம்மந்தமான சகல விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். மற்றபடி விரிவான நிபந்தனைத்தாள் வேண்டுவோர் கார்டு எழுதவும். இப்போட்டியின் சரியான விடை ஆவணி இதழ் காவேரியில் வெளியிடப்படும்.

கூப்பன்களும் மணியார்டரும் அனுப்பவேண்டிய விலாசம்:-

மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி (C. K.)

"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 4-ன் சரியான விடை :—

(1) அறிஞன். (2) படுக்கை. (3) சனம். (4) கல்வி. (5) கர்வம். (6) தீசல். (7) உத்தி.

(மற்ற விவரங்கள் அடுத்த இதழில்)



வேதனைப் புதிர்

"ஏ.ஸ்.ராகவன்"

லக்ஷ்மி அழுதுகொண்டே இருந்தாள். அவளுடைய நீண்ட கண்களிலிருந்து கண்ணீர் ஆருகப் பெருகி, பஞ்சணையை நனைத்த வண்ணம் இருந்தது. தலைமயிர் கலைந்து கிடக்க மீறிவரும் பெருமூச்சைக் கஷ்டப்பட்டு அடக்க முயன்று சிறுகுழந்தை போல அவள் விசித்து அழுதது நன்ருகப் புலப்பட்டது.

வெளியே பனியின் கொடுமை தாங்கமுடியவில்லை. ஹோட்டல் முதலாளி இந்த அறையை எங்களுக்கு விட்டபொழுது குளிருக்கு அடக்கமாக இருப்பதற்காகவே கட்டப்பட்டது என்று கூறி அதிக வாடகை வாங்கிவிட்டான். ஆனாலும் என்ன? இதில்தான்காற்றுத் தாராளமாக நுழைந்து விளையாடுகிறதே! மரச் சட்டத்தால் ஆடம்பரமாகச் செய்யப்பட்டிருந்த ஜன்னல்களிடையே உள்ள துவாரங்களின் வழியாகக் குளிர் காற்று உள்ளே வந்தவண்ணமிருக்கிறது.

நான் மெல்ல எழுந்தேன். சுவரைத் தடவியபடியே விளக்கைப் போட்டேன். லக்ஷ்மி பதறிப் போய் என்னைப் பார்த்தாள். ஐயோ! அவள் கண்களில்தான் எவ்வளவு கலவரம், என்ன மருட்சி! பூரண நிலவு போன்ற அம்முகம் சிவந்து வாடிவிட்டதே!

"விளக்கை அணையுங்கள் ...... விளக்கை அணையுங்கள்." என்று கூவினுள் லக்ஷ்மி.

நான் திகைத்தேன். ஆனுல் அவளுடைய கண்களிலிருந்து பெருகிய நீர் என்னை வேதனை செய்தது. விளக்கை அணைத்துவிட்டு அவள் அருகில் வந்து, "லக்ஷ்மி, ஏன் அழுகிருய்?" என்று கேட்டேன்.

பதில் சொல்லாமல் என்னை அணைத்தபடியே விம்மினுள் லக்ஷ்மி. பாவம்! பச்சைக்குழந்தை அவள். பருவத்தின் பூரிப்புடன் சிருஷ்டி கர்த்தாவையே பழிக்கும் எழிலுடைய அவள் தானும் ஒரு சிருஷ்டியை உண்டு பண்ணும் நிலையில் இருப்பதை மறந்து விட்டாள் போலும்! அநாதையான தன் நிலைமையைக் குறித்து அழுகிருளோ!

ஜன்னலருகே நின்று வெளியே பார்த்தேன். 'கருகும் 'என்று இருட்டு. தெருவிளக்குகள் தலைகவிழ்த்துத் தூங்கிக் கொண்டிருந்தன. தூக்கத்திலும் கடமையை மறக்கக் கூடாது என்று எண்ணியவை போல அடிக்கடி சிறிது அதிக ஒளிவிட்டுப் பிரகாசித்தன. நான் மட்டும் என்முன் பரந்த வெளியையும், பெரிய, பெரிய கட்டிடங்களையும் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தேன், வானம் அந்தகாரத்தின் பிரதிநிதியாய் வளைந்து நின்றது.

எனக்கு ஏனோ தூக்கம் பிடிக்கவில்லை. இந்த நூதன வியாதி என் பிறப்புரிமை அன்று. அடிக்கடி ஏற்படுவது. சில நாட்களில் அடித்துப் போடப்பட்ட பிணம் போலத் தூங்குவேன். சில நாட்களில் ஞானி போலக் கண் விழித்து நிசப்தமான உலகின் ஓட்டத்தோடு என் பழைய நாட்களின் ஞாபகங்களையும் மெல்ல என் முன் விரித்துக் கொண்டு அழகு பார்ப்பேன்.

பக்கத்து அறையிலும் என்னைப் போலவே ஒரு ஆள் நிம்மதியற்றுத் தூக்கம் பிடிக்காமல் குறுக்கும் நெடுக்கும் நடப்பது தெரிகிறது. அவனுடைய முகத்தில் வளைந்து நின்ற மீசையைப் பார்த்ததும் லக்ஷ்மி பயந்து விட்டாள். அவன் சுத்த விவேகங் கெட்டவன். நான் அவள் அருகில் இருப்பதையும் மறந்து அவளையே முறைத்துப் பார்த்தான். அந்த அதிர்ச்சி தான் அவளைக் கலங்கவைத்து விட்டதோ!

இரவின் புரிபடாத இரகசியத்தோடு என் உள்ளத்தின் இரகசியத்தையும் சேர்த்துப் பிணைப்பதில் ஆனந்தம் ஏற்படுகிறது. வெளியே உலகைக் கவ்விக் கொண்டிருக்கும் இருட்டுப் பயந்தரவில்லை. அதற்குப் பதிலாக என் பழைய சிந்தனைகளை லாவகமாகக் கிளறி விடுகிறது.

நான் தனிக் காட்டு ராஜா. தாயை ஒரு வருஷத்தில் இழந்தேன். தகப்பனுர் இப்பொழுது தான் இரண்டு வருஷங்களுக்கு முன் இறந்தார். அவர் வாழ் நாளெல்லாம் கஷ்டப்பட்டு எனக்காக—தன் ஒரே பிள்ளைக்காக—ஏராளமான சொத்தை வைத்து விட்டுப் போயிருக்கிருர். ஆகையால் நான் என் இஷ்டப்படி அகதியாயிருந்த லக்ஷ்மியை மணந்து கொண்டேன். தகப்பனுர் இறந்தபிறகு ஊர் ஊராகச் சுற்றிய நான் அவளை டில்லி முகாமில் சந்தித்தேன். அவள் பூத்த புது மலராக, எழுதாத கற்பனைக் கனவோவியமாக, அழகுத் தேவதையாகக் காட்சி அளித்தாள், அவளும் தாய் தந்தையற்ற அநாதை. அழகை அவளிடம் ஒப்படைத்த இறைவன் அவளை என்னிடம் ஒப்படைத்து விட்டான்.

நான் படுக்கையில் படுத்தேன். லக்ஷ்மி தூங்கிக் கொண்டிருந்தாள். ஆனல் ஓயாமல் அழுத பிறகு தாயின் அணைப்பில் தூங்கும் குழந்தையின் முகம் போலத்தான் அவள் முகமும் இருந்தது.

'கர், கர்' என்ற சப்தம். பக்கத்து அறை மனிதன் உறங்க ஆரம்பித்துவிட்டான். நல்ல குறட்டை! இரவின் கனமான கடுமையை ரம்பம் போட்டு அறுக்கிருன் போலும்!

* * *

"ஸார், ஸார்" என்று ஹோட்டல் பையன் விடாமல் கதவைத் தட்டிய பிறகு தான் விழித்துக்கொண்டேன். உடல் வலித்தது. லக்ஷ்மி இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிருள். நல்ல பெண்!

நான் கொட்டாவி விட்டபடியே எழுந்து சென்று கதவைத் திறந்தேன். பையன் தட்டில் காலையுணவையும் டீயையும் கொண்டு வந்து வைத்தான். ஹோட்டலில் நல்ல காபி கிடைப்பதில்லை. ஆகையால் நாங்களே தேவையானல் தயார் செய்துகொள்வது வழக்கம்.

பையன் சென்ற பிறகு லக்ஷ்மியை எழுப்பினேன். திடுக்கிட்டுப் பரக்கப் பரக்க அவள் எழுந்திருந்தாள். களைப்பால் அவள் முகம் களை யிழந்துவிட்டிருந்தது. கண்களின் கலவரச் சுழற்சியோடு, ஏதோ இரகசிய வேதனையும் கூடவே பாய்ந்தது.

"அடேயப்பா! எவ்வளவு நேரம் தூங்கிவிட்டேன்! நீங்கள் எப்பொழுது எழுந்தீர்கள்?" என்று கேட்டாள் லக்ஷ்மி.

"அது அப்புறம் பேசிக் கொள்ளலாம். முதலில் பல்லைத் தேய்த்துக் காப்பி குடிப்போம்" என்றேன்.

கையில் பிரஷையும், பசையையும் எடுத்துக் கொண்டு குழாயடிக்குச் சென்ருேம். அங்கு எங்களுக்கு முன்பே பக்கத்து அறை மனிதன் நின்று கொண்டிருந்தான். நாங்கள் குழாயை அடைந்தபோது அவன் வேறுபுறமாகத் திரும்பிக்கொண்டு தன் நீண்ட மீசையில் நன்ருக வளைவை உண்டாக்கச் சிரமப் பட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய பின்புறத் தோற்றமே பயங்கரமாக இருந்தது.

யாரோ வரும் சப்தம் கேட்டு அவன் திரும்பி எங்களைப் பார்த்தான். அவனுடைய உருண்ட சிவந்த கண்கள் எரியும் தழலைப் போல இருந்தன. தலைமயிர் கொத்துக்கொத்தாக விறைத்து நின்றது. எங்களை ஒரு முறை கூர்மையாகப் பார்த்துவிட்டு, அவன் ஒரு பீடியைப் பற்றவைத்துக் கொண்டு தன் அறையை அடைந்தான்.

லக்ஷ்மி அவசர அவசரமாகப் பல் தேய்த்துக் கொண்டாள். நானும் சீக்கிரமே பல்லைத் துலக்கிவிட்டுத் திரும்பினேன்.

காலை யுணவை நான் சாவதானமாகச் சாப்பிட ஆரம்பித்தேன். லக்ஷ்மி ஒன்றும் சாப்பிடாமல் டீயை மட்டும் குடித்துவிட்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள்.

எனக்கு நல்ல பசி. அதுவும் அல்லாமல் வயிற்றுக்கு வஞ்சம் செய்யும் வழக்கம் எனக்குக் கிடையாது. அவளுக்காகக் கொண்டு வரப்பட்ட சிற்றுண்டியையும் காலி செய்து விட்டு அவளருகில் வந்து நின்றேன்.

"லக்ஷ்மி, நேற்று இரவு நீ அழுது கொண்டிருந்தாயே .... ஏன்"? என்று மெதுவாக விசாரித்தேன்.

என்னையே பார்த்தாள் லக்ஷ்மி. அந்தப் பார்வையில் தெரிந்த வேதனையை விவரிக்க முடியவில்லை. "அழுதேனு?...ஓ...ஆமாம்...ஆமாம்" என்று குழறினாள்.

எனக்கு இந்தப் பட படப்பு ஆச்சரியமாயிருந்தது.

"என்னவோ போலிருந்தது .... அதுதான் அழுதேன்" என்றாள். கடைசியில் சிரமப்பட்டு, தன் உள்ளத்தில் குமுறும் பல வித எண்ணங்களை மறைக்க முயல்கிறாள் என்பது எனக்குப் புரிந்து விட்டது. புழுங்கும் சிந்தனைக் குப்பைகளைக் கண்ணீரால் கழுவ முற்படும் பெண் வர்க்கத்தின்மீதே எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. எதையும் விளங்கச் சொன்னால் என்ன?

"ஏன் பயப்படுகிறாய்? ... எதுவாயிருந்தாலும் ..." என்று மறுபடியும் கூறினேன்.

லக்ஷ்மி எதோ கூற வாயெடுத்தாள். ஆனால் அதற்குள் ஜன்னல் வழியாகச் சென்ற அவளுடைய பார்வை அப்படியே வெளியில் லயித்து விட்டது! உடனே அவள் முகமும் கலங்கிச் சிவந்து பிரேதக்களை பெற்று விட்டது.

நான் ஆச்சரியமடைந்து வெளியே பார்த்தேன். அவன் — பக்கத்து அறை மீசைக்காரன்—ஹோட்டல் 'காம்பவுண்ட்' சுவரருகே நின்று கொண்டு பீடியை இழுத்த வண்ணம் இங்கேயே பார்த்துக் கொண்டிருந்தான்!

லக்ஷ்மி சுருண்டு படுத்தாள். நான் குனிந்து அவள் முதுகைத் தடவியபடியே, "அவன் யார், லக்ஷ்மி? நீயேன் அவனைக் கண்டு பயப்படுகிறாய்?" என்று கேட்டேன்.

லக்ஷ்மி எழுந்து உட்கார்ந்தாள். ஆனால் அவளுடைய கலவரம் மட்டும் மாறவில்லை. வார்த்தைகளும் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொண்டன போலத் தோன்றின. ஏனெனில் அவள் வெறும் வாயை மட்டும் மூடி மூடித் திறந்தாள்.

ஹோட்டல் அறை அலங்கோலமாகக் கிடந்தது. இரண்டு சிட்டுக் குருவிகள் சேர்ந்து நெல்லைக் கொறித்தால் எப்படிக்கீழே எல்லாம் இரைந்திருக்குமோ அதைப் போல.

அந்த உருவம் இப்போது மறைந்து விட்டது. அவன் எங்கே போனான் என்ற என் யோசனை சிறிது நேரத்தில் மறைந்தது.

"பாபு!" என்ற குரல் என் அறையின் வெளியில் கேட்டது.

"யாரது?" என்று கேட்டபடியே நான் சென்று கதவைத் திறந்தேன்.

அவன் தான் நின்றுகொண்டிருந்தான்!

"உள்ளே வரலாமா?" என்று சிரித்தபடியே கேட்டான். ஆனால் அவனுடைய முரட்டுச் சரீரத்தையும், உருண்ட பயங்கரமான கண்களையும், கைலி வேஷ்டியையும் பார்த்து நான் அவனை உள்ளே அனுமதிப்பது நல்லதல்ல என்று நினைத்து, "பரவாயில்லை....... ....இங்கேயே பேசுவோம்..............என் மனைவிக்கு உடம்பு சரியாயில்லை.........என்ன சமாசாரம்?" என்று கேட்டேன்.

அவன் தடுமாற்றத்துடன், உள்ளேயே பார்த்தான். லக்ஷ்மியின் துறுதுறுத்த கண்களில் படரும் கலவரத்தைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள எண்ணினான் போலும்! மிரளும் மானையும், காற்றடித்தால் கலங்கி ஓடும் முயலையும் அடித்துத் தின்பதில்தானே வேடர்களுக்கு இன்பம் கிடைக்கிறது!

"ஒன்றுமில்லை...........பாபு............நாம் இருவரும் பக்கத்துப் பக்கத்து அறையில் தான் இருக்கிறோம்........ஆனால் ஒருவர்க்கொருவர் இன்னும் பரிச்சயம் செய்துகொள்ளவில்லை பார்த்தீர்களா?" என்று கேட்டு மெல்லச் சிரித்தான் அவன்.

என்னுடைய அப்போதைய நிலையில் அவனுடைய உறவு அசம்பாவிதமாகத்தான் பட்டது.

யார் இப்படித் தானாகவே இவனை உறவு வைத்துக் கொள்ளச் சொன்னது? காலம் கெட்டுக் கிடக்கிறது. இப்படிப்பட்டவர்களின் சகவாசமோ, சிநேகமோ நமக்கு வேண்டாம். அது கெடுதல் என்றுதான் என் மனச்சாட்சி சொல்லிற்று.

"ஆமா...ம்" என்று ஏதோ சொல்லி வைத்தேன்.

மீசைக்காரன் தொடர்ந்து ஆரம்பித்தான். "கேளுங்கள் பாபூ...என் சரித்திரமே துக்ககரமானது...நான் மஹா பாபஞ் செய்தவன்... கொலைகள் செய்தவன்..." என்று உரக்கச் சொன்னான். பிறகு தன் வார்த்தைகளுக்குத் தெளிவு கொடுக்கச் சிறிதுநேரம் பேசாமல் நின்றான்.

அவன் வாயிலிருந்து இத்தகைய வார்த்தைகளை எதிர்பார்க்க வில்லையாதலால் நான் ஸ்தம்பித்து விட்டேன். என் உடலில் கூட கொஞ்சம் நடுக்கம் தோன்றியது. என் முன் நிற்பவன் பல கொலைகள் செய்தவன்! ஐயோ, அவனுடைய பார்வையும், பேச்சும் சகிக்கவில்லையே!

"ஏன் பாபு, பயப்படுகிறீர்களா? ஹஹ்ஹ... நீங்கள் என்ன? இந்த உலகமே என்னைக் கண்டு பயப்படுகிறது...... ஏன், நானே என்னைக் கண்டு பயப்படுகிறேன்" என்று கூறி, கடகட வென்று சிரித்தான் அவன். தன் பேச்சில் என்ன ஹாஸ்யத்தைக் கண்டானோ தெரியவில்லை!

நான் ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்றேன்.

"நான் வருகிறேன், பாபூ. எனக்கு எப்பொழுதும் அவசரம்தான். உங்களை—முக்கியமாக அந்தப் பெண்ணைப் பார்த்தது சந்தோஷமாயிருக்கிறது." என்று கூறிவிட்டு விர்ரென்று போய்விட்டான். அவன் சென்ற திசையில் என் நோக்கம் சென்றது. அங்கு அவன் சகா ஒருவன் பீடியை இழுத்தபடி நின்றுகொண்டிருந்தான்.

நல்ல விசித்திரமான மனிதன்! அதே சமயம் அபாயகரமான மனிதன்! அடேயப்பா! அவன் பேசிய பேச்சு என்ன? 'ஹைட்ரஜன்' குண்டைவிட அதிகப் பயங்கரமாக இருந்ததே!

கடைசியாக அவன் சொன்ன வார்த்தையின் அர்த்தம் என்ன? முக்கியமாக அந்தப் பெண்ணை—லக்ஷ்மியைப்—பார்த்தது சந்தோஷமாயிருக்கிறது என்றானே. அப்படியானால் இவனுக்கு அவளைத் தெரியுமா? அதனால்தான் இரவெல்லாம் லக்ஷ்மி கண் கலங்கினாள் போலும்!

என் உள்ளம் படபடத்தது. சே! என்ன இது? அந்தப் புறம் பெரிய கொலைகாரன்...... இந்தப்புறம் என் அருமை மனைவி! இருவருக்கும் எந்தவிதத் தொடர்பையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

அவள் அகதி! மதவெறியில் தாய் தந்தையர்கள் பலியாக்கப்பட, இவள் மட்டும் தப்பி வந்திருக்கிறாள். அழகு கொஞ்சும் இளம் பெண்! பூத்த நறுமலரை வண்டுகள் மொய்ப்பது சகஜம் தானே......

என் மூளை குழம்பியது. அவளைக் காஷ்மீரத்து மலைச் சாரலில் படர்ந்த மலர்க்கொடி என்று எண்ணினேன். ஏரியின் பளிங்கு நீரிலே மலர்ந்த குமுதம் எனப் பெருமை கொண்டேன். ஜீவனுள்ள நடமாடும் ஓவியம் எனப் பூஜை செய்தேன். இதற்காக என் அகண்ட உள்ளத்தில் வேறு எந்த விவகாரத்துக்கும் இடங் கொடாமல் இவளுக்காகவே அதை ஒழித்து விட்டேன்....ஆனால்...ஆனால்...அவள் அகதி!

"அவன் தொலைந்தானா? உள்ளே வாருங்கள். கதவைத் தாழ்போடுங்கள். ஜன்னலையும் மூடி விடுங்கள். இனிமேல் அவன் முகத்தில் விழிக்க முடியாது. நாம் சீக்கிரமே புறப்பட்டு விடுவோம்" என்று படபடப்புடன் கூறினாள் லக்ஷ்மி.

நான் உள்ளே சென்றேன். என் உள்ளமோ வேதனைச் சேற்றில் புரண்டு கொண்டிருந்தது. உடல் வலியை மணலில் புரண்டு தானே போக்கிக் கொள்ள முடியும்?

சந்தேகமில்லாமல் லக்ஷ்மிக்கும் அவனுக்கும் இடையே ஒரு திரை தொங்கிக் கொண்டிருக்கிறது. அது என்ன? அகதியாகிய அவள் நிலையை எண்ணிப் பார்த்ததும் எனக்கே வெட்கமாயிருந்தது. மதவெறி பிடித்த முரடர்களிடமிருந்து தப்பி வந்தவள் லக்ஷ்மி. அவள் மாசற்றவள் என்று எப்படி எண்ண முடியும்?

கடவுளே! அப்படியும் இருக்குமா?

நான் கோபமாக அவளையே முறைத்துப் பார்த்தேன். அவளுடைய கலங்கிய கண்கள் அவள் கசங்கிய மலர் என்று கூறின. கடைசியில் நான் ஏமாந்து விட்டேன்! அவள்... ஒரு...அகதி!

"உண்மையைச் சொல்...அவன் யார்?" என்று கத்தினேன்.

லக்ஷ்மி மருட்சியுடன் என்னையே பார்த்தாள். என் முகத்தில் வீசும் கோபக் கனலைக் கண்டு கலவரத்துடன், "அவன்...வந்து...வந்து" என்று இழுத்தாள். பிறகு முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு கண்களில் நீரை வரவழைக்கப் பார்த்தாள். ஆண்களின் இதயத்திற்குள் இந்த

இரகசிய சுரங்க வழியாகத் தான் பெண்கள் சுலபமாகப் புகுந்து விடுகிறார்கள்!

"சொல்லி விடு... நீ சொல்லாவிட்டால் அவனையே கேட்டு விடுகிறேன்" என்றேன் கோபத்தில்.

அவள் துடித்தாள். "சொல்கிறேன்...மெள்ளப் பேசுங்கள். ஏன் இந்தப் பட, படப்பு?" என்று கூறிவிட்டுத் தன் அருகில் உட்காரச் சொல்லிச் சைகை செய்தாள்.

நானா உட்காருவேன் அவள் அருகில்?

"பரவாயில்லை, சொல்லு" என்றேன் நின்றபடியே.

"அவனைப் பார்த்ததிலிருந்து என் உடல் நடுங்குகிறது. அதனால் தான் இரவு பூராவும் அழுது கொண்டிருந்தேன்"

"ம் ......"

"அவன் தான்...அதை எப்படி சொல்றது... அந்த அரக்கன் தான்......"

"சொல்லு...சீக்கிரம் சொல்லு."

"அவன் தான் என் தாயையும் தகப்பனாரையும் கொன்றவன்"

"ஹா!"

லக்ஷ்மி அழுதாள். நான் பதறிப் போனேன். பட்டப்பகல் திடீரென அமாவாசையாக மாறி விட்டது போலிருந்தது.

"இவனா அப்படிச் செய்தது?"

"ஆமாம்...அந்தக் காட்சியை நினைத்தாலே கண் கலங்குகிறது. ஒரே வெட்டில் அவர்கள் இருவரையும் துணித்துவிட்டு என்னை மயிரைப் பிடித்து உலுக்கினான். ஆனால் என்ன தோன்றிற்றோ என்னமோ என்னை மட்டும் விட்டுவிட்டான்......என்ன துணிச்சல் அவனுக்கு! உங்களிடமே வந்து 'நான் பல கொலைகள் செய்தவன்' என்கிறானே. ஐயோ! நாம் இனி மேல் இங்கிருப்பது அபாயம்" என்றாள் லக்ஷ்மி ஒரே மூச்சில்.

நான் பீதியுடன் வெளியே பார்த்தேன். எதிர்க் கடையிலிருந்த செய்தித் தாள் தலையங்கம் 'மீண்டும் அகதிகள் படுகொலை' என வாசித்தது. அதுவுமல்லாமல் நாடெங்கும் எதிரியின் ஒற்றர்கள் வேறு வேலை செய்கிறார்களாம். எந்த நிமிஷம் எது வரும் என்று யாருக்குத் தெரியும்? லக்ஷ்மியுடன் அந்த மீசைக்காரன் எதிரில் தங்குவது ஆபத்து.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் மேலவீதி.

திருச்சி கிளை:— 15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

"இன்று மாலையே கிளம்பி விடுவோம்" என்றேன் தீர்மானமாக. ஆனால் அதே சமயத்தில் என் உள்ளம் மட்டும் கள்ளங் கபடமற்ற லக்ஷ்மி மீது வீண் சந்தேகங் கொண்டதை எண்ணி வெட்கமடைந்தது. அதுவுந் தவிர இப்போது முன்னை விட அவளிடம் அன்பு அதிகமாயிற்று. சாராயம் நாளாக ஆகத் தான் வீரியமடைகிறது. அது போல ரகசியமும் சிறிது நேரம் மறைக்கப் பட்டபின் வெளிக் கிளம்பினால் புதுச் சக்தியையும் ஜீவனையும் பெறுகிறது.

* * * *

மூட்டை கட்டியாயிற்று. புறப்படவேண்டியதுதான். நல்லவேளையாக அவன் பக்கத்து அறையில் இல்லை. காலையில் என்னிடம் பேசிவிட்டுச் சென்றவன் இன்னும் திரும்பவில்லை. யாரைக் கொலை செய்யப் போயிருக்கிறானோ!

என் குடும்பம் சிறிதாயிருந்ததுபோல என் சாமான்களும் கொஞ்சமாகத்தான் இருந்தன. ஊர் ஊராகத் திரிபவன்தானே! வானவீதியில் உல்லாஸமாகப் பறக்கும் சிட்டுக்குருவிபோல உலகில் உல்லாஸ யாத்திரை செய்பவன்.

புறப்படும் தருணத்தில்தான் என் எண்ணமெல்லாம் வீணாயின. அவன் எப்படியோ வந்து சேர்ந்தான். அவனுடைய பரபரப்பையும் வெறித்த பார்வையையும் கண்டு எனக்கே பயமாயிருந்தது. தன் அறைக்குள் நுழைந்து எதையோ அவசர அவசரமாகத் தேடிக் கையிலெடுத்துக்கொண்டு என் அறைக்குள் நுழைந்தான்.

லக்ஷ்மி அவனைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்தாள்.

ஆனால் அவன் புன்முறுவலுடன் பேச ஆரம்பித்தான்.

"பயப்படாதே, அம்மா! என்னை நீ மறந்திருக்க மாட்டாய். பாவம்! என்னைக்கண்டு பயப்படுகிறாய்...ஆனால் உன் பெற்றோர்களைக் கொன்ற பாவம்தான் என்னை இப்போது துரத்துகிறது...இப்போதோ இன்னும் சிறிது நேரத்திலோ நான் போலீசாரால் கைது செய்யப்படுவேன்" என்றான் அவன்.

நாங்களிருவரும் அவனையே ஆச்சரியத்துடன் பார்த்தபடி நின்றிருந்தோம்.

அவன் மறுபடியும் பேச ஆரம்பித்தான். "அன்று உங்கள் வீட்டைச் சூறையாடிய பிறகு நான் வெறிபிடித்த நாய்போலத் திரிந்தேன். ஏன், வெறிபிடித்துத்தான் அப்படி எல்லாம் செய்தேன்...ஆனால் எந்த அரசாங்கத்துக்காக, எந்த மதத்துக்காக அவற்றைச் செய்தேனோ, அதே அரசாங்கம் என்னைத் தூக்கிலிடப் பார்த்தது...தலை தப்பினால் போதும் என்று அலைகிறேன்" என்றான் மூச்சுவிடாமல்.

இப்பொழுது அவன் முகம் பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது. அவன் யாரோ, எவனோ? ஆனால் அந்தவினாடி அவன் தன் பாவச் செயல்களுக்காக வருந்துபவனாகத்தான் எனக்குப் பட்டான்.

"உன்னைத் தூக்கிலிட முயன்றதா? எதற்காக?" என்று கேட்டேன்.

"ஆம், தூக்கிலிடத்தான். கருணையற்ற அரசாங்கம்! என்ன மதவெறி! அப்பொழுது கண் இருந்தும் இல்லாதவனாக வாழ்ந்தேன்....." என்று கூறிக்கொண்டே வந்தவன் தன் கண்களில் உருளும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.



நான் லக்ஷ்மி இருந்த பக்கம் நோக்கினேன். அவளும் கண் கலங்கிக்கொண்டிருந்தாள். என்ன விசித்திரம்! பெண்களின் சலன உள்ளத்தை என்னென்பது! சிறிது நேரத்திற்கு முன் இவனைக்கண்டு நடுங்கினவள், இப்போது பரிதாபப் படுகிறாள்!

அவன் தன் கையிலிருந்த காகிதத்தால் சுற்றப்பட்ட போட்டோவை என்னிடம் நீட்டினான். நான் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். லக்ஷ்மி தன் தாய் தந்தையர்களுடன் வீற்றிருக்கும் படம் இது. எனக்குத் தலை சுற்றியது.

"உங்கள் சொத்தைக் கொள்ளை அடித்தேன். என் தங்கை போன்ற உன் முகம் வாட, உள்ளம் கொதிக்க உன் பெற்றோரைக் கொலை செய்தேன்... ஆனால் எஞ்சியிருக்கும் இந்தக் குடும்பச் சொத்தை—உன் பெற்றோரின் நிழற் படங்களை—உன்னிடம் சேர்த்துவிட்ட பெருமை, அத்துடன் உன் மன்னிப்பு வேண்டும் எனக்குக் கிடைத்தவை போதும்" என்று கூறிவிட்டுக் கெஞ்சும் பார்வையால் லக்ஷ்மியை நோக்கினான்.

அவள் உதடுகள் துடித்தன. முகத்தில் ஆனந்த பரவசம்! அவளுடைய தொண்டைக்குள்ளிருந்து எப்படியோ கடைசியில், "உங்

கள் மனம் மாறி விட்டபிறகு, என் மன்னிப்புத் தேவையில்லை'' என்ற வார்த்தைகள் வெளி வந்தன.

நான் படத்தை மேஜை மேல் வைத்துவிட்டு மீண்டும் பழைய கதையைத் துவக்கினேன். இப்போது அவனிடம் உள்ள பயம் நீங்கிப் போயிற்று. அதற்குப் பதிலாக அனுதாபம் தான் உண்டாயிற்று. அவனும் மனிதன் தான்! பேயாக இருந்து மனிதனாக மாறியவன்!

''அது சரி... தூக்குத் தண்டனை என்றாயே. எதற்காக?'' என்று கேட்டேன்.

''ஓ...மறந்து விட்டேன், பார்த்தீர்களா? அத்தனை சந்தோஷம். தங்கையின் மன்னிப்புக் கிடைத்து விட்ட சந்தோஷத்தில் இனி நான் சாவதற்கும் பயப்பட மாட்டேன்...என் வெறி யில் ஊரைச் சூறையாடினேன். எவ்வளவோ பேரைக் கொன்றேன். ஆனல் துரதிர்ஷ்ட வசமாக — ஏன், அதிர்ஷ்ட வசமாக என்று தான் வைத்துக் கொள்வோமே — எங்கள் இனத்தைச் சேர்ந்தவரையே கொன்று விட் டேன். அவர் ஜில்லா கலெக்டராம். எனக் குப் பிறகு தான் விஷயம் தெரியும். மற்ற உயிர்களைக் கருணையில்லாமல் கொன்றவர்கள் இந்த ஒரு உயிரை ஈடு செய்ய முடியாத நஷ்ட மாகக் கருதினார்கள்! மேலும் எப்பொழுதோ எங்கள் குடும்பத்துக்கும், அந்தக் கலெக்டர் குடும்பத்துக்கும் பகை உண்டு என்ற உளவை யும் எப்படியோ கண்டு பிடித்தார்கள்! அதற்காக என்னைத் தூக்கிலேற்ற முயன் ருர்கள்......வாழ்வில் என்னை விடப் பாபஞ் செய்தவன் இல்லை!'' என்ருன் அவன்.

அவனுடைய தழல் போன்ற கண்கள் நீரைக் கக்கிக் கொண்டிருந்தன. மீசை தன் விறைப் பை மறந்து பணிவுடன் தழைந்து நின்றது. கஷ்டப்பட்டுத் தன் கோட்டுப் பைக்குள் கை யை விட்டுத் துழாவி ஏதோ ஒரு சிறிய புகைப் படத்தை எடுத்து என்னிடம் கொடுத்தான். எனக்கு ஆச்சரிய மாயிருந்தது...அது லக்ஷ்மி யின் குழந்தைப் பருவ போட்டோதான்! அதே கண்கள், அதே பார்வை!

''பாபு, இது என் தங்கை மீர்உன்னிஸா வின் படம். அவள் குழந்தையிலேயே இறந்து விட்டாள்...அவள் தான் பிறகு இந்தப் பெண் ணுக—தங்கையே, உன் பெயர் என்னம்மா?''

என்று நடுவில் கேட்டான் அவன்.

''லக்ஷ்மி'' என்ருள் அவள்.

''உம்... லக்ஷ்மியாகப் பிறந்திருக்கிருள். சந்தேகமில்லை, இழந்த தங்கையை மீண்டும் அடைந்தேன். ஆனல் பலன் என்ன? வேடன் கையில் அகப்பட்ட மான் இறைச்சிக்குத் தானே உபயோகப் படுத்தப் படும்? பைத் தியக் காரன் கையில் இரத்தினக் கம்பளம் கிடைக்கலாமா? ...'' என்று கூறிப் பெருமூச் சுவிட்டான் அவன், முரட்டுச் சரீரத்திற்குள் ளிருந்த அவனுடைய மெல்லிய உள்ளம் தங் கைப் பாசத்தால் தவித்துக் கொண்டிருந்தது.

என் கையிலிருந்த மீர் உன்னிஸாவின் படம் அவள் தான் லக்ஷ்மியாகப் பிறந்திருக்கிருள் என்று கூறியது. ஆத்மாவின் மறு பிறப்பில் அவனுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட்டது என்பது எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

அதற்குள் ஹோட்டலில் பரபரப்பு ஏற் பட்டது. தடதடவென்ற சப்தத்துடன் 'போலீஸ் வான்' வந்து ஹோட்டலுக்கு எதிரில் நின்றதும் அதிலிருந்து ஏழெட்டு ஜவான்கள் இறங்கினர்.

''இதோ என் முடிவும் நெருங்கி விட்டது. நான் வருகிறேன்'' என்று கூறியபடியே திரும் பினன் அவன்.

அதற்குள் போலீஸார் அவனருகில் வந்து விட் டனர். அவனுடைய கைகளில் விலங்கு மாட் டப் பட்டது.

''இந்தச் சர்க்காருக்கு எதிராக வேலைசெய் யும்உளவாளி என்ற குற்றத்திற்காக உம்மைக் கைது செய்யப் பட்டிருக்கிறது'' என்று அவன் மீது சாற்றப்பட்ட குற்றத்தை விளக்கினர் ஸப்-இன்ஸ்பெக்டர்.

எனக்கு ஆச்சரிய மாயிருந்தது. அவன் மீது சாற்றப் பட்ட குற்றம் அர்த்தமற்றது. தூக் குத் தண்டனைக்குப் பயந்து ஓடிவந்தவன் அதே சர்க்காரின் உளவாளி ஆக முடியுமா?

ஆனல் போலீஸார் அவனை இழுத்துச் சென் றனர். நாங்கள் ஒரு உதவியும் செய்ய முடி யாத நிலையிலிருந்தோம். அவனுடைய முகம் பரிதாபகரமாக இருந்தது. எங்களை விட்டுப் பிரிவதால் ஏற்படும் கவலை ஒன்று தான் அவ னுக்கு, மற்றப்படி உலகின் சீற்றத்துக்கு அவன் தலை குனியத் தயார். தன் பாபச் செயல்களுக்கு அவன் செய்யும் பிராயச்சித் தம் அதுதான்!

கார் பட, பட வென்று புறப்பட்டது. எங் கள்உள்ளமும்போட்டிபோட்டுப்படபடத்தது. லக்ஷ்மி கண்களில் வழிந்தி ஓடும் கண்ணீருடன் கைகளைப் பிசைந்தாள். அவளுள்ளிருந்த மீர் உன்னிஸாவின் ஆத்மா அப்படிச் செய்கிற தோ என்னவோ! ஆனல் எங்களின் உள்ளக் குமுறலை யெல்லாம் பரிகசிக்கும் வண்ணம் பொங்கும் கடலலைபோலக் காரில் உட்கார்ந்த அவனிடமிருந்து நீண்ட பெரு மூச்சு வெளி வந்தது.

ஜெய் ஸோம்நாத்



தொடர் கதை

கே. எம். முன்ஷி — ஸுரேந்திர நாத் சாஸ்திரி

மொழி பெயர்ப்பு — கீழையூர் தி. சேஷாத்திரி

அத்தியாயம்—4

ஸாமந்த சௌஹான்

சௌளா மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது அவள் தலை சுற்றிக்கொண்டிருந்தது. பீமதேவர், காபாலி, கஜினியின் மிலேச்சன் இம் மூவரும் அவள் எதிரே உருவம் காட்டிக்கொண்டிருந்தனர். அவள் உள்ளத்தை அச்சம் அழுத்திக்கொண்டிருந்தது. கங்காதேவி அருகிலேயே உட்கார்ந்திருந்தாள். பெண் அப்படியே தாயைக் கட்டிக்கொண்டாள்.

"ஆம். என்ன நடக்குமோ ?"

"ஏன் அம்மா, என்ன நடந்துவிடும் ?"

"நீ என்ன கண்டாய்? யோகீசுவரர் இறந்தால் ஏதாவது கெடுதல் நடவாமல் இருக்காது"

"ஆம் நடக்கும், நடக்கும்." என்று கங்காதேவி ஆத்திரமும் வெறுப்பும் வெடிக்கச் சொன்னாள். "எனக்கு இவ்வளவு வயதாய் விட்டது இதுவரை இம்மாதிரியான அமங்களம் நடக்கப் பார்த்ததில்லை."

"அம்மா, உனக்குத் தெரியுமா ?" சௌளா தன் தாயாரின் காதண்டை கேட்டுவிட்டு மேலே தொடர்ந்தாள். "அம்மா, கஜினி மிலேச்சன் படை எடுத்துவருகிறான்."

"கஜினிமிலேச்சனா ? யார் அந்த அடிமாண்டுபோவான் ?"

"அதுதான் எனக்கும் தெரியாதே ?"

"பின் எங்கிருந்து இந்தச் சமாசாரத்தைத் தேடிப்பிடித்தாய் ?"

"எங்கிருந்தோ பிடித்தேன். அதைப்பற்றிப் பஞ்சாயத்துச் செய்து என்ன லாபம் காணப் போகிறாயாம்?"

"ஓஹோ! நேற்று ஒன்றும் தெரியாது உனக்கு. இன்று எங்கிருந்து தெரிந்துவிட்டதாம்?"

"எனக்குச் சமாசாரம் தெரியும்."

"அட, எங்கிருந்து என்றுதான் கொஞ்சம் சொல்லேன்!" கங்கா தன் மகளைப் பிடிவாதமாய்க் கேட்க ஆரம்பித்தாள். அவளுக்குத் தன் மகளிடம் இருந்த அன்பில் அவள் உள்ள ரஹஸியத்தை இவளிடம் சொல்லாமற் போனால் பொறுமைகூடக் கொள்ளத் தலைப்பட்டிருந்தாள். அவளே தன் மகள் சிவராசியுடன் அன்புத் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணி அதைச் சொல்வதும் உண்டு. ஆனால் தன் பெண் தன் மனது முழுவதையும் பிறரிடம் ஒப்புவிப்பாள் என்றால் அதைவிட வருத்தமேற்படுத்தக்கூடிய வேறு விஷயம் இருக்காது.



அவள் பெண்ணைப் பிடிவாதப்படுத்த ஆரம்பித்தாள். "என்னிடம்கூடச் சொல்லக் கூடாதா?"

சௌளா குழந்தை வெள்ளையுள்ளம் படைத்தவள். வேற்றாரிடமே எதையும் மறைக்கமாட்டாள். அம்மாவிடமா மறைக்கப் போகிறாள்?

"அம்மா. இந்த விஷயத்தை எனக்குப் பட்டண் நகர் பீமதேவர் சொன்னார்" என்று சொன்ன அவள் எதிரே நேற்று இரவு நடந்த நிகழ்ச்சி எல்லாம் உருப்பெற்று எழ அவள் உடல் ஆட ஆரம்பித்தது.

கங்கா சௌளாவை அப்படியே பாய்ந்து அழுத்தித் தழுவிக்கொண்டாள். 'அட என் பூனைக்குட்டி! நீ எப்படியடி பீமதேவரைச் சந்தித்தாய்? எப்பொழுதடி பார்த்தாய்?' என்று ஆர்வம் பொங்கக் கேட்டாள்.

சௌளாவின் இதயமோ ரசம் நிறைந்த அந்தக் கதையைச் சொல்லிப் பாரத்தைக் குறைத்துக் கொள்ளத் தயாராகவே இருந்தது. அவளும் தாயைக் கட்டிக்கொண்டு கதை சொல்ல ஆரம்பித்தாள். அழுது சிரித்துப் பயம் காட்டி அமைதிகொண்டு பல உணர்ச்சிகளுக்கிடையே முழுகிச் செல்லும் அந்தக் கதையைக் கங்க யோகீசுவரர் சாவு, பீமதேவர் சந்திப்பு உள்பட எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள். ஆனால் பீமதேவர் தூக்கிச் சென்றபோது தான் இருந்த நிலையை மட்டும் சொல்ல மறந்துவிட்டாள்.

2

கங்காவின் உள்ளமும் இந்தக் கதையைக் கேட்டுக் கலவரமடைந்தது. கங்கயோகீசுவரரின் சாவு சௌளாவின் மூலமாகவா ஏற்பட்டது? இதைவிட ஆபத்துக்குறிகுறி என்ன வேண்டும்? அதற்குப் பலன் உடனேயே பீமதேவர் சண்டைக்குப்போக நேரிட்டுவிட்டது. மயங்கிச் சுற்றும் மனதின் பளுவைக் குறைக்க, கங்காதேவிக்கு ஒரே வழிதான் தென்பட்டது. அவள் உடனே தன் மகளையும் அழைத்துக்கொண்டு கங்க சர்வக்ஞரிடம் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

கங்க சர்வக்ஞர் மத்யான்ன சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தார். அர்க்யம் கொடுத்து முடித்து, காயத்ரிஜபம் செய்துகொண்டிருந்தார். ஆனால் இன்று அவர் உள்ளம் நிலை கொள்ளாமல் இருந்தது. முகவாயில் வெளியே காயத்ரி மந்திர உச்சாரணம் நடந்துகொண்டிருந்தாலும் அவர் உள்ளே பெரிய சண்டையே நடந்துகொண்டிருந்தது.

"பகவானே! சங்கரா! என்ன செய்ய எண்ணமிட்டிருக்கிறாய்?" என்று அவர் உட்குரல் கேட்டுக்கொண்டிருந்தது.

கங்காதேவி சௌளாவுடன் பின்கட்டு முற்றம்வரை வந்தாள். கைகளைக் கூப்பிக்கொண்டு ஒரு பக்கம் அமர்ந்துகொண்டாள். அருகிலேயே தலையைக் குனிந்து சௌளாவும் உட்கார்ந்தாள். சௌளா கங்க சர்வக்ஞரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். தேஜஸ் நிறைந்த அகன்ற நெற்றியில் சந்திர ரேகைபோன்ற வெண்மையான விபூதிப் பூச்சு ஒளி வீசிக்கொண்டிருந்தது. கங்கசர்வக்ஞர் மனிதர்தானா அல்லது சாக்ஷாத் சங்கரரா? என்று அவள் சந்தேகித்தாள். அவள் அநேக தடவைகளில் கனவில் கண்ட உருத்திரனும் இப்படித்தான் தோற்றமளித்திருந்தார். சர்வக்ஞர் தம் தாடியில் எப்படி முடி போட்டிருந்தாரோ அப்படியேதான் அவள் சங்கரரும் முடிபோட்டுக்கொண்டிருந்தார். அவள் எண்ணினாள்: சர்வக்ஞர் சங்கரரானால் இப்பொழுது அவள் அவர் மகளாகவல்லவா ஆகிறாள்! ஊஹூம் அது முடியாது. அவள் பார்வதியினிடத்திலிருந்து அல்லவா சங்கரனை வழிபடுகிறாள்!

கங்க சர்வக்ஞர் சந்தியா செய்துகொண்டிருக்கும்போதே சிவராசியும் உள்ளே வந்தான். வந்து அவருக்கு நேர் எதிரே அமர்ந்தவன் சௌளாவைத் திரும்பிப்பார்த்தான். ஒரு சிறிய முறுவலும் செய்தான்.

"குருதேவா! வெளியே ஸஜ்ஜன சௌஹானும் அவர் புத்திரனும் தங்களைத் தரிசனம் செய்ய வந்து நிற்கிறார்கள்."

'சரி. ஆனால் கங்காதேவி ஏதோ சொல்ல வந்திருக்கிறாள். அதை முதலில் கேட்டு விடலாம்." என்று சொல்லி, சர்வக்ஞர் சௌளாவை மிகவும் அன்பு ததும்பும் பார்வையில் பார்த்தார். "அட. சௌளாவும் வந்திருக்கிறாளே! என்ன சௌளீ! நீ நேற்று எல்லையே கட்டிவிட்டாயே!"

"எல்லாம் தங்கள் கிருபை தானே?"

"அல்ல, போலா நாதனின் கிருபை என்று சொல்" என்ற சர்வக்ஞர் தொடர்ந்து—"சௌளீ! நீ மிகவும் பொல்லாதவளாயிருக்கிறாய். கங்கா, இனி உன் சூரியன் மலைவாயில் விழ வேண்டியதுதான்" என்று முடித்தார்.

"ஆம். என் சூரியன் என் புத்திரியின் கையால் தான் மறைய வேண்டும். ஏன் அப்படித்தானே சிவராசி ஜீ!' என்றாள். ராசியும் ஆம் என்று சொல்ல உதடு கூட்டினான். ஆனால் சர்வக்ஞர் இந்த வார்த்தையை மேலே போகாமல் தடுத்துவிட்டார்.

"கங்கா! சொல், எதற்காக வந்தாய்?'

199318

"சௌளாவைத் தங்கள் தரிசனத்துக் கழைத்து வந்தேன்."

"சரி, மேலே"

"மேலே சௌளா சொல்லிய ஓர் பயங்கர மான விஷயத்தைச் சொல்ல வந்தேன்."

சௌளா நான்கு புறமும் மருட்சியுடன் பார்த்தாள். கங்க சர்வக்ஞர் புரிந்துகொண்டார். உடனே சிவராசி பக்கம் திரும்பி, "சிவராசி, போ. வெளியில் யார் வந்தாலும் விடாதே என்று சொல்லி வா" என்ருர்.

'அப்படியே' என்று சொல்லிய சிவராசி வெளியே சென்று திரும்பி வந்து அமர்ந்து கொண்டான்.

கங்காவும் சௌளா அனுபவித்த நிகழ்ச்சிகளை எல்லாம் சர்வக்ஞருக்குத் தெரியப்படுத்தினுள். அவள் சொல்லிச் செல்லச் செல்ல, சர்வக்ஞரின் முகம் கம்பீரமடைந்துகொண்டே வந்தது. பீமதேவன் கங்க யோகீசுவரரைக் கொன்றதைக் கேட்டவுடன் அவர் கண்கள் இருண்டன. பெருமூச்சு விட்டார். அவர் வாயிலிருந்து சிவ கவசத்தின் சில பகுதிகள் வெளியேற ஆரம்பித்தன. சிவராசிக்கோ இதைக் கேட்டு உயிரே போய்விட்டது. கங்கை விஷயத்தை முடித்துப் பொம்மைபோல் அமர்ந்ததும் எல்லோருமே கற்சிலையாய்த் தங்கியிருந்தனர். பிறகு சர்வக்ஞர் தணிந்த குரலில் மிகவும் கஷ்டப்பட்டுச் சொன்னர்: 'மனுஷ்யன் பயம் அவன் நம்பிக்கை எல்லாம் முயற்கொம்புதான். உண்மை என்னவோ சங்கரன் எண்ணம் ஒன்றுதான். அதன் வசப்படக் கடவுள் அருள் கிடைக்கவேண்டும். அது தான் வேண்டும். இந்த இருபது வருஷமாக எம்பெருமான் என் கையாலேயே எவ்வளவோ முன்னேற்றத்தைச் செய்து கொண்டிருக்கிருர். இந்தத் திரிசூல பாணி ஏதோ எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருக்க யார் என்ன செய்யமுடியும்?' இதைச் சொல்லிவந்த அவர் கண்கள் தேஜஸ் பொங்கி எழுந்தன. அவர் குரலும் கடவுள் வாக்குகளையே தாங்கி வருவதுபோல் பொருள் புதைந்து அர்த்த கௌரவம் நிறைந்து வந்தது. "கடவுள் பிடித்த கையுடன் வேறு யார் விளையாட முடியும்? அதேபோல் ஸோமநாதர் முகம் திரும்பிக்கொண்டால் அவனைக் காப்பாற்ற யார்? கஜினியின் அமீர் ஸோமநாதனை விரோதிக்க ஆரம்பித்தால். அந்தச் சமயமே அழிவான் என்பது திண்ணம்."

அவர் சொல்லி நிறுத்தினர். கண்களை மேல் நோக்கி நிறுத்தி, கொஞ்ச நேரம் சும்மா இருந்தார். அந்தச் சமயம் மற்ற மூவருடைய இதயத்திலும் சர்வக்ஞரிடம ஒரு மரியாதையும் சிரத்தையும் நிரம்பின.

"ராசி! வெளியே யார் நிற்கிருன் என்று சொன்னுய்? ஸஜ்ஜன் சௌஹான் தானே! போ. அவனை ஸோமநாதன்தான் அனுப்பியிருக்கவேண்டும். சென்று அவனை அழைத்து வா."

சிவராசி எழுந்து சென்று தந்தையையும் தனயனையும் உள்ளே அழைத்து வந்தான்.

3

ஸஜ்ஜன் சௌஹான் ஒரு ராஜபுத்திரன். வயது நாற்பது, நாற்பத்தைந்து இருக்கும். படபடப்பும் துடிப்பும் வேகமும் கொண்டவன். அடர்த்தியான தலைமயிர் உடையவன். அவன் புத்திரனுக்கு இருபது வயதிருக்கும். அவன் தந்தையின் சிறிய பிம்பம் போலவே இருந்தான். இருவரும் ஒரே விதமாக வாளும் கேடயமும் ஏந்தி வந்திருந்தனர். அவர்கள் இருவரும் வந்து சர்வக்ஞர் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தனர்.

"நம: சிவாய."

"சிவாய நம:" சர்வக்ஞர் ஆசீர்வாதம் அளித்து, "என்ன, நேற்று மாலை வந்திருந்தீர்களா?" என்று கேட்டார்.

'ஆமாம். குருதேவா! வருவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகிவிட்டது. தாங்கள் ஆரத்தி காட்டிக்கொண்டிருக்கும்போது வந்து விட்டோம். அதற்குப் பிறகு நடந்த நடனத்தையும் பார்த்தோம்" என்று சொல்லிய ஸஜ்ஜனன் சௌளாவைத் திரும்பிப் பார்த்தான்.

"ஊம். சௌளாவும் மிக அழகாக நாட்டிய மாடினுள், இல்லையா?" என்று சொல்லிய வாறே சர்வக்ஞர் தம் பார்வையை அவன் புத்திரன் சாமந்தனிடம் இறக்கி வைத்தார். அந்த இளைஞனும் உள்ளே வந்தது முதல் அவன் பார்வை சௌளாவின் உடலழகு வலையில் சிக்கியது; வெளியேறவே யில்லை. ஸர்வக்ஞர் கொஞ்சம் சிரித்தார். சௌளாவின் மோகினி சக்திக்கு யார் என்ன சொல்ல முடியும்?

"ஸஜ்ஜனு! கோகா ராணு எப்படி யிருக்கிருர்?"

"அவருக்கென்ன? ஆனந்தமாயிருக்கிருர்! அவர் தங்களுக்குத் தம் அநேக நமஸ்காரங்களைத் தெரிவித்தார். இந்தக் காணிக்கையையும் அனுப்பி வைத்திருக்கிருர்" என்று சொல்லியவாறே ஸஜ்ஜனன் தன் மடியை அவிழ்த்

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,

K. C. S. I., D. C. L. (Oxon)

சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி	ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள்:

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும்
கிளை ஆபீஸ்கள் உள்ளன.



(MADRAS), LTD.

Retail Branches 285, China Bazaar 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylapore. No. 2, Neeli Veerasami Chetty Street, Triplicane,
MADRAS.

அழகி டி. ஆர். ராஜகுமாரி
ஏன் சருமத்தை அழகுபடுத்த
லக்ஸ் டாய்லட் சோப்பை
நம்புகிறார் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்

அவர் கூறுவதாவது:
"பிரதி தினமும் லக்ஸ் டாய்லட் சோப்பின் எளிய பராமரிப்புதான் என் சருமத்தை மிருதுவாகவும் அழகுடையதாகவும் இருக்கச் செய்கிறது. நீங்களே அதை செய்து பாருங்கள். லக்ஸ் டாய்லட் சோப்பின் பரிமளம் மிகவும் சிறந்ததும் மலர்ச்சி தருவதும் கூட என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்."

☆ இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 244-172 TM

தான். அதிலிருந்து ஒரு அருமையான வைரம் ஜ்வலித்துக்கொண்டு வெளியேறிற்று. அதை அவன் சர்வக்ஞருடைய பாதார விந்தங்களில் வைத்துப் பணிந்தான்.

சர்வக்ஞர் மிக மகிழ்ந்தார். "சௌஹான் வம்சத்தின் மகுடமணி ஸோமநாதர் பக்தியில் மாறாமல் இருக்கிறான் என்பதைக் கேட்க மிகவும் மகிழ்ச்சியா யிருக்கிறது!' என்றும் வாய்விட்டுச் சொன்னார்.

"எல்லாம் சங்கரருடைய அருள்."

"ஸஜ்ஜனா! கோகா ராணாவிடம் சங்கரனுக்குப் பிரீதிதான். எம்பிரானும் அவன் ஊழியத்தை மிகவும் மகிழ்ந்து ஏற்கிறார். நீ எப்பொழுது புறப்பட்டாய்?"

"நாங்கள் புறப்பட்டு இரண்டு மாதமாயின, கோகாக் கோட்டையை விட்டுப் புறப்பட்டுச், சபாதலக்ஷம் போனோம். பிறகு ஸ்ரீமால் போயிருந்தோம். அங்கிருந்து புறப்பட்டு, சித்தூர் வழியாக இங்கே வந்தோம்."

"இன்னும் எவ்வளவு நாளில் திரும்பிப் போவதாக உத்தேசம்?"

"இருபத்தைந்து நாட்கள் ஆகலாம்."

"இல்லை அது முடியாது. பறந்து செல்ல வேண்டிய வேலை. உயிரைத் திருணமாக மதிக்கவேண்டும்; ஸோமநாததேவரின் காரியம்......"

"எப்படியும் இருபது நாடகள் பிடிக்குமே."

"ஸஜ்ஜனா! கோகா ராணாவின் பேரனல்லவா நீ. இருபது நாளா? எட்டே நாட்களில் போய்ச் சேர்ந்துவிடுவாய். அது உன்னால் முடியும்."

"சொல்லுங்கள் குருதேவா. தங்கள் கட்டளை. என்ன செய்யவேண்டும்?"

"கஜினி மிலேச்சன் படை எடுத்து வந்து கொண்டிருக்கிறான். பகவான் ஸோமநாதரின் கோயிலை உடைத்துவிட ஏற்பாடுசெய்து வருகிறானாம். போ. கோகா ராணாவிடம் சொல்: உன் எண்பது வருஷப் பக்திக்கு மகிழ்ந்த ஸோமநாதர் உனக்கு ஒரு பொறுப்பைத் தந்திருக்கிறார். ஸோமநாதர் கோயிலைக் காப்பாற்றும் கடமை உன்னுடையது என்று சொல்லு."

"எங்களுடைய புண்ணியம்."

சர்வக்ஞர் வாயிலிருந்து மகேசுவரனேதான் பேசிக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் ஒரு தெய்வ ஒளி வீசிற்று. அவர் கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்க ஆரம்பித்தது.



"மேலும் சொல். கோகா குடும்பத்தில் ஒரு வீரனாவது உயிருடனிருக்கும்வரை இந்த மிலேச்சன் எண்ணம் பூர்த்தியடையக் கூடாது. ஸோமநாதர் கட்டளை. இந்தத் தெய்வ விரோதியின் உயிரையும் உறிஞ்சிவிட வேண்டும் சொல் அவனிடம். கோகா சௌஹானுடைய கீர்த்தி சூரிய சந்திரர் இருக்கும்வரை நிலைத்திருக்கும். இது கடவுளுடைய ஆசீர்வாதம்."

ஸஜ்ஜன் சர்வக்ஞர் பாதத்தில் வைத்த தலையுடன் இந்த உத்தரவைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவன் உள்ளம் கண்கள் எல்லாம் தழுதழுத்து இருந்தன.

"மகாராஜ்! ஒரு கவலையும் வேண்டாம்தங்களுக்குப். பழைய கோகா ராணாவின் இருபத்தொரு புத்திரர்கள். நாற்பத்தாறு பேரன்மார்கள், நூற்றுமூன்று பேரர்களின் குழந்தைகள் உயிருடன் இருக்கிறார்கள். அவர்கள் பாலைவனத்தைத் தடுத்து நிற்கும்போது எந்த யவனன்தான் அதைத் தகர்த்து உள்ளே வர முடியும்?"

"சௌஹான்! வாழ்வாயாக! போ. சென்று ராணாவிடம் சொல்."

"நான் உயிருடன் இருந்தால் பதினைந்தே நாளில் கட்டளை உரிய இடம் போய்ச்சேர்ந்துவிடும். என் பையனைப் பார்த்துக்கொள்ளுங்கள். அவன் இங்கேயே இருக்கட்டும்."

இதைக் கேடட சாமந்தன் தந்தையைப் பார்த்தான். அவன் பெரிய கண்கள் குறை

கூறின. "அப்பா!" என்றழைத்த அவன் குரல் அவமானமடைந்த வேதனையைத் தாங்கி வந்தது. "ஸோமநாதரின் கட்டளை கோகா குடும்பத்தின் ஒவ்வொரு புத்திரனுக்கும் தானே! நான் குழந்தையா, அப்பா நானும் உங்களுடன் வருகிறேன்" என்றுன்.

சர்வக்ஞர் அருகே வந்து பணிந்த அவனை, "சபாஷ். சௌஹான் வம்ச ரத்தமல்லவா!"

என்று முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு "குழந்தாய், பசு அந்தணன் தர்மம் இவைகளை அழிக்க வருபவன் உன் போன்ற வீரர்கள் இருக்கும்போது தானேஅழிவது திண்ணம்; போ. வெற்றி உன்னதாகட்டும்" என்று உள்ளுவகை வெளியேற ஆசீர்வதித்தார்.

ஸஜ்ஜனனும் சாமந்தனும் சர்வக்ஞர் பாதங்களில் பணிந்து விடைபெற்றுக் கொண்டனர். போகும் போதும் ஒரு முறை சாமந்தன் பார்வை வலையை வீசி, சௌளாவின் அழகிய உருவத்தைக் கண்களில் ஏந்திக் கொண்டான். அவளுடைய மலர்ந்த கண்களும் அவனிடம் ஏற்பட்ட பெருமை தாங்கிய அன்பைப் பேசாமல் தெரிவித்துக்கொண்டிருந்தன. சாமந்தனும் அந்த மௌனத் தூதை ஏற்றுக்கொண்டான். அது அவனுடைய வீர உணர்ச்சிக்கு உணவு ஊட்டியது.

சர்வக்ஞர் பார்வைக்கு ஒன்றும் தப்பவில்லை. அவர் சொன்னுர்: "ஸஜ்ஜனு! நீயும் உன் மகனும் பகவானைத் தரிசிக்க வாருங்கள். சௌளா பிரசாதம் கொடுப்பாள்."

சாமந்தன் இதயம் பொங்கிப் பருத்தது. "என்ன? இந்த சௌளா, தேவரின் அடியாள், நேற்று நாட்டியமாடி, பார்த்தவர் மனதையே அலையவைத்த இந்தப் பெண் எனக்குப் பிரசாதம் தர வருவாளா?' என்று எண்ணி அப்படியே அயர்ந்து விட்டான்.

இரண்டு நாழிகைகள் சென்றபிறகு ஸஜ்ஜனனும் சாமந்தனும் ஸ்வாமி தரிசனத்துக்காகச் சென்றனர். சௌளாவும் பிரசாதம் ஏந்தி நின்றுள். இருவரும் கற்கண்டு பிரசாதம் வாங்கிக் கொண்டனர். பிறகு பாதநீர் அருந்தி அதனுல் புரோக்ஷிக்கப்பட்டு, ஸோமநாதர் அடிகளில் பணிந்தனர்.

சாமந்தனின் கண்கள் அருகே நின்ற நர்த்தகியையே சுற்றி வந்தன. பிறகு அவன் போக ஆரம்பித்தனன். அந்தச் சமயம் அவன் காதுகளில் ஒரு இனிய சப்தம் கீதம் பாடிற்று:

"சர்வக்ஞர் இந்தப் பிரசாதத்தையும் அனுப்பினுர். மறந்துவிட்டேன்" என்றது சௌளாவின் குரல். அவள் கைகள் ஒரு தங்கக் கிண்ணத்தைத் தாங்கி எதிரே நீட்டின. இரு வீரர்களுக்கும் பிரமாதமான சந்தோஷம். ஸஜ்ஜனன் "சங்கரருடைய இந்தச் சேவா யக்ஞத்தில் தானும் சாம்பலானுல் நல்லது" என்று எண்ணியவாறே பெருமை பொங்க அதை வாங்கித் தரித்துக்கொண்டான். சாமந்தன் விபூதியைத் தானே எடுக்கவில்லை. அவன் மானிட உடல் தரித்த அப்ஸரஸ் நடனமாடுவதைப் பார்த்தான். அவள் கண்களின் தூதைப் பெற்றிருந்தான். அவள் கையால் தந்த திருப்பாத ஜலம் வாங்கி அருந்தியிருந்தான். அப்படியிருக்கும்பொழுது ரணயக்ஞத்தில் பலி ஆகவேண்டிய அவனுக்கு அதை டும் அவள் ஏன் இடக்கூடாது? இப்படி எண்ணிய அவன் உடல் சற்றுப் பதறச் சும்மா நின்றுன். பிறகு தலையை முன்னுக்கு நீட்டினுன். சௌளா பார்த்தாள். அவன் கண்கள் வீரத்தின் வெறி யுணர்ச்சியைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. அந்த அழகிய இளைஞனின் ஒவ்வொரு அங்கத்திலும் பேராவல் நிரம்பி நின்று புயல் எழுப்புகிறது. எல்லாம் தனக்காகத்தான் என்று எண்ணிய அவள் தன் கையாலேயே விபூதியை எடுத்து தந்தம் போன்ற அந்த விரல்களால் அவனுக்கு விபூதிப் பொட்டிட்டாள்.



"வெற்றி பெற்றுச் சீக்கிரம் திரும்பி வாருங்கள்" என்று மெதுவான இன்னிசைக் குரலில் அவள் சொல்வதைச் சாமந்தன் காதுகள் தேன் போல் பருகின.

சாமந்தன் அப்படியே ஆகாயத்தில் பறந்தான். "கண்டிப்பாய்" என்று அவன் உள்ளம் விரும்பிய படியே வாயும் சொல்லிற்று. சௌளாவின் அசைவற்று நின்ற அழகிய மலர்க் கண்கள் அப்படியே அந்த வார்த்தையைப் பருகித் தன் நினைவுப் படலில் அழுத்திக்கொண்டன.

சாமந்தன் போகப் புறப்பட்டபோது அவனுடைய ஒவ்வொரு நரம்பிலும் வெற்றி வெறி புது வேகத்துடன் ரத்தத்துடன் கலந்து வேலை செய்வதைக் கவனித்தான்.

4

ஸஜ்ஜன்சிங் சாமந்தன் மற்றும் எட்டு வீரர்கள் ஒட்டகங்கள் மேலேறி, தங்களுடன் மற்றும் சில ஒட்டகங்களையும் ஓட்டிக்கொண்டு கிளம்பினர்.

ஸஜ்ஜன் நேரே பாலைவனத்து வழியே போகவேண்டும். அதைத் தப்புவதற்கு வழியே கிடையாது. ஸௌராஷ்டிரக் குறுக்கு வழியையும் அவன் அறியமாட்டான். ஆனால் அவன் பாலைவனப் பாதைக்கு அஞ்சியவனல்ல.

அவன் வெகுவேகமாகப் போய்க்கொண்டிருந்தான். அவனுடன்கூடச் சாமந்தனும் மற்றொரு வழிகாட்டியும் இருந்தனர். மற்றத் தோழ வீரர்கள் எல்லாம் பின்னால் வந்துகொண்டிருந்தனர். ஸௌராஷ்டிரத்தின் காடுகளைத் தாண்டி அவன் கூட்டம் மணல்வெளிக்கெதிரே வந்தபோது நடுப்பகல் ஆய்விட்டது. கடலின் கரையில் நின்று பார்ப்பவனுக்கு எங்கணும் நீரலைகளே தோன்றுவதுபோல் அவர்கள் கண்ணெதிரே எங்கணும் பரந்து கிடக்கும் மணலும் அதன் அலைகளுமே வரவேற்றன. அதுவும் நடுப் பகல் சூரியன் ஒளி அவைமேல் பட்டு, கண்களைக் கூசவைத்தன; கண்களைத் திறப்பதே சாத்தியமில்லாமல் செய்துவிட்டன. இந்தப்புறம் பாலைவனத்தைக் கீறிப் போவதற்கு ஒரு வழியுண்டு. அது பயங்கரமானவழி. அது அவனுக்குத் தெரியும். ஆனால் அது சுகுமாரனான சாமந்தனுக்கேற்றதல்ல.

ஸஜ்ஜனன் தன் புத்திரனைத் திரும்பிப்பார்த்தான். பிறகு கண்களுக்கு மேலே கையை வைத்து நிழலுண்டாக்கி, தைரியத்தையும் மன ஊக்கத்தையுமே உதவியாகக்கொண்டு எதிரேயுள்ள மணல் சமுத்திரத்தை அளக்கப் பார்த்தான். அதைப் பார்த்துவிட்டு, "இந்த வழியில் அந்தச் சிறு பிள்ளையை அழைத்துப் போவது சரியா?" என்று கணநேரம் யோசித்தான். ஸஜ்ஜன் மனது ஒப்பவில்லை.

"பையா. நீ ஒரு காரியம் செய். இங்கிருந்து ஆபூ போய் அங்கிருந்து ஜாலோருக்கு வந்து சேர். நான் நேரே போகிறேன்." என்று தந்தை தன் மகனிடம் சொன்னான்.

சாமந்தன் அதன் பொருளை அறிந்துகொண்டான். அவன் கண்கள் குறைகூற ஆரம்பித்தன.

"இந்த வழி போனால் எனக்கென்னவாம்?"

"உனக்கென்ன ஏற்படும்? ஆனால் இரண்டு வழிகளிலும் தனித் தனியே சென்று பார்ப்பது நல்லதல்லவா? நான் இந்த வழியே போனதில்லை. போய்ப் பார்க்க ஆசையாயிருக்கிறது. நாம் இருவரும் பம்பரியா (என்ற ஊரில்)வில் வந்து சேர்ந்துவிடுவோம்."

"அப்பா. உண்மையாகச் சொல்லுங்கள் என்னை உடன் அழைத்துப் போவதற்குப் பயந்து கொண்டு தானே......?"

"கோகா பாபுவின் வழித் தோன்றல்களுக்குப் பயம் என்று ஒன்றும் உண்டா?" என்று சொன்ன தந்தை தனயனை அணைத்துக்கொண்டான். அவன் உள்ளத்தில் ஏதோ ஒன்று எழுந்தது. அவன் கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. கோகா துர்க்கத்தை இரண்டு நாள் முந்தி அடையலாம் என்ற ஆசையால் இந்தப் புது வழியைப் பரீக்ஷை செய்யலாம் என்று எண்ணினான். ஆனால் இதன் பலனாக ஒருகால் இந்த ரத்தினம் போன்ற மகனைப் பிரிய நேரிட்டு ஒரு பொழுதுமே சேர முடியாதபடி போய்விட்டால்? ஆம். அதுவும் உண்மைதான், சாமந்தனும் சிறு பிள்ளைதான். அவன் உள்ளமும் சிறு வயதுக்குரிய அசட்டுத் தைரியத்தை விடவில்லை.

"அப்படியா அப்பா? இந்த வழிபோய் எனக்கு முன்னமே கோகா துர்க்கத்தைச் சேர விரும்புகிறீர்களா? பாருங்கள். யார் வருகிறார்கள் முதலில் என்று பார்க்கலாம்."

"அட! நீ என்னை மிஞ்சாவிட்டால் பிறகு தான் என்ன?" ஸஜ்ஜன் உண்மையிலேயே பெருமை கொண்டு சொன்னான்.

சாமந்தன் தன் தந்தையின் கண்களில் நீரைப் பார்த்தான். "அப்பா, என்ன இது?' என்று கேட்டான். தந்தை அதை அடக்க முற்பட்டான்.

"ஒன்றுமில்லை அப்பா. இது...மணல் அதிகம் 'வெளிச்சம்..." என்று தயங்கினான்.

அங்கே எல்லோரும் நான்கு மணி நேரம் களைப்பாறினர். பிறகு ஸஜ்ஜன் இரண்டு ஒட்டகங்களின்மேல் தண்ணீர் ஆகாரம் முதலியவைகளை ஏற்றினான். மீண்டுமொரு முறை தன் மகனைக் கட்டிக்கொண்டான். ஒரு ஒட்டகத்தின்மேல் தான் ஏறி உட்கார்ந்து கொண்டான். மற்றொன்றில் அவன் ஒட்டகம் மேய்ப்பவனை ஏறச் சொன்னான். பிறகு 'ஜய் ஸோம்நாத்' என்று முழக்கம் செய்து விட்டு, கரைகாணாத மணல் சமுத்திரத்துக்குள் போக ஆரம்பித்தான்.

சமுத்திரத்தில் அலைகளின் நடுவே முழுகும் ஒருவனைப் பார்த்து நிற்பவன்போல் சமுத்திரத்தைவிடப் பயங்கரமான பாலை வனத்துள் சென்றுகொண்டிருக்கும் தந்தையைச் சாமந்தன் பார்த்தான். அவர் ஒட்டகத்தை ஓட்டும் அழகே எவ்வளவு நன்றாய் இருந்தது! அவர் ஒட்டகத்தின்மேல் உட்கார்ந்திருக்கும் அழகு! அவர் தலைக்கட்டின் கம்பீரம்! பாலைவனத்தின் அரசனே போய்க்கொண்டிருந்தான். சாமந்தன் கண்ணுக்கு மறையும் தந்தையின் உருவத்தின் பெருமை கண்டு விம்மிதம் அடைந்து நின்றான். இப்படிப்பட்ட தந்தைக்குத் தனயனாகப் பிறப்பதும் பாக்கியம்தான். இன்னும் பத்து அல்லது பதினைந்துநாளில், ஏன் பன்னிரண்டே நாட்களில் தானும் கோகா துர்க்கம் போய்ச் சேர்ந்துவிடுவான்; தாத்தா, பெரியப்பா சிற்றப்பா இவர்களின் கூட்டத்திடையே தந்தையின் மடியை அடைந்துவிடுவான். பிறகு இருவரும் சேர்ந்து சௌஹான்களின் கீர்த்திக்கு அமரநிலை ஏற்படுத்த முயலுவார்கள்.

நான்கு ஒட்டகங்கள் மிச்சமிருந்தன. அவைகளும் தயார் செய்யப்பட்டன. தந்தை சென்ற வழியைச் சாமந்தன் மீண்டும் ஒரு முறை பார்த்துக்கொண்டான். அவரைப் பார்க்க மீறி எழும் ஓர் ஆசையை அமுக்கிக் கொண்டு அவன் ஒட்டகத்தின்மேல் ஏறி அமர்ந்து யாத்திரையைத் துவக்கினான்.

ஸஜ்ஜன் ஏறிச்சென்ற ஒட்டகத்துக்குப் பத்மாவதி என்று பெயர். ஸௌராஷ்டிர தேசம் முழுவதிலும் எங்கணுமே அதற்கு ஜோடி கிடையாது. அது சைகையறிந்து அதற்கேற்றபடி நடக்கவல்லது. காற்றிலும் கடுகிச் செல்லக் கூடியது. ஸஜ்ஜனுக்கு அதனிடம் அபார சிநேகம். அதை அவன் மதமாடீபஹூ (மருமகள்) என்றழைத்தால் அந்தப் பெண் ஒட்டகமும் உதட்டை அசக்கிச் சத்தம் செய்து பதில் அளிக்கும்.

ஸஜ்ஜன் அந்த பத்மாவதிப் பெண்ணிடம் பேச ஆரம்பித்தான்: "அடி பத்மாவதிப் பெண்ணே! தெரியுமா? ஸோமநாததேவர், கோகா துர்க்கத்தின் பாபா இருவருடைய பெருமையும் உன் கையில்தான் இருக்கிறது" என்றான். பத்மாவதி தலையைத் திருப்பி 'இது எனக்குத் தெரியுமே' என்று சொல்வது போலப் பார்த்து, பிறகு நடையைத் துரிதப் படுத்தியது.

"பத்மாவதி! வேகம் வேகமாகப் போ, கோகா பாபாவின் வீட்டு மருமகள் எல்லாரும் உனக்கு முத்துமாலை போட்டு வரவேற்பார்கள்."

முத்துமாலையைக் கேட்டு அதற்கு ஆசை கொண்டு அவசரம் காட்டுவதுபோலவே அது தன் நடை வேகத்தை அதிகப்படுத்தலாயிற்று. மாலை ஆனவுடன் ஒரு சிறிய பசும் புற்றரை காணப்பட்டது. அதில் சில சிறிய மரங்கள் இருந்தன. ஒரு பனைமரம் இருந்தது. அருகிலேயே ஒரு சிறிய கோயிலும் காணப்பட்டது. அது உடைந்த கோவில். அதன் உச்சியில் ஒரு கொடி காற்றில் ஆடிக்கொண்டிருந்தது. ஸஜ்ஜனுக்குச் சந்தோஷம் குதிபோட்டது. "பதமாவதி! வந்துவிட்டது தங்கு மிடம். வா போய்த் தங்கலாம்" என்ற வார்த்தைகள் அவன் ஆனந்தத்தில் தோய்ந்து வந்தன.

கொஞ்ச நேரத்தில் இரண்டு ஒட்டகங்களும் புற்றரையில் ஏறின. அங்கே ஒன்றிரண்டு குடிசைகள் இருந்தன. அவைகளுக்கெதிரே கயிற்றுக் கட்டிலின்மேல் நான்கைந்து ஒட்டகம் மேய்ப்பவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நான்கு ஒட்டகங்கள் தலையைத் தூக்கி மரத்தின்மேல் இருந்த இலைகளைப் பிடுங்கி மென்று கொண்டிருந்தன. அவைகள் தங்களுக்கு இடையே வரும் தங்கள் ஒட்டக நேயர்களைப் பார்த்து மகிழ்ச்சிகொண்டு தங்கள் குரலில் அவைகளை வரவேற்றன.

கொஞ்ச நேரத்தில் சூரியன் களைத்துச் சிவந்த வெளிச்சம் காட்டி மறைய ஆரம்பித்தான். மயங்கும் மாலை நேரம், மேற்குத் திக்கின் ஒளி இரண்டும் சேர்ந்து நாற்றிசையிலும் பரவிக் கிடந்த மணற் கடலுக்குச் சிவப்பொளி தந்துகொண்டிருந்தது. இந்த ஜனசஞ்சாரமற்ற தனி வெளியில் சங்கரனின் கருணைத் தூண் போல் நின்றிருந்தது அந்தப் பனைமரம். ஸஜ்ஜன் ஒட்டகத்தை உட்கார வைத்து அங்கிருந்த இடையர்களைக் கூப்பிட்டான்.

"ஏனப்பா, ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா?"

"பாபூ, சோள ரொட்டிகள் இருக்கின்றன. இங்கே குளம் கிணறு எல்லாம் ஆனந்தமாயிருக்கும்" ஸஜ்ஜன் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அவன் தன் ஒட்டகங்களை ஒரு முறை பார்த்தான். பிறகு தன் இடையனிடம் ஒட்டகத்துக்குத் தண்ணீர் காட்டச் சொல்லி உத்தரவிட்டான். பன்னிரண்டு மணிகள் அலைந்திருந்தாலும் பத்மாவதி களைக்கவில்லை.

ஆனல் மற்றொரு ஒட்டகம் களைத்துக் காணப் பட்டது. ஸஜ்ஜன் அதன் முதுகைத் தடவித் தட்டிக் கொடுத்தான். அதன் பெயரைச் சொல்லி அழைத்துப் பார்த்துக் கொண்டான். அதனிடம் ஊக்கம் இருப்பதாகத் தெரிய வில்லை. பிறகு அவன் தலையைத் திருப்பி மற்ற ஒட்டகை ஓட்டிகளைப் பார்த்து" நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

அவர்கள் "பாபூ, நாங்கள் நாளைக் காலை நூல்பத்து (என்ற ஊரு)க்குப் போகிறோம்." நீங்கள் எங்கே போகிறீர்கள், பாபூ" என்று கேட்டனர்.

"நானு, எனக்குப் பாலை வனத்தில்தான் போகவேண்டும்."

"இதே நேரத்திலா? பாலைவனத்தில் எப்ப டிப் போகிறது?"

"அப்படியானல் நீங்கள் எங்கிருந்து வந்தீர் கள்?"

"பாபா! இந்த 'ரணஸ்தம்பி' அம்மனுக்கு ஒரு வேண்டுதல் இருந்தது. அதைச் செலுத்த வந்தோம்."

ஸஜ்ஜன் சிரித்துக்கொண்டே "எனக்கு இருக்கும் தொந்தரவு, நான் இப்பொழுதே இவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போகவேண்டி யிருக்கிறது."

"பாபூ, இந்த ரணஸ்தம்பி அம்மன் சாமானி யப்பட்டவள் அல்லள். இந்த வழி போன வன் மறுபடி திரும்பிவந்ததில்லை. இங்கிருந்து முந்நூறு யோசனை வரையில் தண்ணீரோ, புல்லோ கிடையாதாம்."

அவன் அதை லக்ஷியம் செய்யாமலே சோனி யாவிடம், "சோனியா, போய்ச் சாப்பிட்டுவிட்டு உன் ஒட்டகத்தைக் குளிப்பாட்டிவா, நானும் சென்று என் ஒட்டகத்தைக் குளிப்பாட்டி வரு கிறேன்" என்று உத்தரவிட்டான்.

"காலையில் குளிப்பாட்டுகிறேன், எஜமான்!" என்றுன் அவன்.

"ஏனடா பயப்படுகிறுய்? ஸோமநாதர் ஆணையை மீற முடியுமா? அது தலைமேல் இருக்கும்போது யார் என்ன செய்ய முடியும்? போ. பேசாமல் சாப்பிட்டுவிட்டு வா" என்று அவனிடம் சொல்லிவிட்டு ஸஜ்ஜனன் தன் ஒட்டகத்தைச் செலுத்திக்கொண்டு குளத்தங் கரைக்குப் போனுன்.

சௌஹான் வீரனுக்கு ஒரு பயமும் இல்லை. அவன் எப்படியாவது ஸோமநாதர் கட்ட ளையைக் கோகா துர்க்கத்தின் தலைவனுக்குத் தெரிவித்தாகவேண்டும். அவ்வளவுதான். அதை எண்ணியவாறே அவன் பத்மாவதியைத் தேய்த்துக் குளிப்பாட்டிவிட்டான். தானும் குளத்திலிருந்து நீர் மொண்டு கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டான். பிறகு ரணஸ் தம்பி அம்மனுக்குத் துதி கூறிவிட்டு எல்லோ ரும் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்துசேர்ந் தான். பத்மாவதியும் சாதுவான பசுமாடு போல் அவன் பின்னே வந்துகொண்டி ருந்தது. தன்னிடம் பாசம் வைத்திருக்கும் தன் எஜமானனுக்கு அது அடிமையாய் இருந் தது.

சோனியா தன் தலைவனைப் பார்த்ததும் வாய் பேசாமல் சாப்பாட்டு மூட்டையை எடுத்து அவன் எதிரே வைத்தான். அவனும் அதைச் சாப்பிட ஆரம்பித்தான். சாப்பிட்டுக் கொண்டே பேச்சைத் தொடங்கினுன்.

"நீ பயந்துவிட்டாயா? நான் அருகில் இருக்கும்போதுகூட இந்தப் பயம் பயப்படு கிறுயே?"

"ஐயனே, அம்மன் கோபித்துக்கொண் டால் யார் தாளமுடியும்?"

"எனக்குத் தெரியும். அம்மன் கோபித்துக் கொள்ளமாட்டாள். தயை புரிவாள், அருள் தருவாள்."

"வேண்டாம் எந்தையே! இப்பொழுது வேண்டாம்" சோனியா கொஞ்சம் பிடிவாதம் செய்தான்.

ஸஜ்ஜன் உத்தரவிட்டான். "முடியாது இப்பொழுதே கிளம்பவேண்டும் போ. உன் ஒட்டகத்தைக் குளிப்பாட்டி வா. இதோ சந் திரன் கிளம்பிவிடுவான்."

சோனியா அசையாமல் நின்றுன்.

"போகிறுயா இல்லையா?" என்று கேட்ட அரசன் குரலும் அவன் அடிக்க நின்ற நிலையும் சோனியாவை அப்புறப்படுத்தின. அவனும் முகத்தை 'உம்' என்று ஏற்றி வைத்துக் கொண்டு மெதுவாக ஒட்டகத்துடன் குளத் துக்குப் போகக் கிளம்பினுன்.

ஸஜ்ஜன் சாப்பாட்டை முடித்துக்கொண் டான்; தன் ஒட்டகத்தைத் தயாராக்கிக் கொண்டான்; மிஞ்சிய ரொட்டிகளை எடுத்து முடிந்து அதன்மேல் வைத்துக்கொண்டான்; தன்னிடம் இருக்கும் தண்ணீர் போதுமான அளவிருக்கிறதாஎன்று பார்த்துக்கொண்டான். அதற்குள் சோனியாவும் வந்து சேர்ந்தான்.

கார்த்திகை துவிதியைச் சந்திரன் கிளம்பி னுன். அவன் கிரணங்கள் நீண்டு அழகு பெற்றுக்காட்டின. காற்றும் தன் பிரயாணத் தைத் துவக்கிற்று. ரணஸ்தம்பி அம்மன் சந்

நிதியில் நின்ற அந்தத் தனிப் பனைமரம் அந்தப் பரந்த சந்தடியற்ற மணல் வெளியில் புத்தழகு கொண்டது. ஸஜ்ஜன் பத்மாவதியின் மேல் ஏறிக்கொண்டான். பத்மாவதி பறந்துசெல்ல ஆரம்பித்தது. சோனியாவும் தயங்கித் தயங்கி, தன் ஒட்டகத்தின் மேல் ஏறினான். அங்கிருந்து செல்ல அவனுக்குக் கொஞ்சம்கூடச் சம்மதம் இல்லை என்று நன்றாய்த் தெரிந்தது. மிகவும் கஷ்டத்துடன் சோனியா ஸஜ்ஜனனைக் கொஞ்சதூரம் தொடர்ந்தான்.

"அட சனியனே! வா சீக்கிரம்; தூண்டு அதை!" என்று ஸஜ்ஜனன் திரும்பிப்பார்த்துச் சொன்னான். ஆனால் ஒட்டகம் வழியில் நின்று கொண்டது. ஸஜ்ஜனன் கோபம் கட்டு மீறி விட்டது. அவன் பின்னால் திரும்பிச்சென்று சோனியாவுக்கே இரண்டு வைத்துவிட்டான்.

"நன்றிகெட்ட பயலே! உனக்கே வர இஷ்டமில்லை!?"

"இல்லை பாபா. இல்லை சாமி" என்று சோனியா கத்திவிட்டு ஒட்டகத்திடம் ஒரு சத்தம் போட்டான். ஒட்டகமும் ஒரு குதி குதித்துப் பிடித்தது ஓட்டம்! நேரே ரணஸ் தம்பி அம்மன் கோயிலைநோக்கி ஓட ஆரம்பித்துவிட்டது. அந்தச் சமயம் அதனுடன் போட்டிபோடப் பத்மாவதிக்குக்கூட முடிந்திருக்காது. அந்த வேகத்தில் அது ஓடிற்று!

ஸஜ்ஜனன் பார்த்துக்கொண்டே நின்றான். ஒட்டகமும் அதன் மேலிருந்த சோனியாவும் பறந்துசெல்லும் கறுப்புப் புள்ளிகள்போல் காணப்பட்டனர். பின்னால் சென்று ஒட்டகம் சோனியா இருவருக்குமே நல்ல தண்டனை கொடுக்க எண்ணினான் ஸஜ்ஜனன். ஆனால் அதைத் தடுத்துக்கொண்டான்.

"பத்மாவதிப் பெண்ணே! சங்கர் பாபாவின் வேலை இனி உன் கையில்தான். நீதான் துணையின்றிச் செய்யவேண்டும்."

அத்தியாயம்—5

கஜினியின் அமீர்

கிருஷ்ண பக்ஷம் திருதியை இரவு. அன்று உதித்த சந்திரன் பாலைவனப் பொட்டல் வெளியின் மேல் தன் கருணையைப் பொழிந்துகொண்டிருந்தான். மணலும் கடலின் அலைகளைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. குளிர்ந்த காற்றும் தன் இஷ்டப்படி சுகமாகப் போய்க்கொண்டிருந்தது. பத்மாவதியின் கால் சதங்கைகள் இனிமையாகக் குலுங்கிக்கொண்டிருந்தன. ஸஜ்ஜனுடைய உள்ளமும் அதற்கேற்றவாறு குலுங்கிக்கொண்டிருந்தது. அவனுக்குச் சௌஹானுடைய வெற்றியில் அவநம்பிக்கை இல்லை. கோகாவின் வழித்தோன்றல்கள் எவ்வளவோ யுத்தத்தைப் பார்த்திருந்தனர். அதனுடன் விளையாடியிருக்கின்றனர். இவன் கேவலம் ஒரு மிலேச்சன். இந்தச் சண்டையும் ஒரு சண்டையா?

ஒட்டகம் ஓட்டிகள் அங்கே சொன்னபடி அவ்வளவு பயங்கரமாகத் தோன்றவில்லை. அங்கங்கே புல் தரைகள் தென்பட்டன. சில இடங்களில் மரங்கள் தென்பட்டன. அங்கங்கே அந்தமாதிரி இடங்களில் ஸஜ்ஜன் தங்கிக்கொண்டான். தானும் உண்டான். பத்மாவதிக்கும் புல் தண்ணீர் காட்டினான். அவனுக்கே தான் வந்தவழி சரி என்றுதான் பட்டது. திருடர்கள் பாலை வனங்களில் குறுக்கே வந்து மறைத்துவிடுகிறார்கள் என்றெல்லாம் கதைகேட்டு வந்ததின் உண்மையையும் அறியத் தலைப்பட்டான்.

இரண்டாவது மூன்றாவது நாளும் நல்ல வழியில் கழிந்தது. பத்மாவதி வழி கண்டு பிடித்துச் செல்வதில் இருந்த திறமை மிகவும் போற்றத்தக்கதாயிருந்தது. அது போன வழியில் சீக்கிரம் சீக்கிரமே தங்குமிடங்களும் ஆகார வசதிகளும் கிடைத்துக்கொண்டேயிருந்தன. நான்காவதுநாள் வந்தது. பத்மாவதி கொஞ்சம் களைப்படைந்துவிட்டதுபோல் காணப்பட்டது. சூரியனும் இரக்கமில்லாமல் எரித்துக்கொண்டிருந்தான். மணற்காற்றுகள் சுருட்டிச் சுருட்டி அடிக்கத் தொடங்கின. வழியிலே நிழல் என்ற பெயரே தென்படவில்லை. நாழிகையை உருட்டி நாழிகை சென்றுகொண்டிருந்தது. ஆனால் பக்ஷிகூடப் பறந்து செல்வதாகக் காணப்படவில்லை.

இன்று பத்மாவதி உற்சாகம் இழந்திருந்தது. அதன் நடையில் ஊக்கம் இல்லை.

கொஞ்ச நேரம் சென்றபிறகு சந்திரன் கிளம்பினான். நிலவு இரவுக்கு இருட்டு நீக்கி வெளிச்சம் தந்தது. ஒட்டகமும் சற்று வேகமாகப்போக ஆரம்பித்தது. நான்கு நாட்கள் நடந்துவிட்டன.

2

ஐந்தாம் நாள் ஆரம்பமாயிற்று. அதன் வரவைச் சூடான காற்றே முதல் வந்து அறிவிக்கத் தொடங்கிவிட்டது. பகல் ஏற ஏற அந்தக் காற்று வலுத்த பெருங் காற்றாகமாறி விட்டது. மண்ணின் சுழற்சிகள் சூரியன் ஒளியில் நெருப்புத் துண்டங்களாலான தூண்கள்போல் உரு எடுத்தன. அவைகள் அப்படியே பறந்து சிதற ஸஜ்ஜனன் கண்களும் பத்மாவதி கண்களும் திறக்கமுடியாமல் ஆகி விட்டன. வெயில் ஏற ஏற நான்கு பக்கங்

களும் கொதிப்படைந்து கண்களில் புகுந்து அட்டகாசம் செய்துகொண்டு மணல் பறக்கவே மேலேறுவது முற்றிலும் ஆகாத வேலையாக ஆகிவிட்டது. ஸஜ்ஜனன் ஒட்டகத்தை உட்காரவைத்து அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அதன் கண்களுடன் கண்கள் வைத்து நடுப்பகலைக் கழிக்க ஆரம்பித்தான். அன்புக்குப் பணிசெய்யும் அந்த ஒட்டகமும் சிறிய ஆட்டுக்குட்டியைப்போல ஸஜ்ஜனுடைய தோள்களில் முகத்தைப் புதைத்து அசைவற்று நின்றது.

பிறகு எழுந்து இரண்டு மூன்று நாழிகைகள் ஒட்டகம் கிழக்குப்புறம் ஓட்டமும் பிடியுமாய்ச் சென்றது. அதற்குள்ளேயே ஒட்டகத்தின் இந்தப் புதிர் நடவடிக்கையின் ரஹஸ்யத்தைக் கண்டுபிடித்தான். அவனுக்குப் பின்னால் வடக்கிலும் மேற்கிலும் மணற் கூட்டங்கள் பறந்தெழுந்தன. அதை ஸஜ்ஜன் பார்த்தான்.

"ஓஹோ! பத்மாவதி! நன்றாயிரு அம்மா! என்னை உயிரோடு காப்பாற்றினாயே!" என்று நன்றி நிறைந்த குரலில் ஸஜ்ஜனன் கூறினான். அதன் முதுகைத் தட்டிக்கொடுத்து, தன் அன்பையும் வெளியிட்டான்.

சூரியன் மலைவாயில் இறங்க ஆரம்பித்தான். புயல் குறைய ஆரம்பித்தது. பத்மாவதி எழுந்தது. நான்கு பக்கமும் மோக்க ஆரம்பித்தது. சற்று நேரத்தில் இருட்டவும் ஆரம்பித்தது. நிர்மலமான ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்க ஆரம்பித்தன. பத்மாவதி சந்தோஷத்தில் கனைக்க ஆரம்பித்தது.

"சபாஷ். பத்மாவதி பஹுஅ! சபாஷ்" என்று சொல்லி ஸஜ்ஜனன் அதை உட்கார வைத்துத் தடவிக்கொடுத்து, கொஞ்சி, பல முறையில் தன் சந்தோஷத்தைக் காட்டினான். இன்று பத்மாவதி இல்லை என்றால் அவன் இவ்வளவு நாள் மணல் முட்டாய்ப் போயிருப்பான்.

இன்று அவன் மிகவும் களைத்திருந்தான். அதனால் அவன் தன் ஒட்டகத்தினருகிலேயே நன்றாய்க் கைகால்களை நீட்டிப் பரப்பிப் படுத்துக்கொண்டான். சற்று நேரத்தில் நித்ரா தேவியுடன் ஒன்றிவிட்டான் என்பதை அவனுடைய குறட்டை தெரிவிக்க ஆரம்பித்தது.

3

பாலைவனத்தில் பிரயாணம் ஆரம்பித்து அன்று பத்தாவதுநாள். இப்பொழுது அங்கங்கே தங்கத் தகுதியான இடங்கள் வர ஆரம்பித்தன. ஆகவே நல்ல வழி நெருங்கி வருவதுபோல் தோன்ற ஆரம்பித்தது. இப்பொழுது அவன் தன் உயிரைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. கஜினி அமீர் எங்கே இருப்பான்? கோகா பாபாவைச் சீண்டுவது என்ன அவ்வளவு சுலபமான வேலையா? அவன் மற்ற அரசர்களுக்கும் எச்சரிக்கை கொடுத்துவிட்டுப் போக நிச்சயித்தான். பகவான் ஸோமநாதரை வெறுக்கிற ஒரு துரோகி இந்தப் பாலைவனத்தைத் தாண்டியும் வந்துவிடுவானா?

பாலைவனப் பிரயாணத்தின் பதினோராவது நாள்; பிரபாஸியிலிருந்து கிளம்பி, பதினெட்டாவது நாள். அன்று தொலைவில் மணல் மைதானத்தில் எழுந்து நின்ற மரங்கள் தென்பட்டன. அவன்தான் சபாதலக்ஷம் பக்கம் சென்றுகொண்டிருப்பதை அறிந்தான். இந்த வழி திரும்பிய ஒட்டகம் ஒரு பெரிய கூச்சல் இட்டது. அந்தமாதிரியான கூச்சலை அது இது வரை இட்டதில்லை. அது இப்படிக் கூச்சலிடும் என்று அவன் கற்பனை செய்திருக்கமாட்டான். ஸஜ்ஜனன் மிகவும் கவனத்துடன் நான்கு பக்கங்களிலும் பார்வையைச் செலுத்தினான். ஒன்றன்பின் ஒன்றாக மூன்று கரு மேகங்கள் எழுப்பிப் பரவி வருவதை அவன் கண்டான். அதை நன்கு கவனித்தபோது அவை மேகமல்ல என்பது தெளிவாயிற்று. கரும் பறவைகளின் பெரிய கூட்டங்கள் போல் தோன்றின. கொஞ்ச நேரத்தில் உண்மை விளங்கிற்று. ஆயிரக் கணக்கான கழுகுகள் கொண்ட மூன்று கூட்டங்கள் பயங்கரமாகச் சத்தம் போட்டுக் கொண்டு வந்தன. அவனைத் தாண்டிக் கிழக்குப் பக்கமாகச் சென்று விட்டன. ஆனால் ஸஜ்ஜனன் மனது உட்கார்ந்து விட்டது! இந்தக் கழுகுகள் ஏன்? பெரிய சண்டை நடந்தால்தான் மறுநாள் இந்த விதம் கழுகுகள் பறந்து வரும். அவன் அதைப் பார்த்திருக்கிறான். இல்லாவிட்டால் இவ்வளவு கழுகுகள் பறந்து அவன் கண்டதேயில்லை. அப்படியானால் எங்கேயாவது சண்டை நடந்து விட்டதா? கஜினியின் அமீர் முல்தான் தாண்டி, கோகா துர்க்கத்தையும் அடுத்து, சபாதலக்ஷம் வரை வந்து, அங்கே யுத்தம் செய்து முடித்து விட்டானா? கொஞ்ச தூரத்தில் அவனுக்குக் கழுகுகளின் பயங்கரமான சப்தம் கேட்டது. அவனுக்கு அபசகுனமாய்த் தோன்றிற்று.

"பத்மாவதி!. உயிரைப் போக்கும் யுத்தமல்லவா நடக்கிறது" என்று ஒட்டகத்திடம் சொல்லிக்கொண்டான். பத்மாவதி புரிந்து கொண்டது. அதுவும் கழுகு சென்றவிடமே வேகமாகச் செல்ல ஆரம்பித்தது.

4

கொஞ்சநேரம் சென்றது. பத்மாவதி மீண்டும் ஒருமுறை குலை நடுங்கக்

கத்திற்று. அந்தக் கத்தலில் பொருள் விளைந்த நடுக்கம் இருந்தது. "என்ன பத்மாவதி! ஏன்? ஏன் பயப்படுகிறாய்?" ஸஜ்ஜன் தன் ஒட்டகத்தைத் தடவிக்கொடுத்தான். சற்று நேரத்தில் அழுகுகிற பிணங்களின், மூக்கைத் துளைக்கும் நாற்றம் வரவே அவன் ஒட்டகம் கூச்சலிட்டதின் காரணத்தை அறிந்துகொண்டான்.

வடக்கு வானத்திலிருந்து தெற்கு வானம் வரை மணலில் வரிசையாகப் பிணங்கள் கிடந்து அழுகிக்கொண்டிருந்தன. அவசியம் ஏதோ ஒரு சேனை இந்த வழி சென்றிருக்க வேண்டும்.

பத்மாவதி மேலே செல்ல மறுத்துவிட்டது. அதனால் ஸஜ்ஜனன் கீழே இறங்கி, கயிற்றைக் கையில் பிடித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். கொஞ்சதூரம் அவ்விதம் சென்று அங்கே குழுமியிருந்த கழுகுகளை எழுப்பிவிட முயற்சி செய்தான். சில பொல்லாத கழுகுகள் போடா சரிதான்' என்று இருந்துவிட்டன. சில கழுகுகள் முதலில் எழும்பின. ஆனால் உடனேயே மேலே சென்று வட்டமிட்டுப் பறந்து நின்றன. அருகில் சென்ற ஸஜ்ஜன் பிணங்களின் வகையைக் கண்டான். குதிரை, யானை, ஒட்டகம் எல்லாம் செத்துக் கிடந்தன. அவன் அனுமானம் சரியாய் இருந்தது. கண்டிப்பாய் ஏதோ யுத்தத்திலிருந்து திரும்பிய சேனையின் பகுதிகள்தான் இவை. ஆனால் இவ்விதம் பகுதிகள் விட்டுச் செல்லும் சேனை எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டும்? என்று கற்பனைகூடச் செய்யமுடியவில்லை, அவனால்.

'குடலைப்பிடுங்கி எடுக்கும் அந்த நாற்றத்தையும் சகித்துக்கொண்டு மிகுந்த தைரியத்துடன் ஸஜ்ஜனன் அந்த வழி சென்ற திக்கை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான்.

இந்தக் கும்பல் யாருடையதாக இருக்கும்? சபாதலக்ஷத்தின் சேனை இவ்வளவு பெரிதாக இருக்கமுடியாது. ஜாலோரின் சேனையும் சிறிது. சித்தூரின் சேனையும்கூட இவ்வளவு பெரியதில்லை. அப்படியானால் இது கஜினி அமீரின் சேனையா?

பயமறியாத ஸஜ்ஜனனும் இந்த அசைவு நீங்கிய அழிவின் உருவைக் கண்டு திடுக்கிட்டான். யந்திரம் போல் கைகால்கள் வேலை செய்ய ஆரம்பித்தன. தண்ணீர் இறைத்தான்; தான் முழுகினான்; ஒட்டகத்தையும் குளிப்பாட்டினான். அவனுக்குச் சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. ஒட்டகையை மேய அவிழ்த்துவிட்டான். இரவு ஆனவுடன் மணல் வெளியில் நின்ற அழிந்த கிராமத்தின் மௌனம் அவனை ஆட்டிக் குலைத்தது! மகாதேவனுடைய பெயரை நாக்கில் பிரதிஷ்டை செய்து ஸஜ்ஜனன் நடுங்கியவாறே இரவைக் கழித்தான்.

5

மறுநாள் காலை ஸஜ்ஜனன் நான்கு அல்லது ஆறு நாழிகைகள் போயிருப்பான். அதற்குள் எதிரேயிருந்து எழும்பிப் பரவும் மணற் கூட்டத்திடையே ஒட்டகங்கள் வருவது தென்பட்டது. பத்மாவதியைத் திருப்பி ஓட்டிவிட நினைத்தான் ஸஜ்ஜனன். ஆனால் இவ்வளவு சமீபம் வந்தபிறகு ஓடுவதால் ஆவதொன்றுமில்லை. நெருங்கிவரும் ஒட்டகங்களின் இடையே மனிதர்கள் குரலும் கேட்க ஆரம்பித்தது. ஸஜ்ஜனன் 'உம்' என்று சொல்லி, பத்மாவதியை நிறுத்தினான். ஏழு ஒட்டகங்கள் இருந்தன. அவைகளில் ஐந்தின்மேல் யவனர்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் கண்கள் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தன. நீண்ட தாடியுடன், புதுமாதிரியான ஆயுதங்களையும் தோல் உடையையும் தரித்து அவர்கள் தோற்றமளித்தார்கள். மற்ற இரண்டு ஒட்டகங்களின் மேல் இரண்டு ஒட்டகை ஓட்டிகள் இருந்தனர். அவர்கள் ஏதோ சொல்ல மற்றவர்கள் ஸஜ்ஜனனைச் சூழ்ந்துகொண்டனர்.

தலைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஒரு இடையன் "இந்த வழி எல்லாம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

ஸஜ்ஜனனுக்கு அந்த இடையன் மரியாதைக் குறைவாகப் பேசுவது பிடிக்கவில்லை. இருந்தாலும் நேரத்தை எண்ணி அவமானத்தை விழுங்கிவிட்டு "ஓ, ஆம் தெரியும். ஆனால் நீ யார்?" என்று கேட்டான்.

இடையனும் ஸஜ்ஜனன் பதிலைத் தன் தலைவனிடம் சொன்னான். அவன் அதிரச் சிரித்தான். பிறகு அவன் சொன்னதை அந்த இடையன் மொழி பெயர்த்தான்: "நாம் யார் என்று இதோ தெரிவிக்கிறோம்; முதலில் குஜராத்துக்குச் செல்லும் நேரான வழி எது என்று சொல்லு."

"யாருக்குப் போகவேண்டும், குஜராத்துக்கு?"

"நாங்கள்தான் போக விரும்புகிறோம்."

ஸஜ்ஜனன் உள் எரிந்தது. அந்த வெளிச்சத்தில் அவன் ஒரு புது எண்ணத்தைக் கண்டான். இந்த மிலேச்சன் சேனை குஜராத்துக்குப் போகவேண்டுமாம்; எதற்காக? ஸோமநாதர் ஆலயத்தை உடைத்துத் தூள் பொறுக்க! அதற்குத்தான் மகாதேவன் அவனை இந்த வழி கொண்டுவந்து விட்டாரோ! இப்பொழுதுதான் அவனுக்குத் தன் செய்கையின் துணிச்சலின் காரணம் புரிந்தது! கஜினி மிலேச்சனைக் கொல்லவேண்டும் என்ற சங்கரமூர்த்தியின் கட்டளையை நிறைவேற்றும் பாக்கியம் வேறு எந்த வழிபோனால் கிட்டியிருக்கும்?

"வாருங்கள் அழைத்துச் செல்கிறேன்!" என்றான் ஸஜ்ஜனன் தன் உள் எழும் எண்ணங்களின் நிழலை முகத்தில் படாமல் தடுத்து மறைத்துக்கொண்டு.

"உனக்கு நேர் வழி தெரியுமா?"

"ஓ, நான் அங்கிருந்துதானே வந்துகொண்டிருக்கிறேன்."

"எவ்வளவு நாளில் போய்ச் சேரலாம்?"

"பன்னிரண்டு பதினைந்து நாட்களில் போய்ச் சேரலாம்."

இடையன் மொழி பெயர்த்துச் சொன்ன இந்த விஷயம் அந்த யவனத் தலைவனுடைய மகிழ்ச்சியைப் பொங்கி எழவைத்தது. "வா; நம் முன்." என்ற அந்த மிலேச்சனுடைய உத்தரவை இடையன் மொழி பெயர்த்தான்.

"தயார்!" என்று சொல்லிய ஸஜ்ஜனன் அவர்களுடன் சேர்ந்துகொண்டான். அதைத் தவிரவும் அவன் வேறொன்றும் செய்திருக்க முடியாது.

6

நாள் பூராவும் அவர்கள் சென்றுகொண்டேயிருந்தார்கள். கடைசியில் இருட்டு வந்தபிறகு ஒரு பெரிய சேனையின் கூடாரம் காணப்பட்டது. அது ஒரு சேனை தண்டு இறங்கி இருக்கும் இடமாகக் காணப்படவில்லை. ஏதோ ஒரு பெரிய மகா நகரமாகத் தோற்றம் அளித்தது, இவ்வளவு பெரிய பட்டணம் ஒன்றை ஸஜ்ஜனன் முன்

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ பம்பாய்-4.





எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

பின்கூடப் பார்த்திருக்கமாட்டான். அங்கே அடுப்புகள் அணையாமல் எரிந்துகொண்டிருந்தன. ஆயிரக்கணக்கான தீவட்டிகள் அங்கு மிங்கும் அலைந்துகொண்டிருந்தன. அந்தவெளிச்சத்தில் கண்பார்வை வல்லமைக்கு எட்டிய வரையில் ஒரே கூடாரக் கூட்டமாகவே காணப்பட்டது. எண்ணிக்கைக்குள் அடங்காத மனிதர்கள். ஒட்டகைகள், குதிரைகள் மற்ற மிருகங்கள், அநேக அளவில் ஆடிப்பறக்கும் ஆயிரக்கணக்கான கொடிகள். ஆயிரக்கணக்கான கூடாரங்களின் வரிசைகள். மனிதர்களின் ஆரவாரம். காவற்காரர்களின் கூவல். நாயினம், பறை முதலியவைகளின் அலறல். எல்லாம் சேர்ந்து வானையும் பூமியையும் அளாவி நின்றன. இதைப் பார்த்தான் ஸஜ்ஜனன்; கேட்டான் அந்தச் சப்தத்தை. அப்படியே ஸப்தநாடியும் ஒடுங்கி விட்டது. இப்படியும் பெரிய அளவில் ஒரு சேனை இருக்கும் என்று அவன் கனவில் கூடக் கண்டதில்லை. கற்பனைக்கும்கூட அந்த வலுவிருக்கும் என்று அவன் அறியான். உலகில் அந்தப் பக்கத்திலிருந்து கஜினி அமீர் வருவான்; இவ்வளவு பெரிய சேனை கொண்டு வருவான்; அநேக ராஜ்யங்களை அழித்துவிட்டு இப்படித் தண்ணீரற்ற பாலைவன மணல் வெளியில் சேனை வீரர்களைக்கொண்டே பரப்பிவிடுவான் என்று அவன் எவ்விதம் எண்ணியிருக்கக்கூடும்? அவன் ஒரு நிமிடநேரம் தன்னையே இழந்து நின்றான். ஆனால் உடனேயே பகவான் ஸோமநாதருடைய கட்டளை ஞாபகம் வந்தது. தேவதேவன் ஒருவனைக் கொல்ல விரும்பினால் அவனை யார் தான்காப்பாற்றமுடியும்? ராவணன் போன்ற அரசனைவிடவா கஜினிஅமீர் பெரியவன்? ராவணன் போனஇடம் என்னவாயிற்று? கஜினி அமீர் எந்த மூலைக்கு? யார் கண்டார்கள்? ஒருகால் துரும்பு போன்ற ஸஜ்ஜனனைத்தான் அவனைக்கொல்ல ராமபாணமாக உபயோகிக்க எண்ணம் கொண்டிருக்கிறாரோ, என்னவோ அந்தப் போலாநாதர்!

இவனை அழைத்துவந்த கூட்டத்தின் தலைவன் பெரிய அதிகாரிபோலும்! அதனால் தான் அவன் குரலைக் கேட்டவுடன் காவலாளிகள் எல்லாம் வழிவிட்டு ஒதுங்கி நின்றனர். அவன் வருவதைப் பார்த்த எல்லோரும் கீழே குனிந்து தம் வலதுகைகளைத் தத்தம் நெற்றிகளில் வைத்துக் கொண்டனர். ஸஜ்ஜனன் இந்தப் பயங்கரமான படைவீட்டைப் பார்த்துக்கொண்டே சென்றான். இதில் மிலேச்சர்கள் இருந்தனர், பஞ்சாபியர் இருந்தனர், ராஜபுத்திரர்களும் சேர்ந்திருந்தனர். அவன் இதற்கு முன்னமே பார்த்திராத இயந்திரங்களும் இருந்தன. எண்ணிக்கையில் அடங்காத மனிதர்கள் சாப்பாட்டுக்குறை என்பது என்ன என்று அறியாமலே மிகவும் ஆனந்தமாக இருந்தனர்.

ஸஜ்ஜன் இதயம் பேச ஆரம்பித்தது. என்ன? ராஜஸ்தானத்து வீரர்கள் தலை குனிந்து விட்டார்களா? கோகாதுர்க்கம் என்ன ஆயிற்று? கோகாபாபா என்ன ஆனார்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் எப்படிக் கிடைக்கும்? பதில் கிடைக்காத இந்தக் கேள்விகள் சூலம்போல நின்று அவன் இதயத்தைத் துளைக்க ஆரம்பித்தன.

அந்த மிலேச்சர் தலைவன் ஸஜ்ஜனனைக் கீழே இறங்க உத்தரவிட்டான். ஸஜ்ஜனனும் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தான். எங்காவது ஒட்டகத்தைத் தன்னை விட்டுப் பிரித்து விடுவார்களோ என்று பயந்து, "இந்தமாதிரியான ஒட்டகம் உலகத்திலேயே கிடைக்காது. இது இல்லாவிட்டால் எனக்கு வழி காட்டவே முடியாது" என்றான்.

"தங்கள் ஒட்டகம் தங்களிடம் திரும்ப வந்துவிடும்" என்று நாயகன் இடையன் மூலம் சொல்வித்தான்.

பிறகு தலைவன் "நட என்னுடன்" என்று உத்தரவிட்டு முன்னே சென்றான். அவனைப் பின் தொடர்ந்து சென்ற இரு மனிதர்கள் பின் தொடர்ந்தனர். அவர்கள் உள்ளே சென்றடைந்தனர்.

ஸஜ்ஜன் தன்னை அறியாமலே கண்களைத் துடைத்துக் கொண்டான். இதுவரை அவன் பார்த்தது கேட்டதெல்லாமே அவன் புத்தியைச் சுற்றித் திண்டாட வைப்பவைதான். ஆனால் எல்லாவற்றையும்விட வியப்புறச் செய்யும் ஒரு காட்சி அவனுக்கு இங்கேதான் காத்துக் கொண்டிருந்தது.

மூன்று தீவட்டி தூக்கிகள் மரத்தின் மஞ்சள் நிறத் தூண்கள் போல நின்று சிறிய வெள்ளித் தீவட்டிகளைத் தாங்கி நின்றனர். வாயிலருகில் நுழைந்ததுமே இரண்டு பக்கங்களிலும் இரண்டு அரக்கர் போன்ற கருவீரர்கள் அரைச் சந்திரன் போன்ற அகன்ற இரு கத்திகளை ஏந்தி, கருஞ்சலவைக் கல்லால் ஆன பெரிய உருவங்கள் போல் நின்று கொண்டிருந்தனர். நடுவிலே மணம் வீசும் பெரிய நெய் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது.

அங்கே அந்த மூலையில் புலி, சிங்கம் முதலிய பிராணிகளின் தோல்களால் செய்யப்பட்ட விலையுயர்ந்த விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல் பெரிய ஒரு தலையணையின் மேல் சாய்ந்துகொண்டிருந்த ஒரு மனிதன் தன்னுடைய சிவந்து நீண்ட தாடியை உருவிக்கொண்டிருந்தான். அவனைப் பார்க்கும் போதே அவன் ஒரு மிகப்பலம் பொருந்திய வீரன் என்பது தெளிவாகிக்கொண்டி

ருந்தது. அவனுடைய புருவங்கள் சிவந்து அடர்ந்த மயிர்க் கூட்டத்தால் ஆகியிருந்தன. அந்தப் புருவங்களின் அடியிலிருந்து கொலை நடுக்கம் தரும் இரண்டு கண்கள் ஒளித்துச் சுழன்றுகொண்டிருந்தன. அவன் மடியிலே ஒரு பெரிய வாள் உருவி வைக்கப்பட்டிருந்தது. அவனுடைய வலுவான இடதுகை அதனுடைய கைப்பிடியுடன் விளையாடிக்கொண்டிருந்தது.

அவன் தோலும் துணியும் கலந்த உடை மிகவும் விசித்திரமானதாயிருந்தது. அவன் தலையில் இருந்த முண்டாசும் புதுமாதிரி இருந்தது. அதில் நீலக் கற்கள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. இந்த மஹாபுருஷனின் வலது பக்கத்தில் ஒரு மிலேச்சன் அமர்ந்திருந்தான். அவனுடைய இடுப்பில் ஒரு "பேனு உறை" இருந்தது. காதில் ஒரு பேனுவைச் சொருகி வைத்துக்கொண்டிருந்தான். அவன் நடுத்தரமான வயது உடையவனுக இருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு கீழ்த்தர அதிகாரி உட்கார்ந்திருந்தான். அவனும் வலுப்பொருந்திய வீரனுகவே காணப்பட்டான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு தலைவன் அமர்ந்திருந்தான். பின்னிருவரும் மிலேச்சர்களாகத் தோன்றவில்லை. அவர்கள் ராஜபுத்ரர்கள் போலக் காணப்பட்டனர். தலையணைமேல் சாய்ந்திருந்த மனிதனின் இடதுபக்கத்தில் ஒரு மிலேச்ச வீரன் அமர்ந்திருந்தான். அவன் உடுத்திருந்த உடை ஸஜ்ஜனனை அழைத்து வந்த சர்தாரின் உடையைப்போலவேயிருந்தது. ஸஜ்ஜனன் உள்நுழைந்ததைப் பார்த்த அந்தப் பெரிய மனிதன் எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தான். மேகம் புரண்டாற்போன்ற குரலில் அவன் தன்னுடைய தோழன் சர்தாரை விளித்தான். அந்தச் சர்தாரும் மிக வணக்கமாக முன்னுல் வந்தான் அந்தப் பெரிய மனிதன் கூப்பிட்டதிலிருந்து அந்தச் சர்தார் பெயர் ஸாலார் மசூத் என்று ஸஜ்ஜனன் அறிந்துகொண்டான்.

ஸஜ்ஜனுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இவன்தான் கன்னேசி, காலிஞ்சர், நகர்கோட், மதுரை முதலியவைகளை மண்ணுக்கிய மிலேச்சன். இவன்தான் கஜினி அமீர் மஹமூத்; மதுரையின் அந்தண சிரேஷ்டர்களைக் கஜினி கடைத்தெருவில் மூன்றரை ரூபாய்க்கு விலை பேசி விற்ற கிராதகன். இவன்தான் இந்தப் பாலைவனத்தைத் தாண்டி, பகவான் ஸோமநாதர் ஆலயத்தை அழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிற அந்த மகாபாவி மஹமூத். ஸஜ்ஜனுடைய ஒவ்வொரு நரம்பில் ஓடும் ஒவ்வொரு சொட்டு ரத்தமும் விரோதக் கொடி தூக்கிப்பிடித்தது. அவன் உடல் ஆத்திரத்தால் வெளிப்பட ஆடிற்று. கொஞ்சம் சந்தர்ப்பம் வாய்த்தால் அப்படியே பாய்ந்து விடுவான் புலிபோல! பாய்ந்து அவன் உயிரை அங்கேயே குடித்து, கங்கசர்வக்ஞரின் வாக்கை நிறைவேற்றிவிடுவான்!

7

ஸாலார்மசூத் அமீரின் அடியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ விண்ணப்பம் செய்து கொண்டிருந்தான். அவன் வார்த்தை முடிந்ததும் அங்கே இருந்த எல்லாச் சர்தார்களும் தங்களுக்குள் பேசிக்கொள்ளத் தொடங்கினர். அவர்கள் பேச்சுக்கிடையே அமீரின் அதிரும் பேச்சு அவ்வப்பொழுது கேட்டது.

கடைசியில் அமீருக்கு வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த பேனுக்கார சர்தாரும் அவனருகில் இருந்த ராஜபுத்திர சர்தாரும் ஸஜ்ஜன் பக்கம் நகர்ந்தனர். தன்னருகில் வருவது ராஜபுத்திரன்தான் எனக் கண்ட ஸஜ்ஜனனுக்கு ஒவ்வொரு ரோமக் கண்ணும் பற்றி எரிய ஆரம்பித்தது. அவன் கைகள் அவன் கழுத்தை அப்படியே நெறித்து விடமாட்டோமா என்று துடித்தன. தேவனுடைய கட்டளையை நிறைவேற்றவேண்டும் என்ற ஒரு எண்ணம் இல்லாதுபோனல் அவன் அங்கேயே ஒரே பாய்ச்சலில் அந்த ராஜபுத்திரன் உயிரை உறிஞ்சிக் குடித்திருப்பான். ஆம், அவன் ராஜபுத்திரன். அமீரின் கர்ஜனையில் அவன் பெயர் சேவந்தராய் என்று தெரியவந்தது.

சேவந்தராய் சிரித்தவாறேதான் ஸஜ்ஜனனிடம் வந்தான். ஆனுல் அவன் கண்கள் பயங்கரமான வேலையைச் செய்துகொண்டிருந்தன. அவன் பார்வை ஸஜ்ஜனுடைய இதயத்துள் புகுந்து அவனைச் சலித்துக்கொண்டிருந்தது. அவன்பின்னே அந்தப் பேனு வீரனும் இருந்தான். சேவந்தராய் "நீங்கள் எந்தக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்?" என்று கேட்டான்

"நானு? ஸஜ்ஜனன் கேட்டுக்கொண்டு பதில் சொன்னுன். "பப்பரியா எனது தேசம்."

"எங்கு இவர்களைச் சந்தித்தீர்?"

"கோகாதுர்க்கத்திற்கும், சபாதலக்ஷத்துக்கும் இடையில்."

"நீர் எங்கிருந்து வந்திருக்கிறீர்?"

"அன்ஹில்வாட் பட்டணிலிருந்து."

"எவ்வளவு நாள் முந்திப் புறப்பட்டீர்?"

"பதினைந்து நாட்கள் ஆயின."

"அது ஏன்?" சேவந்தராய் ஆச்சரியமடைந்து கேட்டான்.

"........ஆம்..."

"எந்தவழியாய் வந்தீர்?"

"எனக்குத் தெரிந்த ஓர் மணல்வெளி வழியாய்."

"வழியில் எந்தக் கோட்டை இருக்கிறது?",

"கோட்டை கொத்தளம் வேண்டும் என்ருல் மாதக்கணக்கில் நடக்கவேண்டியதுதான். என் வழி ஆபூவிலிருந்து நேரே அன்ஹில்வாட்"

"வழியிலே தங்குமிடம் உண்டா?"

"இல்லாதிருந்தால் நான் எப்படித் தனித்து வந்திருப்பேன், இங்கே?"

"சரி, நாம் இப்பொழுது எங்கே இருக்கிரேம்?"

"நீங்கள் சரியான வழியிலிருந்து அதிகத் தொலைவில் இருக்கிறீர்கள். ராஜபாட்டையை விட்டு நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை."

"ராஜபாட்டை இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கிறது?"

"இந்தச்சேனை முற்றிலும் போய்ச்சேர எட்டுப் பத்து நாட்கள் பிடிக்கும். வழியில் மேவாட், ஜாலோர், குஜராத், மாளவம் முதலிய தேசத்து அரசர்கள் எதிர்ப்பார்கள். அதையும் பார்த்துக்கொள்ளவேண்டும்."

"எப்படித் தெரியும்?"

"எனக்குத் தெரியும். ஒருலட்சத்து இருபத்தையாயிரம் ராஜபுத்திர வீரர்கள் தங்கள் வழியில் குறுக்கிட்டு நிற்கிருர்கள்."

"நீ வந்த வழியை எங்களுக்குக் காட்டுவாயா?"

"ஓ, ஆனுல் என் ஒட்டகம் என்னிடம் இருக்கவேண்டும்."

"எங்கே உன் ஒட்டகம்?"

"அதோ அவன் எடுத்துக்கொண்டான்." என்று சொல்லிவிட்டு, ஸஜ்ஜனன் மசூத் பக்கம் சுட்டிக் காட்டினுன். பிறகு சேவந்தராயும் அல்உத்பியும் சுல்தானிடம் சென்றனர். பிறகு எல்லாச் சர்தார்களும் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர்.

மறுநாள் ஸாலார் மசூத் ஸஜ்ஜனனைத் தன் கூடாரத்தில் காவற்கைதியாக்கி வைத்தான். மூன்ரும்நாள் கஜினி சுல்தான் நேர்ப்பாதையில் சென்று கூடியிருக்கும் ராஜபுத்திர சேனையுடன் அடித்துக்கொண்டு நிற்பதைவிட ஸஜ்ஜனன் காட்டிய வழியே செல்வது நல்லது என்று முடிவு செய்தான். அதனுல் கிழக்கே போகும் பயணத்தை நிறுத்தி, மேற்கே செல்ல உத்தரவிட்டான். ஸஜ்ஜனிடம் பத்மாவதி மீண்டும் சேர்ப்பிக்கப்பட்டது. அவன் அதன்மேலேறி முன்னே சென்ருன். கஜினி மஹமூதும் அவனைப் பின்தொடர்ந்தான். கோகாதுர்க்கப் பாலகன் சௌஹான் வீரனுடைய பேரனுக்கு மிகுந்த மகிழ்ச்சி. கடவுளின் கட்டளையை நிறைவேற்ற அவனுக்குக் கிடைத்த சரியான வாய்ப்பு அவன் உள்ளத்தை லேசாகப் புல்லரிக்கச் செய்தது. இந்த வழியே இழுத்துப்போய் இவர்களைப் புயலின் கையில் ஒப்புவித்துவிடவேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தது. அதனுல் மெதுவாக இனிமையான பாட்டுக்கள் பாடி, பத்மாவதியை வந்த வழியே போகச் சொல்லிக் கெஞ்சிக் கொண்டே பிரயாணம் செய்ய ஆரம்பித்தான். (தொடரும்)

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரு.	அ.	பை.	ரு.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு. கும்பகோணம்.

பெண்களுக்கு மட்டும்

ஷிபாலி சௌத்ரி—சாரி

"என்ன சொல்வார்களோ?"

தன் புருஷனின் கௌரவத்தை உத்தேசித்தோ, அல்லது ஏதோ ஒரு சொந்தக் காரணத்திற்காகவோ தனது உண்மை அந்தஸ்திற்குப் புறம்பான, பொருத்தமற்ற, டாம்பீக வாழ்க்கை நடத்தும் சகோதரிகளை யாருமே அறிவார்கள். இதைப்போன்ற அசட்டுத்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

இத்தகைய டம்பத்தினுல் ஏமாறிப் போகும் ஜனங்களின் அபிப்ராயம் அவ்வளவு உயர்ந்ததென்று கருதக்கூடுமோ? மேலும், வாஸ்தவமாய் வெளி டம்பத்தை நம்பிவிடும் ஜனங்கள் அதிகமாய் இருக்கமாட்டார்கள்; டம்பக்காரி நினைக்கும் அளவுக்கு, இவர்களின் எண்ணிக்கை ஒருநாளும் இருக்க முடியாது.

நானும், என் உண்மைச் சினேகிதர்கள் என்று கூறிக்கொள்ளக் கூடிய சிலரும் சம்பந்தப்பட்ட வரையில், நம்மிடம் எவ்வளவு பணம் இருக்கிறதென்பதையோ அல்லது இல்லை என்பதையோ ஒருவரும் கவனிப்பதில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பரந்த மனப்பான்மை, சந்தோஷம், உண்மை, ஆழ்ந்த அன்பு இவைகள் மட்டும் போதுமே உண்மை வாழ்வு வாழ!

எந்த இடத்திலும், எல்லாரிடத்திலும் இதுவே உண்மையான "வாழ்வின்" தத்துவம் என்பது திண்ணம்.

நமக்கே பொய்யாய் நடக்கும் ஒரு வகைப் பழக்கம் சமூகத்தில் பரவி வருகின்றது, தைரியமாய், புத்திசாலித்தனமாய், சமூகத்தின் அசட்டுக் கட்டுப்பாடுகளை எதிர்த்த ஒருவரைக் கண்டனம் செய்து ஒதுக்குதல். இதை என்னவென்பது? (Moral Hypocrisy) ஆத்ம ஏமாற்றம் என்போமா? சமூகமே மட்டமான மூடநம்பிக்கை, பழைய மனப்பான்மை கொண்ட மனித வர்க்கத்தினுல் நிறைந்திருக்கையில் இவைகளைத் தைரியத்தோடு எதிர்த்த சிலருக்குச் சமூகத்தில் ஒரு உயர்ந்த ஸ்தானம் அல்லவோ அளிக்கவேண்டும்? அதற்குப் பதில், அவர்களை ஒதுக்கியல்லவா தள்ளுகின்றோம்?

இந்த "எல்லாரும் என்ன சொல்வார்களோ" என்கிற மனப்பான்மை நமது தேசத்தில் வாழ்க்கையின் இனிமையையே கெடுத்துவிட்டதென்றுல் மிகையாகாது, ஊர்ப்போக்கே சரியென்று நடப்பவர், அதில் உண்மையாகவே முழு நம்பிக்கையும் வைத்திருந்தாலும் ஒத்துக்கொள்ளலாம்; மன்னிக்கலாம். முக்கால்வாசியும் ஊர்ப்போக்குக்கு ஒத்து நடப்பவர் பயமென்கிற ஒரே காரணத்தினுல் தூண்டப்பட்டு அவ்வாறு செய்வதன்றி, வேறொரு உயரிய லக்ஷியத்திற்காகவும் அல்லவே.

இம்மாதிரி ஆத்ம—ஏமாற்ற—பயங்காளி—மனப்பான்மையினுல் விளையும் நஷ்டம்? வாழ்க்கையின் ஒளி, ஆனந்தம் இவற்றை அளக்க முடியாத அளவில் நாம் இழக்கின்றோம் என்று நிச்சயமாய்க் கூறலாம்.

பொய் வாழ்வு வாழ்ந்து, சதாகாலமும் "பிறர் என்ன நினைப்பார்கள்" என்றே ஸ்மரித்துக் காலம் தள்ளுவது வருந்தத்தக்க விஷயம் இல்லையா?

(2) சல்லடையில் சலிக்கும்போது கிடைத்தவை!

இதயத்தின் பொக்கிஷம்:—

காதலித்து இதயம் வறண்டுபோனதுண்டோ?
ஈவதினுல் உன்பணப்பை காலியானதுண்டோ

தியாகத்தின் பொக்கிஷம்:—

வாழ்வை, உனக்கு நேர்ந்த லாபத்தினுல் [அளப்பாயோ?
அல்ல, நஷ்டத்தினுல் அள—
உண்ட உணவினுல் அல்ல, ஈந்த, உண்பித்த [அளவினுல்—
அன்பின்சக்தி, அதற்காகச் செய்யும் தியாகத் [தில் உள்ளது—

பொது மக்களின் சோப்பு

தனவந்தருக்கும் இன்பமளிப்பது

பரிபக்குவமடைந்து மூப்பது வருஷங்களுக்கு அதிகமான கோத்ரெஜின் ஆராய்ச்சியும்—முதன்முதலாக தாவர எண்ணெய் சோப்புகளில் நுண்ணிய ஆராய்ச்சியாளரும் தயாரிப்பவர்களுடையதுமான — இந்த பிரசித்தி பெற்ற சாவி மார்க் டாய்லெட் (ஸ்நான) சோப், இனிமையான மணமூட்டப்பட்டு, எளியவர்களின் பண நிலைமைக்கும் ஏற்றவாறு சாமானிய மனிதனுக்கும் தன்னையும் தன் குடும்பத்தையும் சுத்தமாயும் ஆரோக்யமாயும் வைத்துக் கொள்வதை ஓர் இன்பமயமாக்குகிறது.

நூற்றுக்கு நூறு பங்கு பரிசுத்தமானது. எடையை அதிகரிக்கச் செய்யும். எவ்விதமான கலப்படமும் இல்லாதது.

உங்களில் ஒவ்வொருவரும் இன்றே ஒரு பெட்டியை வாங்கி நீங்களே திருப்தியைக் காணுங்கள்.



ரூ. 3-4
+ வரி

ஒரு டஜன் புதிய வாசனையோடுகூடிய பல தினுசு கலர் வில்லைகளுக்கு,

Godrej கோத்ரெஜ் Turkish Bath

ரிஜிஸ்டர்டு

கோத்ரெஜ் டர்க்கிஷ் பாத்

100 சதம் தூய்மைக்கும் மிருகக் கொழுப்பற்ற தென்பதற்கும் உத்தரவாதமானது

கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்.
மதராஸ்: 164, பிராட்வே.
கொச்சின்: 6/36, கல்வத்தி.

துன்பச் சிகரத்தை எட்டிப் பிடித்தவரிடம்
கொடுப்பதற்கும் தாராளமாய் உண்டு!

ஆசைக்கு ஒரு வேலி போடு. பிறரிடம் எத்தனை உள்ளது என்பதை எண்ணுதே-அவரிடம் உள்ள எந்தெந்தப் பொருள் இல்லாமல் உன்னுல் ஆனந்தமாய் வாழ முடியும் என்பதை நினைவு படுத்திக் கொள். பகட்டுக்கும், போக்குக்கும் அடிமையாவாயோ?

ஈசனின் வாசஸ்தலம்:—

கடவுளோடு வசிப்பதற்குக் கோயிலில் போய்க் குடியிருக்க அவசியமோ? இதயத்தை ஒரு சிறு ஆலயமாக்கிக் கொள்வோம்; அவ்வப்போது அங்கே சென்று தாழிட்டு, பணிவு கொண்ட அன்புமயமான சல்லாபத்தில் ஈசுவரனிடம் ஈடுபடுவோம். எவர்தான் கடவுளோடு நெருங்கிச் சம்பாஷிக்க முடியாதவர்? சிலருக்கு அதிகம்; சிலர்க்குக் குறைவாக இருக்கும். அவருக்கோ நமது சக்தி முழுவதும் தெரியுமே. எனவே நாம் ஆரம்பிப்போம், தைரியமாக. வாழ்வில் இனி சிறிது காலமே பாக்கி உள்ளது, நமக்கு.

சமையல் பகுதி

பிஸி பேளி ஹுளி ஹன்னு! (மண்டி சாம்பார் பாத்)

(1) தேவாமிர்தம் போன்ற இந்த உணவுக்குக் கன்னடக்காரர் ஏனோ இப்படி நாமகரணம் செய்தார்கள். பெயர் எதுவாயிருந்தால் என்ன? ருசியான இந்தச் சாதத்தைத் தயாரித்துச் சாப்பிட்டபிறகு, பெயரில் உள்ள பிஸிகளும் ஹுளிகளும் நமது நினைவில் நிற்கப் போவதேயில்லை.

தயாரிப்பது மிக எளிது. ஒரு ஆழாக்கு அரிசிச் சாதமாக்குவதற்கு $\frac{1}{2}$ ஆழாக்குத் துவரம்பருப்பு வேகவைக்கவேண்டும். முதலில் தேவையான மற்றப் பண்டங்களைச் சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு எலுமிச்சம்பழ அளவு புளி.

இரண்டு டேபிள்ஸ்பூன் கொத்துமல்லி விதை.

ஒரு டேபிள்ஸ்பூன் கடலைப்பருப்பு.

8 மிளகாய் வற்றல்.

ஒரு டேபிள்ஸ்பூன் கொப்பரைத் துருவல்.

மேலே சொன்ன சாமான்களை நெய்யில் வறுத்து உரலில் இடித்துப் பொடியாக்கிக்கொள்ளவும். ஒரு ஈயம் பூசின பாத்திரத்தில் பருப்பை வேகவைத்துக் கொண்டு, திட்டமாக ஜலம் ஊற்றி, அதிலேயே அரிசியைக் களைந்துபோடவும். அரிசி முக்கால் பதம் ஆகும்போது, புளியைக் கரைத்து அந்த ஜலத்தைத் தனியாகக் கொதிக்கவைத்து, திட்டமாய் உப்புச் சேர்த்து, சாதத்தில் போடவும். பிறகு, தயாரித்த மசாலைப் பொடியைப் போட்டு நன்ருய்க் கிளறி, நெய்யில் கடுகும் உளுத்தம் பருப்பும் தாளித்துக் கலந்து இறக்கி வைக்கவும். இதோடு சாப்பிட அவல் வடாம் அல்லது பொரி வடாம் பொரிப்பது ஏற்றது.

(2) தேங்காய் ஸந்தேஷ்:—குழந்தைகளுக்குப் பிடித்த இதைப்பண்ணிப் பார்ப்போம்.

1. இரண்டு தேங்காயின் துருவலை விழுதாக அரைத்துக்கொள்ளவும்.

2. ஒரு பெரிய கப் சர்க்கரை.

3. கொஞ்சம் ஏலம்.

4. கலர் பண்ணும்படியான 'கொச்நீல்.'

5. ஒரு கப் மாவா—இது பாலைக் காய்ச்சி, கோவா போல் தயாரித்து, இனிப்புக் கலந்து, அதிக ஈரப்பசையில்லாமல் செய்துகொள்வது.

தயாரிக்கும் விதம்:—சூடு குறைந்த அடுப்பில், ஒரு பாத்திரத்தில் சர்க்கரை கொஞ்சம், தேங்காய் விழுது, மாவா இவைகளைப் போட்டுக் கிளறவும். முதலில் இவை ஒன்ருக உருகிப் பிறகு கொதிக்கும். கெட்டியாகும் தருணத்தில், சந்தேஷில் ஏலம் போட்டு, சற்று முன்னுடியே இறக்கிவிடவும். கையில் துளி நெய் தடவிக்கொண்டு, சிறிய உருண்டைகளாக உருட்டி, நடுவில் ஒரு குழி செய்து, அதற்குள் கொச்நீல் கலந்த சர்க்கரையை நிரப்பிவிடுங்கள்,

பார்வைக்கு அழகாயும், ருசியாயும் இருக்கும்.

கோதுமையை அரைத்த தோசை;— கோதுமையை மிஷினில் திரித்து மாவாக்காமல் அடியிற்கண்ட முறையில் தோசை செய்வது எனக்கு மிகவும் பிடிக்கின்றது. கோதுமையை ஜலம் பிசிறி



வைத்து உரலில் குத்தி மேல் உமியை முழுவதும் நீக்கி, இரவில் ஜலத்தில் ஊறவைக்கவும். மறு நாள் பகலில் கல்லுரலில் அரைத்து, உப்புச் சேர்த்து, தோசை மாவு திட்டத்தில் கரைத்து வைத்து விடவும். இந்தத் தோசையை, எண்ணெயே சேர்க்காமல் கல்லில் ஜலம் தெளித்தே வார்த்து எடுக்கலாம். ருசி மிக நேர்த்தியாக இருக்கும். செய்து பார்க்கவும்.

* * *

தையல் பகுதி.

1. சிறு பெண்களின் வெயில் காலக் கௌன்களுக்குப் படத்தில் உள்ள இந்த இரண்டு மாதிரியும் ஏற்றவை. சாதா கோடு போட்ட துணிக்கு வெள்ளைத் துணியில் பையும் 'பெல்டும்' தைத்தால் பார்வைக்கு அழகாயிராது?

2. இந்த அம்மாள் உடுத்தியிருக்கும் புடவைக்குச் சுலபமான கரை தைத்து இருக்கிறார். படத்தில் கரையைத் தனி

யாய்க் காண்பித்து இருக்கிறது. லேசி டெய்சி தையலும், பிரெஞ்சு நாட் என்கிற தையலும் உபயோகித்துக் கரையை அழகுபடுத்தியிருப்பது நன்ருயில்லை? லேசி டெய்சிகளை ஒரு நிறத்திலும், சிறிய பிரெஞ்சு நாட்களை வேறு நிறத்திலும் தையுங்கள்.

3. தையல் கற்றுக்கொள்ளும் சிறுமிக்கு, தன் சட்டையைத் தானே பூப்போட்டு அலங்கரிக்கும் வேலை கொடுத்தால் பெருமைப் படுவாள் அல்லவா?

இந்த இரண்டு படங்களின் உதவியினுல், விமலாவின் சோளியை







அலங்கரிக்க நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நினைக்கிறேன். லேசான மஞ்சள் நிறச் சட்டையில் கறுப்பு, சிகப்பு. கரும் பச்சைப் பட்டு நூல்களினால், படத்தில் உள்ளமாதிரி தைக்கச் சொல்லுங்கள்

முதலில் இரண்டு கோடுகளை ஒன்று கறுப்பிலும், மற்றொன்று சிவப்பு நிறத்திலும் தைக்கவும். இரண்டு லேசி டெய்சி இதழ்களை சிவப்பு வர்ணத்தில் தைத்து, அதன் மத்தியில் பச்சை நூலினால் மூன்று ஸாடின் தையல் தைக்கவும். நீளமான [illegible]புகளைக் கறுப்பு வர்ணத்தில் தைத்துவிட்டால் சொக்காய் பார்வைக்கு மிக அழகாயிருக்கும்.

சிவப்புப் பாவாடை மேல் இதை அணிந்துகொண்டால் பொருத்தமாயிருக்கும். கழுத்துக்கும் கைக்கும் (Bias Binding) சிவப்பு நிறத்தில் வைக்கலாம். அல்லது இச் சிறிய பூக்களை உடல் முழுவதும் சட்டைக்குப் போடலாம்.

உங்களுடைய விவசாயப் பண்ணை சாதனங்களை விருத்தி செய்து அதிக லாபம் அடைய இதுவே தகுந்த தருணம்.

PLAN YOUR 1950 MECHANISATION NOW!



The Fordson Major with the famous F-R Mounted Plough

பண்ணைக்கு உகந்த விவசாய சாதனம் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர். காரணம்? அதை ஓட்டும் செலவு குறைவு. ஒவ்வொரு காலன் ஆயிலுக்கும் அது செய்யும் வேலை அதிகம். ஸ்பேர் பார்ட்டுகளும், ரிப்பேர் சார்ஜுகளும் சொல்பம். மேஜர் ஹைட்ராலிக் பவர்லிப்ட் என்னும் கருவி மிகவும் சிறந்தது. இதனால் மேஜரினுடைய உபயோகம் அதிகரிக்கிறது. போர்ட்ஸன் ஆயுதங்கள் லேசாகவும், ஆனால் பலம் பொருந்தியதாயும், ஏற்றச் சுலபமாயும், ஓட்டச் சௌகரியமாயும், இடம்விட்டு இடம் மாற்ற எளிதாயும் இருக்கும். இதனால் காலத்தை சிக்கனப்படுத்துவதுடன், உழைப்பில் அதிக உபயோகத்தையும் அளிக்கிறது. மேஜரைப்போல் அவைகளையும் வாங்க லாபகரமாயுமிருக்கும்.



Three screw levers within easy reach of the tractor seat enable the F-R plough to be accurately adjusted in work.

1. Depth Control 2. Front furrow width for side land work 3. Levelling

You get more work out of a Fordson

Fordson

MAJOR TRACTOR

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202, 203 மவுண்ட்ரோடு, சென்னை–2

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திரிச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn.)

டெப்போ: கோவம்புத்தூர்

நாடகமேடை விசித்திரங்கள்-II

ஆண்டி

ஜப்பானிய நாடகம்

ஜப்பானிய நாடகமும் ஏறக்குறைய சீன நாடக ஆரம்ப காலத்திலே (கி. பி 8-ஆம் நூற்றாண்டில்) உற்பத்தியானதுதான். ஆனால் "செஞ்சி" யென்ற நடிகைதான் அதற்கு உயிர் அளித்தவள். அவள் ஆண்வேடமே அணிந்து வந்தாள். அவள் நடிப்பதுடன் நடனமாடியும் வந்தாள். அவளது காலம் கி. கி. 1108.

ஆதியாக நாடகக்கலையை அங்கே பொது ஜனங்களே போற்றி வந்தனர். ஆனால் பிற்பாடு பிரபுக்களும் அரசர்களும் அபிமானிக்கலாயினர். நடிக்கும் விஷயங்கள் மதபரமாகவும் புராதன கதைகளையொட்டியுமே இருந்தன.

பதினாறாவது நூற்றாண்டில் ஒரு பெரிய கலை வளர்ச்சி இயக்கம் ஏற்பட்டது. அக்காலத்தில் "நோ" என்ற உயர்தரக் கூத்துத் தோன்றியது. அக்கூத்து ஏறக்குறைய நம் நாட்டு "யக்ஷகானம்" "கூடியாட்டம்" "கதகளி" இவைகளைப் போலவே மிகுந்த பயிற்சியோடும் கலை நிபுணதையோடுமிருந்தது.

இந்த "நோ" நாடகத்தில் ஆதியாக, சன்னியாசியாகவோ, மந்திரியாகவோ ஒரு நடிகன் பிரவேசித்து, தான் யாரென்றும், எங்கே யாத்திரை போகிறா னென்றும் தெரிவித்துவிட்டு, பாடிக்கொண்டே நடப்பான். அவன் யாத்திரை செய்வதாக அர்த்தம் அதற்கு. திடீரென்று அவன் நின்று, தானே ஏதோ ஒரு நகரவாசலுக்கு வந்து சேர்ந்துவிட்டதாகக் கூறி, அரங்க மேடையின் வலது மூலையில் சென்று நிற்பான். அப்பொழுது கதாநாயகன் பாடிக்கொண்டே பிரவேசித்து, யாத்ரிகனுடன் இசை அபிநயத்தோடு சம்பாஷணை செய்வான். அதில் அந்த நகரத்தின் பெயரையும், சரித்திரத்தையும், புனிதத்தையும், அதிலுள்ள விசேஷ புண்ணிய தீர்த்தங்களையும் பற்றிக் கூறிவிட்டு மறைந்துவிடுவான்.

இதைக்கண்டுயாத்ரிகன் ஆச்சரியப்பட்டு, வந்தவர் ஏதோ ஒரு தேவதை என்றுணருவான். யதார்த்தத்தில் அது ஒரு தேவதைதான். உடனே பல சாதாரண மனிதர்கள் பிரவேசித்து, அந்தத் தேவதை சொன்னதையே நாட்டுப்புற பாஷையில் யாத்ரிகனிடம் சொல்லிவிட்டுப் போவார்கள். அதைக் கேட்டு யாத்ரிகன் பாடிக்கொண்டு நிற்பான். அப்பொழுது கதாநாயகன் யதார்த்த தேவதை வேஷத்திலேயே தோன்றி, ஆடிப்பாடி, அபினயித்துத் தனது பூர்வ சரித்திரத்தையும், தான் எவ்விதம் அகால மரணமடைந்தா னென்பதையும், தான் தற்பொழுது ஆத்மீக உலகத்தில் எவ்விதக் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறா னென்பதையும், தனக்கு யாத்ரிகனுடைய பிரார்த்தனையே நற்கதியளிக்கு மென்றும் கூறிவிட்டு மறைவான். யாத்ரிகனுடைய பிரார்த்தனையுடன் நாடகம் முற்றுப்பெறும். இதுவே கதையின் சுருக்கம்.

நாடகமேடை 18 அடிச்சதுரமான, மரப் பலகைகளால் செய்யப்பட்ட, ஒரு பரண். அதன் உயரம் 4 அடி. அதன் மூன்று முன்பக்கங்களும் திறந்த வெளி. பின் புறத்தில் மாத்திரம் இப்பரணுக்கு வருவதற்கான, சுமார் 6 அடி நீளமும் 4 அடி அகலமுமுள்ள, ஒரு மரப்பலகைப் பால மிருக்கும். அந்தப் பாலம் பின் புறத்திலிருந்த சுவரிலிருக்கும் கதவிற் சென்று சேருகிறது. அச்சுவரில் கானகத்தைக் குறிப்பிடும்படியான ஒரு மரத்தின் சித்திரம் வரைந்திருக்கும். ஷி பாலத்தின் அருகிலும், பரணின் அருகிலும் அசலே அசலேயாகக் காட்டுத் தாழைச் செடிகளை நிற்கச் செய்திருப்பார்கள். கதை நிகழுமிடம் "கானகத்திலே" என்று குறிப்பிடுவதற்கே இந்த அடையாளங்கள்!

பிளாட்பாரத்தின் ஒரு பக்கத்தில் பின் பாட்டுக்காரர்களும், இசைக் கருவிகளும், கொட்டடிப்போரும் உட்கார்ந்

திருப்பார்கள். நடீநடர்கள் பிரவேசிப்பது மேலே குறிப்பிட்ட வாசலிலிருந்து பாலத்தின் வழியேயாகும்.

பாலத்துக்கும் பரணுக்கும் கீழே பல பெரிய மண் பானைகளையும் பரணிகளையும் வைத்து, சம்பாஷணை, பாட்டு, கொட்டு இவைகளின் ஒலிகளை பிருதுவாக்கி ரீதிப்படுத்தி வந்தார்கள். (Accoustics)

நடீநடர்கள் முகமூடியணிந்திருந்தார்கள். முகமூடி செய்வதில் ஜப்பானியர்களைப்போல் தேர்ச்சி பெற்றவர்கள் உலகத்திலேயே இல்லை. அவர்களுடைய பற்பல நிறங்களிலுள்ள ஆடைகள் கண்களைக் கவரும். பெரும்பாலும் பாத்திரங்கள் இறந்துபோனவர்களுடைய ஆத்மாக்களும், பிசாசுகளும், தேவதைகளும் ஆகையால் பழக்கமில்லாத அன்னிய நாட்டினர்களுக்குப் பயங்கரமாயிருக்கும்.

இந்த நடீநடர்கள் தமது வேஷங்களை மாற்றி, வேறு உடைகளில் வரவேண்டி வரும்பொழுது, அரங்க மேடை வேலைக்காரன் ஒருவன், கறுப்புத் துணியால் தன் முகத்தையும் உடலையும் மூடிக்கொண்டு கையில் மாற்று உடைகளுடன் மேடையில் வந்து, நடிகனுடைய உடையை மாற்றிக்கொள்ள உதவிவிட்டுத் திரும்பிப்போய் விடுவான். இவையெல்லாம் சபையோர் கண்பார்வையிலேயே நடைபெறும்! அச்சமயம் மற்ற நடீநடர்கள் நடித்தும், பாடிக் கொண்டும் இருப்பார்கள்! இது ஜப்பானிய நாடக மேடையிலுள்ள ஒரு பரம்பரையான சம்பிரதாயம். கறுப்புத்துணியால் மூடி விட்டால் வேலையாள் தோன்றவேயில்லை யென்று தரிசகர்கள் நினைத்துக்கொள்ள வேண்டுமாம்!

இந்தக் கறுப்புத்துணிச் சடங்கு பதினைந்து வருஷங்களுக்கு முன்பு வரையிலும்கூட ஜப்பானில் நிலவியிருந்ததாக டாக்டர் கஸின்ஸ் கூறியிருக்கிறார். இவர்கள் "நோ" நாடகத்துக்கு உபயோகப்படுத்தும் இசைக் கருவிகள் புல்லாங்குழல், கை விரல்களால் வாசிக்கும் மத்தளம், இரு கம்புகளாலடிக்கும் செண்டை, தோளில் அம்பறுத்தூணியைப்போல் கட்டிக்கொண்டு விரல்களால் அடிக்கும் இன்னொரு மத்தளம், ஜாலர் இவைகளாகும். ஆனால் இவைகளை விட முக்கியமான கருவி அவர்களுடைய நட்டுவனார் கையிலிருந்த சிறிய கைக்கோலே (தலைக்கோல்) யாகும். நடிகர் நடனம் செய்யும்பொழுது இதுவே அவருக்கு ஜதிக் கருவி.

பாரசீக நாடகங்கள்.

பாரசீக தேசத்திலும் கி. மு. 6-ஆம் நூற்றாண்டு முதலே நாடக மேடைகளும் நாடகங்களும் தோன்றிவிட்டன. அத்தேசத்துக் கருகிலிருந்த கிரேக்க தேசத்தில் நிலவிவந்த நாடகக் கலையைத் தாங்களும் கையாள ஆசைப்பட்டு, டேரியஸ் சக்கரவர்த்தி "மாகி விலா



பம் என்ற ஜராதுஷ்டிர மதபரமான கதை ஒன்றை அபினயிக்கச் செய்தாராம். ஆனால் தற்கால முஸ்லிம்கள் மோகரம் கொண்டாட்டத்துக்கு அடிப்படையான அலி ஹுஸேனின் சோகரசக் கதையை அபினயிக்கின்றனர். அதைத் தரிசிப்போரும், அதன் செலவுகளை வகிப்போரும் புண்ணியம் செய்தவர்களென்று ஜனங்கள் நம்புவதால் இது அடிக்கடி ஒரு பிரார்த்தனையாகவே பல நூற்றாண்டுகளாக நடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த நாடக சம்பிரதாயத்திலும் சிற்சில விசித்திரங்களிருக்கின்றன. கிரேக்க நாடக மேடையில் "கோரஸ்" என்னும் கோஷ்டியார் ஓயாமல் மேடையிலேயே நிற்பதைப் போல, பாரசீக மேடையில் நாடக ஆரம்பம் முதல் முடிவு வரையிலும் ஸ்டேஜ் மானேஜர் ஒரு சிறிய தலைக் கோலுடன நின்றுகொண்டேயிருப்பான். ஒவ்வொரு நாடக பாத்திரத்தையும் பெயரைக்கூறிப் பிரவேசிக்கக் கட்டளையிடுவான். அவர்கள் நடிக்கும்பொழுது குறுக்கிட்டுத் தவறுகளை எடுத்துக் கூறி, மறுபடியும் சரிவர நடிக்கச் செய்வான்! மறந்துபோன பாகங்களை நாடகப் புஸ்தகங்களைப் பார்த்துப் படிக்கச் சொல்லுவான்! இதற்காக அவனையும் நடிகர்களையும் சபையோர்கள் ஆமோதித்து, ஷர்பத்து தேனீர் முதலியன அளித்து வெகுமதி செய்வார்கள்! இவையெல்லாம் நாடகம் நடந்து கொண்டிருக்கும்பொழுதே, அரங்க மேடையின் மீது, சபையோர்கள் பார்வையிலே நடைபெறுபவையாகும்.

ஷேக்ஸ்பியர் காலத்து நாடக மேடை.

ஆங்கில நாட்டில் நாடகம் உயிர் பெற்றது கி. பி. பதினாலாவது நூற்றாண்டில். அக்காலத்தில் இயேசு நாதர் செய்த அற்புதங்களையும, வேறு நீதிமார்க்கக் கதைகளையும், சர்ச்சுகளில் புரோகித வகுப்பார் நடித்து, ஜனங்களிடையே கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்துவந்தனர். காலக்கிரமத்தில் பாமர நடிகர்களே நாடகத் தொழிலைக் கையாண்டு, மதசம்பந்தமில்லாத கதைகளையும் நடிக்கலாயினர். எட்டாவது ஹென்றி அரசர் ரோமாபுரி போப்பின் கையிலிருந்து ஆங்கில நாட்டுச் சர்ச்சு அதிகாரத்தைத் தாம் எடுத்துக்கொண்டபொழுது சிற்சில கம்பெனிகள் அரச போஷணையிலே வளர்ந்தன. ஆனால் எலிஸபெத்து மஹாராணியின் காலத்திலேதான் ஆங்கில நாடகம் உச்ச நிலையையடைந்து, ஷேக்ஸ்பியர் மகாகவியையும் உலகிற்களித்தது.

அக்காலத்து நாடகமேடைகளில் சிற்சில விசித்திரமான முறைகள் நிலவி வந்தன. லண்டன் நகரத்தில் சில நாடகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டிருப்பினும், அவைகளில் நடிக்கும் மேடைகள் பழைய கிரேக்கர்களுடைய பிளாட்பாரத்தைத் தழுவியதாகவே இருந்தன. ஆனால் மலையடிவாரத்துக்கும் டையனைஸஸின் பிம்பத்துக்கும் பதிலாக ஒரு திரையும், அதற்கு மேல்மாடியில் ஒரு பலகணியும், அமைத்திருந்தார்கள். திரையை நீக்கினால் அதற்குள்ளே ஒரு சிற்றரங்கமேடை; திரைக்கிருபக்கங்களிலுமாக இருசின் தட்டிகளை மூலைச் சார்வாக நாட்டியிருந்தார்கள். ஒவ்வொரு தட்டியிலும் வாசலும் கதவுமிருந்தன. நடிகர்கள் அவ்வாசல்கள் வழியாகப் பிரவேசித்து, வெளியரங்க மேடையிலும் சிலசமயம் திரையை நீக்கி அவ்வுள்ளரங்க மேடையிலும், சிலசமயம் மாடி போன்ற பலகணி மேலேறியும், நடித்துவிட்டு, மறுபடியும் அவ்வாசல் வழியாகவே திரும்பிப் போய்விடுவார்கள். எல்லா நாடகங்களுக்கும், —காடானாலும், கடலானாலும், தெருவானாலும், வீடானாலும், உள்ளானாலும், அரண்மனையானாலும் — இந்த ஒரேவித ஸீன் ஜோடிப்புத்தான்! பிளாட் பாரத்துக்கு முன்னே திரை கிடையாதாகையால், மேடையில் மரணம், யுத்தம், கொலை, எல்லாம் அபினயித்தபின்பு, இறந்து போனவர்களுடைய பிரேதங்களை மற்றப் பாத்திரங்களில் தகுதியுள்ளவர்கள் தூக்கிச்சென்றார்கள்! சில சமயம் நாற்காலி, மேஜை, கட்டில், பூச்செடி இவைகளையும் கதை முடிவு வரையிலும் பிளாட்பாரத்திலேயே இட்டிருந்தார்கள். காட்டு ஸீனென்றால் "காடு "என்றும் பாரீஸ் நகரமென்றால் "பாரீஸ்" நகரமென்றும் அட்டையில் பெரிய எழுத்துக்களில் எழுதி, தட்டிகளில் தூக்கினார்கள். அரங்கமேடை பிளாட்பாரத்திலும், அதனருகிலும், நகரப் பிரபுக்களுக்கும், பிரமுகர்களுக்

இன்றிரவு...



உங்கள் விருந்தாளிகளுக்கு டால்டாவில் தயாரித்த தக்காளி மகாஷாவை அளியுங்கள்!

தக்காளிகளில் இரும்புச்சத்து இருப்பதினால் இவை இரத்தத்திற்கு மிகவும் சிறந்தவை. தவிர இவைகள் ஆரோக்கியத்தைப்பாதுகாக்கும் விடமின்களேயும் தருகின்றன. தக்காளிகளே பக்குவம் செய்யாமலோ அல்லது பின் வரும் முறைப்படி ருசியாக சமைத்தோ பரிமாறலாம். நல்ல கெட்டியான 6 தக்காளிகளின் மேல்பாகங்களே நறுக்கி உட்பாகத்தை குடைந்தெடுக்கவும். ½ கப் வெந்து மசித்த துவரைப்பருப்பு அல்லது துருவி வெந்த மாமிசம் இவைகளில் ஏதாவதொன்றுடன், வெந்து உரித்த உருளைக்கிழங்கு, நறுக்கிய பச்சைமிளகாய், உப்பு இவைகளே கலக்கவும். இக்கலவையை ஆறவைத்து, தக்காளிகளில் நன்ருக திணித்து, திறந்திருக்கும் பாகங்களே மைதாமாவினுல் மூடவும். குழிவு குறைந்த வாணலியில் டால்டாவை சூடாக்கி தக்காளிகளின் மாவுதடவிய பாகங்களே முதலில் பொரிக்கவும். சிவந்ததும் திருப்பி எல்லா பாகங்களேயும் இலேசாக பொரிக்கவும். டால்டாவில்தயாரித்த உணவு சூடாகவோ, ஆறியோ எப்படி இருந்தபோதிலும் ருசிமிக்கதாய் இருக்கும். டால்டா ஒரு சுத்தமான தாவரக்கொழுப்பாகையால் அது அதிகநேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக முழுவதும் பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.

வீட்டிலேயே சிரமமின்றி ருசிமிக்க
மதுரபதார்த்தங்களே தயாரிப்பது எப்படி?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

கும், ராஜகுடும்பத்தாருக்கும் இடமளித்தார்கள். ஆனால் பின்பாட்டு, வாத்தியம் முதலிய கருவிகளைத் தட்டிகளுக்குப் பின்னால் மறைத்து வைத்துக்கொண்டார்கள்.

ஒரு நாடகத்தில் 30 ஸீன்கள் வரையிலுமிருக்கும். நடீநடர்கள் "தனி மொழி" (Soliloquy) "தனக்குள்" (aside) இவைகள் மூலம் தங்கள் பூர்வ கதைகளையும், இதயத்திற்குள்ளே சிந்திக்கும் விஷயங்களையும் வெளியிட்டு வந்தார்கள். சில சமயம் சூத்திரதாரனோ, தூதுவனோ, தோன்றிக் கதையின் சில பாகங்களைக் கூறுவதுமுண்டு. நாடகம் உயர்ந்தரகம் இலக்கிய காப்பியமாக எழுதப்பட்டிருந்தது. நடர்களும் மிகுந்த அறிவாளிகளாயிருந்தனர். பெண் பாத்திரங்களை நடிக்க அழகுடைய பாலர்களையே வேஷமிட்டு வந்தனர். ஏனெனில் (பெண்) நடிகளில்லை. யாதனுசரீரங்களும், தேவதைகளும் பிளாட்பாரத்தினடியிலிருந்து ஒரு துவாரம் வழியாகப் பிரவேசித்து அவ்விதமே மறைவார்கள்.

(தொடரும்)



"ஜடெக்ஸ்" கண் மையின் குணத்தைப் பரீக்ஷித்தறிந்த பல டாக்டர்கள் இதை சிறு குழந்தைகள் உள்பட உபயோகிக்கலாமென்று அத்தாக்ஷி செய்திருக்கிறார்கள். "ஜடெக்ஸ்" கண் மை தற்போது அழகான திருகுடப்பிகளில் பாக் செய்து 12 அணா விலைக்கு எல்லா ஊர்களிலும் எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

மட்டமான போலிகளை வாங்கி உங்களது அழகான கண்களை கெடுத்துக்கொள்ளாதீர்கள்

தயாரிப்பவர்கள் :—

அரவிந்த் லாபரட்டரீஸ்,

ஆற்காட் ரோட் — சென்னை—16

ஸ்திரீ

(இதை ஸ்திரீகள் படிக்கக்கூடாது)

ரா. ஸ்ரீ.

ஸ்திரீ என்பது மனிதனுக்குத் துன்பத்தைக் கொடுப்பதற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பிரகிருதி.

பிறந்ததிலிருந்து ஸ்திரீயின் நோக்கம் மனிதனைத் தனக்கு அடிமைப்படுத்துவதுதான். மனிதனை அடிமைப்படுத்துவது என்பதற்கு மற்றொரு பெயர் கலியாணம். இந்த லக்ஷியத்தை அடைவதற்காக ஸ்திரீ பதினான்கு வயதிலிருந்து மிகவும் தீவிரமாகப் பிரயத்தனப்படுவாள்.

தன்னுடைய முயற்சியில் வெற்றியடைய, தன்னிடத்திலுள்ள எல்லாவித கைவரிசைகளையும் காண்பிக்கத் தயங்கமாட்டாள். பள்ளிக்கூடம் அல்லது கல்லூரி போகும் சாக்கில் தன்னை மனிதனுக்கு ஓர் கண் காட்சிப் பொருளாகச் செய்துகொள்வாள். வெளிக்கிளம்புமுன் உடம்பை நன்கு அலங்கரித்துக்கொள்வாள். முகத்தில் ஸ்னோ, பௌடர் என்னும் பலவித சுண்ணாம்பைப் பூசிக்கொண்டு, தான் கறுப்பல்ல என்று மற்றவர் நினைக்கும்படி செய்வாள். கண்ணில் மை என்னும் கரியை அள்ளித் தீற்றிக்கொண்டு அங்குமிங்கும் அலைவாள். சிகப்பான உதடுகளிருந்தால் அழகு என்று யாரோ சொல்லக் கேட்டு, 'லிப்ஸ்டிக்' என்னும் வர்ணத்தை உதடுகளில் தடவிக்கொண்டு, தபால்பெட்டி மாதிரி காட்சியளிப்பாள். வர்ணத்தால்தான் மனிதனை மயக்கலாமென்றெண்ணிக் கனகாம்பரம், நீலாம்பரம் பச்சாம்பரம் என்னும் மணமற்ற மலர்களைப் புல்கட்டுமாதிரி தலையில் சுமந்துசெல்வாள். சுயமாக இருக்கும் உயரம் போதாதென்று "ஹை ஹீல்டு ஷூ"வைப் போட்டுக்கொண்டு, இரண்டு குதிகால்களிலும் முள் தைத்தால் எப்படி நடந்து செல்வாளோ அப்படி நடப்பாள். இதைத் தவிர கையில் ஓர் சிறிய தோல்பையையும் தூக்கிச் செல்வாள். இந்தப் பையில் ஓர் சீப்பு, கண்ணாடி, ஒரு சிறிய ஸெலுலாயிட் சிமிழில் பௌடர், ஒரு "பப்", எம்பிராய்டரி வேலை செய்த கைக்குட்டை எல்லாம் அடங்கியிருக்கும். எப்பொழுதாவது முகத்தில் எண்ணெய் வழிகிறது என்று சந்தேகம் ஏற்பட்டால், உடனே பையைத் திறந்து, பௌடரை மறுபடியும் முகத்தில் அடித்துக்கொள்வாள்.

ஸ்திரீயை ஒரு தூண்டா விளக்குக்கு ஒப்பிடலாம். சுற்றியுள்ள மனிதர்களை விளக்குப் பூச்சிகளுக்கு உவமை கூறலாம். விளக்கினிடம் சென்றால் அதில் விழுந்து செத்துவிடுவோம் என்ற மதி விளக்குப் பூச்சிகளுக்குக் கிடையாது. அதே போல், மனிதனுக்கும் ஸ்திரீயின் மாய வலையினிடம் சென்றால் சிக்கிக் கொண்டு வாழ்நாள் முழுதும் அடிமையாக வேண்டும் என்ற விவேகம் கிடையாது.

மேற்கூறியவாறு ஸ்திரீ போடும் வெளிச்சத்தில், தன் சுய பார்வையை யிழந்து, ஸ்திரீயை ஓர் அழகான வஸ்து வென்றெண்ணி, அதை அடைய வேண்டுமென்ற அவாவுடன் தயக்கமின்றி மனிதன் அடிமைப் பத்திரத்தில் கையொப்பமிடுகிறான்

ஸ்திரீயின் சூழ்ச்சியே சூழ்ச்சி! கையெழுத்துப் போடுமுன் தனக்கு ஏற்படப் போகும் அடிமைத் தனத்தை யுணர்ந்து ஓடிப் போய் விடப் போகிறானே என்று பயந்து, தானே அடிமைபோல் நடிக்க ஸ்திரீ முற்படுகிறாள். கலியாணத்தின் போது மனிதனிடம் ஒரு கயிற்றைக் கொடுத்து, அதைத் தன் கழுத்தில் கட்டும்படி அவனை ஏவுகிறாள். மாட்டை ஓர் கயிற்றைக் கொண்டு எப்படி அடக்கி ஆளுகிறானோ அப்படியே தன் மனைவியையும் தாலியைக் கொண்டு அடக்கி ஆள முடியும் என்று மனிதன் மனப்பால் குடிக்கிறான் ஸ்திரீ செய்திருக்கும் சூழ்ச்சியை அவன் எப்படி அறிவான்?

மணமான சில வருடங்களுக்கு மனிதன் தன் விலங்குகளைத் தங்கக்காப்பு என்று கருதுகிறான். எவள் ஒருத்தி தன்னை அடிமை வாழ்விற்கு உள்ளாக்கினாளோ, அவளையே தன்னுடைய இஷ்ட தேவதை என்று பூஜிக்கிறான். அவளுடைய ஒரு புன்னகைக்கோ கடைக்கண் பார்வைக்கோ நாள்முழுதும் காத்துக்கிடக்கிறான், அவள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யத் தயாராகிறான். அவளை வீட்டிற்கு எஜமானி என்று அழைக்கிறான். தான் அவளுக்கு ஊழியன் என்று பெருமை கொள்கிறான். அவள்முகம் வாடாமல் பார்த்துக்கொள்வதே தன் வாழ்க்கையின் லக்ஷியம் என்று கருதுகிறான். தன்னைக் கட்டியிருக்கும் சங்கிலிகள் நாளுக்குநாள் அதி

கரித்துக்கொண்டு போவதை அவன் உணருவதில்லை.

எப்பொழுதாவது மனிதன் தன்னுடைய எஜமானத்துவத்தைக் காண்பிக்கத் தலைப்பட்டாலோ, உடனே ஸ்திரீ தன்னுடைய நீலித்தனத்தைக் காண்பிக்க முற்படுவாள். இரண்டு நீர் வீழ்ச்சிகளை வரவழைத்து, தன்னுடைய கணவனை அதில் மூழ்கடித்து, அவனை, "போரும், போரும், அழுகையை நிறுத்து" என்று கதறும்படி செய்து, "புத்தி, புத்தி" என்று அவன் கன்னத்தில் போட்டுக் கொண்ட பிறகு, தான் அவனை மன்னித்து விட்டதற்கு அறிகுறியாக, அவனை நோக்கி ஒரு புன்னகை புரிவாள்.

நாலு காசை விட்டெறிந்து விட்டு, ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு, "ஹாய்" யென்று இருந்த மனிதனுக்கு, தன் இல்லத்தில் ஸ்திரீ காலடி வைத்ததிலிருந்து ஏற்படும் தொல்லைகளுக்குக் கணக்கே யில்லை. அவன் தன் காரியாலயத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்ததும், பிரதி தினமும் ஏதாவது 'இல்லை'

சப்தம் அவனுடைய காதில் விழும்: இன்று உப்பு இல்லை, நாளை அரிசி இல்லை, மற்ருெரு நாள் விறகு இல்லை, மாதக் கடைசியில் எல்லாம் இல்லை. இந்த ‘இல்லை’ சப்தங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும் அவனுடைய பணப் பையும், அனுதாபத்தில் சில சமயங்களில் “பணமில்லை ”யென்றுகூடச் சொல்லிவிடும். பணமில்லாததற்காக அடிமைவாழ்வை நிறுத்தி விடமுடியுமா? கடன் வாங்கவேண்டியது தான்.

கணவன் கஷ்டப்படுகிருனேயென்று கொஞ்சமேனும் ஈவு இரக்கமுண்டா ஸ்திரீக்கு? விட்டில் சிக்கனத்தை மேற்கொள்கிருளா? இடையாது. அதற்கு மாருக, மனிதனின் செலவை எவ்வளவு அதிகப்படுத்த முடியுமோ அவ்வளவு அதிகப்படுத்தப் பிரயத்தனப்படுகிருள். தனக்குப் புடவை, நகைநட்டு கேட்பதுடன் நிற்காமல், இரண்டு வருஷத்திற்கு ஒரு தரமோ, வருஷத்திற்கு ஒருதரமோ மனிதனிடம் ஒரு சிசுவைச் சமர்ப்பித்துவிட்டு, அதற்குப் பால் வேண்டும், ‘கிளாக்ஸோ’ வேண்டும், சொக்காய்க்குத் துணிவேண்டும் என்று கேட்கிருள். சிலசமயங்களில், ஒரே தடவையில் இரண்டு குழந்தைகளைச் சன்மானமாகக் கொடுத்துவிடுகிருள். (நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சைனுவில் ஒரு பெண்மணி ஒரே பிரசவத்தில் எட்டுக் குழந்தை ஈன்ருளாம். நல்லவேளையாக உங்கள் சம்சாரமும் என்னுடைய சம்சாரமும் இவ்வித ஆராய்ச்சியில் இதுவரையில் இறங்கவில்லை.) பழைய காலத்தில் மேனகை கொடுத்த சிசுவை விசுவாமித்திரர் நிராகரிக்க முடிந்தது. தற்கால மனிதன் விசுவாமித்திரரைப் பின்பற்றமுடியுமா? மனைவி எவ்வளவு பரிசுகள் கொடுப்பினும், அவைகளை மனமார ஏற்று, அவைகளுடன் கொஞ்சிக் குலாவி, அவைகளைப் போஷிப்பதற்காக எவ்வளவு சிரமப்பட முடியுமோ அவ்வளவு சிரமப்பட்டு, தன் உடல் நிலையையும் கவனிக்காமல், உழைத்து உழைத்து, சில சமயங்களில் நோயிலும் அகப்பட்டுக்கொள்கிருன்.

அவனுடைய வாழ்நாள் முழுதும் அவனைத் தன் ஊழியனுக்கியதைப்பற்றி ஸ்திரீ சந்தோஷப்படுகிருள். ஒருவேளை அவன் தன் தளைகளை அறுத்துக்கொண்டு சுதந்திரம் பெற்றுச்சென்று விட்டால் என்னசெய்வது? அதற்காகத்தான் ஸ்திரீ தன் கணவனை இன்ஷூர் செய்யுமாறு வற்புறுத்துகிருள். தன்னுடைய சாண் இடுப்பை அரைச்சாணுகச் செய்துகொண்டு, மாதம் இரண்டு ரூபாயாகச் சேர்த்து, இன்ஷூரன்ஸ் கம்பெனியில் கட்டுகிருன். அவன் இருந்து அனுபவிக்கவா?

அந்தோ மனிதனின் நிலைமை எவ்வளவு பரிதாபகரமானது! அவன் இருந்தும் அடிமை, இறந்தும் அடிமை. இருக்கும்போது ஸ்திரீக்கு உடலால் சேவை செய்கிருன், இறந்த பிறகு பணத்தால் ஊழியம் செய்கிருன். அவனை இப்படி வாட்ட ஸ்திரீக்கு எப்படித்தான் மனம் துணிகிறதோ?

* * *

மேலே எழுதியிருக்கும் தத்துவத்தை நான் கலியாணம் செய்து கொள்ளுமுன் உணரவில்லையே என்று நானே என்னை நொந்துகொள்கிறேன். இப்பொழுது என்ன செய்வது?

இதோ கமலா கூப்பிடுகிருள். நேற்றைய தினமே குழந்தைக்கு “ஆஸ்டர் மில்க்” வேண்டுமென்று சொன்னுள். அதை ஞாபகப் படுத்தத்தான் கூப்பிடுகிருள் போலிருக்கிறது. என்னவென்று கேட்டுவிட்டு வருகிறேன்.



துணிகள் வெண்மையாக சலவை செய்யப் பட்டுள்ளன...
துணிகள் பிரகாசமாக சலவை செய்யப் பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
Rs.10,000 Reward!
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்பினால் தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!
S. 128-50 TM

வளையல் வாழ்வு

எஸ். கோமதிசுப்ரமணியம்

வளையல்காரன் தெருவில், "வளையலோ வளையல், வளையலோ வளையல்" என்று கூவிக்கொண்டு போனால் பங்கஜம் பெருமூச்சு விடுவாள். "அடப்பாவி. இத்தனையும் வைர வளையலாக இருக்கக்கூடாதா? இல்லை தங்க வளையல்களாக இருக்கக்கூடாதா? திரும்பத் திரும்ப, கண்ணாடியும் பிளாஸ்டிக்கும் யாருக்கு வேண்டும்?" என்று ஜன்னல் வழியாகப் பார்ப்பாள். அந்தக் கண்ணாடி வளையையும், ரப்பர் வளைகளையும் வாங்கும் ஐவேசுகூட அவளுக்கு இல்லை. ஜோடி நாலணா, எட்டணாவுக்குப் பவுனும் வைரமும் விற்க வரக்கூடாதா என்று பெருமூச்சு விடுவாள் பேதைப் பெண்.

அவளுக்கு உலக நாணயப் பெருக்கம், தங்கத்தின் பாங்கி மதிப்பு, வைரத்தின் குணதிசயம் தெரியாது. தங்கத்தின் பகட்டும் அழகுமே அவள் வரை தெரியும். கண்ணாடி வளையல்களைப் போலத் தங்க வளையல்களும் நாலணாவுக்கு ஏன் விற்கக்கூடாதென்று புரியவில்லை. தனக்குத் தங்கத்திலே வளையல்கள் கை நிறைய அடுக்க வேண்டுமென்று தாய் தகப்பனிடம் சொல்லுவாள். அவர்கள் "அம்மா, உன் மனம்போல நீ பெரிய மனுஷி ஆனதும் போட்டுக் கொள்வாய், காலம் வரும்" என்று தேற்றினர்கள்.

பங்கஜம் வளர வளர ஏழைப் பெண்ணாகத்தான் இருந்தாள். கண்ணாடி வளையணிந்த கரத்தோடுதான் இருந்தாள். ஆசைக்கு ஒரு தங்கவளையல் இல்லை. மெழுகு வைத்த தட்டைக்காப்புக்கூட கிடையாது.

பங்கஜம் இருந்த பக்கத்து வீட்டில் கல்யாணம் நடைபெற்றது. அக் கல்யாண வீட்டாரின் விருந்தாளியாக ஒருவர் வந்திருந்தார். கல்யாணவீட்டுச் சந்தடியும் புழுக்கமும், பிடிக்காமல் அக்கம்பக்கத்து வீட்டிலே தங்க நினைத்தபோது பங்கஜத்தின் தகப்பனர் தம் வீட்டுக்குக் கூட்டிவந்தார். வந்தவர் பெரிய பணக்காரர் என்றும் கண்டுகொண்டார். கை நிறைய வகை வகையான மோதிரங்கள் டால் வீசும் கடுக்கன், கழுத்தில் மைனர் சங்கலி, கையில் செயின். அவருக்கு நகை வியாபாரம். காசுக்கடைக்காரர் குணமும் பேச்சும் பங்கஜத்தின் தகப்பனருக்குப் பிடித்திருந்தன......

"ஐயாவுக்கு எத்தனை குழந்தைகள்?" என்று பங்கஜத்தின் தகப்பனர் பேச்சை ஆரம்பித்தார்.

"குழந்தைகள் இல்லை."

"கல்யாணம் ஆகி எத்தனை வருஷம் ஆச்சு?"

"நாலு வருஷம் ஆச்சு."

"அடப்பாவமே, காசி ராமேசுவரம் போகக் கூடாதோ?"

"அவள் காலமாகிவிட்டாள். ஆறு மாதம் ஆகிறது."

"வேறு நபராக இருந்தால் இரண்டாம் கல்யாணம் செய்துகொள்வார்கள். நீங்கள் ஒரு மாதிரி!"

இப்படி பேச்சு பலவழியாகப்போய் முடிவில் பெரியவளாயிருந்த பங்கஜத்தை மறுதாரமாகக் கேட்டார். பங்கஜத்தின் தகப்பனர், தமது குடும்பத்திற்கே யோகம் பிறந்துவிட்டதாக நினைத்தார். பிறகு காசுக்கடைக்காரர் சொத்தையும் வியாபாரத்தையும் வயதையும் கணித்து மகள் நல் வாழ்வு வாழ முடிவு செய்துவிட்டார்.

பங்கஜம் பால்யம் முதலாகக் கனவுகண்டு வந்தது, கை கூடிற்று. அவள் கையிலே அடுக்கடுக்காக வளையல்கள் கூடின. கழுத்திலே மூன்று வடத்திலே சங்கிலிகள். காதிலே வைரமில்லாவிட்டாலும் வெள்ளைத் தோடுகள். நகைப்பித்துப்பிடித்த பங்கஜத்திற்குக் கை நிறைய, கண் நிறைய நகைகள் போட்டார், காசுக்கடைக்காரர்.

பங்கஜத்தைக் கண்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்கள், பொறுமைப் படாத ஏழைகள் கிடையாது.

2

ஒரு வருஷம் ஒரு நிமிஷமாக ஓடிவிட்டது. பங்கஜத்தின் நகைப் பித்தினல் நாளொரு வளையும் புதிதொரு மெருகுமாகப் போட்டுவந்தார். கல்யாணத்திற்கப்புறம் அவள் பிறந்த வீட்டிற்கு வந்தவள் புதிய புதிய பாஷன் நகைகளுடன் வந்ததைப் பார்த்து எல்லோரும் வியந்தார்கள். பெண்களுக்கு, "அடடா பிறந்

தால் பங்கஜம் மாதிரியல்லவா பிறக்கவேண்டும்!" என்று மனமொடிந்து பேசினார்கள்.

"ஏன் பங்கஜம்! புதிதாகப் பிளாஸ்டிக் வளை வந்திருக்கிறதே. போட்டுக்கொள்ளேன்" என்று யாராவது சொல்வார்கள்.

"தூ, பிளாஸ்டிக்கு யாராவது போடுவார்களா? புதியதாகப் பாஷன் வந்திருக்கிறதே, இதைப் பாருங்கள்" என்று சொல்லுவாள். கையைக் குலுக்கினால் கலகலவெனப் பொன் வளையல்கள் கண்ணைப் பறிக்கும். பேச்சோடுமட்டும் இருக்காது உண்மையிலேயே புதிய புதிய பாஷன்களில் நகை போட்டு வந்தாள்.

ஆனால் இந்தச் சந்துஷ்டியும் பெருமையும் எப்போதும் இருக்குமென்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். பங்கஜம்கூடக் கணவரைப்பற்றி அவ்வளவு பெருமைப்பட்டுக்கொண்டாள். ஒருநாள் இருவருக்கும் நகை பற்றிச் சண்டை வந்திருக்கிறது. பிறகு சண்டை வருவது நித்யசம்பவமாகிவிட்டது. வளைகள் வருவது நின்றேவிட்டது.

புது மனைவி மோகத்தில் அந்த மாதிரி பாஷன்கள் அவளுக்குக் கொடுத்தாரோ, கடையில் இருப்பவை அவள் கழுத்திலும் கையிலும் இருக்கட்டுமென்று செய்தாரோ, திடீரென அவள் நகைகளைப் புதுப்பிக்க மறுத்தார். மறுத்ததோடு நின்றாலும் பரவாயில்லை. நகைகளின் எண்ணிக்கையும் குறைந்தது. வருஷம் இரண்டாவதற்குள்ளாகப் பங்கஜத்திற்



குப் புருஷன்மீதிருந்த அபிமானமும் பக்தியும் குறைந்துவிட்டன.

அவள் கூலிப்பெண்ணாக இருந்தபோது வளை காப்பு நடத்துவதற்குக்கூடக் காசுக்கடைக்காரர் இஷ்டப்படவில்லை, இதனால் பங்கஜம் மிகவும் மனக் கஷ்டமடைந்தாள். பிறகு நாலு பேர் சொல்லி, ஒரு வெள்ளி வளையல்கூடப் போடா மல் கண்ணாடி வளைகளை போட நேர்ந்தது.

காசுக் கடைக்காரர் மீது பங்கஜத்தின் தாய் தகப்பனுக்குக்கூட வருத்தம் பிறந்தது. நாலு பேருக்கு முன்னிலையில் செய்யவேண்டிய சடங் குகளைச் செய்யாமல், மருமகன் அவமானம் செய்து விட்டதில் பெற்றோர் மனம் நொந்து போயினர்.

காசுக்கடைக்காரர் வளைகாப்பு முடிந்து மனை வியைப் பேறு காலத்திற்கு அனுப்பும்போது அத்தனை நகையும் கழற்றி வைத்துவிட்டுப் போகும்படி வற்புறுத்தினார். பங்கஜம் கண் ணீர் விட்டாள்; கதறினாள். அவர் ஒப்புக் கொள்ளவில்லை, அவருக்கு ஜோஸ்யத்தில் நம் பிக்கையோ என்னவோ, முதல்தாரத்தைப் போலவே இரண்டாந்தாரமும் தலைப்பிரசவத் தில் இறந்துபோகலாம் என்பதாக.

"ஐயோ, நகைகளை விட்டுவிட்டு போகச் சொல்லுகிறீர்களே, நான் பிழைக்கமாட்டேன் என்று நினைக்கிறீர்களா?" என்று கெஞ்சி னாள். அவள் பேச்சு எடுப்படவில்லை.

"ஒரு திருகாணிகூட இருக்கக் கூடாது. சிகப் புத் தோடும் சிகப்பு மூக்கத்தியும் ஒரே ஒரு வளையும் தவிர அத்தனையும் இங்கே வைத்து விட்டுப்போ" என்றார்; பேச்சோடு நில்லாமல் எல்லா நகைகளையும் வாங்கி, பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டார்.

பங்கஜம் தகப்பனாருடன் ஊருக்குப் புறப் பட இருந்தாள். புறப்படும்போது தன்னையே கண்ணாடியில் பார்த்தாள். முகம் களை இழந்து பேயறைந்ததுபோல உணர்ந்தாள். நகை பறிபோனதை நினைத்தபோது ஏன் குழந்தை யுண்டானோம் என்றுகூட எண்ணிவிட்டாள். போகவே மனமில்லை. அதனால் அன்று புறப் பட முடியாமல் சாக்குப் போக்குச் சொன் னாள். அவள் தகப்பனாருக்குக் காரணம்தெரிந்து விட்டது. மறுவாரம் வந்து கூட்டிப்போவ தாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மனைவி தாய் வீட்டுக்குப் போகவில்லையென் பதை உணர்ந்தார் காசுக் கடைக்காரர். அத் தோடு அன்றிரவே அவருடன் மல்லுக்கு நின் றாள். அழுதாள், விழுந்தாள், அவர் நகை தர முடியாது என்று சொல்லிவிட்டார். பேச்சு விவாதமாக அடிதடியில் முடிய இருந்தது. பங்கஜம் மறுநாள் அவர் மனதைக் கலைத்து, தன் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தாய்வீடு போக நினைத்தாள்.

தகப்பனார் மறுவாரம் வந்துவிடுவார். ஏழு நாளிலும் இருவருக்கும் பேச்சு வார்த்தை கிடை யாது. அப்படி ஏதாவது இருந்தால் அடியும் உதையும் பெறுவாள்.

மறுவாரம் தகப்பனார் வந்தபோது மகளு டைய தேக நிலைமையைக் கண்டாரே தவிர அவள் மனசை அறியவில்லை. "சரியம்மா, உன் நகை எங்கே போகும். நாலுமாதம் சென்று நீதானே போட்டுக்கொள்ளப் போகி றாய்? ஏன் வம்பு; உன் புருஷனுடன் ஏன்சண் டை? ஊருக்குப் போகலாம்வா" என்று சமா தானமாக அழைத்துப்போய்விட்டார். தாய்வீடு வந்த பங்கஜம் எப்போதும் புதிய புதிய பாஷன் நகைகள் போட்டு வருவதைப் பார்ப்பதற்காகப் பெண்கள் வந்தார்கள். இப்போது மூளியாக இருக்கிறாள். உடம்பு முழுவதையும் போர்த் திக் கொண்டிருந்தாள்.

பங்கஜத்தில் முன்னிலையில் சிரிக்காவிட்டா லும் வெளியே போய் அவள் நிலையைக் கண்டு வம்பளந்தார்கள்; சிரித்தார்கள்.

"இவள் நகை போட்ட பெருமை அப்போ சிரித்தாள். கையைக் குலுக்கிக் குலுக்கிப் பேசி னாள். இப்போ?" என்பாள் ஒருத்தி.

"அடிபட்ட கையைக் காட்டுவாளா? என் பாள் அடுத்தவள்,

"முதுகில்கூடத் தழும்பு தழும்பா கிடக்கிற தாமே" என்று துப்பறியும் புலி சொல்லும்.

"வளையல் வரை மாதிரி கையில் வரை கிடப்பதைப் பார்த்தாயோ?" என்பாள் மற் றொரு ரசிகை.

இப்படிப் பெண்கள் அவள் நிலைமைக்கு இரங் காமல் எகத்தாளமாகப் பேசினார்கள். பங்க ஜம் புருஷன் செய்த கொடுமையை மறந்தா லும் அக்கம் பக்கத்தார் பேசிய கொடுஞ் சொற் களை மறக்க முடியவில்லை. தன்னைப் புருஷன் அவமானம் செய்து விட்டார் என்று முடிவு கட்டினாள். பைத்தியக்காரி மாதிரி, 'தாய் வீட் டுக்கு வந்தால் தனக்குரிய நகை நட்டோடு வருகிறது; இல்லை, புருஷன் வீட்டோடு இருக் கிறது' என்ற தீர்மானத்தில் அந்தச் சூலி புறப்பட்டாள். ஊரில் யார் எத்தனை புத்தி சொல்லியும் கேட்கவில்லை.

இப்படியும் பைத்தியம் இருக்குமா? என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

3

அவள் வீட்டுக்குள் போனபோது புருஷன் இல்லை. பெட்டிச் சாவி கிடக்குமிடத்

தில் கிடந்தது. வீட்டு வேலைக்காரி எஜமானி அம்மாள் வந்துவிட்டாளே என்று ஆனந்தப் பட்டாள். ஒரு வேளை தாய் தகப்பனிடம் கோபித்துக்கொண்டு தனியாக வந்திருக்கும் விபரத்தைத் தன் எஜமானிடம் சொல்ல வேண்டுமென் பதாகப் போய்ச் சொல்லியும் விட்டாள்.

பங்கஜம் ஆவல் துடிக்க, பித்துக்கொண்ட வள்போல் அலமாரியைத் திறந்தாள். திறந்தால் அவள் எதிர்பார்த்துவந்த நகை ஒன்றுமே யில்லை. திடுக்கிட்டாள். அவளுக்கு மூச்சே நின்றுபோவது போலிருந்தது. தன்னை வஞ்சித்துவிடவே புருஷன் அப்படிச் செய்துவிட்டதாக எண்ணி மாலை மாலையாகச் சுவரில் சாய்ந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். வேலைக்காரி சமாதானம் செய்தும் சாப்பிடவும் இல்லை, அடுப்புப் பற்றவைக்கவும் இல்லை.

கடையை மூடிவிட்டுக் காசுக் கடைக்காரர் வந்தபோது சோர்ந்து கிடந்தாள் பங்கஜம்.

ஒன்றும் தெரியாதவர் போல, "ஏன் வந்தே, எப்போ வந்தே?" என்று கேட்டார். அவள் கேவிக் கேவி அழுதாள்.

"செத்தாலும் நான் அங்கே போகமாட்டேன். என் நகைகள் வளைகள் வேண்டும்."

"கிடையாது" என்றார் பழைய முறுக்கில்லாமல். அழாத குறையாகச் சொன்னார். அவள் வாதாடினாள். அவர் கையில் கிடந்த மோதிரங்கள் செயின் கடுக்கன் ஒன்றையும் காணோம். மைனர் சங்கிலியும் இல்லை. அவர் நெஞ்சிலே மறைத்து வைத்திருந்த விஷயத்தைச் சொல்லி விட்டார்.

"பங்கஜம், ஆறுமாத காலமாக வியாபாரத்தில் நஷ்டம் வந்துவிட்டது. மீளமுடியாத நிலை. கடைசியாக உன்மீதுள்ள நகைகள் தான் தலை தப்பவைத்தன. அத்தனையும் விற்றுக் கடனைக் கொடுத்துவிட்டேன். உன்னிடம் வியாபார நெருக்கடியைச் சொல்லக்கூடாது என்று நினைத்தேன். கடன் தொல்லையால் உன்னையும் ஆறுமாதகாலமாக ஹிம்சித்துவிட்டேன்" என்று கண்ணீர் சோர அழுதார் குழந்தைபோல.

பங்கஜம் திடுக்கிட்டாள். அவர் சொல்லிலே உண்மை இருக்கிறதென்பதைத் தளர்ந்த மேனியும் முகக்களையும் தெரிவித்தன. தன் கனவுகள் இனி உருப்பெரு என்று முடிவும் செய்தாள்.

"நிஜமாகவே விற்றுவிட்டீர்களா?"

"ஆமாம், வெளியே நாலுபேரை விசாரித்துக் கொள். மறுபடியும் பணம்வந்தா வளையல்கள் செய்யலாம்."

"என்னிடம் சொன்னால் தரமாட்டேனா?"

"வியாபார ரகசியம் அப்போதே வெளியானால் இந்த வீடுகூட மிஞ்சி இருக்காது. பரவாயில்லை. உன்னைக் கொடுமையாகக் கூட நடத்தி விட்டேன்."

"நான் உங்கள் நிலையைப் புரிந்து கொள்ள வில்லை."

"ஐயோ, உன்னைத் தவருக எண்ணிக்கொண்டு அடித்துவிட்டேனே. சொல்லியிருந்தால் மனதோடு கொடுத்திருப்பாயே!" என்றார்.

"இப்போது நீங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்? போதாதகாலம்."

"இன்னும் ஒரு வருஷத்தில் நிறையச் சம்பாதித்துப் பழையபடியே நிறைய நகைகள் போட்டுவிடுகிறேன்." என்று கையைப் பிடித்தார்.

"இந்தக் கைகளுக்கும் தங்க வளையல் புதிய பழக்கந்தான். வளையலே இல்லாமல் எவ்வளவோ நாட்கள் இருந்திருக்கிறேன்" என்று சிரித்தாள். அவள் சிரிப்பில் கசப்பில்லை, பெருமிதம் இருந்தது.

"ஒரு விஷயம் நேற்றுமுதல் எனக்குக் காசுக் கடைக்காரர் என்ற பேர் போய், பழைய பெயர் வந்துவிட்டது. கண்ணாடி வளையல் வியாபாரி."

"உங்களுக்கு ஒன்றும் புதிதில்லையே."

"கண்ணாடி வளையல் வியாபாரம் கைதூக்கி விட்டது. காசுக்கடை வைத்தேன். நீ வந்ததுதான் லாபம். மற்றப்படி எல்லாம் போய் விட்டன, பழையபடியும் கண்ணாடி வளையல் கடைக்குள்......" என்று பெருமூச்சுவிட்டார். அவள் கையிலுள்ள அடிபட்ட தழும்புகளைப் பார்த்துக் கண்ணீர் உகுத்தார்.

"எனக்கும் கண்ணாடி வளைகள் புதிசல்ல; நீங்கள் போடும் கண்ணாடி வளையல்களே வைர வளையல்கள்" என்றாள் சிரித்துக்கொண்டு.

மறுநாள் தாய் வீட்டிற்குப் புதுப்பாஷன் பிளாஸ்டிக்கு வளையல்களும் கண்ணாடி வளையல்களும் அணிந்த கரத்தோடு வெகு பெருமையாகப் புருஷனுடன் வந்திறங்கினாள் பங்கஜம். வழக்கம்போல் அக்கம்பக்கம் பெண்கள் வந்து அந்த வளைகாப்புக்களைப் பார்த்து ஏமாந்து திரும்பினார்கள்.

அன்றுமுதல் அவள் வாழ்க்கையில் வளைவே கிடையாது.

* * *

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,

பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,

Parekh Mansion, Sandhurst Road (West)

BOMBAY.4

DON'T WORRY!!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA - 33.

கீழ்க் கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) இண்டோ மெடிகல் சப்ளைஸ், 29-வைத்யநாதமுதலித் தெரு, சென்னை-1., (2) ராஜா மெடிகல்ஹால், 31-தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்., (3) C. கன்னைய நாயுடு ஃ சன்ஸ், கொல்லம், (S. I.) (4) நியூ டவுன் ஏஜன்ஸீஸ், 804 B. "ஹரிணிவாஸ்" வின்ஸென்ட் ரோடு, தாதர், பம்பாய் 14., (5) ஸிந்தி, 172-A, பிரின்ஸஸ் தெரு, (ஹனுமான் மந்திர் மேல்புரம்) பம்பாய்-2., (6) ஷா கம்பெனி, மங்களூர் (S. K.) (7) ஓவர்ஸீஸ் ஜெனரல் ஏஜன்ஸி, 72, அம்பாங் தெரு, கோலாலம்பூர் (மலேயா).

Wanted Stockists in Unrepresented Areas on Favourable Terms

READ WHAT SATISFIED CUSTOMERS SAY!

K. P, Bombay-"More than four months' overdue was restored to its usual state after using only 2 phials of Special Tablets."

V. K. East Africa-"Tried many similar products. None ever worked but only one packet of your Extra-Spl. tabs. brought wonderful results."

K. L. R., Ceylon—"Remember. I bought two phs. of your medicine which relieved my patients wonderfully. Send 6 phs. more per return."

Mrs. David Bangalore—'Your KUMARI is a miraculous preparation. You have saved my life. I must introduce this to my friends.'

Almost daily, lot of unsolicited appreciations pouring in our files from differnt parts of the World.

சந்திப்பு

ஆர். எஸ்.

ரயில் பெருமூச்சுவிட்டுக்கொண்டு நின்றது. ராமகிருஷ்ணன் ஜன்னல் கதவைத் தள்ளி விட்டு வெளியே எட்டிப்பார்த்தான். அமைதியும் இருளும் நிறைந்த பாதையில் அதுவரையில் ஓடிவந்த ரயில் அந்த ஒளி வெள்ளத்தில் திக்பிரமித்து நின்றது.

ஒரு வருஷம் – பன்னிரண்டு மாதங்கள் – தெலுங்கு ஜில்லாக்களில் அவன் பட்டபாடு ஜன்மத்துக்கும் போதும். எல்லா விருப்பங்களையும் தாண்டிக்கொண்டு, எதையும் முந்திக்கொண்டு அவன் மனதில் தலைகாட்டின ஆசை, தமிழ்நாட்டை மறுபடியும் பார்ப்போமா என்பதுதான். புகையினூடே நாக்கை நீட்டும் நெருப்பைப்போல அந்த ஆசையினூடே ஒரு பயம் – கவலை தோய்ந்த நினைவு – தலையெடுத்தது. மூன்று வருஷம் அயல் நாடுகளிலும், ஒரு வருஷம் தெலுங்கு ஜில்லாக்களிலும் தமிழ் பேச முடியாமல் வாயடைத்து இருந்தாகிவிட்டது. நாளைக்கு, சென்னையில் மறுபடியும் காலடியெடுத்துவைக்கப்போகிறான். நினைக்கும் போதே உடல் புல்லரித்தது. கூடவே மாமனாரின் உடல்நிலையைப்பற்றிய கவலையும் நெஞ்சில் படர்ந்தது.

இரவு ஆகாரத்தை முடித்துக்கொண்டு பத்திரிகையைப் பிரித்தான்.

"ஸார் !"

அவனை யார் கூப்பிடுகிறார்கள் ? அவனுக்கே சந்தேகந்தான். திரும்பவும் மனமில்லாமல் பேசாமலிருக்கவும் பிரியமில்லாமல் குரல் வந்த திசையில் கவனத்தைச் செலுத்தினான்.

"எதுவரையில் போகிறீர்கள் ஸார் !"

சுமார் ஐம்பது வயசான ஒரு பெரியவர், அவருக்குப் பின்னால் சுமார் இருபத்திரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு யுவதி கையில் ஒரு பெண் குழந்தையைப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள். பார்த்ததுமே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களென்று தெரிந்தது.

"மெட்ராஸ் வரைக்கும்..."

"அப்படியா ? ஒரு சின்ன 'ஹெல்ப்'. குழந்தையும் அங்கேதான் போறாள்...கொஞ்சம் தயவுபண்ணி...எனக்கு லீவு கிடைக்கல்லே"

"ஆகா ! அதுக்கென்ன ஸார் ?"

பெட்டியையும் சாமானையும் உள்ளே எடுத்து வைத்தார். அவளும் குழந்தையும் ஏறிக்கொண்டார்கள்.

"உங்களுக்கு என்னாலே சிரமம். மன்னிக்கணும்."

"இதிலே என்ன சிரமம்? கவலைப்படாதீங்கோ !"

ரயில் ஊதியது. வண்டியின் வேகத்துக்கேற்றபடி தன் வேகத்தை அதிகப்படுத்திக்கொண்டே திணறும் குரலில், "அம்மா ! ஜாக்கிரதை. போனதும் கடுதாசு போடு. கவலையாக இருக்கும்." என்று சொல்லிக்கொண்டே அவர் நின்றார்.

"ஆஹா அப்பா !" என்றாள் அவள். அவள் சொன்னது அவர் காதில்கூட விழுந்திருக்குமோ என்னவோ ? ரயில் இருளில் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தது. அவள் உள்ளே வந்து உட்கார்ந்தாள்.

இப்போதுதான் அவளைக் கவனிக்க ராமகிருஷ்ணனுக்கு அவகாசம் கிடைத்தது. அவள் கண்கள் இமைக்கவே இல்லை. அவள் அழகு பரிசுத்தமாக இருந்தது. குழந்தையைத் தூங்கப்பண்ணுவதற்கு அவள் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள். அது என்ன என்று அவன் ஊன்றிக் கவனிக்கவில்லை. அவனைப் பொறுத்த மட்டில் அது அவன் இதயத்துள் பாயும் உணர்ச்சியின் அருவியாகவே இருந்தது. நடு நடுவே அவள் குரலில் விவரிக்க இயலாத சோகத்தின் சாயை தென்பட்டது. நெஞ்சில் குமுறும் துயரத்தை எப்படியோ அடக்கிக்கொண்டு குழந்தைக்காக மேலுக்குச் சிரித்துக்கொண்டு அவள் பேசினாள்.

"பேசாமே தூங்கமாட்டாயா சரோஜா ! அப்புறம் இந்த மாமா உன்னை அடிக்கப் போறா !"

அவள் குரல் கரகரத்தது. ஆனாலும் அதில் இனிமை இல்லாமல் போகவில்லை. சட்டென்று அவளை ஏறிட்டுப் பார்த்தான். ஒருகணம் அவனைத் தூக்கிவாரிப் போட்டது. யாரது ? அவளா ? மறுபடியும் கல்யாணியையா அவன் சந்திக்கிறான் ?

"மாமா ஒண்ணும் அசடு இல்லே. ஓம் மாதிரி அடிக்கமாட்டா !"

சட்டென்று அவளும் அவனைப் பார்த்தாள் அவள் முகத்தில் அதிக வித்தியாசம் இல்லை. கல்யாணியாகத்தான் இருக்குமோ? சாத்தின ஜன்னலில் சாய்ந்துகொண்டு புறமும் பின்னலைக் கவனிக்காமல் அவள்செலுத்திய அந்தப் பார்வை அவனுக்கு மறுபடியும் பழைய நினைவுகளை ஞாபகப் படுத்தின.

“நீ.... நீங்கள் கல்யாணி .... இல்லை?”

தடுமாறிக் கொண்டேசொன்னான். ஒருகணம் அவள் சிந்தனையில் ஆழ்ந்தாள். அவனை ஏறஇறங்கப் பார்த்துக் கொண்டே,

“நீங்கள் யார்? ரா.........மகிருஷ்ண...ணு?” என்று கேட்டாள்.

அவனுடைய பதிலில் கம்பீரமில்லை. ஏதோ செய்யத் தகாததைச் செய்த குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்வதுபோல இருந்தது. பேச்சுத் தடை பட்டது. ஜன்னல் வழியே அவன் வெளியே எட்டிப் பார்த்தான். அவன் மனம்பின்னேக்கி ஓடியது.

ஐந்து வருஷங்களுக்கு முன்னல் நடந்தது. ஆறு

லும் நினைவிலிருந்து அழியவில்லை. நெருப்பு அணைந்துபோகவில்லை. தணலாகக் கனிந்திருந்தது. அதை மூடியிருந்த நீறு இப்போது காற்றில் விலகியது. மறுபடியும் நெருப்பு எரிவதை அவன் உணர்ந்தான்.

“கண்ணோடு கண் சந்தித்தோ, தவறிப்போய், கைபட்டு மின்சாரத்தைத் தீண்டியதுபோன்ற உணர்ச்சி பரவியோ அவனுக்குக் கல்யாணியிடம் காதல் உண்டாகவில்லை. அவளுடைய மாசற்ற அழகு அவனைக் கவர்ந்தது. அவளுடைய சகஜமான நடையிலும், நிர்மலமான ஸ்வபாவத்திலும் அவன் மனதைப் பறிகொடுத்தான்.

கல்யாணி செல்வத்தில் பிறந்து வளரவில்லை. ஏழைகளின் கண்ணீரில் நனைந்த பாரதநாட்டில் பிறந்தவர்களில் எத்தனைபேர் செல்வம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்? அவளுடைய ஏழ்மையான நிலைமையிலும் அவள் அழகு பிரகாசிக்காமல் போகவில்லை. துல்லிய நீலச் சண்பக மலர் நீண்ட காம்பில் தனி எழிலுடன் நிற்பதுபோல அவள் தன் இனத்தைக் கடந்து தனி அழகுடன் விளங்கினாள். அவளுடைய குழந்தைப் பேச்சில் தன்னை மறந்து அவன் எத்தனையோ நாட்கள் இருந்ததுண்டு.



அவளை எப்படி எதிர்பாராதவிதமாகச்சந்தித்தானோ அதேபோல அவளைப் பிரியவும்வேண்டியிருந்தது. காலப் போக்கில் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்கள் நன்மையாக முடிந்தால் அதற்கு அதிருஷ்டம் என்று பெயர். துன்பத்தை உண்டாக்கினால் அதை விதியென்று முடிவுகட்டிவிடுகிறார்கள். ஆனால் அவன் வாழ்க்கையில் ஏற்பட்டது எந்த வகையைச் சேர்ந்தது?

சீமைப் படிப்பு, குதூகலம் நிறைந்த எதிர்கால வாழ்க்கை, செல்வத்தில் புரளும் குடும்பத்திலிருந்து வரும் மனைவி, சீமைக்கு அனுப்பிவிட்டு மாதாமாதம் காமதேனுவைப் போலக் கேட்டதை அனுப்பிவரும் மாமனார்—இந்த விஷயங்கள் ஒவ்வொன்றும் அவனைக் கதிகலங்க அடித்தன. அதற்கு முன்னால் கல்யாணியை அவன் மறக்கவேண்டியதாயிற்று. அந்தப் பேதைப் பெண்ணால் என்ன செய்யமுடியும்?

அவன் அவளை நிராகரிக்கவில்லை. அவளை வெறுக்கவில்லை. ஆனால் அவளை நினைக்க அவன் ஆசைப்படவில்லை. அவளைப்பற்றிச் சிந்திக்க அவன் விரும்பவில்லை, ஒருகால் அவனுக்கே அவனுடைய மனோதிடத்தைப்பற்றிச் சந்தேகமாக இருந்ததோ என்னவோ?

அப்புறம் அவன் அவளைப் பார்க்கவில்லை. அவளை ஏறிட்டுப் பார்க்கவே அவன் மனம் கூசியது. தப்பித்தவறி அவளைப் பார்க்க நேர்ந்துவிட்டாலும் தலையைக் குனிந்துகொண்டு போய் விடுவான். ஒரு காலத்தில் அவன் இதய பீடத்தில் ஏறி அமர்ந்த அந்த உருவம் இன்று எங்கேயாவது போய்விட்டதா? அவளைப்பற்றி நினைப்பது அவனுக்கு வெறுப்பாக இருந்தால் அவளை மறந்துவிடவாவது அவனால் முடிந்ததா? இரண்டும் இல்லை. விதி என்னும் ஆறு அவனை இழுத்துக்கொண்டே போயிற்று. அது அவனுடைய நன்மைக்குத்தான் என்று அவனுக்குத் தெரிந்தது. அந்த ஓட்டத்தை எதிர்த்து நீந்த அவன் முயல

வில்லை. முயன்றால் முடியுமா என்ற பரீட்சையில்கூட இறங்கவில்லை.

தாலி கட்டும்போதுகூட அவன் மனதில் சிதறிய பல நினைவுகள் வந்து சூழ்ந்தன.

தூணின் மறைவில் அவள் நின்றுகொண்டிருக்கிறாள். பிரகாசமான நெற்றியில் அழகான திலகம். அழகான உடலைச் சுற்றிய அருண வர்ணமான துகில். அவள் கண்கள் கலங்கி இருந்தன. அவள் இதயத்தில் என்ன வேதனை உண்டாயிற்றோ யாருக்குத் தெரியும்? தன் பூவின் ஐசுவரியத்தையெல்லாம் அவனுக்கு அளித்துவிட்ட அந்தக் கற்பகக் கொடி இன்று தரையில் மிதிப்புண்டு கிடந்தது. ஆனாலும் அதன் மணம் குன்றவில்லை. தளிரின் மென்மை இன்னும் வாடவில்லை. ஆனால்...ஆனால்...அந்த இன்பக் கனவில் தூய்மை இல்லை. அந்த ஆனந்தவல்லி அவனிடமிருந்து விலகி எவ்வளவோ தொலைவில் போய்விட்டாள்.

மறுபடியும் ஒரு காட்சி. அவள் சரியாகச் சாப்பிடுவதில்லை. கூந்தலை வாரிப் பின்னிக் கொள்வதில்லை.

"ஏன் இப்படி இவள் நாளுக்கு நாள் இளைத்துப் போகிறாள்?" என்று அவள் தகப்பனார் விசாரப்படுகிறார். அவர் பார்க்கும்போதெல்லாம் அவள் கண்களில் நீர் ததும்புகிறது.

"என்னம்மா வேதனைப்படுகிறாய்?" என்று அவர் கேட்கிறார். பெற்று வளர்த்த பாசம் அவர் குரலை இறுக்குகிறது, அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "ஒன்றுமில்லையே அப்பா!" என்கிறாள். மழைத் துளிக்காக ஏங்கிக் குலையும் சிப்பியைப்போல அவள் மனம் துயரத்தில் ஆழ்ந்துவிடுகிறது. சுற்றிலும் அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் கடல்நீர் — அந்த உவர் நீர் — சிப்பியின் இதய தாகத்தை எப்படித் தணிக்க முடியும்?...

நினைவு கலைந்தது. அவன் கண்கள் அவனையறியாமல் கூட்டத்தில் அவளைத் தேடின. அவள் இல்லாமல் மணப்பந்தலே அவனுக்கு வெறிச்சென்றிருந்தது.

கெட்டிமேளம் முழங்கியது. "கையைப் பிடித்துக்கொள்ளேண்டா! என்ன சங்கோஜம்?" என்று அவன் தகப்பனார் கத்தினார்.

தாய்நாட்டைப் பிரிந்து மூன்று வருஷம் போகப் புறப்பட்டபோது அவன் மனம் துயரத்தால் கனத்திருந்தது. பெற்றோர்களை விட்டுப் போகிறோம் — தாய்நாட்டைப் பார்க்க முடியாது — இந்த நினைவுகள் மட்டும் அங்கே இடம் பெற்றிருக்கவில்லை. 'அறியாப் பெண், அபலையான ஒரு பேதைப் பெண்,—அவளை ஏமாற்றிவிட்டோம்; நம்முடைய சுக சௌக்கியங்களுக்காக அவளைப் பலியிட்டுவிட்டோம்' இந்த நினைவை அவனால் ஒதுக்கமுடியவில்லை. பாரம் தாங்காமல் கடலில் முங்கி முங்கி ஆடும் கப்பலைப்போல அவன் மனமும் ஊசலாடியது.

மூன்று வருஷகாலமாக நடந்த எத்தனையோ விஷயங்களில் அதெல்லாம் மெதுவாக மறைந்துபோயிற்று. மறுபடியும் கல்யாணியைப் பார்க்கப் போகிறோமென்ற எண்ணம் அவனுக்குக் கிடையாது. மறுபடியும் அவளைப் பார்க்கும் துணிவு அவனுக்கு இல்லை. ஆனாலும் அவன் இதய அந்தரங்கத்தில், ஆழங்காண முடியாத இடத்தில் அவளைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசை இல்லாமல்போகவில்லை. அதை அவனால் அறிய முடிந்தது. இருந்தும் அதை அறவே ஒடுக்கிவிட அவன் துடித்தான். ஆனால் ...ஆனால்... நெருப்புத்துண்டை கையினால் மூடி அவித்துவிட முடியுமா?

குலுங்கிக் குலுங்கிச் சென்ற வண்டி சட்டென்று நின்றது. ராமகிருஷ்ணன் தூக்கி வாரிப்போட்டுக்கொண்டு எழுந்தான். நினைவுகளின் மயக்கத்தில் எல்லாம் குழம்பி உலகமே ஒளியும் நிழலும் கலந்த ஸ்வப்பனம் போலத் தோன்றியது. அவள் குரல் அவனை எழுப்பியது.

"படிப்பெல்லாம் முடிந்துவிட்டதல்லவா?"

"ஆமாம். கல்யாணி; கோதாவரி ஜில்லாவில் போட்டிருக்கிறார்கள்."

"சந்தோஷமாக இருக்கிறீர்களல்லவா?"

அளவிடமுடியாத உணர்ச்சிப் பெருக்கு அவன் குரலைத் தடுத்தது. அவள் கேள்வியில் தொனித்த மறைபொருள் அவனுக்கு விளங்காமல் போகவில்லை.

"ஏதோ இருக்கிறேன் கல்யாணி!"

"உம்! ஸரஸா சௌக்யமா?"

"சௌக்யந்தான். இப்போது அங்கேதான் போகிறேன்."

அப்புறம் கொஞ்சநேரம் அவன் பேசவில்லை. ஏதோ ஒரு கேள்வி அவன் கேட்க விரும்பியது அவன் உதடு வரைக்கும் வந்து வந்து அடங்கியது. கடைசியில் கேட்டுவிட்டான்.

"உனக்குக் கல்யாணமாகிவிட்டதா கல்யாணி!"

அவள் பதில் சொல்லவில்லை. குத்தலாகப் பேசவில்லை. தன் மடியில் தாங்கிக்கொண்டிருந்த குழந்தையின் தளிர்க் கன்னங்களைத் தொட்டுக் காண்பித்தாள்,

அவன் பெருமூச்சு விட்டான். "என்னவோ கல்யாணி! நீ எங்கேயாவது சந்தோஷமாக, சௌக்கியமாக இருந்தால் சரிதான்!"

அவள் நிலை குலைந்தது. விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். "எனக்கா சந்தோஷமும் சௌக்கியமும்? எனக்கு ஏது மன நிம்மதி? அது கொடுத்து வைத்தவர்களுக்குத்தானே கிடைக்கும்?"

"அழாதே! அழாதே கல்யாணி! நான் பெரும் பாவி! உன்னை...உன்னை..."

இருளும் அமைதியும் சூழ்ந்த அந்த இரவில் வேறு எந்த ஒலியும் கேட்கவில்லை. ரயிலின் ஓயாத பல்லவியைத் தவிர அந்தப் பேதையின் விம்மல்மட்டும் அவ்வப்போது கேட்டது.

விம்மல்களுக்கிடையே அவள் பேசினாள். "பெண்கள்......நாங்கள் என்றைக்குமே பொறுத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். எதையும் மூடிமறைத்துக்கொண்டு...நெஞ்சில் குமைந்து குமைந்து அடங்கவிட்டுக்கொண்டு... மடிய வேண்டியவர்கள். உங்களைப்போல என்னால் செய்யமுடியுமா? என்னை விட்டு விடுவார்களா? என்னையறியாமல் எப்படியோ என் மனதில் இடம்பெற்றுவிட்டீர்கள். உங்களை மறந்துவிடவேண்டும் என்பதுதான் என் ஆசை. என் உயிர் போகுமளவும் அது நிறைவேறினால் ஒழிய எனக்கு நிம்மதி கிடையாது."

"கல்யாணி! நீ இப்படியெல்லாம் பேசக் கூடாது. என்னுடைய நிலைமையில் என்னால் வேறு எதுவும் செய்யமுடியவில்லையே!"

"நான் உங்களைக் குற்றம் சாட்டினேனா? அப்படிச் சொல்ல நான் யார்? என்றைக்குமே கொடுத்துவைக்காத பாவி நான். நான் ஆசைப்பட்ட எதுவும் எனக்குக் கிடைக்க வில்லை. யாரை மறந்துவிட்டு என் மன வேதனையை அடக்கிக்கொள்ள நினைத்தேனோ அவருடைய ஞாபகமே எனக்குத் தினந்தோறும் வரும்படி நேருகிறது. இது என்ன சோதனை?"

அவள் விம்மல் அடங்கியது. அவள் குரலில் விரக்தி தொனித்தது.

"கல்யாணி! உன்னைத் தேற்றும்படியான நிலைமையில் நான் இல்லை. உனக்கு ஆறுதல் மொழி கூறுவதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது? உன்னுடைய வாழ்வைக் கெடுத்தவன் நான். உன்னுடைய துயரத்திற்கு வித்து என்னுடைய செய்கை. நான் சொல்வதற்கு, சொல்லக்கூடியது, என்ன இருக்கிறது?"

"உங்களை நொந்துகொண்டு என்ன பிரயோஜனம்? நான் துரதிருஷ்டசாலி. உங்களை...... உங்களை மணந்துகொள்ள......... முடியவில்லையே என்றுகூட எனக்கு வருத்தமாக இல்லை. உங்களை...... மற......க்கமுடியவில்லையே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. மனச்சாந்திக்காகவாவது உங்களை மறக்க ஒவ்வொரு கணமும் முயன்று என்னுடைய சூழ்நிலையில் அது முடியாமல் நான் படும் நரக வேதனை, அவஸ்தை, உங்களுக்கு எப்படித் தெரியும்? என் குறை, தீராதகுறை. அது என்னோடுதான் மடியும்."

சொல்லமுடியாமல் அவள் விக்கினாள். ஒவ்வொரு வார்த்தையைச் சொல்லும்போதும் அடுத்த வார்த்தையைச் சொல்ல முடியாமல் அழுதுவிடுவோமோ என்று பயந்துகொண்டே திக்கித் திக்கிப் பேசினாள். நெஞ்சில் ஆறாத புண்; அதைக் குணப்படுத்த முடியாமல், அதன் வேதனை தாளாமல் அவள் படும் அவஸ்தை அவனால் சகிக்கமுடியாததாக இருந்தது. ஜன்னல் கதவுக்கு வெளியே தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு அவன் அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவள் துயரம் தேங்கி நின்ற குரல் அவன் இதயத்தில் ஒலித்தது.

இருவரும் பேசவில்லை. அதனால் அவர்களுடைய மன அமைதி குலையாமல் இருந்ததா? வெள்ளம் பெருகி ஓடிய இடத்தில் குவிந்து கிடக்கும் முள்ளையும் கல்லையும் போல உணர்ச்சி பெருகி ஓய்ந்த அந்த இடத்தில் சொல்லினால் மட்டுமே எடுத்துரைத்துவிடாத எத்தனையோ விஷயங்கள் தேங்கி இருந்தன.

அவள் வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள்.

நீண்ட இரவின் இருளையும் எதிர்க் காற்றையும் சற்றும் லக்ஷியம் செய்யாமல் அவ்வண்டி ஓடியதைப்போலவே அவன் மனமும் கட்டு மீறி ஓடியது. வண்டி என்றைக்குமே ஓடிக்கொண்டிருக்கப் போவதில்லை. அதுவும் ஓய்ந்து நிற்கும் காலம் உண்டு. ஆனால் அலைப்புண்ட அவன் மனம்......?

விடிய அதிக நேரமில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் வெள்ளி முளைத்துவிடும். இரவு முழுதும் தூங்காமல் அழுத அவள் கண்களைப் போல அடிவானமும் சிவந்துவிடும். ஆனால் அவளுக்கு விடிவு ஏது?

ஜன்னலில் சாய்ந்தபடியே அவள் கண்களை மூடிக்கொண்டிருந்தாள். அவள் தூங்கிவிட்டாளென்று சொல்லமுடியாது. ஒருகாலும் அவள் தூங்கியிருக்க முடியாது. தீராத மனக்குறை அவளை அணு அணுவாக அரித்துக்கொண்டிருக்கும்போது, இத்தகைய ஒரு சந்திப்புக்குப் பிறகு அவள் எப்படித் தூங்கமுடியும்?

விடியற்காலை. வண்டி ஸெண்ட்ரல் ஸ்டேஷனை நெருங்கிக்கொண்டிருந்தது. "கல்யாணி! கல்யாணி!" என்று அவன் கூப்பிட்டான். கூப்பிடும்போது நாக்கு இழுத்தது. உரிமை இல்லாத பொருளைத் தொடுவதுபோல, பிற

ருடைய ஆடையை அணிந்துகொள்வதுபோல ஓர் உய்த்துணரமுடியாத உணர்ச்சி அவனை அலைக்கழித்தது.

அவள் எழுந்து உட்கார்ந்தாள். "தூங்கி விட்டேனா என்ன?" என்று கண்களைக் கசக்கிக்கொண்டாள். இரவில் நடந்த சம்பவம் கனவுபோல் கரைந்து மறைய ஆரம்பித்தது.

வண்டி ஸ்டேஷனுக்குள் நுழைந்தது. எத்தனையோ விதமான சப்தங்கள் காதைத் துளைத்தன. வண்டி நின்றதும் பெட்டியை எடுத்து, கூலியின் தலையில் வைத்தாள் கல்யாணி. அவனுக்காகக் காத்திருக்கவில்லை. "போய்வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டாள். குழந்தையுடன் அந்தக் கூட்டத்தில் மறைந்துவிட்டாள். அந்த வார்த்தைகூட—அந்தக் கடைசி வார்த்தைக்கூட—அவள் இதயத்தின் ஆழத்திலிருந்து உணர்ச்சியுடன் கலந்துவந்ததாக அவனுக்குப் படவில்லை. வெறுப்பும் விரக்தியும் உந்த, மரியாதைக்காக உதட்டிலிருந்து தெறித்துவிழுந்த வார்த்தைகள் அவை. அதற்குமேல் அவன் எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்து டாக்ஸியில் அமர்ந்ததும்தான் அவனுக்குச் சுயஞாபகம் வந்தது. இவ்வளவு நேரமும் அவன் மனம் பல்வேறு உணர்ச்சிகளில் தத்தளித்துக்கொண்டிருந்தது. இப்போதுதான் அவனுக்குத் தன் நிலை, தான் வந்தகாரியம் எல்லாம் நினைவிற்கு வந்தன.

"மாமனார் உடம்பு எப்படி இருக்கிறதோ? அபாயம் என்று தந்தி கொடுத்தார்களே!" என்ற எண்ணம் அவனை உலுக்கிவிட்டது. "சீக்கிரம் போ!" என்று விரட்டினான்.

வீட்டின் வராந்தாவில் அவன் மனைவி நின்றுகொண்டிருந்தாள்.

"அப்பா எங்கே?" என்று கேட்டான் துடிதுடிப்புடன். அவள் பதில் சொல்லவில்லை.

"என்ன நடந்தது? ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டார்களா என்ன? சொல்லேன்!" என்று பரபரப்புடன் கேட்டான்.

"அவர் காரியம் நேற்றோடு முடிந்துவிட்டது. உங்களைக்கூடப் பார்க்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டே......" அவள் விக்கிவிக்கி அழலானாள்.

ராமகிருஷ்ணன் தடாலென்று கீழே உட்கார்ந்துவிட்டான். அவன் மனம் ஓய்ந்தது.

வாசலில் ஒரு டாக்ஸி நின்றது. அவள்...... அவளே...... கல்யாணி உள்ளே வந்தாள். ஸரஸா வாசலை நோக்கித் தாவினாள். அவளைத் தழுவிக்கொண்டே அலறினாள். "சித்தி! சித்தி! அப்பா... அப்பா......"

அவனால் நகரக்கூட முடியவில்லை. திடீரென்று பனிப்படலம் விலகியதுபோல இருந்தது. கல்யாணி சரஸாவின் சித்தி, மாமனாரின் இரண்டாம் மனைவி.

அவள் வாழ்வு எத்தனை பயங்கரமானது? தன் வாழ்வில் மண்ணை அள்ளிப் போட்டவர்களைத் தினந்தோறும் பார்த்துக்கொண்டு, பதிலுக்கு அவர்களுக்கே உழைத்துக்கொண்டு அவள் எப்படி வாழ்க்கை நடத்தினாள்? அவளுக்குத்தான் என்ன மனோதிடம்?

முடிச்சு அறுந்தது.

கல்யாணியின் வார்த்தைகள் அவன் நினைவிற்கு வந்தன. "மனச்சாந்திக்காகவாவது உங்களை மறக்க ஒவ்வொரு கணமும் முயன்று, என்னுடைய சூழ்நிலையில் அது முடியாமல் நான்படும் நரகவேதனை, அவஸ்தை உங்களுக்கு எப்படித் தெரியும்?"

அவன் சிந்தனை வறண்டது. ஒரு பெருமூச்சு விட்டான். இந்தச் சந்திப்பு நிகழாமலே இருந்திருக்கக்கூடாதா? * * *





Sastry & Sastry

JEWELLERS

33, EAST MADA STREET,
MYLAPORE P. O. MADRAS-4.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

தமிழுக்குத் - - - தன்னை விற்றல்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

தெருவெல்லாம் தமிழோசை முழங்கல் வேண்டும் என்றார் பாரதியார். சிறிது காலமாகவே தமிழுக்கு ஒரு யோகந்தான்! தமிழ் வளர்ச்சி மகாநாடு; அதனையடுத்து, முத்தமிழ் வளர்ச்சி மகாநாடு! இந்த யோகம் சகடயோகமாக முடியாமல், மகுடயோகமாக நிலைத்தல் வேண்டும்.

சென்னை சைதாப்பேட்டைக்கு அருகே குன்றம் என்னும் ஊர் ஒன்று உண்டு. அதனைக் குன்னம் என்பார்கள். முன்னாளில், அங்கே எங்கும் நெல் போர்கள் மலைக்குன்றுகளேபோல் வரிசை வரிசையாகத் துலங்கும். ஆதலின், நெல் குன்றம் என்று அந்த ஊர் பெயர் பெற்றது.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்னம், அங்கே உழு தொழிலில் உயர்ந்தவர் ஒருவர் இருந்தார். அப்பிரதேச நிலங்களெல்லாம் அவருக்கே சொந்தம். அறுவடைக்காலத்திலே, அவரது களத்து மேட்டில் தேர்த் திருநாளேபோல் ஜனத்திரள் நிரம்பியிருக்கும்.

நிலவளம் படைத்த பயன் யாது? பலருக்கும் உபகாரியாக விளங்குவதாம். இதுவே அவர் கொள்கை. ஆனதுபற்றி, ஏழை எளியவர்க்கும், புலமை மிகுந்த பாவாணருக்கும், மூட்டை மூட்டையாகவும் வண்டி வண்டியாகவும் நெல்லைக் கட்டிக்கொடுப்பார் அவர். அதுபற்றி,

நெல்லுக் களத்தின்கண் நின்று பலருவந்து
புல்லிக் கொடுபோகப் போக்கியே—இல்லை
யென
வந்தவருக்கு எல்லாமே வாரிக் கொடுத்த
லால்
தந்தை இவனுகுந் தான்

என்ன அவர் விளங்கி வந்தார். அவரை எவரும் இயற்பெயர் கொண்டழைப்பதில்லை. முதலியார் என்றே பெருமையாக அழைத்து வருவர். முதலி என்பது பட்டப் பெயர். ஆர் என்பது மரியாதைக்கு அறிகுறியான விகுதி. நாளடைவில் முதலியார் என்பது சாதிப் பெயராகிவிட்டது.

நெற்குன்ற வாண முதலியார் என்பதே அவரது பிரபலமான பெயர். ஆமூர் முதலியார் என்ற பெயரும் உண்டு. அவர் பெருங் கொடையாளி யானதோடு, பற்பல நூல் பயிற்சியிலும் சிறந்தவர். புலமைச் சுவையும் நிரம்பியவர். அவரும் அவர் தேவியுமாக அருங் கலைகள் பலவற்றையும் புலவருடன் ஆராய்தல் வழக்கம்.

அருங்கலை விநோதரை அறிஞர் பலரும் நாள்தோறும் வந்து நயந்து நிற்பர். வந்தவர் அனைவருக்கும் வரிசையறிந்து பரிசில் வழங்குவார். கவிவாணருக்கு அவர் மாளிகை தாயகமாகும். ஆதலின்,

உள்ளங்கால வெள்ளெலும்பு
தோன்ற, ஒரு கோடி
வெள்ளங் காலம் திரிந்து
விட்டோமே! — தெள்ளுதமிழ்
ஆமூர் முதலி அரசர் பிரான்
இங்கு இருக்கப்
போமூர் அறியாமல் போய்.

என்று ஒரு புலவன் பாடியுள்ளான். ஆசுகவி காளமேகம் என்பான் ஒரு சமயம் அவரையடைந்து, பாதி வெண்பாப் பாடு முன்பே, அவர் பொன்னும் மணியும் அள்ளிக்கொடுத்தார். ஈகையின் மிகுதியால், அவர் புகழ் தமிழகமெங்கும் பரவியிருந்தது. அத்துடன் அவர் அந்த ஊரின் தலைவர். செம்மை நெறியுடன் நடப்பவர்.

அந்த ஊரிலே அடுத்த தெருவில் போத்தன் என்னும் பணக்காரனொருவன் இருந்தான்; எச்சில் கையாலும் காக்கையை ஓட்டமாட்டான். அவனை எவரும் ஒருபொருட்டாக மதிப்பதில்லை. ஆனதுபற்றி, முதலியாரின் மீது அவனுக்கு அசூயை அதிகம். சமயம் பார்த்து அவரைச் சிறுமைபடுத்த வேண்டும் என்பதே அவனது அவா.

அவ்விதமிருக்கையில், பாண்டி நாட்டிடிலிருந்து நம்பி காளி என்னும் கவிஞரொருவர் அந் நெற்குன்றம் சேர்ந்தார்;

முதலியாரின் மாளிகை குறுகினர்; அவரது புகழைப் பாவால் தொடுத்த வண்ணம். ஆசார வாசலில் வந்தமர்ந்தார். அப்போது முதலியார் வெளியே போயிருந்தார்.

கவிஞரது வரவைக் கண்டதும், தாதி செங்கமலம் என்பாள் சிந்தை நொந்தாள்; "அந்தோ கால வேறுபாட்டினால் கடன் வாய்ப்பட்டு, மிடியுற்றிருக்கும் முதலியார் வருமுன்னம், கவிஞரை அனுப்பிவிட வேண்டும். இல்லையென்று உரைத்தறியாத எஜமானரை இன்னலுக்கு ஆளாக்கக்கூடாது", என்றெண்ணினள்.

கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும் என்பர். அவ்வாறே வள்ளலின் வாசலிலுள்ள தாதியும் ஈகைக்குணம் கொண்டிருப்பாள். தாதி செங்கமலம் தனது காதணி, கைவளையல் இரண்டையும் கழற்றி, அக்கவிஞருக்கு ஈந்தாள்; சுவை மிகுந்த கனிகளும் மதுர பானங்களும் கொடுத்தாள்.

அவை பெற்ற தம்பி காளி, "ஓ! முதலியார் வெளியூர் போயிருக்கிறார் போலும்! வந்த புலவனை வறிதே யனுப்பக் கூடாதெனக் கருதி அவரது தேவி தனது ஆபரணங்களை அளித்திருக்கின்றாள்." என்று களித்து மாளிகையை விட்டு வெளியே வருஞ்சமயம், முதலியார் வந்துவிட்டார். அதுகண்ட புலவரும் பூரித்துப் போனார்.

கற்பகத் தருவைக் கண்டேன், என்று அக்கவிஞர் கூறுமுன்னம் முக மலர்ச்சியுடன் அவரை மாளிகையினுள்ளே இட்டுச் சென்றார் முதலியார். அரிய விருந்து படைத்து உபசரித்தார்; தமது மாளிகை, நிலபுலம் இவற்றைத் நம்பி காளிக்குக் கொடுத்தார்; பொருள் கொடுக்க வகையில்லையே என்று சற்றே திகைத்தார்.

முடிவிலே, "புலவர் பெரும! நான் உமக்கு அடிமை. ஆதலின், என்னை விற்று, அதனால் வரும் பொருளையுங் கொண்டு மகிழ வேண்டும்," என்று மொழிந்தார். நம்பி காளி அது கேட்டதும் திடுக்கிட்டுப் போனார். அத்தறுவாயில் அவரை நோக்கி, "எள்ளளவும் தயங்கவேண்டாம்; என்னை எங்கே விற்றிறது என்று தயங்கவேண்டாம்; அடுத்த தெருவிலேயே என்னை இலகுவில் மாறலாம். அங்கே போத்தன் என்னும் சீமான் காத்திருக்கின்றான், என்னை வாங்க. எனக்குச் சிறுமை செய்துவிட்டால், உடனே தனக்குச் சொர்க்கம் கிட்டுமென்றும் கருதிக்கிடக்கிறான்.

"அவனது ஆவலைப் பூர்த்தி செய்வதும் ஒரு வகையில் கொடையல்லவா? அத்தகைய கொடை மடம் எனக்குக் கிட்டுமாறு நீர் அருள்புரிதல் வேண்டும். பெருந்தொகையொன்று அவன் கொடுப்பான். அது பெற்று, நீரும் மகிழலாம்; நானும் மகிழலாம்; அவனும் ஆனந்த சாகரத்தில் ஆழ்வான்!"

என்று மொழிந்தார் முதலியார். வள்ளலின் கருத்தை ஈடேற்றவும், அந்த உலோபியின் குணத்தைக் கண்டறியவும், விஷப் பரீட்சையில் இறங்கினார் நம்பி காளி. போத்தனிடஞ் சென்று, நெற்குன்ற வாண முதலியாரை விலை கூறினார். போத்தன் உடனே, "முதலியாரே! சம்மதந்தானா விலைப்பட," என்று இறுமாப்புடன் வினவினன். அவரும், "ஆம், பூரண சம்மதமே," என்றார்.

பல சொல்லி என்ன? நம்பி காளிக்கு அவன் வெகு பணம் கொடுத்தான்; முதலியாரை விலைகொண்டான்; மட்டற்ற மகிழும் பூத்தான்; ஈர்க்கும் இலையும் கொணர்ந்து, கொடையாளியின் முன்னே போட்டான்; தையல் இலை நூறு வேண்டும். சடிதியில் தைத்துத் தா," என்றியம்பினன் எடுப்பாக.

இவ்வளவையும் நம்பி காளி பார்த்துப் பிரமித்து நிற்கிறார். அவ்வேளை, முதலியாரின் மனைவி ஊரில் இல்லை; தனது பிறந்தகம் போயிருந்தாள். அவளுக்கு விஷயம் தெரியவேண்டுமே.

அதற்காக அவர் எழுதிவிடுத்த பாடல் இது:—

கற்கும் கவி வல்ல அந்தணர் கோன்
  நம்பி காளிக்கு, யாம்
விற்கும் பரிசனம் ஆகிவிட்டோம்,
  வடவேங்கடமும்
பொற்குன்றமும் புகழ்க்கங்கா நதியும்
  பொதியமும் போல்
நெற்குன்றமும் நம் மரபும்
  எந்நாளும் நிலை நிற்குமே!

அந்தணர் குலத்தில் வந்த நம்பி காளியின் கவிநயங்கண்டு, அவருக்கு நான் அடிமையாகிவிட்டேன். அப்புலவரும் என்னை விற்று, வெகு பணம் பெற்றுள்ளார். இதுகேட்டு நீ கலங்க வேண்டாம், களிப்பே கொள்ளுதல் வேண்டும். ஏன் எனில் பொன்மேருவும் புண்ணிய கங்கையும் பொதிய மலையும் வடவேங்கடமும் என்றும் நிலை நிற்பதுபோல், நாம் பிறந்து வாழும் நெற்குன்றமும் நமது மரபும் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதே அப்பாசுரத்தின் பொருள்.

முதலியார் விலைப்பட்டசெய்தி ஊரெங்கும் பரவியது. பரவியதும், கோமளம் என்னும் கணிகைமகள் விரைந்தோடி வந்தாள்; போத்தன் என்பானை யடைந்தாள்; 'நீயும் ஓர் ஆண் மகனோ' என்று ஏசினாள். 'வள்ளலை விலைக்கு வாங்குவது ஞாயமோ,' என்று வினவினாள். 'உன் குலம் நசிக்குமே, உன் செல்வம் மாயுமே! உன்னை உலகெலாம் தூற்றுமே. பணமா பெரிது? இதோ பண முடிப்பு! வேண்டுமளவு எடுத்துக் கொள். வட்டியும் கூட்டி வாங்கிக் கொள்' என்று பொற்கிழியொன்றை அவன் முன்னே வீசியெறிந்தாள்.

"இக் கருமியின் பணம் எனக்கு ஏன்? இத்தகைய வள்ளலை விற்று வயிறு வளர்க்க வந்தேனில்லை. உனது அல்ப குணத்தை அவனியறியவே, பரீட்சை பார்த்தேன்," என்று நம்பிகாளியும் தாம் பெற்ற பணத்தைப் போத்தன் முன்னே போட்டார். போட்டதும்,

"தலை கொடுத்த குமணனிலும்
உயிர் கொடுத்த நந்தியினும்
தமிழ்க்காகத் தான் போய்
விலைபடும் இந்நெற்குன்ற வாணனை
மேலென விளம்பலாமே

என்பதில் என்ன தடை? மேலும், கோமளம் எனும் இக் கணிகைக் குமரியின் பெருமை பேசப் போமோ" என்றும் புகழ்ந்து பேசினர்; 'தவளையொன்று ராஜ குஞ்சரத்தைக் கட்டியாள முடியுமோ? மத களிற்றை அடிமை கொள்ளத் தான் ஆகுமோ?" என்றும் இடித்துரைத்தார்.

"வள்ளல்களின் கால் தூசிக்கும் ஈடாகாத நீ செல்வச் செருக்குக் கொள்ளல் வேண்டாம்; பொறாமைப்பேய் பிடித்தும் திரிய வேண்டாம்," என்று கோமளங் கூறி, அம் முதலியாரை இட்டுச்சென்று, அவரது மாளிகையில் சேர்த்தாள். இதற்குள் பிறந்தகம் போயிருந்த அவரது தேவியும் வந்துவிட்டாள், வந்த தேவியின் மனநிலை யாது?

கணவன் அடிமைப் பட்டாரே என்று கலங்கினளோ? கடன் சுமை போதாதென இந்த இழி சுமையுமா சேர வேண்டும் என்று சிந்தித்தனளோ? இல்லை. மற்று "என்னை அவர் விற்றிருக்க வேண்டும்; எனக்கே அப் பாக்கியத்தை அளித்திருக்க வேண்டும்; இங்ஙனம் செய்யாது போனதேன்!" என்றே நினைத்தாள்.

இனி, 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பர். பொறாமைப் படுகுழியில் விழுந்த போத்தனோ அக்கோமளத்தின் செயல் கண்டு நல்லறிவு தலைப்படாமல், கிராம வரிப்பணத்தையெல்லாம் முதலியார் விழுங்கிவிட்டாரென்று தொண்டை மண்டல அதிபனுக்கு ஓலை விடுத்தான்.

அந்த அதிபனும் ஆராய்ந்துபாராமல், "கிராமாதிபத்தியத்தை நீ அம் முதலியாரிடமிருந்து ஏற்றுக்கொள்; கணக்கு வழக்கைப் பார்த்து, அம் முதலியிடம் பணங்கேள். பகுதிப் பணத்தைக் கொடுக்க மறுத்தால், முதலியை நாட்டை விட்டு ஓட்டிவிடு," என்று போத்தனுக்குத் தூது போக்கினன்.

பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பது பொய்க்குமோ? சுருங்கச் சொல்லின், நெற்குன்றவாணர் நாடு கடத்தப்பட்டார். அப்போது, "சோழ நாட்டிலே சிவதலங்கள் பலவுள. அவற்றையெல்லாம் தரிசிக்க இதுவே சமயம்," என்று கருதிக் களித்தவராய் நெற்குன்றத்தை விட்டுப் புறப்பட்டார் முதலியார்; அவரது தேவியும் உடன் சென்றாள்.

தலயாத்திரையாகப் புறப்பட்ட முதலியார் முடிவிலே தஞ்சை ஜில்லா நன்னிலம் ரயிலடியையடுத்த திருப்புகலூர் என்னும் தலம் சேர்ந்தார். அது திருநாவுக்கரசர் முத்திபெற்ற இடம்; முருக

நாயனார் அவதரித்த பூமி; சுந்தரமூர்த்திக்குச் செங்கல்லெல்லாம் செம்பொன் ஆன சிறந்த க்ஷேத்திரம்.

அத்தலத்தில் எழுந்தருளியுள்ள கோணப்பிரானை வணங்கச் சென்றவர் முதலாவதாக விநாயகரை வணங்கி ஒரு பாசுரம் பாடினார். அவரது பின்னே நின்று கணபதியைத் தரிசித்து நின்ற தாசிப் பெண்ணொருத்தி, "அந்தாதிக்குக் காப்பு ஆயிற்று" என்றாள். "அப்படியானால் அரண்மனைக்குப் பணமாகுமோ?" என்றார் அவர். "ஆம், அப்படியே ஆகும்" என்று தட்டாது பதிலிறுத்தாள் அப்பெண் பாவை.

திருப்புகலூர் ஆலயத்திலே சேவகஞ் செய்யும் பணிப் பெண்களில் ஒருத்தி அவள். அவள் பெயர் கமலம். அவள் பரம பக்தை. திருப்புகலூர் பெருமான் மீது அந்தாதிப் பிரபந்தமொன்று தக்கவரைக்கொண்டு பாடுவிக்கவேண்டும் என்று நெடுநாளாக எண்ணியிருப்பவள். பலரையடுத்துக் கேட்டும் பயனில்லை.

நெற்குன்றவாண முதலியார் பாடிய விநாயகர் துதியைக் கேட்டதும், அந்த அந்தாதிப் பிரபந்தத்துக்குக் காப்புச் செய்யுள் ஆயிற்று என்று அவள் களிப்புக்கொண்டாள். பொய்க்கணக்கெழுதி, அரசிறைப் பாக்கியென்று போத்தன் கூறியதனால் தேசப்பிரஷ்டத்துக்கு அவர் ஆளானார் அல்லவா? அப்பணத்தைக் கொடுத்தால்தானே, சொந்த ஊருக்குத் திரும்பலாம். அந்த அரசிறை அரண்மனைக்குச் சேரவேண்டிய பணம். அதனைக் கருதியே அரண்மனைக்குப் பணமாகுமா என்றார் அவர்.

அக்காரணத்திலேயே அரண்மனைக்கு வேண்டிய பணத்தை அப்பெண் கொணர்ந்து கொடுத்தாள்; அதனை அப்படியே அனுப்பிவிடுமாறு அவளை வேண்டிக்கொண்டார் அவர். உடனே பணத்தை அவளும் அனுப்பிவைத்தாள். பின்பு முதலியாரும் அவரது தேவியுமாகக் கமலத்தின் விருந்தினராக இருந்தனர்.

சிறிது நாளைக்கெல்லாம் திருப்புகலூர் அந்தாதி பாடி முடித்தார் நெற்குன்றவாணமுதலியார், அதனை அரங்கேற்றும் சமயத்திலும், ஆறுயிரம் பொன்காசு கொணர்ந்து, காணிக்கையாகக் கொடுத்தாள் கமலம் என்பாள். புலவர் புராணம் பாடிய முருகதாச சுவாமிகள் என்பார்

ஆண் உருவாய் உயர் குலத்தில் பிறந்து
　　பெருஞ் செல்வம் அனுபவித்திட்டாலும்
சேணும் நிலமும் புகழும் பெருஞ்சீர்த்தி
　　விளையாமல் செத்தாராயின்,
மாண் உயர் தென்புகலூரான் திருவடிக்கு
　　ஓர் தமிழ்மாலை வாங்கிச் சூட்டி
நாணும் மடமும் தவிர்ந்து வாழ்ந்த
　　மகளினும் தாழ்வா நவிலலாமே

என்று போற்றியுள்ளார். கையிலே காசின்றிக் கடன் மிகுந்து, ஊர் ஊராகத் திரியும் நிலையிலுள்ள நெற்குன்றவாண முதலியார் அந் நம்பிகாளியைத் தேடியடைந்து அவரிடம் ஆறுயிரம் பொன் காசையும் கொடுத்து மகிழ்ந்தார்.

அத் தலத்தின் சுவரிலே பொறித்துள்ள சிலாசாஸனமொன்றை நோக்கின், களப்பாளராஜர் என்னும் பெயரும் முதலியாருக்கு உண்டெனத் தெரிகிறது. சோழ வேந்தரின் காலத்திலே களப்பாள ராஜர் என்னும் சிற்றரசர் வாழையடி வாழையாக இருந்து வந்தனர். அத்தகைய சிற்றரசரின் குலத்திலே வந்தவர் நம் முதலியார். ஆதலின் களப்பாளர் என்னும் பெயர் பெறலானார்.

அரண்மனைக்குரிய பணத்தையனுப்பியதும் முதலியார் தமது சொந்த ஊர் சேர்ந்தார்; தமது நிலங்களையெல்லாம் பண்படுத்தினார். அவரது மனப்பண்பாடு கண்ட நிலமகள் வளமெல்லாம் சுரந்தளித்தாள். அளிக்கவே, முன்போல அனைவருக்கும் கொடுத்துதவிவந்தார் அவர். பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் என்பது பழமொழி அல்லவா?

பன்னும் தமிழ்க்கு அவன்
　　மாமனைத் தாதி பரிசு அளிப்ப
முன் நம்பிகாளிக்கு நெற்குன்ற
　　வாண முதலி என்போன்
பின்னும் சிலபல பொன் கொடுத்துத்
　　தன் பேர் நிறுத்த
மன்னும் தமிழும் உரைத்தான்
　　அவன் தொண்டை மண்டலமே

என்று படிக்காசுப் புலவர் பாடியிருக்கிறார்.

199318

மாதவிடாய்

நின்று விட்டதா ?
கவலை வேண்டாம்

எச்சரிக்கை: ரசாயனத்துக்கு ஒவ்வாத மருந்துகளை உபயோகப்படுத்தாதீர்கள்; அந்த வழக்கம் மிகவும் ஆபத்தானது. அரசாங்கத்தாரின் அங்கீகாரம் பெற்ற மருத்துவரின் 'ராஜோ-நியமோனி'யை உபயோகியுங்கள்; அது ஆபத்து இல்லாதது. மிகவும் மோசமான நிலைமையாக இருந்தாலும் 24 மணி நேரத்தில் விடாயாவது நிச்சயம். என்ன காரணத்தால் விடாய் நின்றிருந்தாலும்—4 அல்லது 5 மாதமாயிருந்தாலும் கூட—கவலையில்லை; விடாயாவது நிச்சயம். உத்தரவாதமுள்ளது.

விலை ரூ. 5 தபால் சிலவு 14 அணா தீராத நெடுநாள்பட்டதற்கு "ஸ்பெஷல் ராஜோ நியமோனி" விலை ரூ. 14–8–0 தபால் சிலவு தனி.

'ரோதனி': கர்ப்பத்தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. ஒரே முறைதான் உபயோகப்படுத்தவேண்டியது. தேக நலனோ, மாத விடாயோ இதனால் பாதிக்கப்படுவதில்லை. மருத்துவர்களும், உபயோகப் படுத்துகிறவர்களும் இதை மிகவும் பாராட்டுகிறார்கள். உத்தரவாதமுள்ள மருந்து.

நிலையான கர்ப்பத்தடைக்கு விலை ரூ. 6
தற்காலிகத் தடைக்கு ரூ. 3
தபால் சிலவு 14 அணா

வயிற்று உபாதைகள் வாயு உபத்திரவங்கள், வயிற்றுப் புளிப்பு, அஜீரணம், தீராத ஜீரண சக்தியின்மை, தீராத மலச்சிக்கல், குடல்வலி, வயிற்றுவலி, வயிற்றுப்பிடிப்பு, வயிற்றுரணம், மார் எரிச்சல், பசியின்மை, தூக்கமின்மை, முதலியவற்றை அறவே ஒழிக்க "அக்னிபன்" (வயிற்று டானிக் பவுடர்) உபயோகியுங்கள் முழு வெற்றிக்கு உத்தரவாதம் விலை ரூ. 3–4–0 வி. பி. பி. அணா 14

தயவுசெய்து ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

KAVIRAJ
M. BHATTACHARYA (c. k.)
Kavya—Vyakarantirtha Vishagacharya.
120/1/1, Upper Circular Road, CALCUTTA—9

1950-ல்
என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1950 க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri
Swami Satnarayan Jotish Ashram
(C. K.) HOSHIARPUR.

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்—பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிற போட்டோ படங்கள், தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பது போன்ற நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை யெல்லாம் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. கல்யாணமாகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2—12—0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5—0—0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்

M|s. French Photo Supply Company

(C. K.) JULLUNDUR CITY

மாஜிக் ஸெண்ட்

நவீன காலத்திய மிக பிரமிக்கத்தக்க சிருஷ்டி.

காதலில் ஏமாற்றமடைந்தவர்களுக்கும், வாழ்க்கையில் சோர்வுற்றவர்களுக்கும் எங்கள் மாஜிக் ஸெண்ட் மிக்க உயர்வானது. நீங்கள் விரும்புபவர்கள் மீது சில துளிகள் தெளியுங்கள். உங்கள் வசீகரம் அதிகரித்து உங்களைத் தேடிவருவார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் இதை உபயோகித்து நன்மை கண்டுள்ளார்கள். அதன் பலனையனுபவித்த அநேகர் கடிதங்கள் எழுதி அதன் புகழ் பாடியிருக்கிறார்கள். இந்த மாஜிக் ஸெண்டை உபயோகிப்பவர்கள் அநேக கெடுதல்களினின்றும், வியாதியினின்றும் தப்பியுள்ளார்கள். இதை உபயோகிப்பவர்களுக்கு ஐச்வரியமும், விவகாரம், பரிக்ஷை முதலியவைகளில் வெற்றியும் கிடைக்கும். இதை உபயோகிப்பவர்கள் தொழில் ஏற்றம், வாழ்க்கையில் உயர்வு இவைகளை அடைவார்கள். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள். நீங்கள் எதை நினைத்தாலும் அதில் பயன் கிடைக்கும் பயனடையாவிடில் பணம் திருப்பித் தரப்படும்.

விலை ரூ. 1—15—0 (தபால் செலவு பிரத்தியேகம்)

வெளிநாடுகளுக்கு 5 ஷல்லிங் B. P. O.

இரண்டு பாட்டில் ரூ. 3—4—0 (வெளிநாடு 8 ஷல்லிங் B. P. O.)

மிகவும் சக்தியுள்ளதும் உடனே பயன் தரக்கூடியதும் ரூ. 4

Prof. B. S. Dhami, Mesmerist, (C. K.) Jullundur City (Punjab)

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 52,50,000

●

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா
(வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா
(வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்

B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.



பரிசு ரூ. 1000

(ஒரு நூதன கண்டு பிடிப்பு)

மாய மோதிரம்

இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம்மோதிரத்தை அணிந்துகொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அல்லது தடுக்க முடியாத விபத்தாகஇருந்தாலும் வெற்றி பெறுவர். அது உங்களை எல்லாவிதமான ஆபத்துகளினின்றும் வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும். துர்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தன் காதலரை (அவராலும் அவளாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவராலும் அவளாலும் உங்களுக்குக் கட்டுப்பட்டு, தன் செய்கைக்காகப் பச்சாதாபப்படுவார். நீங்கள் காதல் உத்தியோகத்தில் வெற்றிபெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல்இரவே காணுங்கள். விலை ரூ. 1—15—0 ஸ்பெஷல் ரூ. 3—0—0 மிக்க சக்தி வாய்ந்தது ரூ. 3—15—0, போஸ்டேஜ் தனி. பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal,
SHINING MESMERISM HOUSE (C. K.)
Kartarpur (E. P.)

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் விகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு, மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI
Sant Nagar (C. K.) Jullundur City.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.